Regd. No. M. 2419



மாத்வமித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 10	ஈசுவர ஸம்வத்ஸரம்.	No. 6
புஸ்தகம் 10	புஷ்ய மாஸம். (16-1-1938) பாநுவாரம்.	நெ. 6

நெ	பொருளடக்கம்.	பக்கம்.
1.	ஸ்ரீமகாபாரத தாத்பர்யநிர்ணயம் (ஸ்ரீமத்வாசாரியார்)	161
2.	யக்ஷ பிரசினம்	166
3.	ஸ்ரீமத்வ விஜயம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	174
	விஷ்ணு ஸஹஸ்ர நாமம்	179
	சென்னையில் சநாதன தர்ம பரிபாலன சபைகள்	183
	மக... இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கம்	189
	உ... னை மாகாண பிராம்மண மகாநாடு, ஸ்ரீ... திருப்பதி ஸபைகள்	190
	தா... த்திரட்டு	191
	விசேஷ தினங்கள்	192

:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை
ஸ்ரீமத்வமதத்தின் அரிய ரஹஸ்யங்கள் ஸம்பிரதாயாங்
கியங்கள் புராணசரிதைகள் மாத்வகுருப்புண்ய புருஷர்களி
ரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினச
தாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அ
கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷய
கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள
இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி
பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு
வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்
பத்திரிகைக்கு வருட ஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச்
சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும்
பழைய வால்யங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி
கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறி
விக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்
டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்
வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்ப
வேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வால்யங்

வெகு சொற்பம்தானிருக்கின்

உடனே அவைகளைப்பெற்

முந்துங்கள்.

14 JAN 1939

ஸ்ரீ லக்ஷ்மீ நாரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतो भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं.
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 — ஈசுவர ஸம்வத்ஸரம். புஷ்ய மாஸம். — NO. 6

ஸ்ரீமத்வாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீ.ம. வே. பாகவத ரங்கநாதாசாரியாரின் மொழிபெயர்ப்பு.)

முப்பதாவது அத்யாயம்.

தக்ஷிணையின் விபரம்.

(முன் 133ம் பக்கம் தொடர்ச்சி.)

இந்த யக்ஞம் பூர்த்தியாகும் ஸந்தர்ப்பத்தில், எல்லா பாண்டவர்களும் திரௌபதி தேவியும், சொத்துக்களுடன் ஸமஸ்த பூமண்டலத்தையும், தன் சொந்த பத்னியார்களின் சரீரத்திலுள்ள மங்கள ஸூத்திரம் மட்டில் பாக்கிவைத்து எல்லா ஆபரணங்களையும் உற்பத்தி இல்லாதவரும் அனைவராலும் விரும்பத்தகுந்தவருமான ஸ்ரீ வேதவியாஸரிடம் சாஸ்திரோக்தமாய் ரித்விக்குகளுக்கு பிரித்துக்கொடுப்பதற்காகவென்று ஸமர்ப்பணம் செய்தனர். விபாகம் செய்வது ஸ்ரீ வேதவியாஸருக்கு பிரியமானதால் பாண்டவர்கள் இந்த சொத்துக்களை பிரித்துக்கொடுப்பதற்காகவென்ற வியாஜத்தால் அவருக்கு எல்லாவற்றையும் ஸமர்ப்பணம் செய்தனர். இவ்

218927

வாறு பாண்டவர்களால் எல்லா சொத்துக்களும் மனப்பூர்வமாய் விஷ்ணுவுக்கு ஸமர்ப்பணமும் செய்யப்பட்டது. இந்த ஸ்ரீ வேத வியாஸர்தான் ரித்விக் பிராம்மணர்களிடம் அந்தர்யாமியாய் இருந்துகொண்டு. எல்லா காரியங்களையும் செய்தவர். பாண்டவர்கள் தங்கள் சொரூபத்துடன் சரீரம், இந்திரியம், ப்ராணன், மனஸ் இவைகளை ஸ்ரீ வேதவியாஸருக்கு ஸமர்ப்பணம் செய்து, எல்லா பூமி முதலானவைகளும் தங்களுடையது என்றும், நாம் தங்களைச் சேர்ந்தவர்களென்றும் எங்களுடையது ஒன்றுமே இல்லை என்றும், ஸ்வாமியான தாங்கள் ஒருவரே ஸ்வதந்திரரென்றும் மற்றெவரும் ஸ்வதந்திரர்கள் இல்லை என்றும் எல்லா காலத்திலேயும் எல்லா இடங்களிலேயும் தாங்கள் பரிபூர்ணராய் இருக்கிறீர் என்றும், கூறிக்கொண்டு சந்தோஷமுள்ளவர்களாய் நமஸ்காரம் செய்தனர். பிறகு ஸ்ரீ வேதவியாஸர் தக்ஷிணையைப் பிரிக்கப்போகவும் அந்த ரித்விக்குகளான மகரிஷிகள் சொன்னதாவது, "நாங்கள் எல்லோருமே சேர்ந்து இந்த ராஜ்யத்தை பாண்டவர்களுக்கே திருப்பிக்கொடுக்கின்றோம். நாம் தங்கங்களைப் பெறுவதாலேயே திருப்தியடைந்திருக்கிறோம். பாண்டவர்கள் தான் பூமியை ஸம்ரக்ஷிப்பதில் மிகவும் தகுதியானவர்கள்" என்று. பிராம்மணர்கள் சொன்ன இந்த வார்த்தையைக்கேட்டு பத்னியார்களுடன் கூடிய பாண்டவர்கள், ஸ்ரீவேதவியாஸரை மறுபடியும் நமஸ்கரித்து "எங்களுக்கு தர்ம மார்க்கத்தில் கிடைத்த இந்த ராஜ்யத்தை இந்த யக்ஞத்தின் பூர்த்தி காலத்தில் தங்களுக்கே ஸமர்ப்பணம் செய்துவிட்டு வனம் சென்று தவம் செய்கின்றோம்" என்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லப்பட்ட பிரபுவான ஸ்ரீவேதவியாஸர் ரிஷிச்ரேஷ்டர்களின் பிரார்த்தனையின்பேரில் சொன்னதாவது. "பாண்டவர்களே! ரிஷிகளுக்கு இந்த ஸுவர்ணம்தான் சொத்து. என் ஆக்ஞையின்பேரில் நீங்கள் ஸம்பூர்ணமான ராஜ்யத்தையும் அனுபவியுங்கள். எனக்கு நீங்கள் ஸமர்ப்பணம் செய்தது அதை தானம் செய்ததின் பலனை உங்களுக்கு தந்திருக்கிறது. என் ஆக்ஞையின்பேரில் நீங்கள் மீண்டும் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டால் ஒருவருக்கு கொடுத்ததை திரும்பப்பெறும் தத்தாபஹார தோஷமென்பது உங்களுக்கு ஏற்படாது.

மேலும் நான் உங்களுக்கு பாட்டன், உங்களுக்கு குரு, உங்கள் ஸம்ரக்ஷகன். இந்த காரணங்களால் ராஜ்யத்தை என்னிடமிருந்து பெறுங்கள்" என்றிவ்வாறு ஸ்ரீ வேதவியாஸரால் கூறப்பட்ட பாண்டவர்கள் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டு எல்லா தங்கங்களையும் அவருக்கே தானம் செய்தனர். ஸ்ரீ வியாஸர் ரித்விக் பிராம்மணர்களுக்கு அந்த ஸுவர்ணத்தை விபாகம் செய்துவிட்டு தன் பாகத்திற்கு வந்த எல்லா தங்கங்களையும் சந்தோஷத்துடன் குந்திக்குக்கொடுத்தார். பத்னிமார்களுடன் சேர்ந்த பாண்டவர்களுக்கு உத்தமமான ரத்னாபரணங்களைக்கொடுத்து அவரவர்களுக்கு தனித்தனியே அவர்களுக்குகந்த வரன்களைக்கொடுத்தார். பாண்டவர்களும் சந்தோஷமடைந்து ஸ்ரீவேதவியாஸரை நமஸ்காரம் செய்தனர். யக்ஞபதியான அந்த பகவான் ஒரு அசுவமேதத்தின் தக்ஷிணைக்கு மூன்று மடங்காயும் சம்பூர்ணமாயும் சிறந்ததாயும் உள்ள தக்ஷிணையை பாண்டவர்களிடமிருந்து பெற்று, அவ்வைந்து அசுவமேதத்தில் ஒவ்வொரு யக்ஞத்தையும் பஹுஸுவர்ணம் என்று பெயருள்ளதாயும் மூன்று அசுவமேதத்தின் பலனைத் தருவதாயும் செய்தார்.

க்ரோதாஸுரனைக் கொன்றது.

பிறகு அவிப்ருத ஸ்நானம் செய்த ஸ்ரீ கிருஷ்ணருடன் சேர்ந்த பாண்டவர்கள் ஐந்து இந்திரர்கள்போல் பிரகாசித்துக்கொண்டு தேவர்களாலும் துதிக்கப்படவும், பாண்டவர்களின் யக்ஞமும் துதிக்கப்படவும் க்ரோதத்திற்கு அபிமானியாயுள்ள அசுரன் கீரிப்பிள்ளையின் ரூபமெடுத்து க்ரூரமான சப்தம் போட்டுக்கொண்டு இந்த யக்ஞத்தையும் யக்ஞத்தைச் செய்த பாண்டவர்களையும் யக்ஞத்தைச்செய்வித்த ஸ்ரீகிருஷ்ணவியாஸாதிகளையும் நிந்தித்துக்கொண்டு பின்வருமாறு பேசினான், களத்தில் சிந்தும் நெல் மணிகளைச் சேகரித்து அதைக்குத்தி உண்டு பிழைக்கும் ஒரு உஞ்சவிருத்தி பிராம்மணன், பெண் பிள்ளை நாட்டுப் பெண்ணுடன் வந்த அதிதியாய் வந்த தர்மதேவதைக்கு மிகுந்த பக்தியுடன் ஒரு படி மாவைக் கொடுத்தான். அந்த தானத்தின் ஒருவீசம் பாகம் யோக்யதையையும்கூட இந்த யக்ஞம் பெற

வில்லை என்ற. அப்பொழுது பிராம்மணர்கள் அது அதற்காக என்றார்கள். அதற்கு அந்த கீரிப்பிள்ளை சொல்லிற்று; ஏனென்றால் அந்த அதிதியின் கால்லம்பிய ஜலத்தால் என் சரீரத்தின் ஒரு புறம் ஸுவர்ணமயமாயிற்று. மற்றொரு புறத்தை எல்லா தீர்த்த ஜலங்களிலேயும் இந்த அசுவமேத யக்ஞங்களின் அவப்ருத ஜலங்களிலேயும் தோய்த்து நான் ஸ்நானம் செய்தும் அந்த பாகம் ஸுவர்ண மயமாகவில்லை. ஆதலால் தான் என்றது.

பிறகு இதன் உண்மையை அறிந்த ஸ்ரீ கிருஷ்ணரும் மகரிஷிகளும் இந்த க்ரோதாஸுரனை அந்தம் தமஸ்ஸுக்கு அனுப்புவதற்காகவென புன் சிரிப்புக் காட்டவும், இதைக் கண்டுகொண்ட அந்த அஸுரன் கண்ணிற் படாமல் மறைந்து சென்றான். அவன் காலந்தரத்தில் தமஸ்ஸை அடைகிறான். யக்ஞத்தை நிந்தித்து தமஸ்ஸை அடையவே இவனுடைய சரீரத்தின் ஓர் பாகம் முன்பு தங்கமயமாயிற்று. ஸ்ரீ கிருஷ்ணரின் அபிப்பிராயத்தை அறிந்த மகரிஷிகள் ஸ்ரீ கிருஷ்ணருடையவும் பாண்டவருடையவும் இந்த யக்ஞாதிகளுடையவும் அநேக குணங்களை எடுத்துச்சொல்லிக் கொண்டு இந்த கீரிப்பிள்ளையை அதட்டினார்கள். இந்த அஸுரன் முன்பு ஜமதக்னி மகரிஷி ச்ராத்தம் செய்ய வைத்திருந்த பாலை கீரிப்பிள்ளையின் உருவங்கொண்டு எச்சிலாக்கினான். அச்சமயம் ஜமதக்னியின் பித்ருக்கள் இந்த க்ரோதாஸுரனை சபித்தனர். பிரீதியாகவே ஆவாய் யமன் முதலான தேவர்களை நீ எப்பொழுது நிந்திக்கிறாயோ அப்பொழுது அந்த பாபத்தால் கோரமான தமஸ்ஸை அடை, என்றிவ்வாறு அந்த பித்ரு தேவதைகளால் சபிக்கப்பட்டவனாய் அந்த க்ரோதாஸுரன் தர்மபுத்திரர் முதலானவர்களை நிந்தித்து தமஸ்ஸுக்கு சென்றான். தரித்திரனான அந்த உஞ்ச விருத்தி ப்ராம்மணன் தானம் செய்த பொருள் விசேஷ பலனை அளித்ததாயிற்று. ஆயினும் காரியம் செய்பவனின் க்ஞானாதி குணங்கள்தான் அநந்தமான பலனைத் தருபவைகள். ஸாது ஜனங்களின் சந்தோஷமும் அநந்தமான பலனைத் தருபவைகள். ஸாது ஜனங்களில் உத்தமர் விஷ்ணுதான். பாண்டவர்களைவிட குணத்தில் மேலான கர்த்தாவும் அல்லது

அவர்களுக்கு சமமான கர்த்தாவும் உலகில் யார் உண்டு. ஸஜ்ஜன ச்ரேஷ்டரான விஷ்ணு, ஸஜ்ஜனர்களான ரிஷிகள் தேவர்கள் இவர்களுடன் சேர்ந்து தனக்கு பரம பிரியர்களான பாண்டவர்களைக்கொண்டு ப்ரத்யக்ஷமாய் இருந்து எந்த யக்ஞ ச்ரேஷ்டத்தை நடத்தி வைக்கிறாரோ, அந்த யக்ஞத்தின் ஸமானமான புண்யத்திற்குகாரணம் யாது உண்டு. இந்த விஷயத்தில் பைங்கி சாகைகளுள்ளவர்கள் அடியிற்கண்ட மந்திரம் சொல்லுகின்றனர்.

விஷ்ணு பக்தி இல்லாத ஜனங்கள் செய்த கர்மா நாசமுள்ளது. விஷ்ணுவிடம் பக்தி உள்ளவன் செய்த கர்மா நித்யமான பலனைத் தருவதாகும். அதிலும் விஷ்ணு பக்தனான சூத்ரன் செய்த கர்மாவைவிட விஷ்ணு பக்தனான வைசியன் செய்த கர்மா மேலானது. இவ்வாறு வர்ண கிரமப்படி பலனில் உயர்வு தாழ்வு உண்டு. விஷ்ணு பக்தர்களாயுள்ள வைஷ்ணவர்களான மனுஷ்யர்கள் செய்யும் கர்மாவைவிட கந்தர்வர்கள் செய்யும் கர்மா நூறு மடங்கு மேலானது. அந்த கர்மாவைவிட பித்ரு தேவதைகள் ரிஷிகள் செய்த கர்மா நூறு மடங்கு மேலானது. அதைவிட சிறந்தது தேவர்கள் செய்த கர்மா. அதைவிட சிறந்தது இந்திரன் செய்த கர்மா. அதைவிட சிறந்தது பரமசிவன் செய்த கர்மா அதைவிட நூறு மடங்கு அதிகமாய் பலனுள்ளது சதுர்முக பிரம்மா செய்த கர்மா, என்றிவ்வாறு அறியவேண்டும். ஜீவராசிகளில் சதுர்முகன் வரையில் வைஷ்ணவத்தன்மை என்பது அதாவது விஷ்ணு பக்தனாய் இருத்தல் கிரமமாய் விருத்தியடைந்திருப்பதின் நிமித்தம், அவரவர்கள் செய்யும் கர்மாக்களுக்கு அதிகமான பலனைத்தருவது விஷ்ணுவின் ப்ரஸாதத்தால் தான் உண்டாவதாலும் வேறு வகையாய் ஏற்படுவதில்லை யாதலாலும் சதுர்முகன் செய்த யக்ஞாதி கர்மாவுக்கு ஸமமானது வேறு ஒன்றும் இல்லை. என்று இவ்வாறு பைங்கி சுருதி அறிவிக்கிறது. ஆகவே பாண்டவர்களுக்கு க்ஞானாதி குணங்களாலும் யக்ஞாதி கர்மாக்களாலும் சமமான வஸ்து எந்த தேசத்திலேயும் எந்த காலத்திலேயும் யாதும் இல்லை. ஆகையால் தான் தாமஸனான அந்த

க்ரோதாபிமானி அஸுரன் விஷ்ணுவிடம் ஈடுபட்டவர்களான பாண்டவர்களை நிந்தித்து அந்தம் தமஸ்ஸை அடைந்தான்.

பிறகு தேவப்ராமணர்களின் சபையில் தர்மபுத்திரரால ப்ரசினம் செய்யப்பட்ட மிகவும் சந்தோஷமடைந்த ப்ரபுவான ஸ்ரீ க்ருஷ்ணர் ஸமஸ்தமான வைஷ்ணவ தர்மங்களையும் உபதேசித்தார். பாண்டவர்கள் உத்தமமான பக்தியுடையவர்களாய் எல்லா வைஷ்ணவ தர்மங்களையும் சிரவணம் செய்து ஜகதீசுவரனை ஸ்ரீ க்ருஷ்ணரை பூஜித்துக்கொண்டு உத்தமமான ஆனந்தத்தை அடைந்தனர்.

ஸ்ரீமத் ஆனந்ததீர்த்த பகவத் பாதாள் இயற்றிய ஸ்ரீ மஹாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் முப்பதாவது அத்யாயம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணமஸ்து.

(தொடரும்)

யக்ஷ ப்ரசினம்.

(முன் 160ம் பக்கம் தொடர்ச்சி)

66. ப்ராம்மணனுக்கு தானம் கொடுத்தல் எதற்காக? தர்மம் சம்பாதிக்க (தர்மமாகிய பகவத்ப்ரீதிக்காக)

67. கூத்தாடி குறங்கோட்டிகளுக்கு எதற்காக பொருள் கொடுக்கப்படவேண்டும்? கேவலம் கீர்த்திக்காக (கொடுக்காவிடில் அவன் செல்லும் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நிந்தித்திருப்பான்).

68. வேலையாட்களுக்கு திரவியம் ஏன் கொடுக்கப்படவேண்டும்? அவர்களின் சம்ரக்ஷணைக்காக.

69. அரசர்களுக்கு ஏன் கொடுத்தல் வேண்டும்? பயம் நீங்க.

70. உலகம் மூடப்பட்டிருப்பது எதனால்? அக்ஞானத்தால் (ஜீவ சமூகம் மூடப்பட்டிருப்பது அவித்யையால்.)

71. உலகம் எதனால் ப்ரகாசிப்பதில்லை? இருளால் (ப்ரம்மம் தமஸ்ஸாகிய அக்ஞானத்தால் பிரகாசிப்பதில்லை அதாவது காணப்படுவதில்லை.)

72. நண்பர்கள் ஏன் விலகுகின்றனர்? லோபமிருந்தால் (நண்பர்

களாகிய ஸத்கர்மங்கள் விஷயங்களில் லோபமிருந்தால் விலகுகின்றன.)

73. எதனால் ஸ்வர்க்கம் செல்வதில்லை? துஷ்டர்களின் ஸங்கத்தால் (ஸ்வர்க்கம் எனப்படும் பகவானை அடையாமல் இருப்பது தேகாபிமானத்தால்)

74. உயிருள்ளவன் செத்தவனென்று எப்போது கருதப்படுகிறான்? பணம்போய் தரித்திரனானால் (ஒருவன் பிணம்போல் பார்க்கத் தகாதவனாய் ஆவது க்ஞான தரித்திரனானால் அதாவது க்ஞானமில்லாமற் போனால்)

75. தேசம் இறந்ததாய் ஆவது எப்போது? அரசன் இல்லாவிடில் (ராஷ்டிரமாகிய தேகம் இறந்ததாய் ஆவது ராஜனான முக்ய ப்ராணர் இல்லாமல் இருந்தால்)

76. சிராத்தம் இறந்ததாய் ஆவது எப்போது? வேதாதிகளை படிக்காத ப்ராம்மணர்களிடம் தேவர்களையும் பித்ருக்களையும் ஆவாஹனம் செய்து கர்மாவைச் செய்வதால்)

77. யக்ஞம் இறந்ததாய் ஆவது எப்போது? தக்ஷிணை கொடுக்காமல் இருந்தால் (பகவத்த்யானமில்லாமல் இருந்தால்)

78. திக்கு.திசை எது? ஸாதுக்கள் (உபதேசம் செய்கிறவர்கள் ஸாதுக்கள்)

79. ஜலம் எது? ஆகாசம். (ஜனித்தவர்களை ரக்ஷிப்பதால் ஜலன் எனப்படுகிறவர் பிரகாசிக்கும் ஹரிதான்).

80. அன்னம் எது? பசு (க்ஞானரூபமான அன்னத்தை ஸாதித்துக் கொடுப்பது கோவாகிற வேதவாக்)

81. விஷம் எது? யாசனை (ஸம்ஸாரத்துக்கு விஷம் பகவத் குணங்களின் ப்ரார்த்தனை)

82. சிராத்தத்தின் காலம் எது? ப்ராம்மணன் வந்தபொழுது (சிரத்தையால் செய்யப்படும் கர்மாவுக்கு பலனை அளிப்பவர் பிரம்மமாகிய வேதத்தால் அறியப்படும் ஹரிதான்)

83. தபஸ்ஸின் லக்ஷணமென்ன? தம் தம் வர்ணாசிரம தர்மங்களை செய்து கொண்டிருப்பது)

84. தமம் என்பது எது? மனதை நிக்ரஹம் செய்வது.

85. க்ஷமை எது? சுகம் துக்கம் லாபம் நஷ்டம் ஜயம் பராஜயம் முதலான த்வந்த்வங்களை பொறுத்திருப்பது.

86. லஜ்ஜை எது? சாஸ்திர விருத்தமான காரியங்களைச் செய்யாதிருத்தல்.

87. ஞானம் எது? சாஸ்திரங்களின் உண்மையான அர்த்தத்தை அறிதல்.

88. சமம் எது? சித்தம் (பகவானிடத்தில் லயமடைந்த சாந்தியடைந்த புத்தி.)

89. ஆர்ஜவம் (ஒழுங்கு) எது? சமானமாய் பாவித்தல் (என்றால் பாரியாளையும் காட்டுப்பெண்ணையும் ஸமானமாய் பாவித்து ஸமானமான ஸம்பந்தம் செய்தல் ஒழுங்கு அல்ல. சாஸ்திர விஹிதமான அவரவர்களுக்குகந்த ஸம்பர்க்காதிகளைச் செய்தல் ஒழுங்காகும். மனம் வாக்கு காயம் இவைகள் ஒரே விதமாய் ஸமானமான காரியத்தைச் செய்தல் ஒழுங்காகும். பகவான் எங்கும் ஸமமாய் தோஷமில்லாமல் இருப்பதாய் அறிவுடனிருப்பது ஒழுங்காகும்.

90. ஜயிக்கமுடியாத சத்ரு யார்? கோபம்.

91. தீராத வியாதி எது? லோபம்.

92. ஸாது யார்? ஸமஸ்த ஜனங்களுக்கும் பரலோகத்தை அளிக்கும் ஹிதத்தைச் செய்பவன்.

93. அஸாது யார்? கருணையில்லாதவன்

94. மோகம் எது? இன்னது தர்மம் இன்னது அதர்மம் என்று அறிவில்லாமை. (பகவானுடைய குணங்களை சரியாக அறியாமல் இருப்பதுடன் மாறாகவும் அறிந்திருப்பது)

95. மானம் எது? தலைவன் நானே என்று அபிமானம் வைத்திருப்பது.

96. ஆலஸ்யம் எது? தர்மத்தில் உதாசீன புத்தியைக்கொண்டிருப்பது.

97. துக்கம் எது? அக்ஞானம் (துக்கம் அக்ஞானத்திற்கு காரணம்.)

98. உறுதி என்று எதை ரிஷிகள் கூறுகின்றனர். பகவத் தர்மத்தில் உறுதிகொண்டிருப்பதை.

99. தைரியம் எது? இந்திரியங்களை அடக்குதல்

100. ஸ்நானம் எது? மனதின் அழுக்கை கழுவுவது (ஸ்நானத்தின் ப்ரதான லக்ஷணம்)

101. தானம் எது? பிராணிகளை சம்ரக்ஷிப்பது.

102. பண்டிதன் யார்? தர்மத்தை அறிந்தவன் (பகவத்ஞான முள்ளவன்)

103. நாஸ்திகன் யார்? மூர்க்கன்.

104. மூர்க்கன் யார்? ச்ருதிஸ்ம்ருதி சிஷ்டாசாரம் இவைகளை அனுசரிக்காமல் தன் இச்சைப்படி நடப்பவன்.

105. காமம் எது? ஸம்ஸார துக்கத்திற்கு காரணமானது.

106. மாத்சரியத்தின் லக்ஷணமென்ன? பிறர்களைப் பார்த்து ஏற்படும் வயிற்றெரிச்சல்

107. அஹங்காரமென்று எதைச் சொல்கிறீர்கள்? பெரியோருடைய அக்ஞானத்தை.

108. டம்பம் எது? தான் செய்த தர்மம் முதலானவைகளை மிகைப்படுத்தி தறிவிப்பது.

109. மேலான அதிர்ஷ்டம் எது? தானம் செய்வதால் ஏற்படும் பலன் (அதிர்ஷ்டமாகிய மேலான தெய்வமான நாராயணன் அபய தானத்தின் பலனாவான்)

110. கோள் சொல்வது எது? பரர்களை நிந்திப்பது (பாணுவை ஹரியை நிந்திப்பது பைசுன்யமாகிற கோள் சொல்வது ஆகும்;

111. தர்மமும் அர்த்தமும் காமமும் ஒன்றுக்கொன்று விரோதமுள்ளவைகள். இவ்வாறு எப்போதும் முரண்பட்டவைகளாயுள்ள இவைகளுக்கு எப்போது ஒருங்கே சேர்க்கை ஏற்படும்?

ஒருவனுக்கு தர்மத்தில் புத்தியுள்ள பாரியாள் வாய்த்து விட்டால் அவனுக்கு தர்மம் அர்த்தம் காமமாகிய த்ரிவர்க்கமும் வாய்த்து இம்மூன்றுக்கும் அங்கு ஒருங்கே சேர்க்கை ஏற்படுகிறது.

112. எதனால் அழியாத நரகம் உண்டாகிறது. சீக்கிரம் சொல்.

ப்ராம்மணம் ஸ்வயமாஹூய யாசமானமகிஞ்சனம் । பஸ்சாந் நாஸ்தீதி யோ ப்ரூயாத் ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத் ॥

பிச்சை எடுக்கும் ஏழையான ப்ராம்மணனை தான் வேண்டுவதைத் தருவதாய்ச் சொல்லி அழைத்து வந்து, பிறகு இல்லை என்று சொல்லி மறுப்பவன் எப்போதும் அழியாத நரகம் செல்வான்.

(பிரம்மஞானத்தை வேண்டுபவனும் அறிவில்லாதவனும் பிரம்மஞானம்பெற அருகதையுள்ளவனுமான ஓர் சிஷ்யனை வலுவில் அழைத்து சிஷ்யனாக அமர்த்தி உபநிஷத் பாகங்களைச் சொல்லி ஞானத்தை உண்டாக்கியபின், வேதம் உபநிஷத் புண்யம் பாபம் ஸ்வர்க்காதி லோகங்கள் முதலான இவைகள் எல்லாமே கல்பிதம் பொய் என்றும் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் பேதமில்லை என்றும் இவ்வாறு பஞ்சபேதங்களை மறைத்து அத்வைத உபதேசம் செய்து அவனை மோசம் செய்பவன் எப்போதும் அழியாத அந்தம் தமஸ்ஸுக்குச் செல்வான்)

வேதேஷு தர்மசாஸ்த்ரேஷு மித்யாயோ வை த்விஜாதிஷு| தேவேஷு பித்ரு தர்மேஷு ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத் || வேதங்களிடமும் தர்மசாஸ்திரங்களிடமும் பிராம்மணர்களிடமும் தெய்வங்களிடமும் பித்ருக்களின் தர்மங்களிடமும் பொய் யென்று எண்ணி நடந்து கொள்பவன் எப்போதும் தீராத நரகத்தை அடைவான்.

(வேதங்கள் சாஸ்திரங்கள் பிராம்மணாதி வர்ணங்கள் பிரம்மாதி தேவதைகள் பித்ருக்கள் முதலான எல்லா ஜகத்தும் கல்பிதம் பொய் என்று சொல்பவன் அழியாத நரகமாகிய அந்தம் தமஸ்ஸை அடைவான்

வித்யமானே தனேலோபாத் தான போக விவர்ஜித;| பஸ்சாந் நாஸ்தீதியோப்ரூயாத்ஸோக்ஷயம் நரகம் வ்ரஜேத்||

பணமிருந்தும் அதிலுள்ள ஆசையால் பிராம்மணாதி ஸத்பாத்திரங்களில் தானம் செய்யாமலும் பாரியாதி ப்ருத்யர்களுடன் அனுபவிக்காமலும் பிசாசம்போல் அந்த தனத்தை ஸம்ரக்ஷித்துக்கொண்டும் வாயால் வெளியில் தன்னிடம் இல்லை என்று சொல்லிக்கொண்டும்) இருப்பவன் அழியாத நரகத்தை அடைவான்

(ஈசுவரனுக்கும் ஜீவனுக்குமுள்ள மதிப்பு வாய்ந்த பேத வாசனையாகிய தனம் ஒருவனின் மனதில் எப்போதும் தோன்றிக்கொண்டு ஸ்பஷ்டமாய் இருந்து வந்தும், துஷ்டமான சாஸ்திரங்களிலுள்ள பக்ஷபாதத்தால் அந்த வேதத்தை இதரர்களுக்கு உபதேசிக்காமலும் சுயம் அதை பாரமார்த்திகமானதென்று எண்ணாமலும் வ்யவாஹாரத்துக்கு மட்டில் இந்த பேதம் உபயோகமானதென்று எண்ணி பிசாசமாகிய அதிதாமஸன்போல் அந்த தனத்தை வைத்து காப்பாற்றி வைத்திருப்பவன் அந்தம் தமஸ்ஸை அடைவான்)

118. ராஜனே! பிராம்மண்யமானது நிச்சயப்படுவது குலத்தாலா கல்ல ஆசாரத்தாலா படிப்பாலா சாஸ்திர சிரவணத்தாலா?

பிராம்மண்யத்திற்கு கேவலம் குலமோ அத்யயனமோ சிரவணமோ காரணமன்று. தனக்கு சாஸ்திரத்தில் உசிதமானதென்று சொல்லப்பட்டுள்ள கர்மாக்களை அனுஷ்டிப்பது தான் பிராம்மண்யத்தை நிச்சயிப்பதாகும். தம்தம் கர்மானுஷ்டானத்தை அவரவர்கள் சிரமப்பட்டாவது நடத்தி வரவேண்டும். அதிலும் பிராம்மணர்கள் அவைகளை விசேஷமாய் அனுஷ்டிக்கவேண்டும். ஸதாசாரத்தை அனுஷ்டிப்பவன் எப்போதும் கெடமாட்டான். ஸதாசாரம் கெட்டவன் தான் கெடுதலை அடைந்தவன். சாஸ்திரங்களை படிக்கிறவர்களும் பரிசீலனை செய்கிறவர்களும் இதர சாஸ்திரங்களை விமரிசை செய்கிறவர்களும்கூட ஸதாசார அனுஷ்டானமில்லாதவர்களாயிருந்தால் துக்கமுள்ளவர்களும் மூர்க்கர்

களுமாவார்கள். சாஸ்திரார்த்தத்தின் படிக்குள்ள ஆசார அனுஷ்டானமுள்ளவர்கள்தான் க்ரியாவந்தர்களும் பண்டிதர்களுமாவார்கள். நான்கு வேதங்களை படித்திருந்தவனாயினும் துஷ்டமான ஆசாரமுள்ளவனாயிருந்தால் அவன் சூத்திரனைவிட உத்தமனாகமாட்டான். எப்போதும் சாஸ்திரத்தில் சொன்னபடி அக்னிஹோத்ராதிஸதாசாரத்தை அனுஷ்டித்து இந்திரிய நிக்ரஹமுள்ளவன்தான் பிராம்மணன் ஆவான். (அதாவது பிரம்மக்ஞானியாவான்)

114. பிரிய வசனங்களை சொல்பவன் எதை அடைகிறான்? ப்ரியனாகிறான். (பகவானுடைய ப்ரியரான வாயுபகவானின் வசனங்களாகிற ஸ்ரீமத்வபாஷ்யாதிகளின் அர்த்தங்களை சொல்பவன் ஹரியின் பிரியனாகிறான்)

115. விமரிசை செய்து காரியம் செய்பவன் எதை அடைகிறான்? தன் சமூகத்தில் அதிகமாய் ஜயமடைகிறான்.

116. அநேக மித்ரர்களைக் கொண்டவன் எதை அடைகிறான்? சுகமான வாஸத்தை. (அநேகர்களான இந்திரியங்களை அடக்கி தன் வசமாக்கிக்கொண்ட ஜிதேந்திரியன் சுகமாய் ஜீவிக்கிறான்.)

117. தர்மத்தில் ஈடுபட்டவன் எதை அடைகிறான்? ஸுகதியை (தர்மனெனப்படும் பகவானிடம் ஈடுபட்டவன் ஸுகதியாயாகிய மோக்ஷத்தை அடைகிறான்.)

118. எவன் சுகப்படுகிறான்? பஞ்சமே ஹனி ஷஷ்டேவா சாகம் பசதி ஸ்வேக்ருஹே| அந்ருணீச அப்ரவாசஸீச ஸ வாரிசரமோததே||

ஐந்தாறு நாட்களுக்கொருதடவை ஆகிலும் ஓர் கீரையாவது தன் சொந்த வீட்டில் சமைத்து கடன் கஷ்டமில்லாமல் வெளியில் ஓடியாடித் திரியாமல் இருந்து சொஸ்தமாய் காலக்ஷேபம் செய்பவன்தான் சுகசாலி. (யௌவனத்திலோ கிழத்தனத்திலோ ஆசையாகிய காமத்தால் உண்டாகும் லோபத்தை கிருகஸ்தாசிரமத்திலுள்ளவன் ஜயித்து தேவரிணம் ரிஷிரிணம் பித்ரு ரிணங்களை தீர்த்தவனும் விஷ்ணுவிடம் விசேஷமாய் வசிப்பவனுயுமிருப்பவன் சுகசாலி)

119. எது ஆச்சரியம்? அஹன்யஹனி பூதானி கச்சந்தீஹ யமாலயம்| சேஷா: ஸ்தாவரமிச்சந்தி கிமாஸ்சரியம் அத: பரம்||

ஒவ்வொரு நாளும் ஜனங்கள் பிராணனை விட்டு யமலோகம் செல்வதை இதரர்கள் கண்ணாரப் பார்த்திருந்தும் இன்னின்னார் இன்னின்ன உபாதிகண்டுதான் இறந்தார்களேயன்றி தமக்கு அந்த உபாதி இல்லை

யாதலால் தாம் சாசுவதமாய் இருக்கப்போகிறோம் என்று எண்ணுகிறார்களே, இதைவிட வேறு ஆச்சரியம் உண்டோ.

(ஒவ்வொரு நாளும் ஜனங்கள் தூக்கத்தில் அவர்களின் ஆலயன் ஆசிரியனான விஷ்ணுவை அடைந்து வந்தும், அதை அறியாமல் பகவானைத்தவிர்த்துள்ள இதரர்கள் யாவருமே, பலிஷ்டர்களை கீழானவர்களாய்க் கொண்டதால் ஸ்தாவரன் எனப்படும் விஷ்ணுவை அடைய புதிதாய் எண்ணுகிறார்களே; இதைவிட வேறு ஆச்சரியம் உண்டோ?

120. வழி எது?

தர்க்கோ அப்ரதிஷ்ட: ச்ருதயோ விபின்னா: நைகோ ரிஷி: யஸ்யமதம் ப்ரமாணம்। தர்மஸ்யதத்வம் நிஹிதம் குஹாயாம் மகாஜனோ யேனகத: ஸபந்தா:॥

தர்க்கமாகிய யுக்திகள் எல்லையில்லாமல் இருக்கின்றன. வேதங்களோ மேற்பார்வைக்கு ஒன்றுக்கொன்று முரண்பட்ட அர்த்தம் கொண்டதாய் காணப்படுகின்றன. வேதத்ரஷ்டாக்களான ரிஷிகளின் வாக்யத்தை பிரமாணமாகக் கொள்வோமென்றால் அபிப்பிராய பேதமுள்ள ரிஷிகள் அநேகர் இருக்கின்றனர். ஆகவே இன்னது தர்மம் இன்னது அதர்மம் என்ற நிர்ணயம் இரகசியமாய் இருப்பதால் மகாஜனங்கள் சிஷ்டா சாரத்தை அனுசரித்து கைக்கொண்ட வழிதான் சரியானது.

(பரமப்ராமாணமாகிய ப்ரம்மதர்க்கமென்பது பிரம்மபரமாக இருக்கிறது. வேதங்கள் விபின்னா: பரமாத்மாவாகிய ஸ்ரீவேதவியாஸரால் அதிகமாய் விபாகம் செய்யப்பட்டிருந்தும் அவிபின்னா: அபிப்பிராய பேதங்கொண்டதன்று ஒரே அபிப்பிராயமுள்ளது தான். விஷ்ணுவின் அபிப்பிராயத்தை பிரமாணமாகக் கொண்டே ஒரே ரிஷியான ஸ்ரீவேத வியாஸர் நர பரம புருஷரான நாராயணனே ஆவார். தர்மனான நாராயணனின் ஸ்வரூபம் ஹிருதய குஹையிலேயே இருந்து வருகிறது. ஆதலால் அந்த ஹிருதய குஹையிலுள்ள பகவானை அடையவேண்டுமென்றால் அந்த ஸ்ரீவேதவியாஸரின் உபதேசம் பெற்றவராயும் மகானும் அஜனுயுமுள்ள பகவானை சிஷ்யர்களிடம் உபதேசத்தால் நயனம் செய்வதால் மகாஜனன் எனப்படும் வாயுபகவானாகிய பூர்ணப்ரக்ஞான ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த பகவத் பாதாள் எந்த வழியை கைப்பிடித்து சென்றிருக்கிறாரோ அந்த வழிதான் சரியானது.

121. செய்தி என்ன?

அஸ்மின் மகாமோகமேயே கடாஹே ஸூர்யாக்னினா ராத்ரிதினேந்தனேன। மாஸர்துதர்வீபரிகட்டனேன பூதானி கால: பசதிதி வார்த்தா॥

பெரும் மயக்கமுள்ள இந்த பிரம்மாண்டமென்னும் அகன்ற வாயுள்ள பாத்திரத்தில் இராப்பகல் என்னும் விறகை எரித்து ருது மாஸம் முதலான கரண்டிகளால் கலக்கி சூரியனாகிற அக்னியால் ஸமஸ்தமானப்ராணிகளையும் காலன் எனப்படும் யமன் சமைக்கிறான். என்பது தான் ஜனங்களுக்கு சொல்லவேண்டிய செய்தி.

(அக்ஞானமே அதிகமாய் உள்ள துக்க தினங்களைக் கொண்ட இந்த ஸம்ஸாரத்தில் இராப்பகல் செய்த பாபங்களாகிய விறகைக் கொளுத்தி சாம்பலாக்குவதாயுள்ள ப்ராத: காலத்தில் ஸூர்யஸ்ச என்றும் ஸந்த்யா காலத்தில் அக்னிஸ்ச என்றும் சொல்லும் ஸந்த்யா வந்தன கர்மானுஷ்டானத்தால் மகிழ்ந்து, மாஸங்களிலேயும் ருதுக்களிலேயும் ஹோமாதிகள் செய்யப்படும் நாட்களில் ஸ்ருக் ஸ்ருவம் பாத்திரங்களை உபயோகிப்பதாலும் மகிழ்ந்து, சுகத்தை நன்கு அளிப்பதால் காலன் எனப்படும் பகவான் ஹரி, அவரை அறிந்தக்ஞானிகளின் பஞ்ச பூதங்களை சமைத்து அவைகளின் சம்பந்தமில்லாமல் விடுவித்து மோக்ஷத்தை அளிக்கிறார் என்ற நற்செய்தி தான் மகாஜனங்களுக்கு சொல்லவேண்டியதாகும்)

122. யுதிஷ்டிரா! நான் கேட்ட பிரசினங்களுக்கு ஸரியான பதில் அளித்திருக்கிறாய். இந்த ஒரு கேள்விக்கு மட்டில் பதில் சொல்லிவிடு.

புருஷன் யார்?

திவம் ஸ்ப்ருசந்தி பூமிம்ச சப்த: புண்யனே கர்மணா! யாதத்ச சப்தோபவதி தாவத் புருஷ உச்யதே॥

எவனுடைய புண்யகர்மாவால் ஏற்பட்ட யசஸ் ஸ்வர்க்கத்தையும் பூமியையும் தொடுகிறதோ எது வரையில் அந்த யசஸ் வியாபித்து இருக்கிறதோ அவன் தான் புருஷனாவான்.

(எவன் ஸ்வர்க்கத்திற்கு அபிமானியான லக்ஷ்மி தேவியையும் பூதேவியையும் தொடுகிறானோ அதாவது ஸ்ரீபூஸமேதனோ, நிவிருத்தி கர்மாவிலிருந்து ஏற்படும் க்ஞானத்தால் அறியப்படுகிறானோ சப்தம் என்பது உலகில் நிலைநிற்குமளவும் அதாவது நித்யமாய் தன் கீர்த்தியால் வியாபித்திருப்பவனோ அந்த ஸ்ரீஹரிதான் புருஷராவார்)

123. யார் மிகுந்த பணக்காரன்?

துல்யே ப்ரியாப்ரியே யஸ்ய ஸுகதுக்கே ததைவச। அதீதாநாகதே சோபே ஸவை ஸர்வதனீநர:॥

வேண்டியதோ வேண்டாததோ ஸுகமோ துக்கமோ முன் நடந்ததோ இனி நடக்கப்போகிறதோ இவைகளில் மனம் வ்யாகுல

டையாமல் எல்லாவற்றையும் சமமாக பாவித்துக்கொண்டு தீரனாய் தைரியம் படைத்தவன் தான் மிகுந்த பணக்காரன்.

(எவருக்கு ப்ரியாளான பாரதி தேவியும் அப்ரியாளாய் அவளுக்கு ஸமானமானமாயுள்ளவளான ஸரஸ்வதி தேவியும் அதிகாரத்தில் ஸமமான வர்களோ, சுகரூபர்களான தேவர்களும் துக்கரூபர்களான அஸுரர்களும் ப்ரான் முதலானவைகளைப் பெறுதலில் சமானர்களோ, முன் நடந்ததும் இனி நடக்கப்போகிறதுமான பகவத் அவதாரங்கள் யாருடைய ஞானத்திற்கு சமானமாய் இருக்கிறதோ, அப்பேர்ப்பட்ட ராஜா வாயுபகவான் தான் ஸர்வதனீ ஸமஸ்தமானவர்களிடம் அந்தர்யாமியாய் இருந்து வரும் பகவத்ரூபமாகிய செல்வத்தைக் கொண்ட மிகுந்த பணக்காரர்.)

இவ்வாறு யக்ஷரூபியாயுள்ள தர்மதேவதை செய்த பிரசினங்களுக்கு தர்மபுத்திரர் பதில் கூறி விஷ்ணு ஸர்வோத்தமத்வம் வாயு ஜீவோத்தமத்வம் முதலான பரமப்ரமேயங்கள் நிறைந்த தத்வமார்க்கத்தை வெளியிட்டிருப்பதை வாசகர்கள் அறிவார்களாக.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸ்ரீமத்வ விஜயம்.

(முன் 119ம் பக்கம் தொடர்ச்சி)

பன்னிரண்டாவது ஸர்க்கம்.

ஓர் அத்வைதியின் அறிக்கை

1. தாம் பெரிய பண்டிதர்கள் என்று கொழுப்படைந்த சாஸ்திர வாதம் செய்யும் மாயாவாதிகளுக்கு தக்ஷணமே பயத்தைத் தரும் சிலாக்யமான பாடப்ரவசனமாகிய கர்ஜனையைக் கொண்டு ஹரியிடம் மனமுள்ளவரான ஸ்ரீமத்வசாரியாராகிய வேதாந்த கேஸரி அந்த உடுபியில் பிரகாசித்திருக்கையில் மாயாவாதிகளாகிய நரிக்கும்பல்கள் பயந்து மனக்கலக்கம் அடைந்தன. 2. பாபிகளாயும் கொடியர்களாயுமுள்ள இந்த மாயாவாதிகள் பூமிக்கு அலங்காரமான ஸ்ரீமத்வாசாரியாரிடம் அசூயை கொண்டு முன்பு அவருடைய முன் அவதாரமான பீமசேனரின் காலத்தில் துரியோதனாதிகளின் சமீபத்தில் மூடர்கள் எப்படியோசித்தன

ரோ, அப்படி எல்லோரும் ஒருங்கே கூடி, சோள தேசத்தாரான பத்மதீர்த்தர் என்ன புண்டரீகபுரி என்ன இவர்களின் அருகில் கலந்து யோசித்தனர். 3. அந்த மாயாவாதிகளின் கூட்டத்தில் அதிகமாய் பேசுபவன் ஒருவன், கெட்ட யோசனையில் துரியோதனின் மாமனான சகுனியைப் போலாத்தவனாய், அயோக்யர்களின் ஆசிரியனான பத்மதீர்த்தருக்கு ஸ்ரீமத்வாசாரியாரிடம் அவரைப்பின் பற்றும் ஸாதுக்களிடமும் கோபமும் மாத்ஸரியமும் திடமாய் ஏற்படச் செய்யும் உத்தேசத்துடன் இவ்வாறு பேசினான். 4. ஸகலஜகத்துக்கும் உபாதான (காரணம்) மாயை என்று சொல்லும் அத்வைத சாஸ்திரத்தை ப்ரவிருத்திக்கவரான சங்காசாரியாரின் சாஸ்திரம் மிகவும் ஆச்சரியப்படும்படி, பரபிரம்மமாகிய வஸ்து ஒன்றே அதாவது விசேஷமில்லாதது என்று சொல்லுகிறது. யதோவாசோ நிவர்த்தந்தே முதலான வேதவாக்யங்களால் அந்த பரபிரம்மம் சொல்ல முடியாவிடினும் அதைச் சொல்லுகிறது. இந்த சாஸ்திரம் புராதனமாயும் எங்கும் இல்லாததாயும் அதாவது துர்லபமாயுமுள்ளது. இவ்வாறு பிரம்மத்தை ஸத்யஞானந்தம் பிரம்மா என்று சொல்லி அதே மூச்சில் பிரம்மம் வாயால் சொல்ல முடியாதது என்று அறிவிக்கும் இந்த சங்காசாரியாரின் சாஸ்திரம் நின்றுக்கொன்று ஒவ்வாதவைகளை அதாவது தர்கடத்தை பூஷணமாகக்கொண்டது. 5. இப்பேர்ப்பட்டதான சங்காசாரியாரின் மாயாவாத சாஸ்திரத்தை சிரவணம் செய்து அந்த ஞானத்தைப் பெறாமல் மானிடர்கள், தேவர்கள், அஸுரர்கள் முதலானதும், பிராம்மணர்கள், சண்டாளர்கள் முதலானதுமுள்ள கண்ணிற்குத் தென்படும் உலகமெல்லாம் "ஜகத்பிரவாஹ: ஸத்யோயம், ஸத்யம் பிதா, பஞ்சபேதா இமே நித்யா:" முதலான பேதத்தை நிரூபிக்கும் வேதாதி ப்ரமாணங்களாலும், ப்ரத்யக்ஷாதி பிரமாணங்களாலும், பேதமிருப்பதாய் அறிவிக்கப்பட்டும் அதற்கு விருத்தமாய் ஜகத்து பேதமில்லாதது என்று அழுத்தமாய் யார்தான் ஸாதனை செய்யமுடியும். 6. எமது அத்வைத சாஸ்திரகாரரான சங்கராச்சாரியாரின் சாஸ்திரப் போக்கு பரஸ்பரம் விருத்தமாயுள்ள இரு கக்ஷிகளுக்கும்

கூட்டங்களில், பகிரங்கமாய் எமது பூஜ்யரான பத்மதீர்த்தர், அந்த கோதாவரி தீரத்தைத்தாண்டி ஸ்ரீமத்வாசாரியார் முன்னுக்கு வாராமல் நான் தடுக்கிறேன், இது நிச்சயம், என்று ப்ரதிக்ஞை செய்தார். ஸ்ரீமத்வாசாரியார் கோதாவரியைத்தாண்டி அப்பாலுள்ள ஊர்களுக்கு வந்துவிட்டார் என்று தெரிவிக்கவும், அதற்கு முன்னேயுள்ள ஊர்களுக்கு வருவதை நான் தடுத்து விடுகிறேன் என்று மீண்டும் ப்ரதிக்ஞை செய்தார். இப்படி அடிக்கடி அவர் ப்ரதிக்ஞை செய்து வருகிறாரேயன்றி ஸ்ரீமத்வாசாரியார் தங்குதடையின்றி இப்போது எமது சமீபமே வந்துவிட்டார். நாம் அவரைத்தடுக்க முடியாதவர்களான துர்பாக்யசாலிகள் ஆகிவிட்டோம். 10. இந்த மத்வாசாரியார் அவரை கேள்வி கேட்பவனின் பிரசினத்தை சம்சயமின்றி கண்டனம் செய்கிறார். இதரர்கள் கண்டிக்க முடியாததாயுள்ள பொருத்தமாயுள்ள யுக்தியையும் எடுத்துச் சொல்லுகிறார். இவ்வாறு அவருடன் வாதம் செய்ய வந்தவர்களை பதில்கூற முடியாமற்செய்து வெட்கப்படும்படி செய்கிறார். அப்பேர்ப்பட்ட வாதிகளிலும் விசேஷமாய் எமது அத்வைதத்தை வாதிப்பவர்களைத்தான் கண்டிக்கிறார் என்று காதில் விழுகிறது. இதற்கு நாம் யாது பதில் செய்யவேண்டும். 11. வெகு புராதனமானதும் ஒரு லக்ஷத்து இருபத்தி ஐயாயிரம் கிரந்தங்களைக் கொண்டதுமான எமது சங்கராசாரியாரின் சாஸ்திரத்தை இந்த மத்வாசாரியார் ஒரே வார்த்தையால் அடித்துப்போட்டார். என்று வழிப்போக்கர்கள் பேசிக்கொண்டு போவதைக் கேட்டு மகா துக்கமடைந்த என்மனம் அந்த மத்வாசாரியாரை வாதத்தில் ஜயிக்க எமது பத்மதீர்த்தர்தான் தகுதியானவர்கள் என்று தங்களைத்தான் நாடியது. 12. புன்சிரிப்புள்ள மகா பண்டிதரான அந்த மத்வாச்சாரியாரை பார்த்தவர்கள் எல்லோரும் இவ்வாறு அனந்தமாயுள்ள வேதங்களை தங்குதடையன்றி உபயோகிக்கும் இவர் வேதவிபாகம் செய்த ஸ்ரீவேதவியாஸர்தான் இந்த சரீரத்துடன் வந்திருக்கிறாரோ, அல்லது நான்கு வேதங்களே இந்த ரூபமாய் வந்திருக்கின்றனவோ என்று பேசுகின்றனர். இந்தப் பேச்சைக் கேட்டு இதரர்கள் எல்லோரும் எமது அத்வைத சாஸ்திரத்தில் அலக்ஷ்யமடைந்து மத்வசாஸ்திரத்தில் மதிப்புகொண்டு இதனால் எமது சாஸ்திரம் பிரகாசிக்காமல் போகக்கூடும். ஆகவே ஜனங்களின் இந்த பேச்சாகிய கட்கம் அத்வைத சாஸ்திரத்தின் வேரை அறுத்து அதைப் பிரகாசிக்கவொட்டாமல் செய்கிறது.

(தொடரும்).

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 115ம் பக்கம் தொடர்ச்சி)

275. வஸுப்ரத (ஓம் வஸுப்ரதாய நம:) செல்வத்தை அளிப்பவர். ரத்ன மணிகளைத் தருபவர்.

276. வஸு (ஓம் வஸவே நம:) ஜனங்களை அவரவர்களுக்குகந்த ஸ்தானங்களில் வசிக்கச் செய்பவர். செல்வமாக இருப்பவர். தன் ஸ்வரூபத்தை மறைப்பவர். எங்கும் வசிப்பவர்.

277. நைகரூப (ஓம் நைகரூபாய நம:) அநேக ரூபங்களுள்ளவர். பலவகை ரூபங்களை எடுப்பவர்.

278. ப்ருஹத்ரூப (ஓம் ப்ருஹத்ரூபாய நம:) பெரிதான ரூபமுடையவர்.

279 சிபிவிஷ்ட (ஓம் சிபிவிஷ்டாய நம:) காஷ்டத்தில் அக்னியாக அந்தர்யாமியாய் இருப்பவர். யக்ஞபசுக்களிடம் வசிப்பவர். யக்ஞபசுக்களிடம் யக்ஞரூபியாய் இருப்பவர், கிரணங்களில் இருப்பவர். சூரிய கிரணங்கள்போன்ற ரோமங்களால் வியாபித்திருப்பவர்.

280. ப்ரகாசந (ஓம் ப்ரகாசநாய நம:) எல்லாவற்றையும் பிரகாசிப்பவர். அதிகமாய் ஸுகத்தை உண்பவர். சூரியாதிகளுக்கு ப்ரகாசத்தை அடைவிப்பவர்.

281. ஓஜஸ்தேஜோத்யுதிதர (ஓம் ஓஜஸ்தேஜோத்யுதிதராய நம:) பிறரை பற்றும் சக்தி ப்ரதாபம் பிரகாசம் இவைகளை தரித்திருப்பவர்.

282. ப்ரகாசாத்மா: (ஓம் ப்ரகாசாத்மனே நம:) ப்ரகாசிக்கும் ஸ்வரூபமுடையவர். அதிகமாய் சுகத்தை அனுபவிப்பவரும் அடையத் தகுந்ததை அடைபவருமானவர். வெளிப்படையாக தோன்றும் பராக்கிரமமுடையவர். க்ஞானரூபமான ஸ்வரூபங் கொண்டவர்.

283. ப்ரதாபந (ஓம் ப்ரதாபநாய நம:) விசேஷமாய் சூரியாதிகளில் இருந்து ஜகத்தை கொளுத்துகிறவர். விசேஷமாய் வ்யாப்தரும் ஜல சமூகத்தை நடத்துபவருமானவர். சத்ருக்களுக்கு துக்கத்தை உண்டாக்குகிறவர்.

284. ர்ருத்த (ஓம் ரித்தாய நம:) எப்போதும் வளர்ந்திருப்பவர். நிரம்பியிருப்பவர்.

285. ஸ்பஷ்டாக்ஷர (ஓம் ஸ்பஷ்டாக்ஷராய நம.) ஸ்பஷ்டமாய் தன் ஸ்வரூபத்தை நிரூபிக்கும் வேதங்களின் எழுத்துக்களைக் கொண்டவர். வேதாக்ஷரங்களை வெளியிட்டவர்.

அஷ்டாக்ஷர (ஓம் அஷ்டாக்ஷராய நம:) ஓம் நமோ நாராயணாய என்ற அஷ்டாக்ஷரங்களைக் கொண்டவர்.

286. மந்த்ர (ஓம் மந்த்ராய நம:) பிரமாணங்களால் காக்கிறவர். மனனம் செய்பவர். மந்த்ரரூபியானவர். மந்திரங்களால் அறிவிக்கப்படுபவர். மனனம் செய்பவர்களை காப்பவர்.

287. சந்த்ராம்சு (ஓம் சந்த்ராம்சவே நம:) சந்திரனுக்கு கிரணங்களைத் தந்தவர். சந்திரகிரணம்போல் ஆனந்தத்தை விளைவிப்பவர். சந்திரனைப்போல் தேககாந்தியுள்ளவர்.

288 பாஸ்கரத்யுதி (ஓம் பாஸ்கரத்யுதயே நம:) சூரியனுக்கு காந்தியைத் தந்தவர், சூரியனின் காந்தியைப்போல் சரீரகாந்தியுள்ளவர். இருளை சூரியன் விரட்டுவதுபோல் சத்ருக்களை விரட்டுபவர்.

289. அமிர்தாம்சூத்பவ (ஓம் அமிர்தாம்சூத்பவாய நம:) அமிர்த கிரணங்களுள்ள சந்திரனை உண்டாக்கியவர். அமிர்தத்தின் கிரணமுள்ள தன்வந்தரி முதலான ரூபங்களுள்ளவரானதால் அமிர்தாம்சு எனப்படுகிறார். உத்பவரென்றால் ஸம்ஸாரத்தினின்றும் வெளியேறினவர். பிறப்பில்லாதவர். இந்திரியாதிகளால் மேலான ருத்திரனைப் படைத்தவர்.

290. பானு (ஓம் பானவே நம:) பிரகாசிப்பவர்.

291. சசபிந்து (ஓம் சசபிந்தவே நம:) அத்யந்தமான சுகமுள்ளவரும் க்ஞானியாயும் இருப்பவர். வேட்டையில் முயல் ரத்தத்தைக் கொண்டவர். தீயவழியில் செல்கிறவர்களை நாசம் செய்பவர்.

292. ஸுரேச்வர (ஓம் ஸுரேச்வராய நம:) நன்கு பிரகாசிப்பவரும் ஜகத்தை ரக்ஷிப்பவருமானவர். தேவர்களுக்கு தலைவர்.

293. ஔஷதம் (ஓம் ஔஷதாய நம:) மூவகை தாபங்களால் கொளுத்தப்பட்டவர்களுக்கு நிதியாய் இருப்பவர் ஸம்ஸாரரோகத்திற்கு மருந்தாய் இருப்பவர்.

294. ஜகதஸ்ஸேது (ஓம் ஜகதஸ்ஸேதவே நம:) ஜகத்திற்கு ஆசிரமாய் இருப்பவர். வர்ணாசிரமதர்மங்கள் கலந்து போகாமல் அணையாய் இருப்பவர்.

295. ஸத்யதர்ம பராக்ரம (ஸத்யதர்மபராக்ரமாய நம:) ஸத்யமென்றால் ஸத்யமான வார்த்தைகளை உடையவர். சேதனாசேதனப்ரபஞ்சத்திற்கு ஆசிரயமாய் இருப்பவர். ஜகத்தை தரிப்பவரானதால் தர்மமெனப்படுகிறவர். பின் திரும்பி பிரகாசிப்பவரானதால் பராக்கிரமரெனப்படுகிறார். வீண்போகாத தார்மிகமகாத்மியமுள்ளவர்.

296. பூதபவ்யபவந்நாத (ஓம் பூதபவ்யபவந்நாதாய நம:) பூமியில் பிறந்தவர்களும் ஸம்ஸாரமுள்ளவர்களும், க்ஞான சூன்யர்களும் பக்தர்களுமானவர்களால் யாசிக்கப்படுபவர். மூன்று காலத்திலுமுள்ளவர்களாலும் யாசிக்கப்படுபவர். அவர்களுக்கு தாபத்தைத்தருபவர். அவர்களுக்கு ஈசுவரர்.

297. பவன (ஓம் பவனாய நம:) லோகரக்ஷகர்களான அரசர்களையும் பாக்யாதிகளை அளித்து ஸம்ரக்ஷிப்பவர். எங்கும் செல்லும் சுபாவமுடையவர்

298. பாவன (ஓம் பாவனாய நம:) பரிசுத்தப்படுத்துபவர். அரசர்களை ஸம்ரக்ஷிக்கச் செய்பவர்.

299. அநல (ஓம் அநலாய நம:) தடையில்லாதவர் முக்ய ப்ராணரைப் பக்தராய்க்கொண்டவர். பிராணனைக் கொள்பவர்.

ப்ராக்ருத அம்சமில்லாதவர். ஜகத்தை ஜீவிக்கச்செய்பவர். அக்னியின் அந்தர்யாமியாய் இருப்பவர். ஜகத்தின் ஸ்ருஷ்டியாதி விஷயங்களில் போதுமென்ற எண்ணமில்லாதவர்.

300. காமஹா (ஓம் காமக்னே நம:) காமத்தை நாசம் செய்பவர். ஜுகுப்ஸித்மான உபாதியை நாசம் செய்பவர். அஸுரர்களின் விருப்பத்தைக் கெடுப்பவர். பக்தர்களின் விஷய காமனையைக்கொடுப்பவர்.

301. காமக்ருத் (ஓம் காமக்ருதே நம:) பக்தர்கள் விரும்புவதை நிர்மாணம் செய்பவர். மன்மதனை உண்டாக்கியவர்.

302. காந்த (ஓம் காந்தாய நம:) ப்ரம்மாதி லோக ஸ்வரூபமுள்ளவர்களின் நிர்ணயத்தைக் கொடுத்தவர். அஸுரர்களின் ஸுகத்தை நாசம் செய்தவர். ஸமுத்ர ஜலத்தில் ஸ்ரீராமாவதாரத்தில் அணை கட்டியவர். மிகவும் அழகானவர். அனைவராலும் விரும்பப்படுகிறவர்.

303. காம (ஓம் காமாய நம:) பக்தர்களால் விரும்பப்படுகிறவர். சதுர்முகனால் அடையப்படுகிறவர். வாயு பகவானால் அடையப்படுகிறவர்.

304. காமப்ரத (ஓம் காமப்ரதாய நம.) விரும்புவதையெல்லாம் தருபவர்.

305. ப்ரபு (ஓம் ப்ரபவே நம:) சிறப்பாய் இருப்பவர்.

306 யுகாதிக்ருத் (ஓம் யுகாதிக்ருதே நம:) யுகம் முதலான கால அளவுகளைச் செய்பவர். யுகங்களின் ஆரம்பத்தைச் செய்பவர்.

307. யுகாவர்த்த (ஓம் யுகாவர்த்தாய நம:) க்ருத யுகம் முதலிய யுகங்களை திருப்புகிறவர்.

308. நைகமாய (ஓம் நைகமாயாய நம:) அநேக மாயைகளோடு கூடியவர். பற்பல விருப்பத்துடன் இருப்பவர். பலவகை ஆச்சரியங்களைக் கொண்டவர்.

309. மகாசன (ஓம் மகாசனாய நம:) மகத்தான சாப்பாடு உள்ளவர். சாப்பாட்டில் மகத்தான ஆசையுள்ள துர்வாஸருக்கு அன்னம் வரும்படிச் செய்பவர். தன்னைக் குறித்தான் யக்ஞம் நடத்தப்படுகிறதென்று, யக்ஞத்தில் பெரும் ஆசைகொண்ட மகேந்திரனை நடத்துகிறவர்,

310. அத்ருச்ய (ஓம் அத்ருச்யாய நம:) கண்ணிற்படாதிருப்பவர்.

311. அவ்யக்தரூப (ஓம் அவ்யக்தரூபாய நம:) வியக்தமாய் இல்லாத ரூபமுள்ளவர்.

312. ஸஹஸ்ரஜித் (ஓம் ஸஹஸ்ரஜிதே நம:) ஆயிரக்கணக்கணக்கான அஸுரர்களை ஜயிப்பவர்.

313. அனந்தஜித் (ஓம் அனந்தஜிதே நம:) அனந்தமான வஸ்துக்களை அடைபவர்.

314. இஷ்ட (ஓம் இஷ்டாய நம:) யாகயக்ஞங்களில் பூஜிக்கப்படுபவர். ப்ரியரானவர்.

(தொடரும்).

சென்னையில்

ஸநாதன தர்ம பரிபாலன சபைகள்.

அகில இந்திய வித்வத் பரிஷத்.

சென்னை ராயபுரம் "லலிதாஸதனம்" பங்களாவின் தோட்டத்தில் அமைந்துள்ள சுமார் 5000 பேர்கள் உட்காரகூடிய பெரியதொரு கொட்டகையில் 25-12-37 சனிக்கிழமை காலை 9 மணிக்கு அகில இந்திய வித்வத் பரிஷத் மிகுந்த உற்சாகத்துடன் ஆரம்பமாயிற்று. பஞ்சாப், ஐக்கிய மாகாணம், பிஹார், ஒரிசா, வங்காளம், குஜரத், பம்பாய் மகாராஷ்டிரம் ஆந்த்ரம், கேரளம் முதலிய தூரஸ்த மகாணங்களிலிருந்தும் சுமார் 500 பண்டிதர்களும் சுமார் 10, 15 மகோமகோபத்யாயம் பட்டம் பெற்றவர்களும் வந்திருந்தனர். நாட்டிலுள்ள பிரசித்தர்களான லௌகிக ப்ரமுகர்களும் தனவான்களும் ஏராளமாய் கூடியிருந்தனர். இந்த பரிஷத்துக்கு எல்லா மடாதிபதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். இதன் மேலான நோக்கத்தைப் பாராட்டி எவ்வகை ஆதரவையும் அளிப்பதாயும் பரிஷத்துக்கு தாம் நேரில் வருவதாயும் ஸ்ரீ ஸ்வாமிகள் பெல்காமில்

சொன்னதாய் முன்னாடியே ஹிந்து முதலான பத்திரிகைகளில் பிரசித்தமாயிருந்தது. மதராஸிலும் மாத்வர்களிலும் எல்லாவித ஏற்பாடுகளும் நடத்தப்பட்டிருந்தன. மகாநாடு கூடும்முன் கொடியை நாட்டும் திருவிழாவில் ஸ்ரீஉத்தராதி மடம் ஸ்வாமிகள் தர்ம தூதரான ஹநுமாரின் த்வஜத்தை நாட்டிப் பேசுவார் என மகாநாட்டின் நிகழ்ச்சி விபரத்திலும் காணப்பட்டிருந்தது. மகாநாட்டின் நிர்வாகிகளுக்கும் ஸ்ரீஸ்வாமிகளுக்கும் திருப்பதியில் நடந்த சம்பாஷணையில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதால் ஸ்ரீஸ்வாமிகள் வரவில்லை. பரிஷத்தின் அக்ராஸநாதிபதியாய் இருக்க நிர்வாகிகள் ஆசைப்பட்டதாய் சொல்லப்பட்ட பூரிகோவர்த்தன மடாதிபதி ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகளும் வரவில்லை. சனிக்கிழமை காலை 7 மணிககு கோபாலபுரம் கோவிலிலிருந்து இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்தும் வந்திருந்த வைதிக லௌகிக பண்டித பாமரர்கள் சுமார் 2000 பேர்கள் கலந்த ஊர்வலம் புறப்பட்டு வந்து, பரிஷத்பத்தலின் முன் நாட்டப்பட்டிருந்த பெரியதொரு ஸ்தம்பத்தில், பம்பாய் குஜராத்தி மடாதிபதி ஸ்ரீ கோகுலநாத்ஜி மகராஜ் ஸ்வாமிகளவர்களால் ஹநுமத்த்வஜம் ஏற்றப்பட்டது. ஆரம்பத்தில் ஸ்ரீமான் மல்லாதி ஸ்ரீராமகிருஷ்ண சயனுலுகாரு பரிஷத்தின் நோக்கத்தை ஸம்ஸ்கிருதத்தில் தெளிவாய் எடுத்துச் சொல்லி சபையை ஆரம்பித்தார். தமிழ் இங்கிலீஷ் தெலுங்கு முதலான பாஷைகளில் இது விவரிக்கப்பட்டது. விசாகப்பட்டணம் பிரபல அட்வொகேட் ஸ்ரீமான் பிரபுலா நரஸிம்ம பந்தலுகாரு ஸம்ஸ்கிருதத்தில் அரிய பிரஸங்கம்செய்து இந்தியாவின் எல்லா பாகங்களிலிருந்து வந்த ஸநாதன தர்ம பிரதிநிதிகளை வரவேற்றனர். இதுவும் எல்லா பாஷைகளிலும் எடுத்துச் சொல்லப்பட்டது. மைசூர் மாகாணம் மேலக்கோட்டை யதுகிரி யதிராஜ மடாதிபதி வயோதிகரான ஸ்ரீஸம்பத்குமாரராமாநுஜ ஜீயர்ஸ்வாமிகள் அக்கிராஸநாதிபதியாக இருக்க தேர்ந்தெடுக்கப்பட்டு கரகோஷத்தினிடையே தலைமைஸ்தானத்தை வகித்து ஸம்ஸ்கிருதத்தில் ரஸமாயும் அர்த்த புஷ்டியுள்ளதாயும் தெளிவாயுமுள்ள தமது பிரஸங்கத்தை செய்து முடித்தார். அன்று மாலை 4 மணிக்கு பரிஷத்து கூடி ஏற்கனவே பத்திரிகை

களில் பிரசுரமாயுள்ள தற்காலத்தில் அநுஷ்டிக்கப்படவேண்டியதாயுள்ள தர்ம சம்பந்தமான அநேக பிரசினங்களைப்பற்றி விஸ்தாரமாய் விமரிசை ஆரம்பமாயிற்று. ஸ்ரீமான்களான ஜட்ஜ் வரதாசாரியார், மல்லாதி ராமகிருஷ்ணசயனலு, மகாமகோபாத்யாயம் வைத்தியநாத சாஸ்திரிகள், மைசூர் விசுவநாத சாஸ்திரிகள் மத்யஸ்தர்களாகவும், மகாமகோபாத்யாயம் ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகள் நியாமகராயும், காசி ஸ்ரீ ராஜேசுவர சாஸ்திரிகள் லேககராயும் நியமிக்கப்பட்டனர். முதலில் வேதம் அபௌருஷேயமா பௌருஷேயமா என்பதைப்பற்றி விவாதம் ஆரம்பமாயிற்று. தர்ம சம்பந்தமான இன்னின்ன விஷயங்களை பகிரங்கமாய் பரிசீலனை செய்யப்படும் என்று முன்னாடியே பிரசுரிக்கப்பட்டிருந்தும், பிரம்மாண்டமான அப்பண்டித பரிஷத்தில் அரைகுறை படிப்புள்ள நவீன சீர்திருத்த மயக்கமடைந்த எவரும் வேதம் பௌருஷேயமென்று வாதிக்கவோ ஸித்தாந்தம் செய்யவோ முன்வர தைரியம் கொள்ளவில்லை. ஆதலால் எதிர்கக்ஷி பேசுபவர்களின் கக்ஷிகளை, பூர்வபக்ஷங்களாக வெளியிடுவதாக சிலர் முன்வந்தார்கள். வேதம் பௌருஷேயமென்று வாதிப்பவர்களின் கக்ஷிகளை ஸ்ரீமான்களான ஐரோப்பிய தேசங்களிலும் ப்ரக்யாதியடைந்திருக்கும் மாத்வ பண்டிதரான குண்டூர் வாஸி ஸ்ரீகாசி கிருஷ்ணாசாரியாரும் திருக்கண்ணபுரம் அண்ணங்கராசாரியாரும் வேறு சிலரும் பூர்வபக்ஷத்தைப் பேசிவந்தார்கள். காசி ஸ்ரீமான் ராஜராஜேச்வர சாஸ்திரிகள் சாஸ்திர ரீதியாகவும் யுக்திகளை அனுசரித்தும், வெகு அழகாக வேதம் அபௌருஷேயம் என்று ஸித்தாந்தம் செய்தார். இவ்வாறே மற்ற விஷயங்களும் பூர்வபக்ஷ ஸித்தாந்த ரீதியில். நவீனர்களுடைய எதிர்கக்ஷியை எடுத்துச்சொல்லி அவைகளுக்கு ஸநாதன தர்மத்தின் ஸித்தாந்தம் சொல்லப்படவேண்டுமென்ற நியமம் ஏற்படுத்தப்பட்டது. பற்பல தேசத்து பண்டிதர்கள் தம்தம் சிறந்த பாண்டித்யத்தை வெளிப்படுத்தி வெகு திறமையாய் பூர்வபக்ஷ சித்தாந்தங்களை எடுத்துச்சொல்லி வந்தனர். பரிஷத்தில் நடந்த சர்ச்சைகள் எல்லாமே அப்படியே எழுதப்பட்டு மத்தியஸ்தர்கள் வசம் கொடுக்கப்படவும், செவ்வாய்க்கிழமை இரவிலும் புதன்கிழமை

காலையிலும் மத்யஸ்தர்கள் பரிசீலனை செய்தனர். அங்கும் சில விஷயங்களைக் குறித்து பலமான விவாதம் நடந்தது. பதிதர்களை திரும்பவும் மதத்தில் சேர்த்துக்கொள்ளும் விஷயத்தைத் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் எல்லாமத்யஸ்தர்களும் ஏகமனதாக சாஸ்திர அபிப்பிராயம் இன்னதென்று பரிஷத்தில் நடந்த சாஸ்திர சர்ச்சைகளை பரிசீலனை செய்து தீர்மானம் கூறினார்கள். மத்யஸ்தர்கள் கொடுத்த தீர்மானங்களை பகிரங்கமாய் பரிஷத்தில் ஒவ்வொன்றாக நியாமகர் எடுத்து வாசித்து பரிஷத்தின் அங்கீகாரத்துக்கு விடவும், ஒவ்வொரு நிர்ணயத்தையும் பரிஷத்திலுள்ள எல்லா பண்டிதர்களும் ஏக மனதாக ஒப்புக்கொண்டு, இதுவே பரிஷத்தின் தீர்மானமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த தீர்மானம் எல்லா மடாதிபதிகளின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டு அவர்களின் அனுமதியுடன் வெளியில் பிரசுரிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. கடைசியில் அசாஸ்திரீயமானதும் அநீதியானதுமான திருவனந்தபுரம் மகாராஜாவின் விளம்பரத்தை எதிர்த்து உத்தமரீதியில் ஸநாதன தர்மத்திற்கு பேராதரவை அளித்த மகா வீரரான கொச்சி மகாராஜாவுக்கு தார்மிக சக்ரவர்த்தி என்னும் பட்டம் அகில இந்திய மகா பண்டித பரிஷத்தின் சம்பூர்ண அங்கீகாரத்தின் பேரில் அதன் சார்பாக தலைவரான ஸ்ரீ ஸம்பத்குமார ராமானுஜ ஜீயர்ஸ்வாமிகளால் கொடுக்கப்பட்டு, ஸ்ரீமான் மகாமஹோபாத்யாயம் R.V. கிருஷ்ணமாச்சாரியார் முதலானவர்களால் மகாராஜாவின் தர்மத்திலுள்ள ஸத்யமான பராக்கிரமம் முதலியவைகளைப்பற்றி பேசப்பட்டது. அங்கு வந்திருந்த கொச்சி மகாராஜாவின் ஏழாவது இளவரசரான ஸ்ரீமான் பரீக்ஷித் ராஜா அவர்களும் மகாராஜாவின் சார்பாக நன்றி செலுத்திப் பேசினார். பரிஷத்தை இவ்வாறு வெகு திறமையுடன் நடத்தி தர்ம நிர்ணயம் செய்வித்த பரிஷத்தின் நிர்வாகிகளுக்கு வந்தனோபசாரத்துடன் மாலை 6 மணிக்கு பரிஷத் கலைந்தது. ஸநாதன தர்மத்திற்கு மிகவும் நெருக்கடியான இந்த சந்தர்ப்பத்தில் திருவனந்தபுரம் விளம்பரம் முதலானவைகளைப் பாராட்டும் தர்ம விரோதிகள் ஏராளமாய் குவிந்திருக்கும் இம்மாகாணத்தின் தலை நகரான சென்னையிலேயே இத்தகைய பிரம்

மாண்டமான பண்டித பரிஷத்கூடி சாஸ்திரங்களை நிர்ணயித்துக் கொடுத்தது, சீர்திருத்த வாதிகள் பேசும் சாஸ்திரபலத்தை அடியோடு அழிக்கக்கூடியதென்பதில் ஆக்ஷேபணையில்லை. இனி குதர்க்கங்களுக்கும், துர்வாதங்களுக்கும் சாஸ்திரங்களில் இடமில்லை என்று யாவரும் நிச்சயிக்க இடமேற்பட்டதைக் குறித்து மிகவும் சந்தோஷிக்கிறோம். இந்த பரிஷத்தில் ஏற்பட்ட நிர்ணயங்களாவன:—

1. இன்னது தர்மம், இன்னது அதர்மம் என்று நிர்ணயிப்பதில் கேவலம் யுக்திக்கு பிராமாண்யமில்லை.

2. யுக்திக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதமேற்பட்டால் எது பிரமாணம் என்ற கேள்வி மேற்சொன்ன தீர்மானத்தைக் கொண்டு பிறவாமலேயே அடிபட்டுவிடுகிறது.

3. ஆத்மதுஷ்டி பிரமாணமே என்றால் சாஸ்திர விரோதம் ஏற்படும்போது அது பிரமாணமாகாது.

4. ஆத்மதுஷ்டிக்கும் சாஸ்திரத்துக்கும் விரோதமேற்பட்டால் எது பிரமாணம் என்ற கேள்வி மேற்கூறிய தீர்மானத்தைக்கொண்டு பிறக்காமலேயே அடிபட்டுப் போகிறது.

5. சாஸ்திரங்களில் விகிதமான தர்மங்களையோ அதர்மங்களையோ கால தேசத்திற்கேற்றபடி மாற்ற ஒருவருக்கும் அதிகாரம் இல்லை.

6. இதில் அரசனுக்கும் அதிகாரம் இல்லை. எது தர்மத்திற்கு விரோதமில்லாததோ எது பிரஜைகளுக்கு உபகாரமானதோ அப்பேர்ப்பட்ட திரவிய சம்பந்தமான விவஸ்தைகளில் அரசனுக்கு அதிகாரமுண்டு.

7. அரசனாலும் தர்மாதர்ம மாறுதல் செய்ய முடியாது ராஜநீதி செலுத்தும் இடங்களில் தர்ம சாஸ்திரத்தின் பிராமாண்ய ரக்ஷணம் அவசியமாகும்.

8. சாஸ்திரங்களின் அர்த்தத்தை நிர்ணயிக்கும் விஷயத்தில் மீமாம்ஸகர்களின் வழி பின்பற்றத் தகுந்ததே யொழிய இதிஹாசத்தில் சொல்லியுள்ளது வழியன்று.

9. நான்கு வர்ணங்களும் கலப்பு ஜாதிகளும் பிறப்பாலேயே ஏற்பட்டவைகள்.

10. தீண்டாமை என்பது பிறப்பாலும் செய்கையாலும் ஏற்படுகிறது.

11. இப்பொழுது காணப்படும் சண்டாள ஜாதிகள் சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ள தீண்டாத ஜாதியில் சேர்ந்தவைகளே.

12. தீண்டத்தகாதவர்களான சண்டாளாதிகள் தீண்டத்தக்க ஜாதியைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமான வீடு அக்ரஹாரம் முதலியவைகள் நீங்கலாக வேறு இடங்களில் உள்ள ஸபைகளில் (பொதுக்கூட்டங்களில்) நான்கு நுகத்தடி தூரத்தில் இருந்து ஒரே நிழல் விழாதபடி கலந்துகொள்ள அனுமதிக்கப் படுகிறார்கள்.

13. சண்டாளாதிகள் தேவாலயப்ரவேசம் செய்வது சைவ, பாஞ்சராத்ர, வைகானஸ, விஷ்ணு, ஸம்ஹிதை முதலியவைகளின், வசனங்களால் தடுக்கப்பட்டிருக்கிறது.

14 தீண்டத்தகாதவர்களான சண்டாளாதிகள் தேவாலயங்களின் கோபுர தர்சனத்தினாலும் உத்ஸவாதிகளில் வெளியே வரும் உற்சவமூர்த்திகளின் தர்சனத்தினாலும் காளியம்மன் பைரவர் சாஸ்தா முதலான தேவாலயங்களில் அங்கு இருந்து வரும் ஏற்பாடு ப்ரகாரம் தரிசனம் செய்வதாலும் தேவதரிசனத்தின் பலனை அடைகின்றனர்.

15. மறைவு இல்லாமலும் நான்கு பக்கமும் நான்கு முழம் அகன்றதுமான கிணறு முதலியதை நீக்கி மற்ற இடங்களில் சண்டாளர்கள் கிணற்று ஜலம் எடுப்பதில் கலந்துகொள்வதை சாஸ்திரம் தடுக்கிறது.

16. கலக்க முடியாததான குளம் குட்டை ஆறு முதலியவைகளில் பொதுவான துறையிலிருந்து அவர்களை விலக்கவேண்டிய தவசியம்.

17. பிராம்மண ஜாதிகளில் அந்தந்த உள் வகுப்புகளிலேயே அவரவர் பரஸ்பரம் விவாகம் செய்து கொள்ளவேண்டும்.

18. அந்த உள் பிரிவுக்கு ஸ்காந்தத்தில் ஸஹ்யாத்ரி கண்டம் முதலியவைகளில் உள்ள பிரமாணங்களால் சித்தி ஏற்படுகிறது. விவாஹ விஷயத்தில் அந்தந்த உள் பிரிவுகளின் ரக்ஷணம் அவசியமென்று சொல்லப்படுவதாலும் அதை அநாதிருத்தால் ஸ்மிருதி ஸாரஸமுச்சயத்தில் ராமேச்வர யாத்திரை முதலிய ப்ராயச்சித்தம் சொல்லப்படுவதாலும் ஆபத்து இல்லாதவரையில் மேற்கூறியவாறு தான் செய்யப்படவேண்டும்.

19. ஆபத்காலமாய் இருந்தால் அந்தந்த உள் பிரிவைச் சேர்ந்த ஸமாஜத்தின் தீர்மானத்தையும் அனுஸரிக்கவேண்டும். தேசஸ்தர்கள் கர்ஹாடகர்கள் முதலான மிகச்சிறு வகுப்புங்கூட அவாந்தரஜாதி பதத்திற்கு அர்த்தமாகும்.

20. எந்த இடத்தில் எது சௌசமோ தர்மானுஷ்டானம் எப்பேர்ப்பட்டதோ அங்கு அவைகளை அவமதிக்கக்கூடாது. அதுதான் அங்கு தர்மம்.

குறிப்பு:- விவாக சம்பந்தமாயுள்ள மேற்கண்ட தீர்மானங்களைப்பற்றியுள்ள எமது அபிப்பிராயத்தை அடுத்த இதழில் அறிவிப்போம். [ப—ர்]

---

2. அகில இந்திய வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கம்.

10வது ஸம்மேளனமும் அகில இந்திய வித்வத் பரிஷத் நடந்த இடத்திலேயே 30, 31உ-களில் நடைபெற்றது. பரிஷத்துக்காக வந்திருந்த ஏராளமான பண்டிதர்களும் லௌகிகர்கள் சேட்டுகளும் பெருங் கூட்டமாக வந்திருந்தனர். மகாநாடு ஆரம்பிக்குமுன் ஸ்ரீமான் கோருலநாத் மகாராஜ் ஸநாதன தர்ம தேவதையின் த்வஜத்தை நாட்டினார். ஸ்ரீமான் கொல்லங்கோடு ராஜாவான ஸர்-வாஸுதேவராஜா மகாநாட்டை ஆரம்பித்து அரிய பிரஸங்கம் செய்தார். பம்பாய் கோடீசுவரர் ஸ்ரீமான் தேவிதாஸ் மாதவஜீ தக்கர்ஸீ அவர்கள் ஊர்வலமாய் அழைத்து வரப்பட்டு தலைமை வகித்து தமது பிரஸங்கத்தை செய்து முடித்

தார். பசுக்களை ரக்ஷித்தல் மதவிஷயத்தில் சட்டம் இயற்றல் திருவனந்தபுரம் விளம்பர கண்டனம், கொச்சி மகாராஜாவின் பாராட்டுதல், தீண்டாதார் ஆலயப்ரவேசம் செய்விக்கும் முயற்சி கண்டனம், தீண்டாதார் அசௌகரிய நிவிருத்தி மசோதா, சாரதா சட்டம் கொச்சி மகாராஜாவின் உருவச்சின்னத்தை ஸ்தாபித்தல் போன்ற பல முக்யமான ராஜீய விஷயங்களில் தீர்மானம் செய்யப் பட்டன. அகில இந்திய வித்வத் பரிஷத்தின் நிர்ணயங்களை சம்பூர்ணமாய் ஏற்றுக்கொள்ளப் பட்டதாயும் தீர்மானிக்கப் பட்டது.

3. சென்னை மாகாண பிராம்மண மகாநாடு.

இம்மகாநாடு திருவல்லிக்கேணி பெரியதெரு சிங்காராச்சாரியார் ஹாலில் 31—12—37ல் கூடியது. மாஜி ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீமான் M. சுப்பிரமணிய அய்யர் துவக்கத்தில் காயத்ரீ த்வஜத்தை நாட்டி காயத்ரி மகிமையைப் புகழ்ந்து பேசினார். ஸ்ரீமான் தேதியூர் சாஸ்திர ரத்னம் சுப்பிரமணிய சாஸ்திரிகள் வெகு ரஸமாய் வரவேற்பு பிரசங்கம் செய்தார். புறை ஸ்ரீமான் என். எம். ஜோஷி மகாநாட்டை திறந்துவைத்துப் பேசினார். மாஜி திவான் பேஷ்கார் ஸ்ரீமான் டாக்டர் என் சுப்பிரமணிய அய்யர் மகாநாட்டின் தலைமை வகித்து பிரஸங்கம் செய்து பிராம்மண சமூகத்திற்கு தற்போது தேவையாயுள்ளவைகளைப்பற்றி பல முக்யமான தீர்மானங்கள் செய்யப்பட்டு மகாநாடு இனிது கலைந்தது.

திருப்பதி ஸபைகள்.

திருப்பதிக்கடுத்த திருச்சனூரில் வழக்கப்படி ஸ்ரீமத்வ சித்தாந்த உன்னாஹினி சபையும் ஸ்ரீமத்வசித்தாந்த அபிவிருத்தி காரிணி சபையும் டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் நான்கு நாட்கள் நடைபெற்றன. ஸ்ரீ உத்தராதிமடம் ஸ்வாமிகள் பம்பாயிலிருந்து வந்து வழக்கப்படி வித்வத் பரீக்ஷை வாக்யார்த்த விசாரம் முதலியவைகளை நடத்தி எங்கும் மத்வசித்தாந்தம் ஓங்கி ஒளி வீசும்படி செய்துவந்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகளிடம் சிஷ்யராய் அமர்ந்து பாடம் வாசித்துக் கொண்டிருந்த ஸ்ரீ பண்டர்கேர்மடம் ஸ்வாமிகளும் இச்சமயம் தமது ஸுதா மங்களத்தை வெகு பரிஷ்காரமாய் நடத்தி வித்யார்த்திகளுக்கும் வித்வான்களுக்கும் தனியாய் சம்பாவனை யளித்தார். இவ்வருடத்தின் மாத்வர்களின் மகாநாடு ஸ்ரீமத்வ சித்தாந்த உன்னாஹினி சபையின் 60 வது வருஷோத்சவமாகும். சுமார் 5000 மாத்வர்கள் கூடியிருந்தனர். வழக்கப்படி போஜனாதி சௌகர்யங்கள் வெகு சிலாக்யமாய் இருந்தன. ஸ்ரீஸ்வாமிகள் வழக்கப்படி பாண்டித்யத்தை மெச்சிக்கொண்டு ஏராளமான வெள்ளிப் பாத்திரங்களையும் அதிகமான சம்பாவனைகளையும் கொடுத்து தஞ்சை ஜில்லா மன்னார்குடியின் சமீபத்திலுள்ள தமது புதிய கிராமமாகிய ராஜகோபால்புரத்திற்கு சிலமாத காலம் தங்க ஸ்ரீபண்டர்கேர் மடம் ஸ்வாமிகளுடன் விஜயம் செய்தார்.

செய்தித்திரட்டு.

ஸ்வயம்வ்யக்த க்ஷேத்திரங்களில் முதலாவதாகிய ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாதன் கோவிலிலுள்ள மகாபுண்ய தீர்த்தமாகிய சந்திரபுஷ்கரணி தீரத்தில் ஸ்ரீ உத்திராதிமடம் கட்டத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஆஞ்சனேயஸ்வாமியை சந்திரபுஷ்கரணியின் ஜீர்ணோத்தார காலத்தில் அப்புறப்படுத்தப்பட்டு வெளியில் இதுவரை போடப் பட்டிருந்தது என்றும் ஸ்ரீரங்கம் தேவஸ்தான தர்மாகர்த்தாக்களாலேயே 27—12—1937ல் முன்னிருந்த விடத்திலேயே அந்த ஆஞ்சனேயர் ஸ்தாபிக்கப்பட்டு 31—12—37உ வெள்ளிக்கிழமையன்று மாத்வர்களின் விதிப்படி மாத்வர்களால் சம்புரோக்ஷணாதிகள் செய்யப் பட்டு உத்தராதி மடாதிகாரி ஸ்ரீமான்பாண்டுரங்கி வெங்கோபாசாரியார் நியமிக்கப்பட்டு நித்ய பூஜாதிகளைச்செய்து வருகிறாரென்றும் ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ உத்திராதி மடத்தில் மகனீயராகிய திருக்கோயிலூர் ஸ்ரீ ரகூத்தம ஸ்வாமிகளால் பிரதிஷ்டையடைந்திருக்கும் ஆஞ்சனேயருக்கு 1—1—38 சனிக்கிழமை யன்று ஹனுமத்ஜயந்தியை முன்னிட்டு அபிஷேகாதிகள் நடத்தப்பட்டு சுமார் 300 பேருக்கு பிராம்மண சந்தர்ப்பணை பக்தர்களின் திரவியத்தைக்கொண்டு விமரிசையாய் நடத்தப்பட்டதென்றும் ஸ்ரீமான் பாண்டுரங்கி வெங்கோபாசாரியார் தெரிவிக்கிறார்.

மதுரை கிருஷ்ணராயர் தெப்பகுளத்தெருவில் இருக்கும் ஸ்ரீஉத்திராதி மடத்தையும் அதிலுள்ள ஹனுமார்கோவில் பிரகாரம் தளவரிசை முதலியவைகளையும் மதுரை ஸ்ரீமான் S. ராஜாராவ் ரிபேர் செய்து ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகளின் பரமானுக்ரஹத்திற்கு பாத்திரராய் ஆகியிருக்கிறார் என்றும் மதுரையில் உத்தராதிமடாதி காரியாய் இருந்த ஸ்ரீகிருஷ்ணசாரியார் காலஞ்சென்றபடியால் அவர் ஸ்தானத்தில் ஸ்ரீ மடத்தின் அதிகாரத்தையும் காரியங்களையும் சரியாய் நிர்வகிக்கக் கூடியவர் ஸ்ரீஸ்வாமிகளால் சீக்கிரமே நியமிக்கப்படுவார் என்று மகா ஜனங்கள் எதிர்பார்ப்பதாயும், மதுரை உமையாள்புரம் ஸ்ரீமான் குப்பாசாரியார் அறிவிக்கிறார்.

அன்பார்ந்த ஆதரவு.

மாத்வமித்திரன் பத்திரிகையை நடத்துவதில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான இந்தசந்தர்ப்பத்தை உணர்ந்து கைதூக்கிவிட தர்ம பூஷணம் என்று இப்பால் பல பத்திரிகைகளாலும் அழைக்கப்பட்டுவரும் வைஷ்ணவதீக்ஷை குடிகொண்ட ஸ்ரீரங்கம் தேச பூஷணம் ஸ்ரீமான் பிரஸன்ன வெங்கடேச ராவ் அவர்கள் இருபத்தைந்து ரூபாயை அனுப்பி பேருதவியைச் செய்ததற்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

விசேஷ தினங்கள்.

27—1—38	குருவாரம்	ஏகாதசி உப.
31—1—38	சோமவாரம்	அமாவாசை திலதர்ப்பணம் சிரவண உப. விஷ்ணுப. உப. அசுவத்த ப்ரதக்ஷிணம். புரந்தரதாஸர் புண்யதினம், மகோதய புண்யகாலம். கோடிசூர்ய க்ரஹணத்திற்கு சமானம் சூரியோதயகாலத்தில் விசேஷம்
6—2—38	பானுவாரம்	ரதஸப்தமி.
8—2—38	மங்களவாரம்	பீஷ்மாஷ்டமி
9—3—38	புதவாரம்	ஸ்ரீமத்வ நவமி ஸ்ரீமத்வாசாரியார் மூன்றாம் முறை பதரிக்குபோக கண்ணிற் படாமல் மறைந்த நாள்.
11—3—38	சுக்ரவாரம்	ஏகாதசி உப.
14—3—38	சோமவாரம்	பௌர்ணமி. ஆகாமாவை. விஷ்ணுப. உப

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபால் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

த்வைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1—8—0 தபாற்கூலி 0—6—0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். Certificate of Posting பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர், மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

Regd. No. M.

டி. எஸ். ஆர்.

அண்டு

கம்பெனி,

கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனு திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு	பலகாய்கரி ஊர்காய்கள்
வாஸனைச்சுண்ணும்பு	ரோஜாப்பூ குல்கந்து
வாஸனைப் புகையிலை	ஷர்பத் தினுசுகள்
ஸ்னானப்பவுடர்	கொப்பரைச்சீவல்
கேஸர் பவுடர்	கோகுல் கூந்தல்
அம்பர், அரகஜா	பற்பொடி [தைல
தசாங்கம்	ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.

சந்தா ரூ. 3. Regd. No. M. 2419



மாத்வமித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 10 புஸ்தகம் 10	ஈசுவர ஸம்வத்ஸரம். மாக மாஸம். (14-2-1938) சோமவாரம்.	No. 7 நெ. 7

நெ	பொருளடக்கம்.	பக்கம்.
1.	எமது விக்ஞாபனம்	193
2.	சங்கிரஹராமாயணம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	195
3.	அத்வைதப்ரம்மம் குதிரை கொம்புதான் (ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள்)	201
4.	கலப்புளிவாகம் மாத்வர்களில் அவசியம்	207
5.	செய்தித்திரட்டு	212
6.	குண்டூர் மாக்காசாரியஸ்வாமியின் 21வது ஸ்ரீமுகத்திற்கு பதில்	216
7.	ஸ்திரீவித்யை கன்னடவாயுஸ்துதி (ஸ்ரீவாதிராஜ ஸ்வாமிகள்)	223
8	விசேஷதினங்கள்	224

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கனுதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்திரீயமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் இசை சரி விரதாதி குறிப்பு:— மகாபாரத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌர்ணமி கழிந்தஒருவாரத்திற்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல்விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம்தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

17 FEB 1939

ஸ்ரீ லக்ஷ்மீ நாரஸிம்ஹாய நம:

மாத்வ மித்திரன்

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतःभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं,
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 | ஈசுவர ஸம்வத்ஸரம். மாக மாஸம். | NO. 7

எமது விக்ஞாபனம்

ஸ்ரீமத் ராமாயணத்தை ஸ்ரீமத்வ ஸித்தாந்த ரீதிப்படி மாத்வ மித்திரன் மூலமாய் அறிவிக்க நாம் பல வருஷங்களுக்கு முன்பே பலரால் பல ஊர்களிலிருந்து வற்புறுத்தப்பட்டிருந்தும், நாம் ஆதியில் துவக்கிய மகா பாரதாதி ஸமஸ்த சாஸ்திரங்களின் நிர்ணயமாகிய ஸ்ரீமகாபாரத தாத்பர்ய நிர்ணயம் ஒருவாறு முடிவடையும் வரையில் எந்த பெரிய கிரந்தத்தையும் ஆரம்பிப்பதில்லை என்று சங்கல்பம் செய்திருந்தோம். ஸ்ரீ பகவத் பாதாளின் விசேஷ அனுக்ரஹ பலத்தால் மட்டில், இதுவரை எந்த பாஷையிலுமே மொழிபெயர்க்கப்படாதிருந்த ஸமஸ்த மத்வமத ப்ரமேயங்களும் சாஸ்திர இரகசியங்களும் நிறைந்த பண்டிதர்களுக்கும் கஹனமான ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயம், ஸ்திரீ புருஷர்களுக்கும் உபயோகமான எளிய தமிழ் நடையில் மொழிபெயர்க்கப்பட்டு, சென்ற இதழுடன் முப்பது அத்யாயம் ஸம்பூர்த்தியடைந்தது. பாக்கியுள்ள வெகு ஸ்வல்பமான இரண்டு அத்யாயமும் சீக்கிரமே முடிவடையும் என்ற தைரியமும் ஏற்பட்டிருக்கிறது. புராணம் சொல்கிறவர்களும் பாடப்ரவசனம் செய்கிறவர்களும்கூட கடினமான முதல் மூன்று அத்யாயங்களை ஒதுக்கி, எளிதில் அர்த்தம் செய்யக்கூடிய நான்காவது அத்யாயம் முதற்கொண்டுதான் இச்

நூலை ஆரம்பிக்கும்பொழுது, நாம் கேவலம் ஸாஹஸத்தை கைக்கொண்டு இம்மாத்வ மித்திரன் முதல் சஞ்சிகையிலேயே முதல் அத்யாயம் முதல் துடங்கி, இந்த பத்து வருஷ காலமாய் தொடர்ந்து ஒவ்வொரு சஞ்சிகையிலும் பிரசுரமாகி பூரா கிரந்தத்தையும் முடிக்க நேர்ந்ததை சற்று நிதானித்தால், கருணா ஸமுத்ரரான ஸ்ரீ பகவத்பாதாள் இம்மித்திரனின் மத்வமத ஸேவையையும் மாத்வ ஸமூக சேவையையும் பூராவாய் ஏற்றுக்கொண்டிருக்கிறாரென்றும், அவருடைய கருணையால்தான் இம்மாதிரியான மகத்தான காரியங்களும் ஸுலபமாய் முடிவடைகிறதென்றும், வாசகர்களின் இகபர ஸௌபாக்கியத்திற்கு காரணமாக இருக்க இம்மித்திரனிடம் அருள் புரிந்திருக்கிறாரென்றும் செவ்வனே புலப்படுகிறது. இப்பால் லக்ஷ்மணன் பரதனுக்கு தமையனே என்ற நிரூபத்தில் கண்ட ஸ்ரீமத் ராமாயண சம்பந்தமான எமது பரிசீலனையைப் பார்த்தபின், ஸ்ரீ மத்வ சித்தாந்த ரீதிப்படிக்குள்ள ஸ்ரீ ராமாயண கதையை பூராவாய் அறிவிக்க அவசியமும் நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ மகாபாரத தாத்பர்ய நிர்ணயத்தில் ஸ்ரீ பகவத்பாதாளால் ஸ்ரீமத் ராமாயண கதை வெகு ஸம்க்ஷேபமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறதென்ற காரணத்தால், ஸ்ரீ பகவத்பாதாளின் ஆக்ஞையின்பேரில், அவர் நேரில் சொன்னதை அனுஸரித்து, அவருடைய சாக்ஷாத் சிஷ்யரும் அவருடைய ராமகதா முதலான பகவத் கதா ப்ரஸங்கத்தை நேரில் கேட்டவரும், அவருடைய முக்ய பக்தருமான ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய ஸங்கிரஹ ராமாயணத்தை, இதர சித்தாந்த ரீதிப்படி பலவகை அர்த்த விசேஷங்களுடன் உலகில் வெகுவாய் பிரசாரம் அடைந்திருக்கும் மிக்க பிரசித்தமான ஸ்ரீவால்மீகி ராமாயணத்தை எமது மத்வ சித்தாந்த ரீதியில் இம்மித்திரன் வாசகர்கள் அர்த்தம் செய்ய அனுகூலமாயிருக்க, சுருக்கமாகவே பிரசுரிக்க முற்பட்டிருக்கிறோம். இம்மாதிரியே சம்க்ஷேபமாக மத்வ சித்தாந்த ரீதிப்படி மிக்க அவசியமான ஸ்ரீ பாகவத புராண ஸாரத்தையும் பிரசுரிக்க எண்ணியிருக்கிறோம். இப்பெரிய காரியத்திற்கு ஸ்ரீ ஹரிகுருமார்களும் அன்பார்ந்த வாசகர்களும் துணை புரிவார்களாக.

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய
ஸங்கிரஹ ராமாயணம்

பால காண்டம்

1-வது சர்க்கம்.

வந்தித வந்த்யம் விதிசிவ மஹேந்த்ராதி ப்ருந்தாரகேந்த்ரை:
வ்யக்தம் வ்யாப்தம் ஸ்வகுண கணதோ தேசத: காலதஸ்ச।
தூதாவத்யம் ஸுகசிதி மயை: மங்களை: யுக்த மங்கை:
ஸாநாத்யம் நோ விதததிகம் ப்ரம்ம நாராயணக்யம்॥

பூஷா ரத்னம் புவனவலயஸ்யாகிலாஸ்சர்ய ரத்னம்
லீலா ரத்னம் ஜலதிதுஹிது: தேவதா மௌளி ரத்னம்।
சிந்தா ரத்னம் ஜகதி பஜதாம் ஸத்ஸரோஜத்யு ரத்னம்
கௌஸல்யாயா: லஸது மம ஹ்ருன்மண்டலே புத்ர ரத்னம்॥

ஸ்ரீ ஹரி வந்தனம்.

பிரம்மா சிவன் இந்திரன் முதலான உத்தம தேவர்களாலும் ஸர்வோத்தமரென வணங்கப்படுகிறவரும், ஸமஸ்த கல்யாண குணங்கள் நிறைந்தவரும், எல்லா இடங்களிலும் இருப்பவரும், எல்லா காலங்களிலும் இருப்பவரும், எல்லா வகை தோஷமுமில்லாதவரும், ஞானானந்த மயமான சரீர அங்கங்களுள்ளவரும் ஸம்ஸாரத்தில் வருந்தும் அநாதர்களான எங்களுக்கு தாம் நாதனாய் இருந்து எங்களை ஸநாதர்களாய் செய்பவரும், ஸர்வோத்தமனுமான நாராயணனென்கிற பரப்ரம்மத்தை நான் நமஸ்கரிக்கிறேன். யாருடைய சரித்திரத்தைச் சொல்ல என் மனம் பூரிக்கிறதோ, அந்த ஸ்ரீ ராமசந்திரன் என் ஹ்ருதயத்தில் நின்று பிரகாசிக்கப் பிரார்த்திக்கிறேன். அவர் எப்பேர்ப்பட்டவரெனில் ஸமஸ்த உலகத்திற்கும் அலங்கார மணி. எல்லோரையும் திகைக்கச் செய்யும் ஆச்சரிய மணி. பாற்கடல் பெண்ணான ஸ்ரீ தேவி வைத்தாடும் விளையாட்டுமணி. வணங்கும் ஸமஸ்த தேவர்களின் தலையில் துலங்கும் சிரோமணி. பக்தியால் பஜனை செய்யும் உலகத்தாருக்கு ஸர்வாபீஷ்டங்களை அளிக்கும் சிந்தாமணி. புண்ணியவதியான கௌஸல்யையின் புத்ரமணி.

குரு வந்தனம்

நவவ்யாகரணமென்னும் மகா வ்யாகரண சாஸ்திரமாகிய டலைக்கடந்த உயர்ந்த புத்தியாகிய மந்தர மலையைக் கொண்ட வரும் ஸ்ரீமத் ராமாயணத்தை எப்பொழுதும் வாயால் கானம் செய்துகொண்டிருப்பவருமான ஹனுமாரை நமஸ்கரிக்கிறேன். அவர் என் குருவான முக்ய ப்ராணரின் முதலாவது அவதார மாவார். அவருடைய இரண்டாவது அவதாரமானவரும் அவ தார ரூபங்களில் சிறிதும் பேதமில்லாதவருமான முக்ய ப்ராண ராகிய பீமசேனரை பின்பு நமஸ்கரிக்கிறேன். தங்க நகைகள் உரை கல்லில் உரைபடுவதுபோல் அவருடைய மார்பில் பலதிறப் பட்ட பராக்கிரமசாலிகளான ராஜ ராக்ஷஸ வீரர்கள் உரைபட்டு மாண்டனர். அவருடைய மூன்றாவது அவதாரமான ஸ்ரீமத்வா சாரியாரை நமஸ்கரிக்கிறேன். அவர் க்ஷீராப்தியைப்போல் தனது உள்ளத்தில் நாராயணனுக்கு படுக்க இடம் கொடுத்தவரும், முற்றும் நிறைந்த ஞானவெள்ளமும் உயர்ந்து வீசும் சொற்பொழிவுகளின் அலைகளுமுள்ளவராவார். ஸமுத்ரம்போல் அளவுகடந்த பெரியோர்களின் வாக்யங்களாலும் தேவலோகத்தில்தான் அதிகமாய் பிரசாரமடைந்திருப்பதுமான பெரியதொரு மூல ராமாயணமென்னும் நூலிலேயும் எப்போதும் ரமித்திருப்பவர்களுமான என் குருமார்களை என்னிடம் அருள்புரிய பிரார்த்திக்கிறேன். அவர்களின் உபதேச மொழிகள்தான் இந்நூலில் காட்டப்படுகின்றனவேயல்லாது புதிதாய் நான் ஒன்றும் சொல்வதில்லை. இது சம்மதமாய் வால்மீகி சொன்னதை நான் ஏற்பதில்லை என்று எண்ணலாகாது. வால்மீகி ராமாயணமும் மிகவும் பூஜ்யமானதே. பூமியை தரிப்பதால் மஹீதரமென்று சொல்லப்படும் மலையின் பிராந்தியத்தை புற்களையே ஆசிரயமடையும் பசுவைப்போல் மஹீதரனாய் அதாவது பூபதியாயுள்ள ஸ்ரீராமசந்திரனை ஆசிரயித்திருக்கும் ஸ்ரீ வால்மீகி ரிஷியின் வாக்காகிற பசு எங்களை பரிசுத்தம் செய்யட்டும். அப்பசுவின் பாலை உலகிலுள்ள கவிகள் என்னும் கன்றுகள் எல்லோரும் உண்டு உபஜீவிக்கின்றனர்.

வ்யூக சிருஷ்டி.

உலகம் உண்டாவதற்கு முன் பிரளய காலத்தில் பூர்ணமானதும் கணக்கற்றதுமான குணங்கள் நிறைந்தவராய் நாரா

யணர் ஒருவரே இருந்தார். தம்மிடம் தாமே ஆனந்தத்தை அனுபவித்துக்கொண்டு இருப்பவராயினும் மனோஹரளான மகாலட்சுமியுடன் ரமித்திருந்தார். அறிவு கெட்டிருந்த எல்லா ஜீவராசிகளையும் தம் வயிற்றில் உட்கொண்டு பிரம்மாவின் நூறு வருட காலம் படுத்திருக்க, அந்த ஜகதீசுவரனான நாராயணன் அதன் கடைசி காலத்தில் வேதங்களும் உபநிஷத்துகளும் அம்பரணீ தேவி ரூபத்துடன், விடியற் காலையில் சிறிது தூக்கமடைந்திருக்கும் அரசனை துதி பாடகர்கள் துதித்து எழுப்புவது போல் ஸ்தோத்திரம் செய்து எழுப்பினர். தமக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லையாயினும் பகவான் நாராயணன், தம் வயிற்றுக்குள் இருந்துவரும் தம்மை அண்டிய ஜீவராசிகளின் ஸ்வபாவத்தை வெளிப்படுத்தக் கருதி, அவர்களை தேவர்களாயும் அஸுரர்களாயும் மனுஷ்யாதிகளாயும் சிருஷ்டிக்குக்கொண்டுவர இச்சை கொண்டார். மாயை என்னும் பெயர்கொண்ட மகா லட்சுமியின் ரூபத்துடன் அந்த வாஸுதேவமூர்த்திதான் வெள்ளரிப் பழத்தில் பீஜங்கள்போல் இருந்துவரும் எல்லா ஜீவராசிகளையும் அதன் கட்டான ஸம்ஸாரத்தினின்றும் விடுவிப்பவர். ஜயா என்னும் மகாலட்சுமியின் ரூபத்தை பாரியாளாய்க்கொண்டு ஜகத்தின் ஸம்ஹார கர்த்தாவாய் ஸங்கர்ஷணரென்ற ரூபத்தை தரித்தார். அந்த ஸங்கர்ஷண மூர்த்தியின் குரூரமான கோபாக்னியின் ஜ்வாலையில் உலகமெல்லாமே ஒரு சொட்டு நெய்யைப்போல் அக்ஷணமே பஸ்மமாகிவிடுகிறது. உலகின் சிருஷ்டிக்காக அவர் ப்ரத்யும்னர் என்ற ரூபத்தை தரித்தார். இந்த ப்ரத்யும்ன ரூபத்திற்கு க்ருதி என்னும் மகா லட்சுமியின் ரூபம் ப்ரகிருதி அதாவது பாரியாள் ஆவாள். ஆயினும் அவர் விகிருதி இல்லாதவரென்றால் விகாரமற்றவர், அப்ராகிருதர் என்றால் பிரகிருதியின் காரியமில்லாதவர். இவ்வாறுதான் அந்த நாராயணனின் சரிதை விசித்திரமானது. ஜகத்தை ஸம்ரக்ஷிக்க சாந்தி என்ற பாரியாளுடன் அநிருத்தர் என்ற ரூபங்கொண்டார். இவ்வாறு நாராயணன், வாஸுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற ஐந்து ரூபங்களைக்கொண்டு இவருக்கு பஞ்சத்வம் ஏற்படினும் இவருக்கு பஞ்சத்வமாகிய மரணம் நாசமிருப்பதாய் சந்தேகப்படவேண்டாம். இவர் இப்படி ஐந்து ரூபங்களை மட்டில் தரித்தார் என்றில்லை. மத்ஸ்யம், கூர்மம் முதலான

பத்து ரூபங்களையும் கொண்டார். கேசவன் முதற்கொண்டு தாமோதரன் வரையிலுள்ள பன்னிரண்டு ரூபங்களைக்கொண்டவராகவுமானார். நாராயணன் முதலான நூறு ரூபங்களையும் கொண்டார். விச்வம் முதலான ஆயிரம் ரூபங்களையும் கொண்டார். அஜிதன் முதலான அநந்த ரூபியாகவும் ஆனார். ஆயினும் பகவான் ஒருவரே. அவருடைய இத்தனை ரூபங்களிலேயும் சரி, அவதாரங்களிலேயும் சரி, அவருடைய குணங்களிலேயும் சரி, கிரியைகளிலேயும் சரி யாதொரு பேதமுமில்லை. இது ஒரு விசித்ரமே. எல்லாம் அவருடைய யோக மகிமையால் ஏற்படுகிறது. அவருடைய க்ஞானமோ ஆனந்தமோ ஸ்வதந்திரத்தன்மையோ எல்லா ஐசுவரியாதி குணங்களோ கணக்கற்றவைகளாய் இருக்கின்றன. அவருடைய ஸ்வரூபமாகவே இருக்கின்றன. அவருக்கு த்ரிகுண சம்பந்தம் யாதுமில்லை க்லேசமோ நாசமோ பராதீனமோ இறப்போ பிறப்போ எந்த தோஷமும் ஸர்வேசுவரனான அவருக்கு எங்கும் எப்போதும் இல்லை. இவ்விஷயத்திற்கு சாக்ஷிகள் எல்லா வேதங்கள் உபநிஷத்துக்கள் புராணங்கள் இதிஹாஸங்கள் பாஞ்சராத்ராதி ஆகமங்கள் பிரம்ம தர்க்கம் முதலான ஸத் சாஸ்திரங்கள் தான்.

ஜகத் ஸ்ருஷ்டி.

அவ்யக்தனாகிய பகவான் அவ்யக்தத்வமாகிய ஜடப்ரக்ருதியை ஜகத் சிருஷ்டியை செய்விக்கச் செய்தார். அதில் பகவான் வியாபித்து அதில் ஸாம்யாவஸ்தை அடைந்திருந்த ஸத்வ ரஜஸ் தமோ பாகங்களை கலக்கி த்ரி குணங்கள் உண்டாகும்படி செய்தார். அவைகளிலிருந்து மகத்தத்வத்தை உண்டாக்கினார். அதிலிருந்து வைகாரிகம் ராஜஸம் தாமஸம் என்று மூவகையான அகங்காரத்தை உண்டாக்கினார். அதிலிருந்து பஞ்ச பூதங்களையும் பஞ்ச க்ஞானேந்திரியங்கள் பஞ்ச கர்மேந்திரங்களையும் இந்திரியாபிமானி தேவர்களையும் சிருஷ்டித்தார். ஸமஸ்தமான தத்வாபிமானி தேவர்களையும் வேண்டுமென்று அவர் சிருஷ்டி செய்தும், பிரம்மாண்டத்தை அவர்கள் சிருஷ்டிக்க மாளாமல் சாரங்கபாணியான விஷ்ணுவையே சரணமடைந்தனர். அவர்களில் பகவான் சுயம் பிரவேசித்து இப்பேர்ப்பட்ட பிரம்மாண்டத்தை சிருஷ்டி செய்வித்தார். எல்லாம் நிறைந்த அந்த இறைவன் அவ்வளவு

செய்ததின் காரணம் அவருடைய கருணைதான். தலை கைகால் முதலியஅவயவங்கள் அநந்தமாயுள்ள விராட் புருஷனான அந்த பகவான் நாராயணன், ஜகத்தை சிருஷ்டிக்க வல்லவனாயுள்ள சதுர்முகனை சிருஷ்டித்தார். அவ்வாறே அவர் தேவாஸுராதிகளை சிருஷ்டித்தார். ஸநகாதிகளை சிருஷ்டித்தும் அவர்கள் யோக நிஷ்டர்களாய் விரக்தியடைந்து சிருஷ்டிப்பதில் எத்தனம் செய்யாமற் போகவே அவர்களைக்கண்டு பகவத் பக்தரான சதுர்முக ப்ரம்மா கோபமடைந்தார். அப்பொழுது கோபங் கொண்டவரும் பகவானை எண்ணிக் கொண்டிருந்தவருமான அந்த பிரம்மாவின் நெற்றியிலிருந்து அகங்கார தத்வத்தின் அபிமானியான ருத்திரன் பிரம்மாவின் பிள்ளையாய் பிறந்து சிருஷ்டி மார்க்கத்தை பூர்த்தி செய்தார். பிரம்மாவின் இந்திரியங்களிலிருந்து மரீசி முதலான ப்ரஜேசுவரர்கள் பிரஜா விருத்திக்காக மரத்தினின்றும் விதைகள் உண்டாவதுபோல் உண்டாயினர். ஸமஸ்த உலகமாகிய மரத்திற்கு விதை போன்றவரான கசியபர் மரீசியிடமிருந்து பிறந்தார். அந்த கசியபருக்கு அவர் பாரியாளான அதிதி தேவியிடம் அரணிக் கட்டையில் அக்னி உண்டாவதுபோல், விவஸ்வான் என்ற சூரியன் பிறந்தான். அவன் சிராத்த தேவன் என்று கருதப்பட்டான். அவருடைய பிள்ளை வைவஸ்வத மனு. அந்த மனுவின் வம்சத்தில் ரத்னங்கள் போன்ற இக்ஷ்வாகு ராஜன் முதலான அரசச்ரேஷ்டர்கள் பிறந்தனர்.

தசரதன்

அதிக காந்தியுள்ள சுத்தர்களான முத்து மாலைகளைப்போன்ற அந்த சூரிய வம்சத்து அரசர்களில் நடுநாயகம்போல் தசரதன் பிறந்தான். அவன் அயோத்யா பட்டணத்தில் இருந்துகொண்டு ஒரு குடையின்கீழ் ஸப்த ஸமுத்ராந்த பூமியை ஏக சக்ரவர்த்தியாயிருந்து அரசாண்டு வந்தார். அவர் பூமியை ஸம்ரக்ஷித்து வரும்பொழுது அர்த்தம் காமம் என்னும் இரு கொம்புகளுடனிருப்பதும், மோக்ஷ சம்பந்தமான காரியங்களாகிய பெரும் பாரத்தை சுமப்பதும் தபஸ், சௌசம், தயை, ஸத்யமாகிய நான்கு பாதங்களுடையதுமான தர்மமாகியபெருங்காளை வளர்ந்துவந்தது. பெரும் கொடையாளியும் மகா வீரனுமான அந்த தசரதன்

தன்னிடம் தானம் பெற வருபவன் எவனும் அதைப்பெறாமல் முகத்தை திருப்பிக்கொண்டு போவதையும், தன்னிடம் யுத்தம் செய்ய வருபவன் எவனும் தைரியமாய் எதிர் நோக்கி வருவதையும் கண்டதே இல்லை. உலகை ஆனந்தப்படுத்தும் சந்திரனுக்கு எவ்வாறு களங்கம் ஒன்றைத்தவிர வேறு எந்த தோஷமும் இல்லையோ அதுபோல் உலகை சந்தோஷப்படுத்தும் இந்த தசரதனுக்கு பிள்ளை இல்லை என்ற தோஷம் தவிர வேறு எந்த தோஷமும் இருப்பதாய் தெரியவில்லை. அவருக்கு மூன்று பட்டமகிஷிகள் இருந்தும் அவர் மகனைப் பெறாமல் வேதாந்த விசாரம் செய்பவன் மூன்று வேதங்களைப் பரிசீலனை செய்தும் தத்வ நிர்ணயத்தைப் பெறாமல் சிந்திப்பதுபோல் சிந்தனையில் அமிழ்ந்தார். பிள்ளை இல்லையே என்ற ஜ்வரம் அவரை வாட்டியது. ராஜ்யாதிகளிலும் கூட அவருக்கு ருசி போய்விட்டது. ஸுமந்திரர் முதலான மந்திரிகளை வரவழைத்து இவ்வாறு யோசித்தார். எனக்கு பிள்ளை உண்டாக ஜகத்பதியான நாராயணனை அசுவமேத யக்ஞம்செய்து ஆராதிக்கிறேன். பக்தர்களிடம் வாத்ஸல்யம்கொண்ட விஷ்ணு மகிழ்ந்தால் எதுதான் கிடைக்காது. ஆகவே ஸுமந்திரரே! பெரிய மந்திரங்களிலும் தந்திரங்களிலும் நிபுணர்களான ரித்விக் வேலைகளைச் செய்யத்தக்க பிராம்மணர்களையும் குல குருவான வசிஷ்டரையும் சீக்கிரமே அழைத்து வாரும். பிரம்ம குலமானது க்ஷத்திரிய குலத்தை காற்று நெருப்பை வளர்த்துவதுபோல் வளர்த்தும். என்றிவ்வாறு தன் அரசன் உத்திரவிட சுமந்திரர் பிராம்மணர்களை அழைத்து வந்தவுடனேயே தசரதன் வேதாத்யயனம்செய்யும் அந்த பிராம்மணர்களை நேரில்கண்டு, தான் அரசன் என்னும் மமதையை விட்டு, ஜகன்மோஹன விக்ரஹனை நாராயணனை மனதில் தியானித்துக்கொண்டு மிக்க பக்தியுடன் அந்த பக்தி பாரத்தை தாங்காதவன்போல் தேகம் வணங்கி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்.

முதல் சர்க்கம் முடிந்தது.

(தொடரும்)

அத்வைதப்ரம்மம் குதிரைக் கொம்புதான்.

குதிரைக்கு கொம்பு இல்லை. அத்வைதிகளுக்கு ப்ரம்மமும் இல்லை.

ஓர் அத்வைத வித்வானின் விளம்பரம்.

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த பெல்காமில் பிரசுரமடைந்து வரும் ஸம்ஸ்கிருத பத்திரிகை *"மதுரவாணி"யில் வித்வான் ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள் எழுதுவதாவது:—

ஸ்ரீம்மதுரவாணியின் அன்பார்ந்த வாசகர்களும் நண்பர்களும் ஆசிரியர்களும் நான் இந்த நிருபத்தை எழுதியதைக்கண்டு ஆச்ரியம் கொள்வார்கள், மதாபிமானங்கொண்ட நம்மவர்கள் கோபங்கொண்டு உதடு மடித்து பற்களை கடித்து கடுமொழிகளை கூறுவார்கள். இவ்வகை நிருபம் பிரசுரமாக இடம் தந்த இப்பத்திரிகையையும் இப்பத்திரிகாசிரியரையும் தூற்றுவார்கள். இதை நான் நன்றுணர்ந்தும வேறுவழியில்லாமல் என் மதாபிமானத்தையும் ஒதுக்கி வைத்து, இதை எழுதத் துணிந்தேன். இவ்வாறு எழுதுகிறேனென்றால் நான் ஒன்றையும் அறியாதவன் அன்று. பிரஸித்த பண்டிதர்களின் வம்சத்தில் பிறந்தவன். நான்கு சாஸ்திரங்களையும் நன்கு படித்தறிந்தவன். முக்யமாய் என் வம்ச பாரம்பரியமாய் வந்த அத்வைத சாஸ்திரத்தில் அதிக பாண்டித்யம் படைத்தவன். எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் அத்வைதசாஸ்திரத்தை பரிசீலனை செய்தேனே அவ்வளவுக்கவ்வளவ அதிகமாகவே எனக்கு சம்சயங்கள் வளர்ந்தன. இந்த சந்தேகங்களை நிவிருத்தி செய்துகொள்ள

---

*'மதுர வாணி' என்னும் ஸமஸ்கிருத பத்திரிகை பெல்காமிலிருந்து பிரதி மாஸம் சுக்ல பக்ஷம் பிரதமையன்று வெளியாகிறது. பெயருக்கேற்ப அதிமதுரமான எளிய ஸம்ஸ்கிருத நடையில் பல சிலாக்யமான கட்டுரைகள் எழுதப்பட்டு நேபாளம் பஞ்சாப் முதலான வெகு தூர தேசங்களிலும் பிரசுரமடைந்து வருகிறது. ஸ்ரீமான்களான கலகலி ராமாசாரியாரும் புர்லீ ஸ்ரீநிவாஸாசாரியாரும் இதன் ஆசிரியர்களாவார்கள். வருட சந்தா ருபா 2 தான். விலாஸம் மதுரவாணி ஆபீஸ், பெல்காம்.

எத்தனையோ உபாயங்களைச் செய்தேன். சங்கரபாஷ்யத்தை சரண் புகுந்தேன், சம்சயம் சிறிதும் சிதறவில்லை. அத்வைத சித்தியில் புத்தியை நாட்டினேன், எண்ணியது சித்திக்கவில்லை. பிரம்மானந் தீயத்தைப் பார்த்தேன், ஆனந்தமுண்டாகவில்லை பாமதியைப் பார்த்தேன். நான் விரும்பும் மதியைத் தரவில்லை. ரத்னப்ரபாவில் சஞ்சரித்தேன், அக்ஞான இருளே சூழ்ந்தது. கல்பதருவை அணுகினேன், அது மொட்டை மரமாக நின்றது. இந்த நிலைமையில் நான் செய்வது இன்னதென்று தெரியாமல் அத்வைத பண்டிதர்கள் கூட்டம் கூட்டமாய் குவிந்திருக்கும் இப்பாரத பூமியில் எந்த பண்டிதராவது முன் வந்து என் சந்தேகங்களை நிவிருத்தி செய்வார்கள் என்று என் அத்வைத மதத்திலுள்ள அபிமானம் விட்டு தத்வத்தை அறிய விருப்பங்கொண்டு இதை அறிவிக்கிறேன். என் இந்த முயற்சி பயனளிக்குமென்று நம்புகிறேன்.

முயலுக்கு கொம்பு (குதிரைக்கு கொம்பு) எப்படியோ அப்படியேத் தான் அத்வைதமதத்தில் நிர்குணப்ரம்மம் என்பதும் சித்திக்கிறது. முயற்கொம்புக்கும் (குதிரைக் கொம்புக்கும்) சித்திப்பதில் வித்யாசமில்லை. நிர்குணப்ரம்மமும் எப்படி எனில் அத்வைதிகளான நாம் சுத்தசைதன்யம் ஒன்றைத்தவிற எல்லா வஸ்துக்களுமே பொய் என்று பிரமாணங்களால் ஏன், பிரமாணாபாஸங்களால்தான் ஸாதிக்க எத்தனிக்கிறோம். சுத்த சைதன்யமாகிய சுத்தபிரம்மம் அதாவது நிற்குணப்ரம்மம் தான் ஸத்யம் என்று வார்த்தையால் சொல்கிறோமேயல்லாது, அந்த நிற்குணப்ரம்மத்தின் ஸத்யத்வத்தை நாம் பிரமாணங்களால் சாதித்துத்தர முடிகிறதில்லையே என்றுதான் என் மனம் சங்கடப்படுகிறது. பூஜ்யரான அத்வைதசித்திகாரர் 'சுத்தம் ஹி நத்ருச்யம்.........கிம்து உபஹிதமேவ, தச்ச மித்யைவ, நஹிவிருத்திதசாயாம் அனுபஹிதம் பவதி | நசைவம ஸதி சுத்தஸித்தி: நஸ்யாத் இதி வாச்யம்] ஸ்வத: ஏவ தஸ்யப்ரகாசத்வேன ஸித்தத்வாத்'', எது சுத்தமோ அது பிரமாணங்களுக்கு புலப்படாது. உபாதி விசிஷ்டம் தான் புலப்படும். அதோ மித்யையாகிறது. ஆகவே க்ஞானநிலையில் உபாதிவிசிஷ்டமாய் இல்லாதது எதும் உண்டாகாது. அப்படிக்கிருந்தால் சுத்தமான ப்ரம்மம் சித்திக்க மாட்டாதென்று சொல்லிவிடலாகாது. சுத்த பிரம்மம் சுயம்பிரகாசமாய் இருப்பதால் சித்திக்கிறது, என்று சொல்லியுள்ளார். இதனால் நிர்குணப்ரம்மம் ப்ரமாணங்களால் அறியப்படாதது என்றால் அந்த பிரம்மம் ப்ரமாணத்தால் ஏற்படும் க்ஞானத்திற்கு எட்டாததாய் இருப்பது என்று அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அப்படியிருக்க

ப்ரமாணத்திற்கு கோசரமாயில்லாத அத்வைத பிரம்மத்திற்கு ஸத்யத்வம் எப்படி ஸாதிக்க அருகமானதாய் ஆகும் என்றுதான் எனக்கு சந்தேகம்.

பிரம்மமோ ஸ்வப்ரகாசம், சசவிஷாணம் (அதாவது முயல் கொம்பு அல்லது குதிரைக் கொம்பு) அவ்வாறு ஸ்வப்ரகாசமன்று. ஆதலால் தான் பிரம்மம் தானாக சித்திக்கிறது, என்று புத்திமானான அத்வைத ஸித்திகாரர் சொன்னது என் மனதிற்கு சமாதானம் தருவதில்லை. பிரம்மம் ஸ்வப்ரகாசம் என்று நாம் எப்படி ஸாதித்துக்கொடுப்பது? பிரம்மம் பிரமாணங்களுக்கு கோசரமாய் இல்லாதிருக்கும்பொழுது, அந்த பிரம்மத்திற்கு ஸ்வப்ரகாசம் என்பதை ஸாதித்துக் கொடுக்கும் பிரமாணங்களை நாம் எடுத்துச்சொல்ல முடியாதல்லவா? பிரமாணங்கள் இல்லாதிருப்பினும் ப்ரம்மத்திற்கு ஸ்வப்ரகாசத்வமிருப்பதாய் நாம் ஒப்புக் கொள்வோமானால், முயற் கொம்பு மட்டில் என்ன குற்றம் செய்துவிட்டது. பிரமாணமில்லாவிடினும், முயற் கொம்புக்கு ஸ்வப்ரகாசத்வமிருப்பதாய் ஏனோ நாம் ஒப்புக்கொள்வதில்லை? மேலும் பிரம்மத்தினிடத்தில் இருப்பதாய்ச் சொல்லும் ஸ்வ்ப்ரகாசத்வம் எப்பேர்ப்பட்டது? அதை விசாரிப்போம். அது இதர பிரமாணங்களால் காணமுடியாதது என்றால் அந்த தன்மை முயலின் கொம்பிலும் இருந்துவருகிறது. முயலுக்கு (குதிரைக்கு) கொம்பு இருப்பதையும் காண்பதில்லை. ஆக இரண்டும் முயற் கொம்பும் (குதிரைக் கொம்பும்) நிர்குணப்ரம்மமும் ஸ்வப்ரகாசமாயிருப்பதால் நிர்குணப்ரம்மம் முயற்கொம்புக்கு (குதிரைக் கொம்புக்கு) ஜோடிதார் ஸமானம் என்று தான் நாம் சொல்லாமலிருக்க முடியாது.

ஆகவே அத்வைதிகளான ஒப்புக்கொள்ளும் ப்ரம்மம் அதாவது நிர்குணப்ரம்மம் என்றால் சுத்தப்ரம்மம், என்று ஒன்று இருப்பதற்கு பிரமாணங்கள் எவ்வாறு இல்லையோ, முயற் கொம்பு இருப்பதற்கும் அவ்வாறு பிரமாணங்கள் இல்லை. பிரம்மம் சுயப்ரகாசமென்றாலோ முயற் கொம்பும் சுயம்பிரகாசம் தான். ஆதலால் பிரமாணங்களைக் கொண்டு அறியமுடியாதிருத்தலாலும் சுயம் பிரகாசமாய் இருத்தலாலும் நிர்குணப்ரம்மமும் முயற் கொம்பும் (குதிரைக் கொம்பும்) வித்தியாஸமின்றி ஸமானமாய் இருக்கும்பொழுது, ஒன்றான நிர்குணப்ரம்மம் மட்டில் இருப்பதாயும், மற்றொன்றான முயற் கொம்பு (குதிரைக் கொம்பும்) இல்லை என்றும் ஸாதிக்க எந்த மூடன் தான் எத்தனிப்பான்?

மற்றொரு விஷயம் விசாரம் செய்யவேண்டியதாய் ஏற்படுகிறது. பிரமாணங்கள் என்பது எவை? அவை ஸத்யமான வஸ்துவை அறிவித்துக் கொடுப்பவைகள் என்று ஸாமானியர்களும் அறிந்ததே.

இப்படியிருக்க உத்தமமான பிரமாணங்களென யாதொரு சம்சயமுமின்றி அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதான பரமபூஜ்யமான வேதத்தை, பிரஸித்தர்களான அத்வைதிகள் பிரமாணமென்று ஒப்புக்கொள்வதில்லை. அவர்கள் ஒப்புக்கொள்ளவும் முடிவதில்லையே என்றுதான் எனக்கு அவர்களிடம் துவேஷமுண்டாகிறது. எப்படியெனில் எமது அத்வைத மதத்தில் ஆகாசம் முதலான எல்லா ஜகத்தும் பொய். அப்பேர்ப்பட்ட பொய்யான ஜகத்தை அறிவிக்கும் வேதங்கள் எப்படி பிரமாணமானவைகளாக ஆகும். ஸ்வப்ரகாசமாயிருப்பதால் (அதாவது இதர ப்ரமாணங்களால் அறியமுடியாமல் இருப்பதால்) நிர்குணப்ரம்மத்தை வேதங்கள் அறிவிக்க இயலுவதில்லை. ஆகவே சத்யமென்று அத்வைதிகளாகிய நாம் ஒப்புக்கொண்டிருக்கும் நிர்குண ப்ரம்மம் வேதத்தால் நிரூபிக்கப்படுவதில்லையாதலாலும், வேதத்தால் நிரூபிக்கப்படுவதாய் நாம் ஒப்புக்கொள்ளும் ஜகத்து பொய் மித்யையாய் இருப்பதாலும், அத்வைதிகளாகிய எங்களுக்கு வேதம் பிரமாணமாவது எப்படி என்று, அல்லும் பகலும் சிந்தை என்னை வாட்டுகிறது. பரம்பொருளான எமது நிர்குண ப்ரம்மத்தின் ஸத்யத்வமும், பூஜ்யமான வேதத்தின் பிரமாண்யமும், எமது அத்வைத மதத்தில் சித்திப்பதில்லை என்றால், இந்த அத்வைத மதம் எமது வம்சபாரம்பரியமாய் வந்திருந்த போதிலும் இந்த பாழ்மதத்தை நாம் எப்படி நம்புவதோ தெரியவில்லை. நம்பிக்கை இழந்த இந்த அத்வைத மதத்தை குருடனை பின்பற்றினாப் போல் எப்படி பின்பற்றுவது? வம்சபாரம்பரியமாய் வந்த இந்த அத்வைத மதத்தை நாம் விட்டு ஓடுவதாவது எப்படி?

"ந ச கலு பரிபோக்தும் நைவ சக்னோமி ஹாதும்" நான் இவளை அனுபவிக்கவும் முடிவதில்லை. விடவும் மனமில்லை. என்று சாகுந்தலத்தில் துஷ்யந்தன் வர்ணித்திருக்கும் அவஸ்தையைத்தான் நான் இப்பொழுது அனுபவிக்கிறேன்.

பிரமாணங்களுக்கு கோசரமாய் இல்லாதிருத்தலால் முயற்கொம்பைப்போலவே நிர்குண ப்ரம்மத்துக்கும் ஸத்யத்வம் சித்திப்பதில்லை. நிர்குணப்ரம்மம் பிரமாணத்திற்கு கோசரமாய் இல்லை என்பதைப்பற்றி சிறிதும் சந்தேகப்படவேண்டாம். இதைப்பாருங்கள். பிரமாணங்கள் எவையெனில், ப்ரத்யக்ஷம் அனுமானம் ஆகமம் இவைகளே. ப்ரத்யக்ஷம் என்பது ரூபம் முதலியவைகளைக்கொண்ட வஸ்துவில்தான் உண்டாகுமேயல்லாது, ரூபாதிகள் இல்லாத வஸ்துவில் பிரவிருத்திக்காது. எமது அத்வைத ப்ரம்மம் நிர்குணமாய் இருப்பதால் (அதாவது ரூபம் முதலான தர்மங்கள் இல்லாதிருத்தலைக் கொண்டிருப்பதால்) ப்ரத்யக்ஷத்திற்கு கோசரம் ஆகமாட்டாதல்லவா? இனி அனுமானத்தைப்பற்றி யோசிப்போம். அனுமானம் என்பது வ்யாபகத்வம் (அதாவது வ்யாபிப்பது) முதலான தர்மத்தை (தன்மையை) கொண்டிருத்தலாகும். இந்த வ்யாபகத்வாதி தர்மமில்லாதிருக்கும் எமது நிர்குணப்ரம்மத்தைத் தொடவும் முடியாமல், அனுமானம் என்னும் பிரமாணம் தூரம் விலகிச்செல்கிறது. 'நைஷா தர்க்கேணமதிராபனீயா' என்று வேதமும் அனுமானத்திற்கு ப்ரம்மம் கோசரமாய் இருத்தலை நிஷேதிக்கிறது. த்ரவியம் குணம் ஜாதி முதலியவைகளைக்கொண்டவைகளில் தான் ப்ரவிருத்திக்கும் ஆகமம் இவைகள் இல்லாததான நிர்குணப்ரம்மத்தை எப்படித்தான் நிரூபிக்கும். ஆகவே ப்ரத்யக்ஷம் அனுமானம் ஆகமம் ஆகிய பிரமாணங்களிலிருந்து தவறியிருக்கும் நிர்குண பிரம்மம் எப்படி ஸத்யமாக இருக்கமுடியும்?

எமது அத்வைதிகளால் ஸர்வக்ஞத்வம் (ஸர்வத்தையும் அறிதல்) முதலான உத்தம குண சமூகங்களால் பிரகாசிக்கும் ஸகுணப்ரம்மம் மித்யை பொய் என்று, அதற்கு மித்யாத்வம் சொல்லப்படுவதும்கூட எனக்கு சரி என்று தோன்றுகிறதில்லை.

ய: ஸர்வக்ஞ: ஸ ஸர்வவித், யஸ்யக்ஞானமயம் தப:, தஸ்மாத் ஏதத் ப்ரம்மநாம ரூபமன்னம் ச ஜாயதே, பராஸ்ய சக்திர்விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ க்ஞான பலக்ரியாச, ஸகாரணம் கரணாதிபாதிப:, தமீச்வராணும் பரமம் மகேச்வரம் தம் தேவதானும் பரமம் ச தெய்வதம்। பதிம் பதீனும் பரமம் பரஸ்தாத் விந்தேத தேவம் புவனே சமீட்யம்॥ ஏகோதேவ: ஸர்வபூதேஷு கூட: ஸர்வவ்யாபீ ஸ்ர்வபூதாந்தராத்மா। கர்மாத்யக்ஷ: ஸர்வபூதாதிவாஸ:, ஏகோ வசீ நிஷ்க்ரியாணும் பஹூனும் ஏகம் பீஜம் பஹூதாய: கரோதி। தமாத்மஸ்தம் ஏனுபச்யந்தி தீரா: தேஷாம் ஸுகம் சாச்வதம் நேதரேஷாம்॥ நித்யோநித்யானும் சேதனஸ் சேதனும் ஏகோ பஹூனும் யோ விததாதி காமான்" இத்யாதி சுருதிகளும் "அந்தஸ்தத்தர்மோபதேசாத், ஆகாசஸ்தல்லிங்காத்" முதலான வேதார்த்தங்களை நிர்ணயித்துக்கொடுக்கும் பிரம்ம சூத்திரங்களும், "வேதைஸ்ச ஸர்வைரஹமேவவேத்யோ வேதாந்தக்ருத்வேத விதேவ சாஹம்" முதலான கீதாவாக்யங்களும் பரபிரம்மத்துக்கு ஸர்வக்ஞத்வாதி குணங்களை ஸ்பஷ்டமாய் அறிவிக்கின்றன. ஸர்வக்ஞத்வம் முதலான குணங்களைக்கொண்ட ப்ரம்மத்தை எடுத்துச் சொல்லும் சுருதி, ஸூத்ரம் கீதை, ஆகிய மூன்று ப்ரஸ்தானங்களுக்கு பாதகமில்லாமல் இருப்பதாலும், ஸ்வயமாகவே இந்த ப்ரஸ்தான த்ரயமும் ப்ரமாணமாய் இருப்பதாலும் இவைகளால் சித்திக்கும் ஸகுண

போகவே, எமது மாத்வ சமூகத்தாரில் எவ்வகையாரும் எவ்வகையாருடனும் எச்சம்பந்தமும் வைத்துக்கொள்ளலாம் என்று அகிலாக்யமான சம்பிரதாயம் வேரூன்றிவிட்டது. அதனால் எமது சமூகத்தில் தேசஸ்த கர்னாடகாதி எல்லா வகையார்களில் பல வருஷங்களாகவே கலப்பு விவாகம் தாராளமாய் நடத்தப்பட்டு வருகிறது. இந்த விவாகத்தை எமது தர்மாசரியார்களான எல்லா மடாதிபதிகளும் ஒப்புக்கொண்டு, தப்த சக்ராதிகளைக்கொடுத்து, சமூகத்தில் சேர்த்து, கிருகஸ்த தர்மங்களை நடத்த அனுமதியளித்திருக்கையில் இதர மதத்தார்கள் அதிகமாய்க் கலந்த மாத்வ பண்டிதர்களின் பிரதிநிதித்வம் அதிகம்வாய்ந்திராத மதரூஸ் அகில இந்திய வித்வத் பரிஷத் கண் மூடித்தனமாய் எமது மாத்வ சமூகத்தாரின் விவாகத்தைப்பற்றி அறிவித்த அபிப்பிராயம் ஒதுக்கப்பட வேண்டியதே ஆகும்.

இச்சந்தர்பத்தில் மற்றொரு விஷயத்தையும் வெளியிடத் துணிகிறோம். மாத்வர்களில் எவ்வளவு ப்ரபேதங்கள் இருப்பினும் எல்லோரும் மாத்வர்களேயானதானல் இவர்கள் ஒரே வகுப்பாய் பாவிக்கப்படலாமென்றும், பிராம்மணர்களில் இம்மாதிரியே ஸ்மார்த்தர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்கள் முதலான ஒவ்வொரு வகுப்பாரும் அந்தந்த வகுப்பிலேயே விவாகம் செய்யப்பட வேண்டுமென்றும் பரிஷத் அபிப்பிராயம் தந்திருக்கிறதாய் ஒருவர் அர்த்தம் செய்தாலும், அந்த அபிப்பிராயத்தையும் எமது மாத்வ சமூகத்தார் ஆமோதிக்கமுடியாது. பிராமணர்களில் விவாகச் சீர்திருத்தம் வேண்டுமென்ற அவசியத்தை நாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தெரிந்துகொண்டு, எமது மாத்வ வகுப்புக்கு வெளியேயுள்ள ஸ்மார்த்த வகுப்பைச்சேர்ந்தவர்களுடனும் நாம் விவாகம் செய்து வருகிறோம். சங்கராசாரியாரை குருவாகக் கொண்டு விபூதிருத்திராக்ஷங்களை தரித்திருக்கும் மகாராஷ்டிரம் பேசும் ஸ்மார்த்தர்களின் குலத்து பெண்டீர்கள் மாத்வ சமூகத்தில் மிக்க கௌரவமாய் வாழ்ந்திடும் நூற்றுக்கணக்கான குடும்பங்களில் தாய்களாகவும் பாட்டிகளாகவும் முப்பாட்டிகளாகவுமிருந்து வருவதை இத் தமிழ் நாட்டில் அதிகமாய்க்காண்கிறோம். கர்னாடகதேசங்களிலேயும் கன்னடம் பேசும் ஸ்மார்த்த

வகுப்பார்களுடன் மாத்வவகுப்பார்கள் இம்மாதிரியாய் பிராசீன் காலம் முதல் விவாகசம்மந்தம் வைத்திருப்பதாய் ஓர் பெரியார் அறிவித்துள்ளார். தெலுங்கு பிராந்தியத்திலும் நாம் விசாரிக்கத் தொடங்கினால் அங்கும் ஆதரவு கிடைக்குமென்பதில் ஆக்ஷேபனை இல்லை. மாத்வ வகுப்பார்களிலேயே நடக்கும் விவாகத்தை ஏற்பது போலவே, மாத்வவகுப்புக்கு புறம்பானுள்ள ஸ்மார்த்த வகுப்பாருடன் நடைபெறும் விவாகத்தையும், ஆசார அனுஷ்டானத்தை வெகு நிபுணமாய் நடத்திவந்த பிராசீன காலத்திய மடாதிபதிகளும்கூட ஏற்று, அச்சம்பந்தம் பெற்றவர்களை தப்தமுத்ராதிகளைக் கொடுத்து சமூகத்தில் சேர்த்துக்கொண்டிருக்கின்றனர். எமது தர்மாசாரியாளான மடாதிபதிகள் விவாக சம்பந்தம் பெறுபவர்கள் பிராம்மணர்கள் தானா ஸமமான ஆசார அனுஷ்டானமுள்ளவர்களா என்பதைத்தான் கவனிக்கின்றனர். ஆகவே விவாகாதி சம்பந்தத்தில் வகுப்பு பேதம் முக்யமானதல்லவென்றும் பிராம்மண ஜாதியும் பிராம்மண்யமும் தான் பிரதானமாய் பார்க்கப்படவேண்டுமென்பதும் எமது சமூகத்தாருடையவும் தர்மாசாரியாருடையவும் கருத்து. மிகவும் சீர்குலைந்துபோய் பரிதாபநிலையை அடைந்திருக்கும் எமது மாத்வ சமூகத்தை பிராம்மணர்களில் இதர வகுப்புகள் அடைந்திருக்கும் நிலைக்கு உயர்த்துவது எப்படி என்று எமது சமூகத்து அறிவாளிகள் யோசனைசெய்துமண்டையை உடைத்துக்கொள்கின்றனர். அதற்காக இச்சந்தர்ப்பத்தில் நாம் சொல்லும் யோசனையாவது, தென்நாட்டில் உயர்தரநிலையை அடைந்திருப்பதாக கருதப்படும் ஸ்மார்த்தபிராம்மணர்களுடன் அவர்கள், தமிழோ தெலுங்கோ கன்னடமோ மகாராஷ்டிரமோ குஜராத்தியோ மலையாளமோ எந்த பாஷை பேசுபவர்களாய் இருந்தாலும், அவர்கள் எமது மடாதிபதிகளால் பந்தி போஜனாதிகளில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களாயிருந்தால் சிறிதும் யோசிக்காமல் எமது மாத்வ சமூகம் அவர்களுடன் விவாக சம்பந்தம் செய்யவேண்டியது அவசியமாகும். இதனால் சமூகத்தின் செல்வம் செல்வாக்கு அந்தஸ்து அதிகாரம் முதலியவைகள் விருத்தியடையலாம். சென்னை வித்வத்பரிஷத் இதற்கு விரோதமாய் அபிப்பிராயத்தைக் கொடுத்திருந்த போதிலும்

எமது தர்மாசாரியாளான மடாதிபதிகள் ஏகோபித்து அபிப்பிராய பேதமின்றி இவ்விவாகத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். எமது அனுபவத்தில், சுமார் 25 வருஷங்களுக்கு முன், ஜில்லா ஜட்ஜாய் பிறகு அதிகாரம் பெற்றிருந்த ஓர் தெலுங்கு பிராம்மணர், அவருடைய பெண்ணை ஓர் மாத்வருக்கு விவாகம் செய்துகொடுக்கப் பிரியப்பட்டு, இம்மித்திரன் பத்திராதிபர் மூலமாய் அச்சமயம் மலைகோட்டையில் இருந்துவந்த அவருடைய மடாதிபதியான தற்போது துவைதசித்தாந்த ப்ரதிஷ்டாபனாசாரியாள் என்ற பெயருக்கேற்றபடி உலகில் எங்கும் மத்வசித்தாந்தத்தை நிலைநிறுத்திவரும் ஸ்ரீஉத்தராதிஸ்வாமிகளின் அனுமதியைப்பெற வேண்டிக்கொள்ள, ஸ்ரீஸ்வாமிகள் கருணை கூர்ந்து அந்த தம்பதிகள் விவாகமானபின் ஸ்ரீமடத்திற்கு வந்து தப்தசக்ராதிகளைப்பெற்றுப்போக ஆக்ஞையிட்டு, அவ்விவாகத்திற்கு தம்முடைய ஸம்பூர்ண ஸம்மதியை அளித்ததுமன்றி ஸர்வாதிகாரியையும் அந்த விவாகத்தில் ஆஜர் இருக்கச் செய்திருந்தார்கள். பிராம்மண சமூகத்தில் நடத்தப்படும் விவாகத்திற்கு மன்வாதி ஸ்மிருதி கர்த்தாக்கள்யாவருமே அனுமதியளித்திருக்கின்றனர். பிராம்மண ஜாதியிலேயே வகுப்புமாறி நடத்தப்படும் விவாகம் சாஸ்திர நிஷித்தமாய் இருக்கும் பக்ஷத்தில், சாஸ்திரக்ஞர்களான எமது தர்மாசாரியார்கள் ஸம்ப்ரதாயத்தில் கொண்டு வந்திருக்கமாட்டார்கள் என்று நாம் நிச்சயமாய் எண்ணவேண்டும். பிராம்மண ஜாதியினரான ஸ்மார்த்த வகுப்பார்களிலிருந்து எமது மாத்வ சமூகம் உண்டாயிருக்கிறது என்பதை யாவரும் மறுக்க முடியாது. மலையாளம் பேசிவந்த ஸ்மார்த்த பிராம்மணர்களான த்ரிவிக்ரம பண்டிதர் நாராயண பண்டிதர் சங்கர சாஸ்திரி முதலியோர் ஸ்ரீபகவத்பாதாளால் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தெலுங்கு பேசும் சோபனபட்டர் சாமி சாஸ்திரிகள் முதலியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மகாராஷ்டிரமே பேசிவந்த ஜயதீர்த்தர் சமூகத்தில் தலைவராய் நின்றார். ஆகவே எமது சமூகத்தின் முன்னேற்றத்தில் கவலை கொண்டிருக்கும் சீர்திருத்தவாதிகள் பாஷையில் திருஷ்டிவைக்காமல் இந்த விவாக சீர்திருத்தத்தை செய்ய முன்வந்தால் நாளடைவில் இச்சமூகம் வளருமென்பதில் ஆக்ஷேபணை இல்லை.

சாமானியமாய் பிராம்மணர்களிலேயே கல்யாண செலவு குறைக்கப்படவேண்டுமென்று ஒரு இயக்கம் இருந்துவருகிறது அப்படியிருக்க எமது மாத்வ சமூகத்தில் கலியாணச் செலவு அதிகமென்பது யாவரும் அறிந்ததே. பண்டிதன் உண்டு கெட்டான் துலுக்கன் உடுத்து கெட்டான், என்னும் பழமொழியே இதற்கு அத்தாக்ஷி. எரியும் நெருப்புக்கு நெய் வார்த்ததுபோல் மதராஸ் வித்வத்பரிஷத் பிராம்மணர்கள் ஒருநாள் உபநயனத்தையோ ஒருநாள் விவாகத்தையோ நடத்தலாகாதென்றும், அது அசாஸ்திரீயமென்றும் அபிப்பிராயம் தந்திருக்கிறது. திருப்பதிஷோலிங்கர்முதலான அநேக திவ்ய தேசங்களிலேயும் எமது மாத்வ மடாதிபதிகளின் எதிரிலேயும் ஒருநாள் உபநயனமும் ஒருநாள் விவாகமும் பல நூற்றாண்டுகளாய் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகள் எல்லாம் அசாஸ்திரீயமென்று கருதப்படுவது அடாத செயலாகும். ப்ராம்மண்யத்திற்கும் தர்ம ப்ரஜைக்கும் காரணமாயுள்ள பிரதானகர்மாக்களான உபநயனமும் விவாகமும இப்போது அனுஷ்டிக்கப்பட்டு வருவதுபோல் ஒருநாள் நடத்தப்பட்டு வருவது சாஸ்திர நிஷித்தமல்லவென்று நம்மவர்களால் கருதப்படவேண்டியதவசியம். எமது சமூக சீர்திருத்தக்காரர், களின் இச்சைப்படி இந்த ஒருநாள் உபநயனம் ஒருநாள் விவாகம் நடத்தப்படுவதும் எமது மாத்வ சமூகத்தாரால் மேற்கொள்வது எமது மடாதிபதிகளாவும் ஆக்ஷேபிக்கத் தகுந்ததாயும் இல்லை.

ஆகலால் சமூகத்தின் முன்னேற்றத்தில் கருணைகொண்ட ஸ்ரீ உத்தராதிஸ்வாமிகளும் மற்றுமுள்ள எல்லா மடாதிபதிகளும் மாத்வ பண்டிதர்களும் மாத்வ சங்கங்களும் மாத்வ மகா சபைகளும் இந்த எமது அபிப்பிராயத்தை பரிசீலனை செய்து, சென்னை வித்வத் பரிஷத்தின் தீர்மானங்கள் தர்மாசாரியார்களின் பரிசீலனைக்கனுப்பப்படுமென்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு ஏற்றபடி, அனுப்பப்பட்டாலும் சரியே அனுப்பப்படாதிருந்தாலும் சரியே தனி நாயனங்கள் மூலமாயும் தீர்மானங்கள் மூலமாயும் அந்த வித்வத் பரிஷத்தின் இந்த தீர்மானங்களைப் பற்றி தம் தம் அபிப்பிராயங்களை அறிவித்து, மாத்வ சமூகத்தை முன்னேறச் செய்ய பிரார்த்திக்கின்றோம்.

செய்தித்திரட்டு.

உடுபிபர்யாயம்

இந்த 1938 ஹூ ஜனவரி மீ 17ௗ யன்று மிக்கக்கியாதி பெற்ற உடுபிபர்யாய மஹோத்சவம் வெகுவிமரிசையாய் நடைபெற்றது. பேஜாவரம் மடம் ஸ்வாமிகளான ஸ்ரீ விச்வமான்ய தீர்த்தர் பர்யாய பூஜையினின்றும் விலகி பலிமார் மடம் ஸ்வாமிகளான ஸ்ரீ ரகுமான்ய தீர்த்தர், உடுபி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தின் பர்யாய பூஜையை இரண்டு வருஷ காலம் செய்ய பட்டம் பெற்றார். கங்காயத்திரைச் செய்ய சென்றிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணாபுரம் ஸ்வாமிகளையும் சீக்காய் இருக்கும் சீரூர் மடம் ஸ்ரீ ஸ்வாமிகளையும் தவிர இதரர்களான ஸ்ரீ புத்திகிடம் ஸ்வாமிகள் ஸ்ரீ ஸோதே ஸ்வாமிகள் ஸ்ரீ காணூர் ஸ்வாமிகள் ஸ்ரீ பேஜாவரஸ்வாமிகள் ஸ்ரீ அதமார் ஸ்வாமிகள் ஆகிய ஐந்து மடம் ஸ்வாமிகளும் பிரஸன்னமாயிருந்தனர். ஊர்வலம் வெகு சிறப்பாய் இருந்தது. ஸ்ரீமான்களான மைசூர் திவான் மிர்ஸா இஸ்மேல், ஸர்சார்லஸ் டாட் ஹண்டர் ஆரைபின் டாக்டர் யூ. ராமராவ் முதலியோர்களிடமிருந்து வந்த தந்திகளும் கடிதங்களும் படிக்கபபட்டன. நகர் சாமான்கள் ஏராளமாய் ஸமர்ப்பிக்கப்பட்டன. ஒரு வாரம் வரையில் தினம் பத்தாயிரத்துக்கு மேல் ஜனங்கள் போஜனம் செய்விக்கப்பட்டனர். மொத்தத்தில் இந்த பர்யாய உற்சவம் வெகு சிலாக்யமாக இருந்தது. 18—1—38ௗ யன்று ஸ்ரீமான் ஹார்பணஹள்ளி ஸ்ரீனிவாஸராவின் தலைமையில் ஓர் பொது கூட்டம் கூடியது. அதில் பெங்களூர் ஸ்ரீமான் வித்யா பூஷணம் V. S. சஞ்சீவிராவ் அவர்களால் ஹிந்து ரிலிஜியஸ் எண்டோமெண்டு சட்டம் விவரமாய் சொல்லப்பட்டு கண்டிக்கப்பட்டது. பர்யாயம் முடிந்து புதிய ஸ்வாமிகளுக்கு அதிகாரம் கொடுத்தவுடன் ஸ்ரீ பேஜாவர ஸ்வாமிகளுக்கு உடுபி ஸம்ஸ்கிருத காலேஜிலுள்ள ஸ்ரீ மத்வசித்தாந்த ப்ரபோதினி சபையின் காரியக் கம்மிட்டியாரால் ஸம்ஸ்கிருதத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளின் குணநிசயங்களைப் போற்றி வெகு அழகாக ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. என்று பெங்களூர் ஜானலிஸ்ட் ஸ்ரீமான் V. S. சஞ்சீவிராவ் நமக்கு அறிவிக்கிறார்.

கோயமுத்தூர் ஸ்ரீமத்வ சித்தாந்த ப்ரபோதினீ ஸபையின் பதினோராவது ஆண்டு நிறைவிழா மேற்படி யூர் சலிவன் வீதி ஸ்ரீ ஆஞ்சனேயஸ்வாமி கோவில் 13—1—1938ௗ யன்று ஸ்ரீமான் S. K. ராகவேந்திரராவ் B A., B. L., அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் அச்சமயம் மேற்படி ஸபையின் வருஷாந்த ரிபோர்ட் காரியதரிசி ஸ்ரீமான் G. R. ராமராவால் வாசிக்கப்பட்ட பின் பண்டிதர்களான ஸ்ரீமதே நாமக்கல் வெங்கண்ணாசாரியார் அவலக்கி ஸ்ரீனிவாஸாசாரியார் தெக்கலூர் கிருஷ்ணாசாரியார் அவர்களால் பகவத்கீதை உபநிஷத் பாகங்கள் முதலியவைகளைப் பற்றி உபன்யாஸம் செய்யப்பட்டு, இப்பேர்ப்பட்டதான மாத்வ சபைகள் ஆங்காங்கு இருக்கவேண்டியது அவசியமென்று வற்புறுத்தப்பட்டதென்றும், மேற்படி சபையின் ஆதரவில் நடத்தப்பட்டு வரும் ஸம்ஸ்கிருத மாத்வ பாடசாலையின் மாணவர்களுக்கு அக்கிராஸனாதிபதியால் பரிசுகள் அளிக்கப்பட்டதென்றும், ஸ்ரீ ஆஞ்சநேயஸ்வாமிக்கு மங்களாரத்தியுடனும் சபையோர்களுக்கு கந்த தாம்பூலாதிகளுடனும் அக்கிராஸனர் முதலியோருக்கு வந்தனோபசாரங்களுடனும் கொண்டாட்டம் இனிது முடிந்ததென்றும் ஸ்ரீமான் S. V. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார். இச்சபையின் ரிபோர்ட்டிலிருந்து இவ்வருடத்தில் வரவு ரூ. 160—3—2 என்றும் செலவு ரூ. 105-4-5 என்றும் மொத்த கையிருப்பு ரூ. 1981-14-10 என்றும் ஸ்ரீமத்வ நவமியும் ஜயதீர்த்தர் வியாஸராஜர் வாதிராஜர் ராகவேந்திரர் முதலான மகனீயர்களின் புண்ய தினங்களும் கொண்டாடப்பட்டதென்றும் பல பண்டிதர்களின் உபன்யாஸங்களும் நடத்தப்பட்டதென்றும் இச்சபையின் ஆதரவில் நடத்தப்படும் இலவச பாடசாலையில் ஸ்ரீமான் நரசிம்மாசாரியாரால் 26 மாணவர்கள் ஸந்தியா வந்தனம் மணிமஞ்சரி மத்வ விஜயம் ஸ்தோத்திரங்கள் கற்பிக்கப்படுகின்றனவென்றும் இது விருத்தியாக அவ்வூர் மாத்வ மகா ஜனங்கள் தம் தம் பிள்ளைகளை அனுப்பக் கேட்டுக் கொள்கிறனரென்றும் தெரிய வருகிறது.

பூலோக வைகுண்டமாகிய ஸ்ரீரங்கத்தில் தனுர் மாஸம் பூராவும் மாத்வர்களால் தாரதம்யபப்படி தாஸர் பதங்களைப் பாடி

உள்திரு வீதி வழியாய் ஸ்ரீ ரங்கனுதனை ப்ரதக்ஷிணம் செய்து பஜனை செய்யப்பட்டதென்றும் முடிவில் 23—1—38உ யன்று காலையில் பக்த கோடிகளுக்கு அபீஷ்டங்களை சீக்கிரமே அளித்து விசேஷ சந்தோஷத்துடன் பிரகாசித்து வரும் அவ்வூர் ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பிருந்தா வனத்தில் சுமார் 1,000 பேருக்கு பிராமண போஜனமும் மாலையில் ஸ்ரீ ராகவேந்திரரின் படத்திற்கு ஊர்வலமும் வெகு சிறப்பாய் நடத்தப்பட்டதென்றும் அச்சமயம் ஸ்ரீமான் பாலையம் சுப்பு ராயரால் ஸ்ரீ ராகவேந்திரரின் சித்திரப் படம் ஏராளமாய் வழங்கப் பட்டதென்றும் இந்த கைங்கரியத்துக்கு உதவி புரிந்த அனைவருக்கும் ஸ்ரீ குருராகவேந்திரர் மூலமாய் ஸர்வேசுவரனான ஸ்ரீ ரங்கநாதன் அருள் புரியப்ரார்த்திக்கப்படுகிறதென்றும் ஸ்ரீமான் N. R. ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

மாத்வமித்திரன் முன் 4ம் நம்பர் சஞ்சிகையில் 122ம் பக்கத்தில் அறிவித்தபடி உத்தராதி மடம் ஸ்ரீ ஸத்ய ஸந்தஸ்வாமிகள் பிரஹ்ஸாதாம்சம் என்பதில் மாத்வர்களில் அபிப்பிராய பேதம் இருக்கிறதென்றும், பாண்டுரங்கி வம்சத்தவரான ஸ்ரீ வித்யாதீசர் தான் பிரஹ்லாதாம்சரென்று கிரந்த மூலமாய் ஏற்படுகிறதென்றும் எமது ஓர் ஆஸ்திக மாத்வர் பிரசுரிக்க வற்புறுத்துகிறார்.

மதராஸில் சமீபத்தில் நடைபெற்ற அகில இந்திய வித்வத் பரிஷத்திற்கு முன்னோடி பூர்வாங்கமாய், அகில இந்திய வர்ணாசிரமஸ்வராஜ்ய சங்கத்தின் முக்யாதிகாரிகள் எல்லா மடாதிபதிகளுக்கும் அழைப்புக் கடிதத்தை அனுப்பியது போல் த்வைத சித்தாந்தத்தை தற்போது வெகு தீவிரமாக பிரசாரம் செய்து வரும் மகா பண்டிதரான ஸ்ரீ உத்திராதி மடம் ஸ்வாமிகளுக்கு எழுதிய கடிதத்தில் வர்ணாசிரமஸ்வராஜ்ய சங்கத்தின் அதிகாரிகளாகிய அவர்கள் செய்யவேண்டிய காரியங்களில் எதை அனுஷ்டிக்க வேண்டுமென்பதையும். அவர்களால் ஸ்ரீ ஸ்வாமிகளிடமிருந்து எவ்வகை உதவியை வேண்டப்பட வேண்டுமென்பதையும் கருணை கூர்ந்து போதிக்க வேண்டுமென மிக்க தாழ்மையுடன் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். அதற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் போதித்த வெகு ரஸமான அர்த்த புஷ்டியுள்ள பதில் உத்திராதி மடம்

திவான் ஸ்ரீமான் பாண்டுரங்கி ஜய்யாசாரியாரவர்களால் 27—11—37ல் பெல்காம் மதுரவாணி ஸம்ஸ்க்ருத பத்திரிகையில் பின்வருமாறு பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.—

பிராம்மணன் க்ஷத்திரியன் முதலான வர்ணங்கள் இல்லை புண்யம் இல்லை, பாபம் இல்லை, தீண்டாமை தோஷம் இல்லை தேவர்கள் இல்லை, யக்ஞம் இல்லை, வேதம் இல்லை, ஸ்வர்காதி லோகங்கள் இல்லை, சுருங்கச் சொல்லின் எல்லாம் படைத்த கடவுளே இல்லை. எல்லாமே (பிராம்மணர்களால்) கல்பிதம் என்றால் பொய். மித்யை, முன்னே இல்லை, பின்னே இல்லை, இப்பவும் இல்லை, எப்பவும் இல்லை, முக்காலத்திலும் இல்லை என்று நாஸ்திகர்கள் மறுக்கும் பிராம்மணாதி வர்ணங்கள் என்ன, புண்ய பாபாதிகள் என்ன ஈசுவராதிகள் என்ன இவைகள் கல்பிதமல்ல, ஸத்யம், தான் என்று இவைகளின் ஸத்யத்வத்தை (கல்பிதமாய் இல்லாதிருத்தலை) ஸ்தாபித்து நாஸ்திகத்தை வேருடன் அழித்து ஆஸ்திகர்களின் மனதிலுள்ள கலக்கத்தைப் போக்கி அவர்களை தர்மத்தில் பிரவிருத்திக்கச் செய்து ஐஹிகாமுஷ்மிக ஸகல ஸௌபாக்யத்தைப் பெறச் செய்வது தான் வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்து அதிபதிகள் என்ற கௌரவப் பெயரைக் கொண்டவர்களின் கடமை என்று யாவரும் ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். ஸ்ரீஸ்வாமிகள் நேரில் ஸபைக்கு விஜயம் செய்து பிராம்மணாதிவர்ணங்களுக்கும் புண்யபாபாதிகளுக்கும் ஈசுவராதிகளுக்கும் மித்யாத்வத்தை (இவை எல்லாமே இல்லை என்று நாஸ்திகர்கள் பகருவதை) சாஸ்திர மூலமாய் நிராகரித்து ஆஸ்திக உலகம் விரும்புவதாயுள்ள ஸத்யத்வத்தை (இவை எல்லாமே ஸத்யம் என்பதை) ஸ்தாபிப்பதும் இச்சபைக்கு தேவையான எச்சிலவையும் பொறுப்பதும் ஸ்ரீ ஸ்வாமிகள் செய்ய வேண்டிய உபகாரமாகும். அவசியம் இவ்விரண்டு காரியங்களையும் செய்ய ஸ்ரீ ஸ்வாமிகள் தயாராய் இருக்கின்றனர். இந்த காரியங்களைச் செய்ய ஸ்ரீ ஸ்வாமிகள் அங்குவர உங்கள் விருப்பத்தை அறிவிக்கும் கடிதத்தை எதிர்பார்க்கிறோம். வர்ணாசிரம ஸ்வராஜ்ய சங்கத்தார் அவசியம் செய்ய வேண்டியதாயுள்ள இந்த எங்கள் விருப்பத்தை அச்சங்கத்தின் அதிகாரிகளான நீங்கள் விரும்பாமல் இருக்கமாட்டீர்கள் என்று திடமாய் நம்புகிறோம் என்று கண்டிருக்கிறது.

[ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தந்து பரிஷத்தின் எச்சிலை வையும் பொறுப்பதாய் ஸ்ரீ ஸ்வாமிகள் வாக்களித்தது பரிஷத்தின் நிர்வாகிகளுக்கு பேராற்றலை அளித்திருப்பினும், நாஸ்திகவாதத்தை சிறிது விரிவாய் கூறி அதை வேருடன் அழிக்கப் போவதாய் அறிவித்தவுடன், அடிவயிற்றில் இடி விழுந்தாற்போல் இந்த செய்தி தோன்றி, அத்வைதத்திற்கு காலாக்னி போன்ற இந்த ஸ்வாமிகள் நாஸ்திக மதம் போலவே உலகமெல்லாமே மித்யைப் பொய் என்று உரையாடும் அத்வைதத்தை கண்டித்து ஆஸ்திகமதமாயுள்ள நிர் துவைதத்தை ஸ்தாபித்து விடுவார் என்னும் பெரும்பீதி வாகிகளைப் பிடித்திருக்கக் கூடுமென்றும் அதனால் தான் ஸ்ரீ ஸ்வாமிகளை சரியானபடி வரவேற்க அவர்கள் பின் தயங்கினர்கள் என்றும் நிச்சயிக்கிறோம்] [ப-ர்]

குண்டூர் ஸ்ரீ கல்யாணாநந்த பாரதி
மாந்தாசாரிய ஸ்வாமியின் 21வது ஸ்ரீமுகத்திற்கு பதில்

ஓர் விஞோதன் அறிவிப்பதாவது:

ராமநாதபுரம் ஜில்லா ஹரிகுருப்பேட்டைக்கு நான் கிறிஸ்துமஸ் லீவுக்கு போயிருந்தபோது ஒரு நாள் மாலை 4-30 மணிக்கு பக்கத்துத் தெருவில் முன்னாடியுள்ள வீட்டில் ஜகமெங்கும் புகழ்பெற்ற புராண வித்வான் மோர்குழம்பு குப்பாசாரியாரின் புராணம் நடப்பதைக்கேட்டு மிகுந்த ஆவலுடன் பொழுதுபோக்குக்காக நான் போய்ச் சேர்ந்தேன். வீடு நிறைய ஜனங்கள் என்னமோ இருப்பதைக் கண்டேன். அவர்கள் எல்லோரும் மிகுந்த மரியாதையுடன் தாலிக்கு லீவு கொடுத்து ரயில் ஏற்றி வைத்த புண்யவதிகள்தான். அவர்கள் நடுவில் உட்கார முதலில் நான் அச்சப்பட்டேன். நான் புருஷனல்லவா என்று பிறகு எனக்கு ஞாபகம் வந்தது. கையும் ஒய்யாரமாக வந்தது. புராணிகரின் பக்கத்தில் உட்கார்ந்தேன். தென்னாட்டில் ஏகாதசி விரதத்தை புருஷர்களில் நிலை நிறுத்தும் மாதஸ்ரீகளல்லவா இவர்கள் என்று அவர்களிடம் எனக்குமதிப்பு ஏற்பட்டது. புராணிகரும், வாருங்கள் உட்காருங்கள் என்று

வாய் ஓயாமல் உபசாரம் சொல்ல, புராணம் நடக்கட்டுமே என்று நான் அழுத்தமாய் சொல்ல புராணம் முன்போல் சொல்லிவந்தார். இவ்வளவு ஸ்திரீகளும் கேட்டு ஆனந்திக்கும்படி சொல்கிறாரே! புராணம் பிரபலம் தான் என்று நான் முதலில் எண்ணினேன். ஆயினும் போகப் போக எனக்கு புராணம் ருசிக்கவில்லை. புராணிகரின் வாய் கட்செட்டியைப் போல் வழுமூனாய் ஓர் பல் கூட இல்லாமல் இருந்தது. அதனால் வார்த்தையும் வழவழ வென்று வழிந்து ஓடிற்று. வயோதிகராயிருந்ததால் உரக்கச் சொல்லவும் மாளவில்லை. அவர் சொல்லி வந்ததோ மாத்வ வைஷ்ணவர்களுக்கும் இரகசியமாகவுள்ள விஷ்ணு ரகசியம். அதிலும் சிருஷ்டிப்ரகாணம். ஜடப்ரகிருதியின் ஸாம்யாவஸ்தை விஷமாவஸ்தையை பிறட்டி பிறட்டி பிச்சி இழுத்து வந்தார். சிலர் சாஸ்திரமான பாகவதத்தைப் புராணம் சொல்கிறாரென்று அலங்காரமாய் உட்கார்ந்து பாகவத தாத்பர்யத்தை தொட்டால் பகவத் பாதாளின் அபசாரமென்றும் நிர்ணயத்தை தொட்டால் நீதிக்கு விரோதமென்றும் இந்த நூல்களுள்ள திக்கையும் நோக்காமல், கடின விஷயங்கள் நிறைந்த ஸ்தோத்திர பாகங்களை மெதுவாய் நழுவவிட்டு, மதப்ரமேயங்களையும் தர்ம இரகசியங்களையும் கலந்தால் பொது சங்கத்துக்கு அசிங்கமென்று அவை ஒன்றும் தங்காமல் வடிகட்டி, புஸ்தகத்திலேயே புள்ளி போட்டு, சுத்த சுத்தமான அத்தைப்பாட்டி கதையை ஸ்வரம் வைத்து, தாளம் போட்டு கண்ணை சிமிட்டி பற்களை காட்டி காலக்ஷேபத்துக்கு உப்பு புளி சாமான்களையும் பை நிறைய காசுகளையும் பெற்று, பேதாக்குறைக்கு பட்டப்பெயரையும் பெற வட்டமிட்டு, நாடோறும் புகழுடன் வாழும் கலீன நாகரீகப் பிசாசு பிடித்தலைவது போல், இந்த புராணீகர் இல்லையே என்றுதான் வருத்தப்பட்டேன். ஸ்திரீகளாவது புராணத்தில் அதிக கவனத்தை செலுத்தியிருக்கின்றனரா என்று ஒரு தரம் சுற்றிப் பார்த்தேன். சுலோகார்த்தம் சுலோக பாதம் வா என்று பாதி சுலோகமோ கால் சுலோகமோ புராணம் காதில் விழுந்தாற் போதுமென்று வியாஸர் சொன்னதை குரங்குப் பிடியாய் இவர்கள் பிடித்திருப்பதைக் கண்டேன். அவர்கள் இதை சிரத்தையாய் கேட்டவர்களாய் தெரியவில்லை 100க்கு 90 பேர் அக்காள் நித்ரையுடன் இரகசியம் பேசிக்கொண்டிருந்தனர். தூங்கு மூஞ்சிகளில் எவ்வளவு தினுசு உண்டோ அவ்வளவு ஜாதியும் நமது பூஜ்ய ஆசாரியாளின் புராண சபையில் கண்டேன். படம் பிடித்து பத்திரிகைகளுக்கு அனுப்பினால் பரிசு கிடைக்குமென்று எண்ணினேன். புராணிகரின் எதிரில் இரண்டு வியக்திகள் மூலைக்கொருவராய் உட்கார்ந்து சுவற்றில் தலை சாட்டி வாய் பிளந்து நாக்கை தொங்க

விட்டுகர், பர் என்று உறக்க விட்டுக்கொண்டிருந்த கொரட்டை கம்மல் தொண்டையில் சொல்லிவந்த புராண சங்கீதத்திற்கு சுருதி போடுவது போல் இருந்தது. கண்ணைத் திறந்த ஸ்வல்ப ஜனங்களிலும் ஒருவள் பருப்பை நேம்பிக்கொண்டிருந்தாள். ஒருவள் கற்களைப் பொருக்கி வந்தாள். ஒருவள் பருத்தியை வில்லில் வைத்து கடைந்திருந்தாள். ஒருவள் பேத்திக்கு பின்னலிட்டுக்கொண்டிருந்தாள். ஒருவாள் அரிவாள் மணையில் காய் கறி நெருக்கிவந்தாள். பார்க்க எனக்கு சகிக்கவில்லை. பின் திரும்பிப் பார்த்தேன். ரேழித் திண்ணையில் மூன்று நான்கு ஸ்திரீகள் கூடிப்பேசிக் கொண்டிருந்தனர். அந்த பேச்சை நடுவில் நான் கேட்டும் எனக்கு அது புராணத்தைவிட ஸ்வாரஸ்யமாகவே இருந்தது. மெதுவாய் நகர்ந்து பூரா வார்த்தையும் என் காதில் விழும்படியான இடத்தில் கம்பத்தில் சாய்ந்து புராணத்தைக் கேட்பதுபோல் காட்டிக் கொண்டு உட்கார்ந்தேன்.

தாரா: ....அதுதானு வாசலில் கும்பல், அவர் எந்த மடம் ஸ்வாமி,

துளசி: அவர் குண்டூர் சிருங்கேரி மடம் ஸ்வாமியாம். நம்ம மத்வாசாரியாரையும் உத்திராதி மடம் ஸ்வாமிகளையும் வெய்ததுதான் வயிற்றெரிச்சலாயிருக்கிறது. அச்சுபோட்டு புஸ்தகங்களை ஊர் ஊருக்கு அனுப்பியிருக்கிறார்.

தாரா: வெய்யவேண்டும் எதற்கு. நம்ம ஸ்வாமிகள் அத்வைதத்தை தூஷித்தால் அவர் த்வைதத்தை தூஷிக்கட்டுமே.

துளசி: அதுதானே இல்லை. அத்வைதிகள் த்வைதத்தை தூஷிக்க முடியாது. த்வைதமில்லாவிடில் அவர்களுக்கு பூஜை ஏது? புரஸ்காரம் ஏது? இப்பொழுது அவர்கள் நம்மைவிட அதிக சிரத்தையாய் பணம் காசு செலவழித்து தர்மங்களைச் செய்துவிட்டு, பிறகு அவர்கள் இதெல்லாம் பொய், புண்யம் இல்லை பரலோகம் இல்லை என்று சொல்லி பாழாய்ப்போகிறார்கள். இப்படி நீங்கள் அத்வைதத்தை எண்ணி கெட்டுப் போகாதீர்கள், அத்வைதம் வேதத்தில் சொல்லப்படவில்லை, அத்வைத ஸ்வப்பனம் தான் காண்கிறீர்கள். அத்வைதத்தை அடைந்தவர் யாருமில்லை என்கிறார். இதைகேட்டுவிட்டு அந்த முழு மூடர்கள் அத்வைதத்தை நம்ம ஸ்வாமிகள் தூஷிப்பதாய் எண்ணி தாறு மாறாய் வெய்கிறார்கள். சந்திரனை பார்த்து நாய் குலைக்கிறது அதனால் சந்திரனுக்கு என்ன குறை. பக்ஷபாதமில்லாத வித்வான்கள் சுவாமிகள் சொல்லுவது சரி என்றே ஒப்புக்கொள்கிறார்கள்.

தாரா: நமக்கென்றால் ஒன்று பிறருக்கென்றால் ஒன்று என்று நாம் பேசக்கூடாது. அத்வைதிகளின் குருவான சங்கராசாரியாரை கம்மண்டாட்டியின் பிள்ளை என்று நாம் சொல்லுகிறோம். அத்வைதிகள் எமது குரு மத்வாசாரியாரை கம்மண்டாட்டியின் பிள்ளை என்கிறார்கள். அவிசாரியை அவிசாரி என்றால் பத்னிக்கு பத்து அகமுடையான் என்று அவிசாரி சண்டையையேதான் இந்த குண்டூர் சிருங்கேரி ஸ்வாமி ஆரம்பித்திருக்கிறார்.

ஸோனு: தாரா! அப்படி நம்மவர்களின் பேரில் பழி போடாதே. அத்வைதிகளே சங்கராசாரியாரை குருவாகக் கொண்டவர்களே அவர் விதவை மகன் என்று ஒப்புக்கொள்கிறார்கள். அவருடைய சாக்ஷாத் சிஷ்யர் ஆனந்தகிரி என்பவரே தன் சங்கரவிஜயத்தில் அவ்வாறு ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறார். புருஷோத்தமபாரதி என்னும் அத்வைதியும் அவர் எழுதிய சங்கரவிஜயத்தில் ஓர் கம்மண்டாட்டிதான் சங்கரரை பெற்று வளர்த்தாள் என்றும் அந்தகாலத்திலேயே அவருடைய அங்கம் பக்கத்தார்கள் நிக்கரித்தார்கள் என்றும் விவரித்து கூறியிருக்கிறார். அத்வைதியான மாதவாசாரியார் எழுதியிருக்கும் பிரசித்தமான சங்கர விஜயத்திலும் சங்கராசாரியார் வியசாரி என்று அவருடைய பந்துக்கள் ப்ரேதத்தை கொளுத்த நெருப்புக்கூட கொடுக்காமல் சங்கராசாரியாரை தன்னந்தனியே தவிக்க விட்டார்களென்றும் அவர் ஒருவரே அவளை தூக்கிக்கொண்டு போய் தன் கொல்லையிலேயேவைத்து கொளுத்தினுரென்றும் சொல்லியிருக்கிறார். சங்கராசாரியாரே எழுதிய கேரளோற்பத்தியில் அவருடையதாய் வியபசாரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. வில்ஸன் துரை வீரேசலிங்கம் பந்தலு முதலிய அநேக பொது ஜனங்களும், சங்கராசாரியாரின் தாய் வியபசாரி, தந்தை போன பிறகு நாள் கழித்துதான் இவர் பிறந்தவர் என்றும் சொல்லுகிறார்கள். ஆதலால் இந்த பேச்சு ரொம்ப பிரசித்தம்.

தாரா, என்ன ஸோனு! இவ்வளவு எல்லாம் உனக்கு எப்படி தெரிந்தது.

ஜானகி: . எட்டுகிளாஸ் படித்திருக்கிறாள் அல்லவா? நன்றாய் எழுதப்படிக்கத் தெரிகிறது. வீட்டில் பாரோன். அவன் ஏதாவது புஸ்தகங்களை எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

ஸோனு: இவ்வளவு பெரிய கிரந்தங்களை எல்லாம் நான் சுலபமாகவா படித்திருக்கிறேன். எனக்கு ஏது அவ்வளவு யோக்யத்தை. கும்பகோணத்தில் நம்ம மாத்வர் ஒரு ஆசாரியார் மாத்வமித்திரன் என்று பௌர்ணமி தோறும் பேப்பர் போட்டு அனுப்பி வருகிறார். அதில் இது

எல்லாமே விபரமாய் வந்திருக்கிறது. அந்த பேப்பரை விடாமல் வாசித்து எனக்கு மணிமஞ்சரி, மத்வவிஜயம் தாத்பர்யநிர்ணயம், கிருஷ்ணாமிர்த மகார்ணவம் உபநிஷத்துகள் முதலான கிரந்தங்களில் உள்ளது எல்லாமே நன்றாய் தெரிகிறது. பெரிய பெரிய விஷயங்களை எல்லாம் எங்களைப் போலொத்த பொம்மனாட்டிகளுக்கும் புரியும்படி போடுகிறார்.

ஜானகி. ஆமாம். அப்படியேதான். எங்கள் வீட்டிலும் பேசுகிறார்கள். உபவாஸங்களெல்லாம் அவர் போடுகிறபடி தானே நாம் செய்கிறோம். அந்த பேப்பர் தானே.

ஸோனு: ஆமாம் அந்த பேப்பர்தான். அதிருக்கட்டும் துளசி! அந்த குண்டூர் சிருங்கேரி ஸ்வாமி இன்னமும் என்ன அவருடைய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறாராம்.

துளசி: அடாடா என்னென்னவோ எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். கேட்க கேட்க கர்ணகடூரமாய் இருக்கிறது.

ஸோனு: ஞாபகமிருப்பதைச்சொல்லேன்: நமக்காவது விஷயம் தெரியட்டும்.

துளசி: நம்ம ஸ்வாமிகள் நெருப்பில் முத்திரையைக் காய்ச்சி போடுகிறாரே, அது கூடாதாம். அப்படிபோட்டுக்கொண்டால் பிராம்மண்யம் போகிறதாம். சண்டாளர்களாகிறோமாம். சூத்ராதிகளுக்குத்தான் ஏற்றதாம். காசிக்குப் போகிறவர்வள் இனிமேல் கயாவில் சிராத்தம் செய்யக் கூடாதாம். அங்குள்ள பிராம்மணர்களான கயாவாளிகளெல்லாம் நம்ம ஸ்வாமிகளிடமிருந்து முத்திரையைப்பெற்று மாத்வர்களாய்ப் போனதால், அவர்களை உட்கார்த்தி வைத்து சிரார்த்தம் செய்யக்கூடாதாம். அவர்களில்லாமல் அங்கே சிரார்த்தமில்லை. ஆனதால் கயாக்ஷேத்திரமே பறச்சேரியாய் போய் விட்டதாம். அவர்கள் எல்லோரும் இருபது வருஷம் வரையில் விபூதி ருத்திராக்ஷம் தரித்துக்கொண்டு இவருடைய மடத்தின் சிஷ்யர்களாய் இருந்தாராம். இந்த உத்திராதி ஸ்வாமிகள் தான் அத்வைதம் அவைதிகம் பௌத்தமதமாக இருக்கிறது, நாஸ்திக மதமாய் இருக்கிறதென்று பலமாக போதித்து அவர்களை எல்லாம் மாத்வர்களாய் செய்து விட்டாராம். அதனால் அவர்களுக்கு இந்த சாமி பஹிஷ்காரம் போட்டிருக்கிறாராம். அவர்களுக்கு.......................

உடனே பேச்சு நின்றது. அவள் தடபுடலாய் எழுந்து உட்புரம் ஓடி எல்லோருடன் உட்கார்ந்தாள். நான் என் பேச்சை நிறுத்தி ஓடினாள் என்று கவனிக்கும்பொழுது அவளுடைய மாமியார் பச்சைப்பசேலென்று முகத்தில் மஞ்சளைப்பூசி, நெற்றிநிறைய நீண்ட குங்குமமிட்டு, வெள்ளிக் கம்பிகள் போன்ற தலைமயிர்களை சொருசாய் வாரி வகித்து பின்ன

விட்டு சின்னம் சிறுக சுற்றுக் கட்டிப்போட்டு, வாளி நத்து குருடு கொட்டை கொப்பு முதலிய கர்நாடக நகைகளை ஒன்று விடாமல் அணிந்து, ரவிக்கைப் போட்டுக் கொண்டு மஞ்சள் மூகிப்புடவை உடுத்து மகாலட்சுமியைப்பேரில் ஓர் ஸுமங்கலிப்பாட்டி விடுவிடுவென்று வருவதைக்கண்டேன். ரேழித் திண்ணையை உற்று நோக்கி, ஸோனு: நல்ல புத்திசாலியான நீயும் என்ன புராணம் கேட்கும் போது பேசத் தொடங்கிவிட்டாய் என்று கேட்டாள்.

ஸோனு: இன்று காலையில் ஊரில் நடந்தது எனக்குக் கொஞ்சம் கூட தெரியவில்லை. இப்போது உங்கள் துளசியைக் கேட்டேன். கதை கதையாகச் சொல்லுகிறாள்.

ஆஜிபாய். இன்று என்ன நடந்தது. எனக்குத் தெரியாதே.

ஸோனு: யாரோ குண்டூர் சிருங்கேரி மடம் ஸ்வாமிகளாம். ஏதோ அச்சுப்போட்ட புஸ்தகங்களை அனுப்பியிருக்கிறாராம்.

ஆஜிபாய். அவன் எந்த மடம் ஸ்வாமியுமல்ல அவன் ஓர் மடஸ்வாமிதான் அவன் ஒரு பெரிய புளுகன், வஞ்சகன். தான் சிருங்கேரி மடம் ஸ்வாமி என்று சொல்லிக்கொள்கிறான். சிருங்கேரி மடத்துக்குப் போனால் அங்குள்ளவர்கள் கையில் தூக்கிக்கொள்வார்கள்...............

ஸோனு; ஓர் யதியைப்பார்த்து, பெரியவாள் நீங்கள், இப்படி சொல்லாதேயுங்கள், மகா தோஷம்.

ஆஜிபாய். அய்யய்யோ! உனக்கு உண்மை தெரியாது. அதனால் நீ பயப்படுகிறாய். அவன். ஓர் நாடோடி அவன் சும்மா படாடோபம் செய்கிறான். தானாக ஒரு கூட்ஸ் நிறைய பட்டப் பெயர் போட்டுக்கொண்டு தானும் ரயில் ஏறி சுற்றுகிறான். பேசுகிறதெல்லாம் பொய். செய்கிறதெல்லாம் அகாரியம். சட்டைபோட்டுக்கொள்கிறான். வெத்தலைபோட்டு கொள்கிறான். வாயில்வந்தபடி எல்லாம் பேசுகிறான். எங்குபோனாலும் அவனுக்கு மட்டையடி உற்சவம் தான். சிருங்கேரிஸ்வாமியைத் திட்டுகிறான். கும்பகோணம் சங்கராச்சாரியாரை வேஷதாரி போக்கிரி என்று திட்டுகிறான். கயவாளிகளைத்திட்டுகிறான். போதாக்குறைக்கு நம்மஸ்வாமிகளைத்திட்டுகிறான்.

ஸோனு: பாட்டி தேவலை, இதெல்லாம் உமக்கு எப்படித் தெரியும் கண்ணால் பார்த்ததுபோல் சொல்கிறீரே!

ஆஜிபாய்; நான் என் அக்காள் பேத்தி நாத்தனார் பெண்ணின் கலியாணத்துக்காக குண்டூர் போயிருந்தேனே, அந்த ஊரில் அப்போது நடந்த அமளியை என்ன சொல்வேன். இவ்வளவு பயங்காளியா இந்த ஸ்வாமி என்று எல்லோரும் காரி துப்பினார்கள். யோக்யதை இல்லா

திருந்தால் பேச்சு எதற்கு என்று அத்வைதிகளே பேசிக் கொண்டார்கள்

ஸோனு: குண்டூரிலேயே இந்த ஸ்வாமி தடபுடல் செய்தாரா என்ன?

ஆஜிபாய்: அதென்ன கேட்கிறாய் வெட்கக்கேட்டை, ஏதோ நம்ம ஸ்வாமிகள் ஸீவில் ரூட் என்று எழுதினதற்காக, தான் வாதம் செய்யத் தயாரென்று நம்மஸ்வாமிகளுக்கு ஜம்பமாக நோட்டீஸ் அனுப்பி, அவர் வரத்தயார் என்று அறிவித்தவுடன் அவருக்கு பதில் எழுதாமலேயே குண்டூரில் தன் வீட்டில் 20 நாள் தினந்தோறும் விடாமல் உபன்யாசம் செய்தார். குண்டூர் மாத்வர்கள் உடனே சிஞ்சோளி கிருஷ்ணாச்சாரியார் காசி கிருஷ்ணாச்சாரியார் மார்காபுரம் ஸ்ரீனிவாசாரியார், இவர்களைக்கூட்டி, அந்த ஸ்வாமிகள் நடத்தும் உபன்யாஸங்கள் பொது இடத்தில் நடக்கட்டும் என்றும் அவர் செய்யும் கண்டனத்தை கண்டாயு கிறோமென்றும் எவ்வளவு எழுதியனுப்பியும் நம்மவர்களுக்கு இடம் கொடுக்காமல் உபன்யாசம் நடந்தது. நம்மவர்கள் பெரிய கூட்டம் கூடி குண்டூர் கொத்தப்பேட்டையில் அவ்வளவு நாட்களும் தினம் சபை செய்து இந்தஸ்வாமி சொன்னதற்கெல்லாம் சரியான பதில் கொடுத்து இந்த ஸ்வாமி அடி முட்டாளென்பதையும் முழுவஞ்சகனென்பதையும் சின்னபையன்களுக்குகூட தெரியும்படி உபன்யாசம் செய்தார்கள் 4 மாதம் கழித்து பேத்தி பிரஸவத்திற்காக பல்லாரிக்கு போயிருந்தேன். நம்மஸ்வாமிகளும் அப்பொழுது அங்கே வந்தார். அவ்வூரிலும் இந்த ஸ்வாமி கலாடா செய்தார். அவ்வூரில் புரூஸ்பேட்டையில் பிள்ளையார் கோவிலில் இவர் தாறுமாறாய் பிரசங்கம் செய்யும் பொழுது நம்மஸ்வாமிகளின் சிஷ்யர் அங்குபோய் ஆக்ஷேபிக்க, கிருஸ்தாசிரமியுடன் பேசமாட்டேன் ஸன்யாசியுடன்தான் பேசுவேன் என்று இந்தவஞ்சகன் பதில் சொல்லிவிட்டு மெதுவாய் எழுந்துபோய், மறுநாள் பந்தோபஸ்துடன் உபன்யாசம் செய்து நம்மஸ்வாமிகள் அங்கிருக்கும்போதே ஊரைவிட்டு ஓடி விட்டான். பிறகு ஆதவானியிலும் இப்படியே அவ்வூர் அத்வைதிகள் இந்தஸ்வாமி வாதமாடுவதாய் சொல்லுகிறாரே அவரை அங்குவந்த உத்தராதி ஸ்வாமிகளுடன் வாதாடசெய்வோம் என்று ஆசை வைத்து ரயில் சிலவு கொடுத்து வரவழைத்தும் இவர் நம்மஸ்வாமிகளுடன் வாதாடவராமல் தன்னை சரியானபடி நம்மஸ்வாமிகள் வாதத்திற்கு அழைக்கவில்லை என்று சாக்குசொல்லி ஒன்றிரண்டு உபன்யாசங்களை அத்வைதிகளின் நடுவில் செய்து அவர்களை ஏமாறச்செய்து ஊரைவிட்டு ஓடிவிட்டார் என்று கேள்வி. அதுதான் நான்சொன்னேனே இவன் வெறும் ஆசாமி ஸ்வாமி என்று வேஷம் போட்டு எல்லோரையுமே

வஞ்சிக்கிறான். ஏதேஷ்டமாய் சாப்பிடுகிறான். இந்த மூழுமூடன் பேச்சு எதற்கு? புராணம் கேட்டாலும் புண்யம் உண்டு.

சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லி வேதாந்தம் பேசிவிட்டு உள்ளேவந்து எல்லோர் நடுவில் அந்த பாட்டி உட்கார்ந்தாள். மறுநிமிஷமே புராணம் முடித்து ஆசாரியார் மணி அடித்து மங்களாரத்தி செய்தார் எல்லோரும் இந்த பாட்டியைக்கண்டு சிரித்தனர். புராணம் கேட்டாய்விட்டதா என்று பரிகசித்தனர். நான் ஒருநாளும் பேசமாட்டேன். இன்று நானும் புராண காலத்தில் வம்பு அளந்துவிட்டேன், என்று சொல்லி பச்சாதாபப்பட்டாள். எனக்கோ கொஞ்சமேனும் வருத்தமேற்படவில்லை. லோக விருத்தாந்தம் எவ்வளவு தெரிந்தது என்று சந்தோஷப்பட்டேன். அந்த குண்டூர் ஸ்வாமி கிளப்பிய ஆக்ஷேபணைகளுக்கு நம்ம மதத்தில் என்ன சமாதானம் சொல்லப்படுகிறதென்று அறிய ஆவல் கொண்டேன். புராணிக ஆசாரியார் எனக்கு உபசாரம் சொல்ல, நான் அவரை ஸ்தோத்திரம் செய்து விட்டு, எனக்கு ஒரு சந்தேகமிருக்கிறது. அதை கேட்கலாமாவென்று புராணிகரைக்கேட்டேன்.

(தொடரும்)

ஸ்திரீ வித்யை.

ஸ்ரீவாதி ராஜஸ்வாமிகள் இயற்றிய லகுவாயுஸ்துதி (கன்னடத்தில்)

ஸ்ரீமத் விஷ்ணுவாக்ஞயிந்த ஜனிசிபவனு, கேஸரீ க்ஷேத்ரதல்லி, கஞ்ஜாக்ஷி ஸீதேகரகி, வவண ஜலதியம், லங்கிசிலங்கேயல்லி ll இத்தங் ராவணன்னு, ரகுபனகரதி, நிக்கிசி பூமியிந்தா கூடித்தாராகவன்னு, பஜசி மொரதீ, கிம்புர்ஷா கண்டதல்லி ll 1 ll ஆவாயூ, பீமனுகி ஸூரவர பலதி, கோவிதாமாத்யரன்னு, கிம்மீரம் கீசகன்னு, பகமுககலரன், துஷ்ட துர்யோதனன்னு ll கொந்தூ, ராஜாச்வமேத, ப்ரமுகமககளம், மாடி கிருஷ்ணர் பணேந்து, ராஜாதி ராஜனுகி, ஸூஜனரபதியூ, மோதுராஜபந்து ll 2 ll ப்ராக் ஜன்மத்வேஷதிந்த, கலியலி மணிமான், ஸங்கராசார்யநாகி, ப்ரம்மாஹம், நிர்குணோஹம், விததவசனதிம், யல்லரம் கெட்ஸலாகி l அஞ்ஞானக்யம் ததிந்த, ஸூஜனரமதியு,ம்லானவம் போதில்லு, ஸ்ரீசாக்ஞா வாக்யதிந்த குருகுலபதியு ஆதனு மத்வஸூர்ய: ll 3 ll ஸர்வக்ஞ, ஸ்ரீசனவே, விதியவமுகரு, ஸ்ரீஹரீ தாஸரேவே, ஸத்யேவே ஸர்வ ஜகத்து, ஜனவுத்ரிவிதவு. நித்யபஞ்சப்ரபேதா l ஈசாதீனவே ஸர்வ,

ச்ருதிஸிதனுகுணு, அந்த தேவேப்ரமாணு, ஶ்ரீ கெந்து மத்வஸூர்யா திளிஸிஸூஜனகே ஆதனு திவ்யமோதா|| 4 || கேவேளந்து மாயிவாதீ, ஸகல ஸூரமுனு, மந்திகள் யக்ஞநல்லா, ஜிக்ஞாஸ்யப்ரம்ம நாராயண ஸகல ஜகந் பர்மிதியன்னு பல்லா| நீநர்யோ நின்ன நாரீஹகனு இாளலீ, ஜாரவாமாடவோது ப்ரம்மாஹம் நிற்குணெம்போ விததவசனவு, ஶ்ரீயா ங்க நீ ஆடவோது|| 5 || மாயாவாதிகே, மானஹீன ஜனகே, சுத்தி இல்லாத நாயிகே, மர்யிஸங்கரகே, ஸமீரகதா பெட்டிர்தலே முக்தியு|| நித்ய அந்தம்தம அம்ஹுதியந்து திளது, அக்ஞானவம் வர்ஜிஸி, கோபீ சந்தனவனு, தேகதலி, ஹச்சஸபேகு ||

இதி ஸ்ரீவாதிராஜ ஸ்வாமி விரசித
லகுவாயுஸ்துதி ஸம்பூர்ணு |
ஸ்ரீகிருஷ்ணுப்பணமஸ்து.

குறிப்பு: இவ்வாறு கன்னடத்தில் இயற்றப்பட்டுள்ளதாய் ப்ராசீன காலம் தொடங்கி மாத்வ ஸ்திரீகளின் உலகில் ஆஸ்ஹிக அநுஷ்டானங்களாய் நிலை பெற்றிருக்கும் ஸ்நானஸ்தோத்திரம், ஆசமனஸ்தோத்திரம் கதாநாராயண முத்ரா ஸ்தோத்திரம், வாயுஸ்துதி, பஞ்சபேத தாரதம்யம் ஸம்க்ஷேப ராமாயணம் பாரதம் பாகவதம், முதலான ஆஸ்ஹிக ஸ்தோத்திரங்களும், ஆஸன மந்திரம் சுத்திமந்திரம் குருமந்திரம் ராமமந்த்ரம் கிருஷ்ணமந்தரம் முதலான ஸ்திரீ ஜபமந்திரங்களும் அவைகளின் தெளிவான தமிழ் அர்த்தங்களும் இக்காலத்தில் பெரும்பாலும் எழுதப் படிக்கத் தெரிந்து புத்திசாலிகளாய் விளங்கும் மாத்வ ஸ்திரீகளின் இகபர நன்மைக்காக, எமது மாத்வமித்திரன் சந்தாதாரரான ஓர் மாது சிரோமணியின் மேலான அபிப்பிராயத்தின் படி, தமிழில் தனிப்புத்தகமாக பிரசுரிக்கவும் வெகு ஸ்வல்பவிலை (பிரதி 1க்கு அணு 2 தபாற் கூலி அணு 1)க்கு கொடுக்கவும் முற்பட்டிருக்கிறோமென்பதை அறிவிக்க சந்தோஷிக்கிறோம். [ப-ர்]

விசேஷ தினங்கள்.

26—2—38	சனிவாரம்	ஏகாதசி உப.
27—2—38	பானுவாரம்	த்வாதசி, ஸாதனி மணி 7-40க்குள் பாரணே.
28—2—38	சோமவாரம்	சிரவண உப. இல்லை. விஷ்ணுப. உப. இல்லை. மகா சிவராத்திரி.
1—3—38	மங்களவாரம்	அமாவாசை தில தர்ப்பணம்
2—3—38	புதவாரம்	விஷ்ணுப உப.
12—3—38	சனிவாரம்	ஏகாதசி உப.
15—3—38	மங்களவாரம்	போளிப்பண்டிகை. மன்மத தகனம்
16—3—38	புதவாரம்	பௌர்ணமி. விஷ்ணுப. உப

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப் கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் செலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறாதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணு 0—8—0 தபாற் கூலி அணு 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணு 2 தபாற்கூலி 0—0—6.

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 0—5—0 தபாற்கூலி அணு ஒன்று.

வைதமத விளக்கம்—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் [illegible] ஆசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணு 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணு 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணு 6. தபாற்கூலி அணு 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் [illegible] ஆசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்ட்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0. ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்தை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மேனேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

டி. எஸ். ஆர்.

அண்டு

கம்பெனி,

கும்பகோணம்.

ஸ்தாபிதம்
1909

தந்தி விலாசம்
"கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு
வாஸனைச்சுண்ணம்பு
வாஸனைப் புல்கையிலை
ஸ்னானப்பவுடர்
கேஸரி பவுடர்
அம்பர், அரக்ஜா
தசாங்கம்

பலகாய்கரி ஊர்காய்கள்
ரோஜாப்பூ குல்கந்து
ஷர்பத் தினுசுகள்
கொப்பரைச்சீவல்
கோகுல் கூந்தல் [தைலம்
பற்பொடி
ஊதுவத்திகள்

சந்தனாதித்தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakonam.



மாத்வமித்திரன்.

THE MADHWA MITRAN.

EDITOR:
Adyam Bhagavatha Ranganathachariar,
KUMBAKONAM.

பௌர்ணமிதோறும் வெளிவரும்.

Vol. 10	ஈசுவர ஸம்வத்ஸரம்.	No. 8
புஸ்தகம் 10	பால்குண மாஸம். (16-3-1938) புதவாரம்.	நெ. 8

நெ.	பொருளடக்கம்.	பக்கம்.
1.	சங்கிரஹராமாயணம் (ஸ்ரீநாராயண பண்டிதாசாரியார்)	225
2.	ஜீவப்ராம்ப அபேக்ஷமும் அப்ராமாணிகமே	231
3.	குண்டூர் மாத்தாசாரியஸ்வாமியின் 21வது ஸ்ரீமுகத்திற்கு பதில்	239
4.	மாத்வமித்திரன் ஷீட் காலண்டர்	254
5.	செய்தித்திரட்டு	254
6.	விசேஷதினங்கள்	256

ஆசிரியர்:—ஆத்யம் பாகவத ரங்கநாதாசாரியார், கும்பகோணம்.

மாத்வமித்திரன்.

மாத்வர்களின் சாஸ்தியமான தமிழ் பத்திரிகை இது ஒன்றே ஸ்ரீமத்வமதத்தின் அரிய இரகசியங்கள் ஸம்பிரதாயங்கள் மாகாத்மியங்கள் புராணசரிதைகள் மாத்வவகுப்பு புண்ய புருஷர்களின் சரித்திரங்கள் வேதாந்த சர்ச்சைகள் தர்மசாஸ்திர விசாரங்கள் தினசரி விரதாதி குறிப்பு:— மகாபாத தாத்பர்ய நிர்ணயம் முதலான அநேக கிரந்தங்களின் மொழிபெயர்ப்புகள் முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் நிறைந்திருக்கின்றன ஸ்ரீமத்வமதத்தை சுலபமாய் அறிந்துகொள்ள இப்பத்திரிகைக்கே உடனே சந்தாதாரராய்ச் சேருங்கள் இது பிரதி பௌர்ணமியிலும் கும்பகோணத்திலிருந்து வெளியாகிறது இதற்கு வருடசந்தா முன்பணமாய் ரூபாய் மூன்று. பிரதி சிராவணமாதமும் இப்பத்திரிகைக்கு வருடஆரம்பமாகும் எந்த மாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அந்த வருஷத்திய பிந்திய சஞ்சிகைகள் அனுப்பப்படும் பழைய வாலியங்கள் விலைக்குக் கிடைக்கும் பத்திரிகை சரியானபடி கிடைக்காவிட்டால் பௌணமி கழிந்தஒருவாரத்துக்குள் நமக்கு அறிவிக்கவேண்டியதுடன் அந்தந்த தபாலாபீசுக்கும் அறிவித்துவிடவேண்டும் பதிலறிய விரும்புகிறவர்கள் ஸ்டாம்பை அனுப்பவேண்டும். ஒவ்வொரு கடிதத்திலும் தெளிவாய் பூரா மேல் விலாசமும் எழுதி அனுப்பவேண்டும்.

மானேஜர் மாத்வமித்திரன்,

ஸ்ரீ வியாஸ விலாஸம், கும்பகோணம்.

மாத்வமித்திரன் பழைய வாலியங்கள் வெகு சொற்பம் தானிருக்கின்றன. உடனே அவைகளைப்பெற முந்துங்கள்.

மாத்வமித்திரன்

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत् , तत्वतः भेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिः नैजसुखानुभूतिः, अमला भक्तिश्च तत्साधनं.
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 } ஈசுவர ஸம்வத்ஸரம். பால்குண மாஸம். { NO. 8

OFFICE OF ... 17 MAR 19

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸங்கிரஹ ராமாயணம்

பால காண்டம்.

2-வது சர்க்கம்.

அசுவமேதம்

(200ம் பக்கம் தொடர்ச்சி)

ஸுயக்ஞர், வாமதேவர், ஜாபாலி, காச்யபர், வசிஷ்டர் இந்த ஐந்து மகரிஷிகளும் பஞ்சாக்னியைப்போல் அந்த தசரதனின் சபையில் பிரகாசித்தனர். சிஷ்ய ப்ரசிஷ்யாதி பரிவார ஜனங்களுடன் கூடிய மகா க்ஞானிகளான அவ்வைவர்களின் அனுமதியின் பேரில், தசரதன் அசுவமேத யக்ஞத்திற்கு அவசியமான சாமக்கிரியைகளை சேகரித்தார். ஒருசமயம் அரசன்முகம் தெளிந்து பிள்ளையை விரும்பிக்கொண்டிருந்ததை இரகசியத்தில் கண்டு, அவரை நமஸ்கரித்து மந்த்ராலோசனையின் தத்வத்தை நன்கு அறிந்த சுமந்திரர் இவ்வாறு பேசினார். ராஜச்ரேஷ்டனே! நான் சொல்லப்போவதை கவனமாய்க்கேளும். இது த்ரிகால ஞானியான ஸநத்குமாரரால் ரிஷிகளின் நடுவில் சொல்லப்பட்டது. கச்யபரின் பிள்ளை க்ரூரமான தபமுடையவர் விபண்டகர் என்று

இருக்கிறார். அரணியிலிருந்து அக்னியைப்போல் இவரிடமிருந்து ரிஷ்யசிருங்கரென்பவர் பிறக்கப்போகிறார். பிராம்மண விருத்தியுடனிருப்பவரும் பிரம்மசரிய விரதம் பூண்டவருமான அந்த ரிஷ்யசிருங்கரை அங்கராஜனான லோமபாதன் தன் நாட்டிற்கு அழைத்துப்போகப் போகிறான். அவர் நாட்டின் வேசி ஸ்திரீகள் ரிஷி வேஷத்துடன் அவரை வஞ்சித்து எப்போது ஊருக்கு அழைத்துவருவார்களோ அப்போது அவருடைய நாட்டில் மழை பெய்யப்போகிறது. பன்னிரண்டு வருஷ காலம் மழை பெய்யாதிருந்து வருந்திக்கொண்டிருந்த அந்த லோமபாதன் மழையை பெற்றவுடன் அதற்கு கைம்மாறாக தன் பெண்ணான சாந்தா என்பவளை அவருக்கு விவாஹம் செய்துகொடுத்தான். இப்பேர்ப்பட்ட ரிஷ்யசிருங்கரை தசரதன் என்ற அரசன், அழைத்துப்போய் யாகம் செய்ய ஸ்ரீநாராயணன் அவருக்கு மகனாய் ஸ்ரீ ராமரென்று அவதரிக்கப்போகிறார். மனோஹரனாயுள்ள அந்த ராமசந்திரனின் கீர்த்திசந்திரன் உலகத்தாரின் அக்ஞானாந்தகாரத்தைப் போக்கி அவர்களை ஆனந்தப்படுத்தப்போகிறது. என்றிவ்வாறு ஸநத்குமாரர் சொன்ன தேவரகசியத்தை நான் கேட்டேன். ஆதலால் லோமபாதனின் அரண்மனையிலிருந்து அங்குவசித்துவரும் ரிஷ்யசிருங்கரை அழைத்துவாரும்.

என்றிவ்வாறு சுமந்திரர் சொன்னதைக்கேட்டு, கோஸலாதிபதியான தசரதன் வசிஷ்டரின் அனுமதியைப்பெற்று, அங்க தேசத்திற்குசுயம்போய் முனிவர்யானரிஷ்யசிருங்கரை அழைத்து வந்தார். பூமியை ப்ரதக்ஷிணம் செய்வித்து அசுவம் கொண்டு வரப்பட்டபின், தசரதன் ஸரயூ நதியின் வடகரையில் அசுவமேதம் செய்ய யக்ஞ தீக்ஷை அடைந்தான். குபேரனின் ஐசுவரியம் கொண்ட தசரத சக்ரவர்த்தியால் அழைக்கப்பெற்ற அரசர்கள் ஏராளமான சீர்களை எடுத்துக்கொண்டு வைசியர்களைப்போல் வந்து குவிந்தனர். அரசன் செய்யும் அந்த யக்ஞத்தின் மகோற்சவத்தைப்பார்க்க இச்சைகொண்டு அவருடைய பராக்கிரமத்தை சிலாகிப்பவர்களாய் எல்லா ஜனங்களும் அந்த யக்ஞ சாலைக்கு வந்தனர். உட்காருங்கள் சாப்பிடுங்கள் மேன்மேல் பானம் செய்யுங்கள் போர்த்துக்கொள்ளுங்கள், இம்மாதிரிதான் அந்த யக்

ஞத்தில் சப்தம் கேட்டுக்கொண்டிருந்ததேயன்றி தரவேண்டாம் என்ற சப்தமே எப்பொழுதும் கேட்கவில்லை. வைதிக கார்யங்களைச் செய்வதில் மகா பண்டிதர்களான ரிஷ்யசிருங்கரும் வசிஷ்டரும், நற்குண நற்செய்கைகள் உள்ள ரித்விக் பிராமணர்களைக் கொண்டு, அசுவமேதத்தை ப்ராரம்பித்தனர். மந்திரங்களிலும் தந்திரங்களிலும் உபகரணங்களிலும் கர்த்தாக்களிலும் அக்னிகளிலும் அந்தந்த காலங்களில் அந்தந்த இடங்களில் ஸ்ரீ ஹரி ஸ்மரணை பூர்வமாய் காரியங்களைச் செய்ததால், எவ்வகை தோஷம் ற்பட்டிருப்பினும் அது நீங்கி அது பரம சுத்தமாய் ஏற்பட்டது. லவகை இஷ்டிகளாலும் ப்ரவர்க்ய ஆஹுதிக்களாலும் மூன்று கா ங்களில் செய்யப்படும் மூவகை ஸவனங்களாலும் பல்வகை பசுக்க ராலும் வாயு பகவான் முதலான ப்ரதான தேவர்கள் முதற் கொண்டு ஸமஸ்த தேவர்களும் சந்தோஷமடைந்தனர். யக் ஞத்தைச் செய்பவர் தார்மிகரான தசரத சக்கரவர்த்தியும் யக் ஞத்தை நடத்துகிறவர் பிரம்மபுத்திரரான வசிஷ்டரும் அதன் பலன் ஸ்ரீ ராமாவதாரமுமாயிருக்கிறதென்றால், அந்த அசுவமே தத்தின் சிறப்பை யார்தான் வர்ணிக்கமுடியும்? சக்கரவர்த்தியான தசரதன் அந்த யக்ஞத்தை நடத்திவைத்து ரித்விக்குகளுக்கு ஒவ்வொரு திக்குகளிலுள்ள நாடுகளையே தானம் செய்ய அவர்கள் தமக்கு வேண்டாமென்று தசரதனுக்கே திருப்பிக்கொடுத்து விட்டனர். பிறகு அர்புதக் கணக்காய் தங்கங்களையும் லக்ஷக் கணக்காய் பசுக்களையும் தானம் செய்தார். தங்கங்களைவிட நாலு மடங்கு அதிகமாய் வெள்ளியைக் கொடுத்து இதனால் மகாவிஷ்ணு சந்தோஷமடையட்டும் என்று பிராம்மணர்களுக்கு சாஷ்டாங்க நமஸ்கரித்தான். அநேக கோடிக்கணக்கான தங்க மகோராக்களை வர்ஷிக்கும் அந்த தசரதன் என்ற மேகத்தால் ஸமஸ்த ஜனங்களும் திருப்தி செய்யப்பட்டவர்களாய் நிறைந்த கடல் போலாயினர். ஒரு தரித்திர ப்ராம்மணன், தசரதன் தரித்திருந்த பாஹுவளையல்களைக் கொடுக்க வேண்ட, அரசன் சிரித்துக்கொண்டே அதை கழற்றி அவ்வந்தணருக்குக் கொடுக்க இதைப் பார்த்திருந்த ஜனத்திரள் அரசனுடைய பிராம்மண விசுவாசத்தைப் போற்றியது. அசுவமேதாக்னியால் பாபம் பஸ்மமாகிப்போன கொடை

யாளியான அந்த தசரதன் பத்னிமார்களுடன் நமஸ்கரிக்கவும் அந்த ரித்விக்குகள் ஆசிர்வாதம் செய்தனர்.

புத்ரகாமேஷ்டி

அந்த கர்மா முடிவு பெறுவதற்காக அதர்வண வேதத்திலுள்ள திவ்ய மந்திரங்களால் அரசனுக்கு புத்ரனைத் தருவதான புத்ரகாமேஷ்டியை ரிஷ்ய சிருங்கர் செய்வித்தார். அப்பொழுது அந்த இஷ்டியில் தந்த ஹவிர்பாகத்தைப் பெற நேரில் வந்த இந்திராதி தேவர்களைக் கண்டு அஞ்சலி பந்தம் செய்து கொண்டு இவ்வாறு பேசினார். புத்திசாலியாயுள்ள இந்த தசரதன் அசுவமேத யக்ஞத்தை உங்கள் உத்தேசமாய்ச் செய்து அதில் தான் கர்த்தாவாய் இருந்து மகனைப்பெற இச்சையுள்ளவனாய் உங்களை சரணமடைகிறான். நீங்கள் அவனிடம் சம்பூர்ணமாய் அனுக்ரஹம் செய்யவேண்டும். மூவுலகிலும் நற்பெயர் பெறும் அஸதிருசமான பிள்ளைகளைப் பெற விரும்புகிறான். தேவர்களின் மகத்தான காரியமும் இனி நடக்கவேண்டியிருப்பதாலும்; இக்காரியத்தை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டியதே. என்றிவ்வாறு தபஸ்வியான ரிஷ்யசிருங்கரால் அரசருக்காக பிரார்த்திக்கப்பட்ட அந்த தேவர்கள் அவ்வாறே ஆகக்கடவது என்று வரமளித்து விட்டு பிரம்ம லோகம் சென்றனர்.

தேவர்களின் பிரார்த்தனை

உலகத்திற்கு எல்லாம் பிதாவான சதுர் முகனை நமஸ்கரித்து அஞ்சலி கூப்பி ஸமஸ்த தேவர்களும் இவ்வாறு பேசினார்கள். நாதனே! ராக்ஷஸர்களால் ஹிம்சிக்கப்பட்டு அநாதர்களாயிருக்கும் பிரஜைகளைக் காப்பாற்றும். விச்ரவஸ்ரிஷியின் பிள்ளைகளான பராக்கிரமம் வாய்ந்த ராவணனும் கும்பகர்ணனும் வெகு காலம் களைப்பின்றி, தவம் செய்து, ஸமஸ்தப்ராணிகளாலும் எப்போதும் கொல்லப்படாதிருக்கும் தன்மையை, பிரம்மாவே! உம்மிடமிருந்து வரன் பெற்றிருக்கின்றனர். அவர்களில் இளையவன் கும்பகர்ணன் மூத்தவனான ராவணன் மகாக்ரூரன். உலகத்தை அழச் செய்பவன். பத்து முகங்கொண்டவன். அவன் விளையாட்டாய் பத்து திக்கிலுள்ள உலகங்களையும் ஜயித்தான். பீதியாகிய நெருப்பில் பொரிந்த ப்ராணிகளாகிய நெல்லை தன் இருபது கைகளாகிய

உலக்கைகளால் குத்தி அவலைத் தின்பது போல் தின்று விடுகிறான். தேவர்களையும் அஸுரர்களையும் பிராம்மணர்களையும் அரசர்களையும் மற்ற பிரஜைகளையும், மிருகங்களை சிம்ஹம் ஹிம்சிப்பது போல் கொல்கிறான். பிளக்கிறான். சுழற்றி அடிக்கிறான். உலகில் எங்கேயாவது ஓர் அதிகம் அழகுவாய்ந்த வஸ்துவைக் கண்டுவிட்டால் அது ஆஸ்தியாய் இருந்தாலும் சரி, உயிருக்கு ஆதாரமான வஸ்துவாய் இருந்தாலும் சரி அதை தன் லங்கைக்கு கொண்டுபோய் விடுவான். க்ரூரனான அந்த ராவணன் நகைகள் அணிந்த ஸ்திரீ ரத்னங்களைக் கண்டுவிட்டால் அனைவரும் பார்க்கும் போதே அபகரித்துச் செல்வான். குலஸ்திரீகளை இச்சிப்பது தனக்கு பெருமை என்று எண்ணுகிறான். தபஸ் அத்யயனம் செய்பவர்களுக்கு இடைஞ்சலை எப்போதும் தேவர்கள் ரிஷிகள் முதலியோர் விரோதத்தை விரும்பி இந்த துராசாரன் செய்து வருகிறான். ஆச்சரியப்படும்படியான பராக்கிரமுள்ள இந்த ராவணன் லோக பாலகர்களான மகேந்திரன் முதலான எங்களை கஜச்ரேஷ்டம் ஆடுகளை துரத்தடிப்பது போல் அடித்து விரட்டுகிறான். மரணமற்றிருக்கும் இந்த ராவணனைக் கொல்லும் வழியை தாங்கள் தேடாவிடில் ருத்திரன் காலன் அந்தகன் இவர்களின் எத்தனமில்லாமலே இந்த ராவணனால் உலகம் பூராவும் நாசமடையும்.

என்று தேவர்கள் சொன்னதைக்கேட்டு பிரம்மா சிரித்து இவ்வாறு பேசினார். எங்கள் யோக க்ஷேமத்தை அளிப்பவரான பகவான் எதைச் செய்ய என்னை பிரேரிபித்தாரோ அந்த ப்ரேரணையின்படி நான் அந்த ராவணனுக்கு அப்பேர்பட்ட வரன்களை அளித்தேன். மூக்கணாங்கயிர் கட்டிய மாடுகள் அடங்கி கிடப்பது போல் நாமெல்லோருமே யாருக்கு அடங்கி பூஜை செய்கிறோமோ, அந்த பகவான் சாரங்கபாணியான நாராயணன் அவசியம் மங்களத்தை அளிப்பார். என்றிவ்வாறு சொல்லி சதுர்முகன் பரமசிவனோடும் தேவக் கூட்டங்களோடும் க்ஷீரஸமுத்ரத்தின் கரைக்குசென்றார். முத்து மாலைகளைப்போல் ஒரே வெண்மையான அந்த க்ஷீர ஸமுத்ரத்தைக்கண்டு, இது பகவானின் கீர்த்தி ஸமுத்ரத்திற்கு ப்ரதி பிம்பம் என்றே தேவர்கள் கண்டார்கள். ரத்ன சமூகங்கள் விளங்குவதும் உயர்ந்த மதில்களைப்போன்ற அலைகள் பிரகாசி

பதமான அந்த க்ஷீர ஸமுத்ரம் பகவானுக்கு ஓர் ககரமாகவே இருப்பதாய்க் கண்டார்கள். அங்குள்ள அலைகள் குதூஹலத்துடன் கம்பீரமான சப்தத்துடன் வீசிவருவதை, பக்த வத்ஸலனான ஹரியின் பக்தன் ஒருவன் கம்பீரமான ஸ்தோத்திரம் செய்து கொண்டு மனதிற்குள் குதூஹலமடைந்து ஆடி அசைந்து மிக்க அதிகமாய் நர்த்தனம் செய்வது போல் இவர்களுக்கு தென்பட்டது. இப்பேர்ப்பட்டதான க்ஷீர ஸமுத்ரத்தின் கரையில் நின்று பிரம்மருத்திராதி தேவர்கள் ஆனந்த பரவசர்களாய் விஷ்ணுவை இவ்வாறு துதித்தனர். ஹே நாராயணா! ஆதிசேஷன் மீது படுத்திருப்பவனே. பலவகை விலாஸங்களை உடையவனே ஆதிஅந்தம் மத்யம் இல்லாதவனே! உமக்கு நமஸ்காரம் நமஸ்காரம். உலகத்திற்கெல்லாம் ஸ்ருஷ்டியோ, ஸம்ஹாரமோ, ஸம்ரக்ஷணையோ, ப்ரேரணையோ, க்ஞானமோ அக்ஞானமோ ஸம்ஸாரமோமோக்ஷமோ இந்த எட்டுவகை காரியங்களையும் தாம் ஒருவரே செய்பவர். உங்களிடம் கூட்டம் கூட்டமாயுள்ள கணக்கற்ற கல்யாண குணங்களை ஒவ்வொரு சமூகமாய்நாம் நிரந்தரம் சொல்லி வந்தாலும் அவைகளை சொல்ல மாளவில்லை என்றால் இதரர்களால் எப்படி ஆகப்போகிறது. ராவணனென்கிற நெருப்பு உலகை எல்லாம் கொளுத்தி விடுவதற்கு முன்பு, உலகத்திற்கெல்லாம் நாதனான தாம் தசரத சக்கரவர்த்தியின் மகனாய் பிறந்து தம்முடைய பராக்கிரமமாகிய கடல் வெள்ளத்தால் அந்த நெருப்பை அணையும். நாமே சரணம் என்று தம்மை சரணம் புகுந்த பக்தர்களுக்கு அந்த நெருப்பின் சூடு இல்லாமற் செய்யும். என்றிவ்வாறு ஸ்தோத்திரம் செய்யும் தேவர்களால் பிரார்த்திக்கப்பட்ட புராணமூர்த்தியான நாராயணன் உதய சூரிய கிரணம் போல் காந்தியுடையவராய் பீதாம்பரதாரியாய் அழகிய ஆபரணங்கள் அணிந்தவராய் கௌஸ்துபபூஷிதராய் மிகவும் மனோஹரராய் நேரில் வந்து கண்ணில் தென்பட்டார்.

இரண்டாவது சர்க்கம் முடிந்தது.

(தொடரும்)

ஜீவப்ரம்ம அபேதமும் அப்ராமாணிகமே.

சதுஷ் சாஸ்திர வித்வான்

ஓர் அத்வைத மகாபண்டிதரின் பகிரங்க அங்கீகாரம்.

தத்வமஸியிலேயும் தடுமாற்றம்.

பெல்காம் ஸம்ஸ்கிருத பத்திரிகை "மதுரவாணி"யின் 2-வது வால்யூம் 7ம் நம்பர் சஞ்சிகையில் அத்வைத மகா வித்வான் ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள் எழுதுவதாவது:—

எமது அத்வைத மதத்தில் நிர்குணப்ரம்மத்திற்கும் குதிரைக் குதிரைக் கொம்புக்கும் (முயற்கொம்புக்கும்) வித்யாஸமில்லை என்றும், கொம்பும் நிர்குணப்ரம்மமும் ஒரே பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிப்பவர்கள் என்றும், சென்ற இதழில் நான் விஸ்தாரமாய் நிரூபித்திருக்கிறேன். மாதம் ஒன்றாகியும் மதாபிமானம்கொண்ட அத்வைத வித்வான் ஒருவர் கூட, நான் சொல்லுகிறபடி அத்வைத பிரம்மம் குதிரைக் கொம்புக்கு ஜோடிதார் அல்ல என்று எடுத்துச்சொல்ல ஏனோ தன் மூளையை செலவழிக்கவில்லை. அவ்வாறு நிரூபிப்பது சிறிதும் சாத்யமில்லை என்ற உறுதியாலா அல்லது ஔதாசீன்யத்தாலா மௌனம் சாதிக்கின்றனர் என்று நான் அறியமுடியவில்லை. ஆயினும் நான் அத்துடன் நிற்காமல், வேறு விஷயத்திலும் இருந்துவரும் என் சந்தேகத்தை மீண்டும் இந்த இதழிலும் அறிவிக்க ஆவல் கொள்கிறேன். பிரமாணம் ஒன்றையே, கைப்பிடித்து அதைமட்டில் சரண் புகுந்திருக்கும் நான் கேட்கும் இந்த சந்தேகத்திற்கும் அத்வைதிகளிடமிருந்து சமாதானம் வாராவிடில், ஒழுங்காய் எண்ணுபவர்களின் மதவிசுவாசம் எவ்வளவு பலமாய் வேர் ஊன்றியிருப்பினும், அந்த மதவிசுவாசம் ஆடிப்போகுமாதலால், அத்வைத பண்டிதர்கள் கருணை கூர்ந்து என் சந்தேகத்திற்கு சரியான பதிலளிக்க வேணுமாய் அவர்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

எதனாலும் பாதிக்கப்படாத வேதத்தாலும் அனுபவத்தாலும் தனித் தனி என்று ஏற்பட்டிருக்கும் ஜீவப்ரம்மர்கள் அப்படி தனித்தனியல்ல, ஒன்று தான் என்று இவ்விருவர்களின் அபேதத்தை சாதிப்பதாக, தத்வமஸி முதலான ஒருசில வேதவாக்யங்களை மட்டில் வெகுமுக்கியமான பிரமாணங்கள் என்று, அத்வைதிகளான நம்மவர்கள் வெகு ஆழமுள்ள ஜலத்தில் முழுகிவரும் ஒருவன் சொரக்காய் என்று பிரமித்து, பெரிய பாறாங்கல்லை கைப்பற்றினது போல், கைபற்றியிருக்கின்றனர். தங்களை

களை எற்றிவைக்கும் என்று எண்ணி இவர்கள் கைக்கொண்ட இந்த சுருதி பெரும் கல்லைப் போலத்தான் இவர்களை சாக அடிக்கிறதென்று இந்த சுருதியின் அர்த்தத்தை பரிசீலனை செய்யும், தத்வத்தில் மட்டில் நோக்கமுள்ளவனுக்குநன்கு புலப்படும். தங்களுக்கு இந்த சுருதிகள்தான் கதிவேறு யாதும் இல்லை என்று அத்வைதிகள் சரண்புகுந்திருக்கும் அந்த ஒருசில சுருதிகளில் ஒன்றுவதாய் எண்ணப்பட்டிருக்கும் தத்வமஸி வாக்யம் அத்வைதிகளான எங்களுக்கு உயிர்பிச்சையைத்தரும் ஐக்யத்தை சாதித்துத்தருகிறதா அல்லது எங்களை சாக அடிக்கும் ஹாலாஹல விஷம்போன்ற பேதத்தைத்தான் சாதித்துத்தருகிறதா என்பதை இவ்விதழில் நாம் சிறிது விமர்சை செய்வோம்.

சாந்தோக்ய உபநிஷத்தில் ஆறாவது ப்ரபாடகத்தில், "ஸன்மூலா: ஸௌம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதனா: ஸத்ப்ரதிஷ்டா: என்று ஆரம்பித்து ஸயஏஷோ அணிமா ஐதாத்ம்யமிதம் ஸர்வம் தத் ஸத்யம் ஆத்மா தத்வமஸிச்வேதகேதோ" என்று காணப்படுகிறது. இதில் உள்ள ஸ ஆத்மா தத்வமஸி என்னும் வாக்யம் ஜீவப்ரம்மர்களில் அபேதத்தை சாதித்துத்தருவதில் எவ்வகை சந்தேகமுமில்லாதப்ரமாணம் என்று அதை அளவிலா அன்புடன் அத்வைதிகள் அணைத்து தழுவுகின்றனர். ஆனால் அந்த சுருதியோ அவர்களின் காமபூர்த்தியை செய்து தருகிறதில்லை என்று மிகுந்தவருத்தத்துடன் அறிவிக்கவேண்டியிருக்கிறது. எமது ஆசாரியாளான ஸ்ரீ சங்கராசாரியாரும் நான் சொல்லுகிறபடியேத்தான் ஸ்பஷ்டமாய் ஸர்வவேதாந்த ஸாரஸங்கிரஹம் என்னும் நூலில் சொல்லியுள்ளார். அங்குகாணப்படுவதாவது:—

"ஸர்வேசத்வ ஸ்வதந்திரத்வ ஸர்வக்ஞத்வாதிபிர்குணை: | ஸர்வோத்த: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப ஈசுவர: || தத்பதார்த்த: த்வமர்த்தஸ்து கிஞ்சித்க்ஞோ து:க்கஜீவன: | ஸம்ஸாரி அயம் தத்கதிகோ ஜீவ: ப்ராக்ருத லக்ஷண: || கதமேகத்வமனயோ: கடதே விபரீதயோ: | ப்ரத்யக்ஷேண விரோதோயம் உபயோருபலக்ஷ்யதே || விருத்ததர்மாக்ராந்தத்வாத் பரஸ்பர விலக்ஷணௌ || ஜீவேசௌவன்ஹி துஹினாவிவ சப்தார்த்ததோபிச ||" இதின் பொருளாவது:- எல்லாவற்றிற்கும் ஈசனாயிருத்தல், எல்லாவற்றையும் அறிபவனாயிருத்தல் ஸ்வதந்திரனாயிருத்தல் முதலான குணங்களால் ஸர்வோத்தமனும் ஸத்யகாமனும் ஸத்யஸங்கபனுமான ஈசுவரன் தத்வமஸி என்னும் வாக்யத்திலுள்ள தத் என்னும் பதத்திற்கு அர்த்தமாவார். த்வம் என்றாலோ ஸ்வல்பத்தைத் தான் அறிபவனும் துக்கஜீவனும் ஸம்ஸாரியும் அந்த ஈசுவரனையே கதியாகக் கொண்டவனும் ப்ராகிருத லக்ஷணமுள்ளவனுமான ஜீவன் என்று

அர்த்தம். இவ்வாறு ஒன்றுக்கொன்று முரண்பட்ட தர்மங்களைக் கொண்ட இந்த ப்ரம்மத்துக்கும் ஜீவனுக்கும் ஐக்யம் எப்படித்தான் பொருந்தும். இவர்களின் ஐக்யம் ப்ரத்யக்ஷத்திற்கும் விரோதமாய் இருக்கிறது. உஷ்ணத்துடன் கூடிய நெருப்பும் குளிர்மையுடன் கூடிய பனியும் எப்படி வெவ்வேறோ, அப்படி பரஸ்பரம் முரண்பட்ட தர்மங்களுடன் கூடியிருப்பதால் ஜீவனும் பிரம்மமும் எல்லாவகையிலும் வெவ்வேறுதான்." என்று ஸ்ரீ சங்கராசாரியார் இந்த மேற்கண்ட சுலோகங்களால் பரஸ்பரம் முரண்பட்ட தர்மங்களுடன் இருக்கும் ஜீவேசுவர்களின் அபேதமாகிய பெரும் மயக்கத்தைத்தரும் இருளை நன்கு போக்கியிருக்கிறார். இத்துடன் மட்டில் கௌரவமாய் அந்த மகாத்மா நின்றிருந்தால் நிச்சயம் அவர் விசேஷ மரியாதைக்குகந்த பெரியார்களில் தலைமை ஸ்தானத்தை அடைந்திருப்பார்தான். ஐயோ! அத்வைதிகளான நம்மவர்களுக்கேது அப்பேர்ப்பட்ட பாக்யம்? பகவத்பாதாளாயும் பரமசிவனின் அவதாரமென்று தோன்றுபவராயும் இருந்தாலும்கூட ஸ்ரீ சங்கராசாரியாள், அஸுரர்களை மயக்கும் எண்ணத்துடனே அல்லது வேறு எந்த காரணத்தாலோ, வேதமாதா உரக்கக்கூவி தடுத்துக் கொண்டிருக்கும்போதும், தன் அனுபவம் தன்னை வேண்டாம் வேண்டாம் என்று அதட்டித் தடுத்துக்கொண்டிருக்கும்போதும், பிரம்ம ஸூத்திரங்கள் பயந்து வழி மறைத்திருக்கும்போதும், ஒழுங்கான பாதைகள் எல்லாமே மூடப்பட்டிருக்கும்போதும், மீண்டும் அபேதத்தைத்தான் சாதிக்கவேண்டுமென்ற அடத்தால் இதுவரை எந்த அறிவாளிகளும் போகாததாய், தன் புத்தியைக்கொண்டு தானே கல்பனை செய்து கொண்டதாயுள்ள, சரியான பாதையாய் இல்லாத, ஓர் சந்து பொந்தில் போய் சேர்ந்தது, எமது அத்வைதிகளின் துரதிருஷ்டமேயாகும். வெகு சிரமப்பட்டு அந்த சந்தின் வழியாய் போனாலும் அது நாம் போய் சேரவேண்டியதாயுள்ள இடத்திற்கு கொண்டுபோய் சேர்க்க கூடியதாய் இல்லை

அத்வைத மதத்தில் எது விசிஷ்டமோ (தர்மத்துடன் கூடியதோ) அது மித்யை என்று, அதற்கு மித்யாத்வத்தை நாம் ஒப்புக்கொள்வதின் நிமித்தம், தத்வமஸிவாக்யம் விசிஷ்டார்த்தத்தை போதிப்பதாய்இருக்குமாயின் அதற்கு அப்ராமாண்யம் வருமே என்று பயந்து, அவ்வாறு நாம் சொல்லாமல் அது அகண்டார்த்தத்தை போதிக்கிறதென்று எமது கோஷ்டியில் மட்டில் வழங்கும் பெயரைக்கொடுத்து, அபேதத்தை போதிக்காததாயுள்ள கேவலம் சித் என்பதைத்தான், தத்வமஸி போதிக்கிறது என்று, எங்களுடைய குரு சொன்னார். அவரைப் பின்

பற்றுபவர்களான பஞ்சபாதிகாதி நூல்களை இயற்றினவர்களும் கூட தத்வமஸி வாக்யத்திலுள்ள தத், த்வம் அஸி என்னும் மூன்று பதங்களுக்கும் கேவலம் சித் என்றுதான் போதமிருப்பதாய் ஒப்புக் கொண்டால், இந்த தத்வமஸி வாக்யத்தால் ஜீவப்ரம்மர்களின் அபேதம் எப்படி ஏற்படக்கூடும் என்று கேட்டிருக்கின்றனர். ஏனெனில் இந்த தத்வமஸியால் சித் சித் என்று அறிவு உண்டாகிறதேயல்லமால் ஜீவப்ரம்மர்களின் அபேத விஷயமாக அறிவு ஏற்படுவதில்லை.

மேலும் எமது குரு செய்த அர்த்தத்திற்கு செவி கொடாமல் அதை அலக்ஷியம் செய்து, அதனால் ஏற்படும் குருத்ரோஹம் வந்தால் வரட்டுமென்று நாம் ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு, தத்வமஸிவாக்யம் அகண்டார்த்தத்தை போதிக்கிறதென்பதை விட்டுவிட்டாலும் கூட, இந்த தத்வமஸியால் அபேதம் ஸித்திப்பதில்லை. ஸ ஆத்மா தத்வமஸி என்னும் வாக்யத்தில், ஸவர்ணதீர்க்கம் என்னும் சாஸ்திரப்படி ஆத்மா என்பதில் கடைசியில் உள்ள ஆ என்னும் எழுத்தை ஒட்டி அகாரத்தைச் சேர்த்துக் கொள்வதால், ஸ: ஆத்மா அதந் த்வம் அஸி, என்று பதச்சேதம் ஏற்பட்டு, அதனால் ஜீவப்ரம்ம பேதம்தான் சுலபமாய் சித்திப்பதால், ஸ: ஆதமா அதந் த்வம் அஸி என்றுதான் பதச்சேதம் செய்து, அதனால் ஜீவப்ரம்ம அபேதம்தான் சாதிக்கப்படவேண்டுமென்பதில் என்ன நிர்பந்தமோ? இல்லாததன் நிமித்தம், இந்த தத்வமஸி வாக்யம் அபேதத்தை போதிப்பதில் நிரவகாசமான பிரமாணமாய் இருக்கத்தகாது. அவ்வாறு நிரவகாசப்ரமாணமாய் இருக்க லாயக்காய் இல்லாததோடு, ஸ்ரீசங்கராசாரியார் முதலானவர்களால் நிச்சம்சயமாய் பேதத்தைத்தான் போதிப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கும் "ய: ப்ருதிவ்யாம் திஷ்டன் யஆத்மனி திஷ்டன்" முதலான அநேக சுருதிகளுக்கும் விருத்தமாயும் இருக்கிறது.

ஆதமா அதந் என்று பதச்சேதம் செய்யாமல் ஆத்மா தத் என்னும் பதச்சேதத்தை ஒப்புக்கொண்டாலும்கூட, ஸ்ரீசங்கராசாரியார் சொன்ன ரீதியில் த்வம் பதத்தின் முக்யார்த்தம் (Primary meaning) ஆன, ஸர்வக்ஞத்வம் ஸ்வதந்திரத்வம் முதலான ப்ரம்மத்தின் தர்மங்களுக்கு விருத்தமாவுள்ளதான அல்பக்ஞத்வம் முதலான தர்மங்களுடன் கூடிய சித்துக்கும் (ஜீவனுக்கும்) தத் பதத்தின் முக்யார்த்தம் (Primary meaning) ஆன, அல்பக்ஞத்வம் முதலான ஜீவனுடைய தர்மங்களுக்கு விருத்தமான தாயுள்ள ஸர்வக்ஞத்வம் முதலான தர்மங்களுடன் கூடிய சித்துக்கும் (பிரம்மத்துக்கும்) அபேதம் ஏற்படுகிறதே இல்லை. பரஸ்பரம் முரண் பட்ட தர்மங்களுள்ள நெருப்புக்கும் பனிக்கும் அபேதத்தை அறி

வாளிஎவனும் நம்பமாட்டான்தான். தத் த்வம் பதங்களின் முக்யார்த்தம் (Primary meaning)ஐக் கொள்ளாமல், இந்த பதங்களின் முக்ய விருத்தியால் தோன்றும் பிரம்மத்தினிடத்தில் உள்ள ஸர்வக்ஞத்வாதி தர்மங்களையும், ஜீவனிடத்திலுள்ள அல்பக்ஞத்வாதி தர்மங்களையும் விட்டுவிட்டு, இவ்விரண்டு பதங்களுக்கு அமுக்யமான லக்ஷணா விருத்தியால் ஏற்படும் கேவலம் சித் என்ற போதத்தை மட்டில் நாம் ஏற்றுக்கொண்டு, இந்த இரண்டு சித்துக்களின் அபேத்ததை இந்த தத்வமஸி வாக்யம் போதிக்கிறதென்று சொல்லுவோமானால், அந்த சொல்லை பண்டித சமூகம் ஸ்வீகரிக்காது. "சுருதி லக்ஷணாவிசயே ச்ருதிர்ந்யாயா நலக்ஷணா" என்ற ச்ருதிக்கு முக்ய விருத்தியால் தோன்றும் அர்த்தத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமா? அல்லது லக்ஷணா விருத்தியால் தோன்றும் அர்த்தத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமா? என்கிற சம்சயம் உண்டானால், வேதத்திற்கு முக்ய வ்ருத்தியால் தோன்றும் அர்த்தத்தை எடுத்துக் கொள்வதே நியாயமானது, லக்ஷணா விருத்தியினால் தோன்றும் அர்த்தத்தை எடுத்துக்கொள்வது நியாயமல்லவென்று, ஸ்ரீ சங்கராசாரியார் கூறியுள்ளார். இதை எல்லா சாஸ்திரகாரர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். தத் பதத்திற்கு பின்பு ஐந்தாம் வேற்றுமை முதலிய வேற்றுமைகளின் ஸ்தானத்தில் "ஸுபாம் ஸுலுக்" என்னும் வியாகரண சூத்திரத்தின்படி ஸு என்னும் ஆதேசத்தை ஒப்புக்கொண்டால், தத் பதத்திற்கு எல்லா வேற்றுமைகளின் ப்ரத்யயங்களும் சேர்த்துக்கொண்டதாய் ஏற்பட்டு எல்லா வேற்றுமைகளின் அர்த்தம் உண்டாவதால், தத் என்பதற்கு தஸ்மாத் என்றும் தஸ்மின் என்றும் ரூபம் ஏற்பட்டு, தஸ்மாத் த்வமஸி என்றால் அந்த பரமாத்மாவால் நீ பிறந்திருக்கிறாய் என்றும், தஸ்மின் த்வமஸி என்றால் அந்த பரமாத்மாவிடத்தில் நீ ஆசிரயித்து இருக்கிறாய் என்றும், வேதத்தால் கூறப்படும் அர்த்தமே தெளிவாய் ஏற்படுவதுடன், "ஸன்மூலா: ஸௌம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதனா: ஸத்ப்ரதிஷ்டா:" எல்லா ப்ரஜைகளும் பரமாத்மா விடமிருந்து பிறந்திருக்கிறார்கள், பரமாத்மாவின் ஆசிரயித்ததில் இருக்கிறார்கள் என்ற த்வமமாஸியின் அடுத்தமுன் வாக்யத்திற்கு பொருத்தமும் உண்டாகக் கூடியதாய் இருக்கிறது. இவ்வாறு சரியானபடி ஏற்படும் பதத்தின் அர்த்தத்தை விட்டு விட்டு லக்ஷணையால் அர்த்தத்தை கல்பித்துக் கொள்வது எப்படி இருக்கிறது எனென்றால் "ஸ கரஸ்தம் உபாஸ்தே காமதேனும் ஸ்திதயாம்" ஒருவன் சமீபத்திலுள்ள காமதேனுவை விட்டு கழுதையைப்போய் ஆசிரயித்தான் என்ற கதையை ஒத்திருக்கிறது.

மற்றொரு வகையிலும் பரிசீலனை செய்து பார்ப்போம். முக்யார்த்தத்தை நாம் விட்டுவிட்டு அமுக்யார்த்தம் நாம் செய்ய வேண்டியிருந்தாலும் அந்த அமுக்யார்த்தம் இதரப்ரமாணங்களுக்கு விருத்தமாய் இல்லாமலும் அவைகளுக்கு பொருத்தமாயுள்ளதாயும் இருக்க வேண்டும். அப்பேர்ப்பட்டதான அமுக்யார்த்தத்தைத்தான் நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது எல்லா சாஸ்திரங்களிலும் சொல்லப்பட்ட அபவாதமில்லாத விதியாகும். அப்பேர்பட்ட நியமத்தைக்கூட லக்ஷ்யம் செய்யாமல், அபேதத்தை போதிப்பதாயுள்ள ஓர் சுருதிகூட இல்லாதிருக்கையில் பேதத்தைத்தான் போதிக்கும் சுருதிகள் ஆயிரக்கணக்காய் எதிரில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும்பொழுது, மிகவும் அதமமான லக்ஷணா விருத்தியால் நாம் அபேத அர்த்தத்தை ஏற்பது கேவலம் அடாத பிடிவாதமென்றுதான் எந்த மூடனும் அறிவான். அமுக்ய விருத்தியால் அப்ராமாணிகமானதும் ப்ரமாணவிருத்தமானதுமான அர்த்தத்தைத்தான் நாம் ஏற்கவேண்டுமென்று பிடிவாதமிருக்கும் பக்ஷத்தில் தத் என்னும் பதத்திற்கு லக்ஷணா விருத்தியால் அஸத் என்னும் அர்த்தத்தைக் கொடுத்து, த்வம் அஸத் அஸி, நீ (குதிரைக்கொம்பாய், மலடிமகனாய்) இல்லாத வஸ்துவாய் இருக்கிறாய்என்றும் அர்த்தத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளலாமே ? (குதிரைக்கொம்பு) அஸத் அறிய முடியாததாலும் அங்கு சக்ய ஸம்பந்தம் இல்லாமலிருப்பதாலும் தத் என்பதற்குஅஸத் என்ற அறிவு லக்ஷணையால் ஏற்படமாட்டாதென்றால், பிரம்மத்துக்கும் எமது மதத்தில் க்ஞேயதையை (அறியமுடிவதை) ஒப்புக்கொள்ளாமல் இருப்பதாலும், பிரம்மத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லாதிருத்தலால் சக்யஸம்பந்தமும் இருக்க முடியாததாலும் லக்ஷணையால் தத் என்பதற்கும் அஸத் என்ற அறிவு ஏற்படமாட்டாது என்ற கக்ஷி இரண்டுக்கும் ஒன்றேதான். ஆதலால் தத் என்பதற்கு லக்ஷணா விருத்தியால் அஸத் என்ற அர்த்தம் கொடுக்கக்கூடும்.

லக்ஷணையை ஆசிரயித்த போதிலும், "ஆதித்யோயூப: யஜமான: ப்ரஸ்தர:" சூரியன் யூபஸ்தம்பம், யஜமானன் தர்பமுஷ்டி இத்யாதி வாக்யங்களில் எப்படியோ, அப்படி ஒரே தத் பதத்திற்கு, தஜ்ஜன்ய: ததாச்ரித: தததீன: அவனிடமிருந்து பிறந்தவன் அவனை ஆசிரயித்தவன் அவனுக்கு அதீனன் முதலான அர்த்தங்களில் லக்ஷணா வ்ருத்தியைக் கொண்டு த்வம் தஜ்ஜன்ய: த்வம் ததாச்ரித: தததீன: நீ அந்த பரமாத்மாவிடமிருந்து பிறந்தவன், நீ அந்த பரமாத்மாவை ஆசிரயித்தவன் நீ அந்த பரமாத்மாவுக்கு அதீனன் என்றிவ்வாறு அர்த்தம் செய்வது 'ஸன்மூலா: ஸௌம்யேமா: ஸர்வஸ்ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:' 'வசீ ஸர்வஸ்யேசான:' இந்த

எல்லா பிரஜைகளும் பகவானிடமிருந்து பிறந்தவர்கள் எல்லோரையும் அதீனமாக்கினவர் எல்லோருக்கும் அதிபதி முதலான சுருதிகளுக்கும் பொருத்தமாய் இருக்கிறது. தத் த்வம் என்னும் இரண்டு பதங்களுக்குமே முக்யார்த்தத்தை (Primary meaning) விட்டு லக்ஷணையை (secondary meaning) ஆசிரயித்து அப்ராமாணிகமாகவும் ப்ரமாண விருத்தமாகவும் உள்ள அர்த்தத்தில் ஆசைகொள்வது நியாயமில்லை, ஸாது ஜனங்களும் இதை நன்கு ஆதரிக்கும்படியாயும் இல்லை.

அவ்வாறே தத் த்வம் என்னும் இரண்டு பதங்களின் சித்துகளில் லக்ஷணையை ஒப்புக்கொண்டாலும் ஜீவப்ரம்மங்களின் அபேதம் சித்திப்பதில்லை. உலகில் விசேஷ்யத்தில் (அடை மொழியால் குறிக்கப்பட்ட வஸ்துவில்) உள்ள தன்மைக்கும் விசேஷணத்தில் (அடைமொழியில்) உள்ள தன்மைக்கும் ஒன்றுக்கொன்று பேதமிருக்கும்பொழுதுதான் அபேதத்தைக்காட்டும் (வார்த்தையின்) அறிவு ஏற்படுகிறது. இவ்விரண்டுகளின் தன்மை ஒன்றாய் இருக்கும் பக்ஷத்தில் ஏற்படுகிறதில்லை. இந்த திருஷ்டாந்தத்தைப் பாருங்கள். கட: ஸுந்தர: குடம் அழகாய் இருக்கிறது என்று ஒருவன் சொல்லுகிறான். இந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் அழகும் குடமும் ஒன்றாய் சேர்ந்திருக்கிறது என்ற அபேதக்ஞானம் அதாவது அழகுள்ள வஸ்துவுக்கு அபின்னமாவது (தனியாய் இல்லாதது) இந்த குடம் என்று அபேதத்தைக் காட்டும் வார்த்தையின் அறிவு ஏற்படுகிறதல்லவா? அந்த அறிவு எப்பொழுது? விசேஷ்யமாயுள்ள குடத்தின் தன்மைக்கும், விசேஷணமாயுள்ள ஸுந்தர: என்பதின் தன்மைக்கும் பேதம் இருக்கும் பொழுதுதான். இப்படி இருக்க விசேஷ்யமாகவுள்ள சித்தின் உள்ள சித்தின் தன்மைக்கும், விசேஷணமாகவுள்ள சித்தின் உள்ள சித்தின் தன்மைக்கும், அபேதமே இருந்து வரும் பொழுது, சித் சித்தைவிட அபின்னம் என்று தோன்றுவதே அசம்பாவிதம், சித் சித்துதானோ அல்லவோ என்னும் சந்தேகமும், சித் சித்தல்லவென்ற விபரீதக்ஞானமும், ஒருவனுக்கும் இருக்க மாட்டாதாதலால், சித் சித் என்று மட்டில் அறிவிக்கும் தத்வமஸி வாக்யம் நாம் விடும்பாதத்தை அறிவிக்கும் வார்த்தையாடும், சித் சித் தான் என்று எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தைத்தான் அறிவிக்கும் இந்த தத்வமஸி வாக்யம் அறிந்திருப்பதையே அறிவிப்பதாகையால், அறியாததை அறிவிப்பதுதான் ப்ரமாணம் என்ற சொல்லுக்கு இடமில்லாமல் போய் இது அப்ராமாணமே ஆகும்.

மேலும் தத் த்வம் என்னும் இரண்டு பதங்களால் லக்ஷணையைக் கொண்டு ப்ரம்மம் ஜீவன் இவர்களிடமுள்ள பரஸ்பரம் முரண்பட்ட

தன்மைகள் அறிவுக்கு புலப்படாமற் போனாலும், உண்மையாய் பரஸ்பரம் முரண்பட்ட தன்மைகளைக் கொண்டவர்களென்று சுருதி முதலான ப்ரமாணங்களால் நிச்சயமாகி இருக்கும் ஜீவப்ரம்மர்களின் அபேதம் ஒருக்காலும் உண்மையாக ஏற்படமாட்டாதாதலால், தத்வமஸி வேத வாக்யம் அப்பேர்பட்ட அபேதத்தைத்தான் அறிவிக்கிறதென்று ஒப்புக்கொள்ளும் பக்ஷத்தில், இந்த தத்வமஸியின் ப்ராமண்யத்திற்கு அழிவு தான் ஏற்பட நேரிடும். ஜீவப்ரம்மர்களின் உள்ள தன்மை எமது மதத்தின்படி மித்யை பொய் ஆனதால், இந்த தோஷம் தத்வமஸி முதலான வேதத்திற்கு அப்ராமாண்ய மென்னும் கேட்டை விளைவிக்காதென்று அத்வைதிகளாகிய நாங்கள் கூறி ஆடமுடியாது. நிர்தோஷமான சுருதி அனுபவம் இவைகளால் ஏற்பட்ட ஜீவப்ரம்மர்களின் தன்மைகளை மித்யை பொய் என்று நாம் கல்பனை செய்திருப்பது மிக மிக அதிகமான நாஸ்திகமாகவே இருக்கிறது. உண்மையில் அத்வைத மதத்தில் நாஸ்தி கஸ்ய சித் அப்ரபோத:" என்று ஸ்ரீசங்கராசாரியார் தம்முடைய பாஷ்யத்தில் சொல்லியிருப்பதற்கு வியாக்யானமாக "நப்ரமோ நாம கஸ்சித், நஸம்ஸாரோ நாம கஸ்சித், ஸர்வமேதத் ஸர்வானுப பத்திபராஜனத்வாத் அநிர்வசனீயம் இதியுக்தம் உத்பச்யாம:" வாஸ்தவமாக விசாரித்த பக்ஷத்தில் பிரமை என்கிறதே இல்லை. கர்த்ருத்வம் முதலான சம்சாரம் இல்லை. பிரமை ஸம்சாரம் இருக்கிறதென்று சொல்வோமாயின் அவைகளுக்குத் வைதிகன் சொல்லும் எல்லா அனுபத்திகளும், வருகிறபடியால் இந்த பிரமை எப்படி உண்டாயிற்றென்று எங்களுக்குச் சொல்ல வாராதென்கிறதே சரியானதென்று அறிகிறோம் என்று பாமதீ நூலில் சொல்லியிருப்பதை நாம் பரிசீலனை செய்தால், ப்ரமம் ஒருக்காலும் ஏற்படவில்லை என்பது நன்கு விளங்குவதால், ப்ரம்மத்தில் எந்த தர்மத்தையும் பொருத்த முடியாதிருப்பதின் நிமித்தம் ப்ரம்மத்தில் பொருத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் மித்யாத்வம் அதாவது பொய்யின் தன்மை நிரூபிக்க முடியாதது தான்.

ஆதலால் எவ்வாறு பரிசிலனை செய்த போதிலும் தத்வமஸி வாக்யம் ஜீவப்ரம்மர்களின் அபேதத்தை நிரூபிக்க இயலுவதில்லை என்று அவசியம் எமது அத்வைதிகளால் ஒப்புக்கொள்ளத் தகுந்ததேயாகும்.

விச்வம்பர சாஸ்திரி.

குண்டூர் ஸ்ரீ கல்யாணாநந்த பாரதீ

மாந்தாசாரிய ஸ்வாமியின் 21வது ஸ்ரீமுகத்திற்கு பதில்

(முன் 223ம் பக்கம் தொடர்ச்சி)

ஓர் விநோதன் அறிவிப்பதாவது:

மோர் குழம்பு குப்பாசாரியார்: பலே, பலே, ஹூம். அப்படித்தானே கிருகஸ்தர்கள் கேட்கவேண்டும். அப்பொழுது தான் வைதிகர்களுக்கு குஷி, பதில் சொல்ல உற்சகாம், படித்தவர் இன்னார் என்றும் வெறும் குண்டுச் சொம்பு ஆசாரியார் இன்னார் என்று விளங்கும். ரொம்ப சரி. என்ன தெரியவேண்டும்.

நான்: உங்களை பரீக்ஷிக்க நீ எனக்கு ஏது யோக்யதை. இந்த காலம் ரொம்ப கெட்டுப்போய் இருக்கிறது. பெரியவாள் வார்த்தையிலே சிறிதும் விசுவாசம் இல்லை. எல்லோரும் படித்தவர்களென்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர். தாறு மாறாய் கேட்கிறார்கள். பதில் சொல்லாமல் இருந்தால் ஸாதுக்களுக்கும் சந்தேகம் வருகிறது. அதற்காக விஷயங்களை ஒன்றிரண்டாவது தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். உங்களைப் போலொத்தவர்கள் எனக்கு ரொம்ப அபூர்வம் தானே. நானோ ரொம்ப தூரத்தில் இருக்கிறேன்.

மோர். குப்; ஆமாம். ஆமாம். நீங்கள் சொல்வது ஓர் அக்ஷரம் பிசகில்லை. சந்தேகம் என்னவோ ?

நான்: நாம் கோபீ சந்தனம் குழைத்து நீளம் நீளமாய் நெற்றியிலும் உடம்பிலும் த்வாதச நாமங்களைப் போட்டுக்கொள்கிறோமே எங்களை விட அதிக கூட்டத்தார் ஸ்மார்த்தர்கள் ஒரு நிமிஷத்தில் காலை சாயங்காலம் இரண்டு வேளையும் பட்டை பட்டையாய் முப்பட்டை விபூதி பூசிக்கொள்கிறார்களே. எது சரி ?

மோர். குப்: அதிக ஜனங்கள் என்பது எந்த கணக்கில் ? உலகத்திலுள்ள எல்லா தேசங்களின் ஜனங்களின் கணக்கிலா ? இந்த தேசத்திலுள்ள ஜனங்களின் கணக்கிலா ? நீங்கள் கேட்டது எந்த கணக்கிலும் அகப்படாது. தேவர்களை விட அஸுரர்கள் இரண்டு மடங்கு அதிகம். தேவர்களின் ஆசாரமுள்ளவர்கள் குறைவு தான். அஸுரர்களின் ஆசாரம் அதிகம்தான்.

நான்: ஆசார்வாள். நான் சொல்கிறேன் என்று கோபிக்கலாகாது. நம்மவர்கள் இப்படி பேசி வாய் அடி அடிப்பது எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. விஷயத்தைத் தெரிந்துகொள்ள கேட்டால் அஸுரன் மூடன் மூர்க்கன் என்று எதிராளியை வைதால் என்ன பிரயோஜனம். எந்த ஆசாரத்திற்கு ஆகாரம் இருக்கிறதென்று அதை எங்களுக்கு புரியும்படி சொல்லி பொது ஜனங்கள் யாவரும் ஒப்புக் கொள்ளும்படி சொல்வது தான் பண்டிதர்களின் பாண்டித்யம். எனக்கும் சிறிது ஸம்ஸ்கிருதம் தெரியும்.

மோர். குப்: ரொம்ப சந்தோஷம். ரொம்ப சந்தோஷம். நான் கர்னாடகமனுஷ்யனாய் இருந்தாலும் நீங்கள் சொல்கிற வழியில் நான் பேச எனக்கு ப்ரியம். நான் சொன்னால் பிசகு இல்லையே.

நான்: அதென்ன அப்படி சொல்கிறீர்கள். எமது சாஸ்திரத்தில் தேவர்களின் சுபாவம் அஸுரர்களின் சுபாவம் என்றுயிருக்கிறது.

மோர். குப்: ஆம் "த்வௌபூதஸர்க்கௌ லோகேஸ்மின் தைவ ஆஸுரஏவச" என்று பகவத் கீதையில் பகவானே சொல்லியுள்ளார். "த்வி விதோ பூதஸர்கோயம் தைவ ஆஸுர ஏவச । விஷ்ணுபக்தி பர: தைவ: விபரீத: ததாஸுர: ।" என்று ஆக்னேய புராணத்திலும் இருக்கிறது. உலகில் தேவ சுபாவம் அஸுரசுபவம் என்று இரு வகையான சுபாவமுள்ள ஜனங்கள் சிருஷ்டிக்கப்படுகிறார்கள். விஷ்ணு பக்தியைச் செய்கிறவர்கள் தேவ சுபாவமுள்ளவர்கள், விஷ்ணுவைத் தவிர்த்துள்ள இதர தெய்வங்களை உபாஸிப்பவர்கள். அஸுர ஸ்வபாவமுள்ளவர்கள் இதைத்தான் மற்றொரு வகையாயும் சொல்வது உண்டு. ஸாத்விகர்கள், ராஜஸர்கள் தாமஸர்கள் என்று, "ஸாத்விகா: த்ரிதசா: ஸர்வே அஸுரா: ராஜஸாமதா: தாமஸா: ராக்ஷஸா: ஸர்வே ப்ரக்ருத்யாக்ருதிவர்ணத: । ராஜஸை: தாமஸை: ப்ரம்ம ருத்ரௌ ஸஜ்யௌது தத்குணௌ ॥" தேவர்கள் ஸாத்விகர்கள் என்றும் அஸுரர்கள் ராஜஸர்கள் என்றும் ராக்ஷஸர்கள் தாமஸர்கள் என்றும், ஸாத்விகர்கள் விஷ்ணுவை தெய்வமாகக் கொண்டவர்கள் என்றும் ராஜஸர்கள் சதுர்முகனையும் தாமஸர்கள் பரமசிவனையும் உபாஸிப்பவர்களென்றும், ஸ்மார்த்தர்களின் ஆதி குருவான ஆதிசங்கராசாரியாரே ஸர்வவேதாந்தசார சங்கிரஹத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

நான்: அதனால் என்ன ?

மோர்: குப்: ஏன் அய்யா அவஸரப்படுகிறீர். ஆகையால் ஸாத்விகர்களான தேவசுபாவம் கொண்டவர்கள் விஷ்ணுவை உபாஸிக்கின்றனர் என்று எல்லோரும் ஒப்புக்கொண்டது. ஸர்வ தேவோத்தமனும் ஸமஸ்த தேவர்களால் வணங்கப்படுகிறவனும் ஸர்வேச்ரவரனுமான விஷ்ணுவை அணுகி உபாஸிக்க வேண்டுமானால், ஊர்த்வபுண்ட்ரங்களை தரித்து, சக்ரசங்காதி முத்திரைகளை, போட்டுக்கொண்டு, துளசி மாலைகளை அணிந்து கொண்டிருக்கவேண்டும். ஹைகோர்ட்டில் ஜட்ஜுகளின் எதிரில் போகவேண்டுமானால் உடம்பை திறந்து வைத்துக்கொள்ளாமல் மூடிக்கொண்டு தலைப்பாகையை அணியவேண்டுமென்று நிர்பந்த மிருக்கிறதல்லவா? அரசாங்கத்தில் சிற்சில இலாகாக்களுக்கு தனித்தனியான உடுப்புகளை ஏற்படுத்திக் கொண்டு அந்தஇலாகாக்களில் ஊழியம் செய்பவர்கள் அந்தந்த உடுப்புகளை அணிய வேண்டுமென்று சட்டம் இருக்கிறதல்லவா ? அது போல் விஷ்ணுவை ஆராதிப்பவர்கள் ஊர்த்வபுண்டரங்களையும் சக்ர சங்காதி முத்திரைகளையும் தரிக்க வேண்டு மென்கிற நிர்பந்தம் இருக்கிறது.

நான்: அது தான் நான் கேட்டேன். சாஸ்திர ஆதாரம் என்ன இருக்கிறதென்று.

மோர்: குப்: வேண்டுமளவு பிரமாணங்கள் இருக்கின்றன. த்ருதோர்த்வபுண்ட்ரோ த்ருதசங்கசக்ர: விஷ்ணும் பரம் த்யாயதியோ மகாத்மா" ஊர்த்வ புண்ட்ரங்களையும் சக்ர சங்காதிமுத்திரைகளையும் தரித்து விஷ்ணுவை தியானிப்பவன் தான் மகாத்மா என்று காடக சாகை அறிவிக்கிறது. "த்ருதோர்த்வபுண்ட்ர: பரமேசிதாரம் நாராயணம் ஸாங்க்ய யோகாதி கம்யம் । க்ஞாத்வா விமுச்யேத நரஸ்ஸமஸ்தை:" என்று ஊர்த்வ புண்ட்ரங்களை தரித்து நாராயணனை உபாஸிப்பதால் ஸம்ஸார பந்தம் விலகுகிறது என்று மஹோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "த்ருதோர்த்வ புண்ட்ரதிலக: ஸமதுக்கஸுக: க்ஷமீ । ஸதா பரமயாபக்த்யா ஸ்மரன்புருஷ விக்ரஹம்" என்று மாத்யந்தின சாகையில் ஊர்த்வ புண்ட்ரத்தை விதித்திருக்கிறது. "ம்ருதா புண்ட்ரேண ஸததம் ஊர்த்வ புண்ட்ரம் கரோத் த்விஜ: । த்வாதசைவது புண்ட்ராணி தாரயேத் த்விஜஸத்தம:" என்று பன்னிரண்டு நாமங்களை தரிக்க வேண்டுமென்கிறது அத்ரிஸ்மிருதி. "மத்யேச் சித்ரம் ஊர்த்வ புண்ட்ரம் யோ தாரயதி, ஸ்பரஸ்ய ப்ரியோபவதி "நாஸாதி கேச பர்யந்தம் ஊர்த்வ புண்ட்ரம் விதாரயேத்" நெற்றியில் நடுவில் இடைவெளியுடன் மூக்கின் நுனி முதல் தலைமயிர் வரையில் நாமத்தைப் போட்டுக்கொள்ளவேண்டுமென்கிறது சக்ர சுருதி. இன்னமும் சொல்லட்டுமோ.

நான்: என்மேல் ஆயாசப்பட கூடாது. என் சந்தேகம் நீங்க கேட்கிறேன். ஊர்த்வ புண்ட்ரங்களை தரிக்க பிரமாணங்களிருப்பதாய் தெரிந்தது. சக்ரசங்காதி முத்திரைகளையும் போட்டுக் கொள்ள சாஸ்திரம் விதிக்கிறதோ ?

மோர். குப்: அப்படியா? அசற்கு ஆதாரங்களை எடுத்துச் சொல்லாதது பிசகு தான். "ஊர்த்வபுண்ட்ரம் ததாசக்ரம் நித்யம் தாரயதே நர: | தேன தஸ்யாசுபம் நச்யேத் சுபம் தஸ்ய விவர்த்ததே" ஊர்த்வபுண்ட்ரங்களையும் சக்ராதி முத்திரைகளையும் தரிப்பவனுக்கு எப்போதும் க்ஷேமம் என்று வ்ருத்த மனு அறிவிக்கிறார். "பசு புத்ராதிகம் ஸர்வம் க்ருஹோபகரணானிச| அங்கேயத் சங்க சக்ராப்யாம் நாமமுத்ர்யாச்ச வைஷ்ணவம்" என்று சாண்டில்யர் தன் தேகத்தில் சக்ரசங்காதி முத்திரைகளை போட்டுக்கொள்வதுடன் தன் வீட்டில் உள்ள பெண்டு பிள்ளை, பசு பாத்திரம் எல்லாவற்றிற்குமே சக்ர சங்காதி முத்திரைகளைப் போட்டு விஷ்ணுவின் பெயரை வைக்கும்படி கட்டளையிடுகிறார். போலீஸ்காரனென்று அறிய போலீஸ் உடுப்பு எப்படி அடையாளமோ. அந்த உடுப்பு இருந்தால் யாரும் அவன் இன்னான் என்று தெரிந்து கொண்டு, அரசாங்கத்துக்கு காட்ட வேண்டிய மரியாதைகளைக் காட்டுவார்களோ, அது போல் வேதாதிகாரம் பெற்ற பிராம்மணனுக்கு அடையாளமாய் யக்ஞோபவீதம் இருப்பது போல் பிராம்மணர்கள் எல்லோருக்குமே சக்ர சங்காதி முத்திரைகள் இருக்க வேண்டும். பிராம்மணர்களிலும் முக்யமாய் வைஷ்ணவர்கள் என்றிருந்தால் அவர்களுக்கு சக்ர சங்காதி முத்திரைகள் மிகவும் அவசியம். இது என் அபிப்பிராயமல்ல. "உபவீதாதிவத்தார்யா: சங்கசக்ரகதாதய: | ப்ராம்மணஸ்ய விசேஷேண வைஷ்ணவஸ்ய விசேஷத:" என்று சங்கஸ்மிருதியில் ஸ்பஷ்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

நான்: மாத்வர்கள் மட்டில் தானே முத்திரைகளைப் போட்டுக் கொள்கிறோம். வேறு யாரும் இல்லையே.

மோர். குப்: வேறு யாரும் இல்லையா. நீங்கள் பார்த்ததில்லையா! ராமானுஜ மதத்தார்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் தரிக்கின்றனர். நிம்பார்க்க மதத்தார்கள் வல்லப மதத்தார்கள் ராமானந்த மதத்தார்கள் இப்படி அநேகர் தொன்று தொட்டு தரிக்கின்றனர்.

நான்: அப்படியா! முன் காலத்திலும் முத்திரைகளை போட்டுக் கொண்டிருந்தனரா ?

மோர். குப்: வைஷ்ணவர்கள் விஷ்ணு பக்தர்கள் யாவருமே சக்ர சங்காதி விஷ்ணு முத்திரைகளைப் போட்டுக் கொண்டிருந்தனர். "த்ருதா நாராயணீ முத்ரா ப்ரக்லாதேன புராகரே! விபீஷணேன பலினா த்ருவேண ச சுகேனச|| மாந்தாத்ராஹி அம்பரீஷேண மார்கண்டேய முகை: ததைஜை:" என்று ஸ்காந்த புராணம் வைஷ்ணவ கண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. விஷ்ணு பக்தர்களான ப்ரஹ்லாதன், துருவன், அம்பரீஷன், பலி சக்கரவர்த்தி, விபீஷணன், மாந்தாதா, மார்கண்டேயர், சுகாசாரியார், நாரதர் முதலானவர்கள் எல்லோருமே தரித்திருந்தார்கள். முன்னாடி நான் சொன்னது போல் இன்னார் விஷ்ணு பக்தன் வைஷ்ணவன் என்று தெரிந்துகொள்ள சங்ர சங்காதி முத்திரைகளை தரிப்பது அடையாளமாய் இருந்தது. வைஷ்ணவர்களல்லாதவர்கள் உள்ளே வர கூடாது என்றறிவிக்க முத்திரைகளைப் போட்டிராதவர்களை விட வேண்டாமென்று உத்திரவிடப்பட்டிருப்பதாய் ஹரிவம்சம் ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது அங்கு காணப்படுவதாவது. "சக்ரரங்கிதா: ப்ரவேஷ்டவ்யா: யாவதாகமனம் மம | நாமுத்ரிதா: ப்ரவேஷ்டவ்யா: யாவததகமனம் மம"

நான்: ஆதலால் தான் வைஷ்ணவர்களான மாத்வர்கள் நாமெல்லோரும் ஊர்த்வ புண்ட்ரங்களையும் சக்ரசங்காதி முத்திரைகளையும் போட்டுக்கொள்கிறோம். சிவபக்தர்களானதால் ஸ்மார்த்தர்கள் விபூதியை தரிக்கின்றனர். சரிதான் சங்கதி தெரிந்தது.

மோர். குப். (உரக்க சிரித்துக் கொண்டு) ஹா! ஹா! என்ன கல்கண்டு இஞ்சியைப் போல் புளிக்குமென்று உண்மை தெரிந்தது. ஸ்மார்த்தர்கள் என்ன சைவர்களா? ஸாலக்ராமத்தை பூஜை செய்கிறவர்களல்லவா? விஷ்ணு நைவேத்யத்தை மட்டில் புஜிக்கிறவர்களல்லவா? அவர்களின் குரு சங்கராசாரியார் சாலக்ராம பூஜையை ஒப்புக்கொள்ளவில்லையா? விஷ்ணு ஸ்தோத்திரங்களைச் செய்யவில்லையா? அவர்கள் சிவபக்தர்கள் தான் என்று எப்படிச் சொல்ல முடியும். அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் ஸகுணப்ரம்மம் என்பதில் சிவன் எப்படியோ அப்படியேத்தான் விஷ்ணுவும் உபாஸ்யமாகும். அரியும் அரனும் ஒன்று அறியாதவன் வாயில் மண்ணு என்று சொல்கிறளே. எல்லாம் வாய் வார்த்தையில்தான். ஹரனிடத்தில் தான் அவர்களுக்கு அதிகப் பற்றுதல் இருக்கிறது. அவர்களின் மீது என்ன குற்றம். அவர்களின் குரு ஆதிசங்கராசாரியார் வழிகாட்டிவிட்டார்.

நான்: ஆசார்வாள்! வாஸ்தவந்தான். இப்போதுதானே தெரிந்தது. சங்கராசாரியார் சொல்கிறபடி அவர்களுடைய அத்வைத மதத்தில் ஸகுணப்ரம்ம சிவனோ விஷ்ணுவோ ஒன்றுதானே. அப்படியிருக்க சைவத்தில்தான் ஏன் அவர்களுக்கு பற்றுதல்.

மோர். குப்: நாம் சொல்லப்போனால் மாத்வர்கள் அத்வைதிகளை வைவது சகஜம் என்று உங்களைப்போன்ற லௌகிகர்கள் குறைகூறுகிறீர்கள். நீங்கள் பிரச்னம் செய்தபின் நாம் எப்படி சொல்லாமலிருப்பது. உள்ளது சொன்னால் உடம்பு எரியும் என்று சொல்வது உண்டு. அத்வைதிகளின் விஷயத்தில் இது ரொம்ப சகஜம். இந்த சிறு விஷயத்தை பாருங்கள். சங்கராசாரியார் ஒரு வைதிகர்தானே. ஒரு சைவனை லிங்கங்கட்டி ஜாதியானை அணுகி காலில் விழுந்து அவனை குருவாய்க்கொண்டார். அவனுடைய பெயர் ரேணுகன். அவன் இவருக்கு உபதேசம் செய்து இவரை முக்ய சிஷ்யனாக வைத்துக்கொண்டு தன்னிடமுள்ள ரத்ன கர்ப பிள்ளையாரையும் சந்திரமௌளீச்வரலிங்கத்தையும் கொடுத்து இவைகளைப் பூஜைசெய்துகொண்டு தன் ஸம்பிரதாயத்தை விடாமல் அனுஷ்டித்து வரும்படி ஆக்ஞையிட்டுச் சென்றான். அந்த லிங்கக்கட்டி குருவின் சம்பிரதாயத்தை அனுசரித்து சங்கராசாரியார் விபூதி ருத்ராக்ஷங்களை தரித்துவந்தார். அத்வைதிகளின் சிவாத்துகைமென்னும் நூலிலேயே "தந்ஸரேவணஸித்த ஸம்பாதாய ப்ரவர்த்திநும்| ஸங்கராசார்யவர்யாணாம் பாரம்பர்ய க்ரமாகதம்" என்று ஸ்பஷ்டமாய் சங்கராசாரியார் ரேவணஸித்தர் எனப்படும் அந்த ரேணுலிங்காயதனின் சம்பிரதாயத்தை அனுஷ்டித்துவந்தவர் என்று ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அத்வைதிகளாலேயே இயற்றப்பட்டிருக்கும் குரு வம்ச காவியத்திலும் இந்த சரித்திரம் சொல்லப்பட்டிருப்பதுடன் சித்த நாத சிவாசாரியார் செய்த லிங்காயதர்களின் கிரந்தத்திலேயும் ரேணுகரும் சங்கராசாரியாரும் சந்தித்ததைப்பற்றி விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சங்கராசாரியார் ரேணுகனுக்கு செய்த குரு நமஸ்காரமாவது:—"பக்தாங்குராய ஜலதாய அபயங்கராய போதே சகல்பதரவே கலயே மனூனும் கைவல்யதல்பகுரவே குரவே குரூணாம் ஸ்ரீரேணுகாய கணபாய நமோஸ்து நித்யம்"

நான்: கேட்க ரொம்ப அசிங்கமாயிருக்கிறதே. லிங்கங்கட்டிகளின் சம்பிரதாயமா இது. சூத்ரர்களில் ஆண்டிகள் பண்டாரங்கள் வேண்டுமானாலும் அனுஷ்டிக்கட்டும். பிராம்மணர்கள் வைதிகர்களுக்கு ஏன் இந்த அனுஷ்டானம்?

மோர் குப்: ஸ்வாமீ! நன்றாகத் தெரிந்துகொள்ளும். விபூதியைப் பூசுவது பிராம்மணர்களுக்கு ஏற்றதல்ல. பிராம்மணரல்லாதாருக்குத்தான் ஏற்பட்டது. அப்படித்தான் ஸ்மிருதிகாரர்கள் அபிப்பிராயம் தந்திருக்கின்றனர். 'யத்ருத்ரார்சனம் ப்ரோக்தம் த்ரிபுண்டரம் வாமிஸத்தமா:| தத் அப்ராம்மாண்ய விஷயம் ந து

விப்ரஸ்ய கர்ஹிதம்' என்கிறது ஹாரீதஸ்மிருதி "நத்ரிபுண்ட்ரம் தமிளுர்த்வம் பட்டிகாகாரமேவச| நசான்யதேவதா பக்தி: ஜபத்யமிதேஜஸ' என்கிறது வசிஷ்ட ஸ்மிருதி. "த்ரிபுண்டரம் ப்ராம்மணோ வித்வான் மனஸாபி ந தாரயேத்| த்ரிபுண்டரதாரணாத் விப்ர: பதத்யேவ ந ஸம்சய:|" என்கிறது சாதாதபஸ்மிருதி. த்ரிபுண்ட்ரம் பிராம்மணோ வித்வான் மனஸாபி ந தாரயேத், என்கிறது அக்னிவேச்யக்ருஹ்யம். "சக்ரதாரீ கட்கதாரீ தனுர்தாரீ ஹலாயுத:| திர்யக்புண்ட்ரதரோ விப்ர: சண்டாளஸமோ பவேத்" என்று குறுக்காய் போட்டவன் சண்டாளன் என்கிறது விருத்தஜாபாலஸ்மிருதி. 'பிராம்மணானாம் மிருத்ப்ரோக்தம் பஸ்ம ந சக்தனம்' என்கிறது விருத்தயாக்ஞவல்க்ய ஸ்மிருதி. "ந பஸ்ம ரேகா ஜுஷ கபாலமேதயான் பதித்திஷ்டேத்" என்று பஸ்ம தாரணத்தை நிஷேதிக்கிறது கௌதம தர்ம சூத்திரம். "ப்ராம்மண: குலஜோ வித்வான் பஸ்மதாரீ பவேத்யதி| வர்ஜயேத் தாத்ருசம் தேவம் மத்யோச்சிஷ்டகடம் யதா" என்று பஸ்மதாரணம் செய்த பிராம்மணனை கள் குடம் போல் விடவேண்டுமென்கிறது வராஹ புராணம். "த்ரிபுண்ட்ரம் சூத்ர கல்பானாம் சூத்ராணாம் சவிதீயதே" என்கிறது பிரம்மாண்ட புராணம். "திர்யக் புண்டரதரம் விப்ரம் பட்டிகாகாரமேவச| ச்வபாகமிவ ரேகேஷத ஸம்பாஷேத குத்ரசித்." முப்பட்டையாய் விபூதி பூசியிருக்கும் ப்ராம்மணனை சண்டாளனைப்போல் கண்ணெடுத்தும் பார்க்கவாவது பேசவும்கூடாது என்கிறது ஹாரீதஸ்மிருதி. இன்னமும் வேண்டுமானால் புஸ்தகத்தைப் பார்த்துச் சொல்லுகிறேன். ஞாபகத்தில் இருப்பதைச் சொல்லியிருக்கிறேன்.

நான்: விபூதியை குறுக்காய் முப்பட்டை போட்டுக்கொள்ளக்கூடாதென்று ஸ்பஷ்டமாய் இருக்கிறதே! பிராம்மணனுக்கு இது கூடாதென்றால் உத்தம தேவனான மகாதேவன் பரமசிவன் எப்படி தரிக்கிறார்?

மோர். குப்: (கோபத்துடன்) இதென்ன கேள்வி? பரமசிவன் செய்கிறதை எல்லாம் நாம் செய்கிறதோ. அவர் ஸ்மசானத்திலேயே வசிக்கிறார். நாம் அங்கு குடிபோகிறதுதானே. பரமசிவன் விஷத்தை பானம் செய்தார், மன்மதனை எரித்தார். இதெல்லாம் உங்களால் முடிகிறதா? விபூதியைத் தரிப்பது ஸவமாய் இருக்கிறது. அப்படி அனுஷ்டித்தாலென்னவென்று தோன்றுகிறது. விபூதியைத் தரித்ததால் பரமசிவனுக்கும் அவப்பெயர் ஏற்பட்டது. ஸாதுக்கள் நிந்தித்திருக்கின்றனர். தக்ஷப்ரஜேச்வரர் சிவனை வையும்பொழுது விபூதி பூசிக்கொள்வதை ஒரு கா

ணமாய் கூறியிருக்கிறார். இதுபாகவதத்தில் ஸ்பஷ்டமாய் இருக்கிறது. பிருகுமாமுனியும், நஷ்ட சௌசாமூடதிய: ஜடாபஸ்மாஸ்திதாரிண: பஸ்மதாரணம் செய்பவர்கள் அவைதிகர்களாகக்கடவது என்று சாபம்கொடுத்திருக்கிறார். பரமசிவனும்கூட "கபால பஸ்மாஸ்திதரா: யேஹ்யவைதிலிங்கின:] சங்க சக்ரோர்த்தவ புண்டராதிசின்னைஹ: ப்ரியதமை: ஹரே:] ரஹிதாயேத்விஜா: தேவிதேவை பாஷண்டின: ஸ்ம்ருதா:" விஷ்ணுவுக்கு மிகவும் பிரியமான ஊர்த்வ புண்டரங்களையும் சக்ரசங்காதி முத்திரைகளையும் தரிக்காமல் வேதங்களில் சொல்லாத அடையாளமாகிய பஸ்மதாரணம் அஸ்திதாரணம் கபாலதாரணம் இவைகளைக்கொண்டவர்கள் வேத பாஹ்யர்களான பாஷண்டிகள் என்றும், இவர்களோடும் வைஷ்ணவர்களல்லாத பிராம்மணர்களோடும் தொடுவதோ பேசுவதோ பார்ப்பதோ எதும் தகாதென்றும் சொல்ல, பார்வதி ஆச்சர்யப்பட்டு 'கபாலபஸ்ம சர்மாஸ்திதாரணம் ச்ருதிஹார்ஹிதம்] தத்வயா தார்யதே தேவகர்ஹிதம் கேனஹேதுனா' அப்படியானால் ஸ்ம்ருதிகளால் தூஷிக்கப்பட்டதாயுள்ள ஆசாரத்தை ஏன் கைக்கொண்டிருக்கிறீர். பஸ்மாதிகளை ஏன் தறிக்கிறீர் என்று பிரசினம் செய்தாள். அதற்கு பரமசிவன் தனக்கு சிறிதும் இஷ்டமில்லாமலிருந்தும் தன் யஜமானனை விஷ்ணுவின் ஆக்ஞை ஏற்பட்டதால் அவ்வாறு நேர்ந்திருக்கிறது என்று இந்த ரஸமான கதையை சொல்லியுள்ளார். முன் ஸ்வாயம்பு மன்வந்தரத்தில் வ்ருஷி முதலான பிரபல தைத்யர்கள் விஷ்ணு பக்தியை அடைந்து வைதிக கர்மங்களை செய்யத்துடங்க, இந்திராதி தேவர்கள் அவர்களைக் கொல்ல முடியாதென்று பயந்து, விஷ்ணுவை சரணமடைய, விஷ்ணு பரமசிவனை அழைத்து "த்வம்ஹி ருத்ர மஹாபாஹோ மோஹனார்த்தே ஸுரத்விஷாம்]] பாகண்டா சரணம். கர்மம் குருஷ்வ ஸுரஸத்தம] கபாலசர்ம பஸ்மாஸ்தி சின்ஹான்யபிசர்வச:] த்வமேவ க்ருதவான் லோகான் மோகயஸ்வ ஜகத்ரயே! அவலக்ஷ்ய மதம் ஸம்யக் வேதபாக்யம் த்விஜாதம:] பஸ்மாஸ்திதாரிண: ஸர்வே பவிஷ்யந்தி நசம்சய;]] மகாதேவா, அஸுரர்களுக்கு மோஹத்தை உண்டாக்கவேண்டியிருக்கிறது. அதனால் வேத பாஹ்யர்கள் பாஷண்டிகள் செய்யும் காரியத்தை நீயே செய்து காட்டு. விபூதி மண்டையோடு யானைத்தோல் எலும்பு இவைகளை தரித்துக்கொள். இதைக்கண்டு இப்படி தரிப்பதுதான் சரியான முறை என்று மூவுலகும் மோகித்துப்போய் அப்படியே செய்து வருவார்கள். பிராம்மணர்களிலும்கூட கீழ்த்தரப்பட்டவர்கள் அப்படியே செய்வார்கள். அத்துடன் தாமஸர்களாயிருப்பவர்கள் தங்கள் சாஸ்திரங்களில் உன்னையே ஸர்வோத்தமன்

என்று சொல்வார்கள். அதை நம்பி எல்லா அஸுரர்களும் உன்னையே உபாஸிப்பார்கள். என்னை உபாஸிப்பதை விட்டுவிடுவார்கள். நானும் அந்த தாமஸர்களின் சொல்லுக்கு பிரமாணமாய் என் அவதாரங்களில் உன்னையே பூஜிக்கிறேன். இந்த உபாயங் கொண்டுதான் நாம் அவர்களை கொல்லவேண்டியதாயிருக்கிறது. என்று விஷ்ணு சொல்ல, பரமசிவன் வேத பாஹ்யமான இந்த ஆசாரத்தைக் கைக்கொள்ள இஷ்டப்படாமல் விஷ்ணுவை நமஸ்கரித்து "த்வயோதிதமிசம் தேவகரோமி யதிபூதலே] தஸ்மாத் நாசோஹிமேநாத பவிஷ்யதி நசம்சய:] நசக்யம் ஹி மயாகர்த்தும் ஏதத்க்ருத்யம் ஹரே அதுனா] தவாக்ஞாபிச நோல்லங்க்யா ஏதத் துக்ககரம் மஹத்]]" பகவன்! தாம் சொல்லுகிறபடி விபூதிதாரணம் முதலியவைகளைச் செய்து உங்களை விட்டு நான் ஸர்வோத்தமன் என்று சொல்லிக்கொள்வது என் அழிவுக்கே காரணமாகும். ஆகவே நான் இப்படி ஒருக்காலும் விபூதிதாரணம் முதலியவைகளைச் செய்யமாட்டேன். உம்முடைய கட்டளையையும் மீற முடியாததாய் இருக்கிறது. எனக்கு மகா சங்கடம் வந்துவிட்டதே என்று பரமசிவன் வருத்தப்படவும், மகாதேவ! கஷ்டப்படாதே. உன்னை இந்த பாபத்தினின்றும் கரையேற்ற உனக்கு உபாயம் சொல்கிறேன் கேள். தாரக மந்திரத்தை ஜபம் செய். விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை தினம் ஜபித்துவா. அதற்கு சமானமாயுள்ள ஸ்ரீராமாய நம; என்ற ஷடக்ஷரியைச் சொல்லிவா. "இமம்மந்த்ரம் ஜபந்நித்யம் அமலஸ்தவம் பவிஷ்யஸி] பஸ்மஸ்ாதி தாரணாத்யத்து ஸம்பூதம் கில்பிஷம் த்வயி']] இந்த ராமமந்திரத்தை ஜபித்து வந்தால் ஆயிரக்கணக்கான பிரம்ம ஹத்யைகளைச் செய்த பாபமும் போய்விடும். வேத நிந்திதமான விபூதி தாரணம் அஸ்திதாரணம் முதலியவைகளைச் செய்வதால் உண்டான பாபமும் தொலையும் என்று சொல்லி மறைந்தார். ஆகவே "ஏவம் தேவஹிதார்த்தாய விருத்திர்மே தேவிகர்ஹிதா] விஷ்ணோராக்ஞாம் புரஸ்க்ருத்ய க்ருதம் பஸ்மாஸ்திதாரணம்" தேவகார்யார்த்தமாக விஷ்ணுவின் ஆக்ஞையின் பேரில் தான் இந்த வேத பாஹ்யமான ஆசாரமாகிய விபூதி தாரணாதிகளை செய்து வருகிறேன் என்று பரமசிவன் சொன்னதாய் விவரமாயும் விஸ்தாரமாயும் இந்த பார்வதி பரமேசுவர்களின் சம்வாதம் ஆக்னேய புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது,

நான்: பஸ்மதாரணாதிகளின் பாபங்கள் தொலையவா பரமசிவன் ராமமந்த்ரத்தை ஜபிக்கிறார். பேஷ் பேஷ். ரொம்ப அபூர்வமாக இருக்கிறதே. வெகு ஸ்பஷ்டமாய் பஸ்மதாரணம் கூடாதென்று இருக்கிறதே.

மோர். குப்: சிறிதும் சந்தேகப்படவேண்டாம். நான் சுருக்கமாய் ஒன்று சொல்கிறேன் கேளும். வேதத்தில் சொல்லப்பட்டிருப்பது விஷ்ணுஸர்வோத்தமத்வம்தான். அந்த விஷ்ணுவின் உபாஸனைதான் செய்யப்படவேண்டும். அத்வைத உபாஸனையோ சிவ உபாஸனையோ வேதத்தில் சொல்லப்படவில்லை. விஷ்ணு உபாஸனைக்கு லாயக்காய் இல்லாததும் விரோதமாய் இருப்பதுமான பஸ்மாதிதாரணம் அவைதிகமாகிறது. அவைதிகமான ஆசாரத்தைக் கைக்கொள்வதால் ப்ராம்மண்யம் தொலைந்து போவதுடன் எந்த வைதிககார்யமும் பாழாய் போகிறது. இப்படியே தான் ஸ்மிருதிகாரர்களின் அபிப்ராயம். "அங்கயித்வா நசக்ரேண யஞ்சித்கர்ம ஸஞ்சரேத் । தத்ஸர்வம் யாதி வைகல்யம் இஷ்டாபூர்த்தாதிகம் ந்ருப । சக்ராதிசின்ஹ ரஹிதம் ப்ராக்ருதம் கலுஷான்விதம் । அவைஷ்ணவம் து தம்தூராத் ச்வபாகமிவ ஸந்த்யஜேத் ॥ அவைஷ்ணவஸ்துயோவிப்ர: ச்வபாகாத் அதம: ஸ்மிருத: । அச்ராத்தேயோ ஹ்யபாங்க்தேயோ ரௌரவம் நாகம் வ்ரஜேத் ॥" என்கிறார் ஹாரீதர்.

நான்: பஸ்மதாரணத்திற்கு ஆதாரமாய் ஸ்மார்த்தர்கள் சுருதி ஸ்மிருதி பிரமாணங்கள் கூறுவதில்லையா? அவைதிகம் என்று அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களோ?

மோர். குப்: அவர்கள் ஒப்புக்கொள்வார்களோ! சில வாக்யங்களை எடுத்துச்சொல்கிறார்கள்தான். சுக்ல யஜுஸ்ஸில் உள்ள "ஆயுஷம் ஜமதக்னே:" என்னும் மந்திரத்தை ஒருவர் காட்டுகிறார். இதில் பஸ்மதாரணத்தைக் குறிக்கும் பதமே இல்லை. ஊகிக்கவும் சிறிதும் இடமில்லை. இதின் வியாக்யானங்களான உவடபாஷ்யம் மகீதரபாஷ்யத்திலும் இந்த மந்திரம் யஜமானின் க்ஷவரத்திற்காக வினியோகம் சொல்லப்பட்டு, கல்பஸூத்திரத்தை உதாஹரித்து ஆயுஸ் வேண்டப்படுவதாய்த்தான் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. "ப்ரஸத்ய பஸ்மனாயோனிம்" என்னும் மந்திரத்திற்கு உவடபாஷ்யம் மகீதர பாஷ்யம் ஸாயன பாஷ்யம் எல்லாவற்றிலும் கல்பஸூத்திரங்களை உதாஹரித்து வேறு விதமாய்த்தான் அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. "அக்னிரிதி பஸ்ம வாயுரிதி பஸ்ம" என்கிற உபநிஷத் மந்திரத்தில் பஸ்மத்தின் தாரணத்தை அறிவிக்கும் பதமே இல்லை. சிவபூஜையைச் செய்பவர்கள் சிவ தீக்ஷையைப் பெறுபவர்கள் பாசுபதாதி சைவ மதத்தார்களின் விஷயமாகத்தான் அவர்களின் ஒரு சில ப்ரமாணங்கள் அர்த்தம் எடுத்துக்கூறுவதாய் 'விரதமேதத் சாம்பவம் விரதமேதத் பாசுபதம்' என்று அவர்களின் அந்த பிரமாணங்களிலிருந்தே தெரியவரு

கிறது. அதிகம் சொல்வானேன். மேற்கண்ட பார்வதி பரமேசவரர்களின் சம்வாதத்தாலேயே பிராம்மணர்களின் பஸ்மதாரணத்திற்கு வேதத்தில் இடமில்லையென்றும் சுருதி கர்ஹிதம் வேதத்திற்கு விரோதமானதென்றும் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகிறது. வேதவிருத்தமாய் இருந்ததால்தான் வேத விரோதிகளான ஹிரண்யன் முதலான தைத்யர்கள் பஸ்மாதிதாரணம்செய்து வைஷ்ணவனை பிரக்லாதனை அவ்வாறு பஸ்மதாரணம் செய்ய வற்புறுத்தி "த்ரிபுண்ட்ரம் தாரணம்க்ருத்வா பஸ்மனாதைத்யபூஜிதம் । பூஜயித்வா மகாதேவம் பாசுபதோக்த மார்கத:" பாசுபதாஸ்திரத்தின்படி பரமசிவனை பூஜிக்க நிர்பந்தித்ததாய் ஸ்பஷ்டமாய் கூர்மபுராணம் அறிவிக்கிறது. பாசுபத சாஸ்திரத்தையோ ஸ்மார்த்தர்களின் குருவான சங்கராசாரியாரே பத்யுரஸாமஞ்சஸ்யாத் என்னும் ஸூத்திரபாஷ்யத்தில் கண்டித்திருக்கின்றனர். பாசுபதத்தை பின்பற்றுபவர்கள் சைவர்கள், பாசுபதர்கள் காபாலிகர்கள் முதலியோர் என்று சங்கரபாஷியத்தின் வியாக்யாதாக்கள் அறிவித்திருக்கின்றனர். இதனால் இந்த பாசுபதர்களின் பஸ்மதாரணாதிகள் வைதிகர்களுக்கு ஏற்றதல்லவென்பதை அவர்கள் ஒப்புக்கொண்டிருப்பதாய் நன்கு வெளியாகிறது. எதைத்தான் அவர்கள் சொல்படி அனுஷ்டிக்கிறார்கள்.

நான்: இந்த ஸ்மார்த்தர்கள் தங்களிடம் இவ்வளவு ஊழல்களை வைத்துக்கொண்டா எங்களை நிந்திக்கின்றனர். இதை எல்லாம் இவர்களுக்கு எடுத்துச்சொல்வார்கள் இல்லையா?

மோர். குப்: ஏன்! சங்கராசாரியார் காலத்திலேயே அவர்களின் சிஷ்யர்களே லக்ஷ்மணாசாரியார் ஹஸ்தாமலகாசாரியார் இந்த பஸ்மதாரணத்தைச் செய்ய இஷ்டப்படவில்லை புத்திசாலித்தனமாய் சங்கராசாரியார் அவர்களின் இஷ்டப்படியே சக்ர சங்காதி முத்திரைகளையும் துளஸி மணிகளையும் ஊர்த்வபுண்ட்ரங்களையும் தரிக்கும்படி அனுமதிகொடுத்தார். அவர்கள் தாங்கள் தரித்ததுமன்றி கீழ்திசையிலும் மேற்திசையிலும் ஊர் ஊராய் போய் இவைகளைத் தான் தரிக்கும்படி பிரசாரம் செய்து சங்கராசாரியாரிடமே சொன்னார்கள். இந்த விஷயம் ஆனந்தகிரி சங்கர விஜயத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால்தான் ஸ்மார்த்தர்களிலும் பஸ்மதாரணாதிகளைச் செய்யாமல் ஊர்த்வ புண்ட்ராதிகளை தரிப்பவர்கள் இருக்கின்றனர்.

நான்: அதிகம் சிரமம் கொடுத்துவிட்டேன். ஸ்திரீகள் எல்லோரும் வெளியே போகாமல் தடைப்பட்டிருக்கின்றனர். வீட்டிற்கு போவோம்.

லோனு: வெளியே போவதற்கு இடமில்லை என்று நாம் நிற்கவில்லை. எங்கள் காதிலும் இரண்டு சப்தங்கள் விழட்டுமே என்று நின்றோர். எனக்கு ஓர் சந்தேகம்.

மோர். குப்: நீ நல்ல புத்திசாலி. என்ன கேட்கிறாய் சொல்.

லோனு: எங்கள் சுவாமிகள் முத்திரையைக் காய்ச்சி போடுகிறாரே! அதற்கு ஆதாரம் இருக்கிறதா?

நான்: இதைத்தான் கேட்க எண்ணினேன். ஏதோ கேட்கத் தொடங்கிவிட்டேன். இதுதான் முக்யம்.

மோர் குப்: உங்களுக்கு தெரியாத ப்ரமாணம் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. இந்த மந்த்ரம் உங்களுக்கு தெரிந்தது தானே. பவித்ரம் தே விததம் ப்ரம்மணஸ்பதே ப்ரபுர் காத்ராணி பர்யேஷி விச்வத:| அதப்ததனூர் நததாமோ அச்னுதே ச்ரிதாஸ இத்வஹந்த: தத் ஸமாஸத|| என்று மூன்று வேதங்களிலுள்ள மந்த்ரமும் இதற்கு ப்ரமாணமாகிறது. இதன் அர்த்தத்தைச் சொல்லுகிறேன் கேளும். "ப்ரம்மணஸ்பதே:" ப்ராம்மணர்களுக்கு ரக்ஷகனான விஷ்ணுவே! 'ப்ரபு:' ப்ரபுவான தாம் விச்வத: எல்லோருடைய 'காத்ராணி' சரீரங்களையும் 'பர்யேஷி' அந்தர்யாமியாய் வியாபித்திருக்கிறீர். அந்த 'தே' உங்களுடைய 'பவித்ரம்' சுதர்சனமென்னும் சக்ரம் 'விததம்' உலகில் விஷ்ணு பக்தர்களில் வியாபித்திருக்கிறது. இந்த சக்ரம் மந்த்ர பூதமான அக்னியில் சுடப்பட்டு அதனால் அதப்ததனு: ஸம்ஸ்காரம் செய்யப்படாத சரீரமுள்ள ஆம: பாபம் பொசிந்து போகாத மனுஷ்யன் தத் பரப்ரம்மத்தை ந அச்னுதே அடைகிறதில்லை. 'ச்ரிதாஸ:' ஸமஸ்காரமடைந்த சூடான சக்ரத்தால் சுடப்பட்டவர்கள் மட்டிலுமன்று 'வஹந்த:' 'இத்'தினம் கோபி சந்தனத்தால் அதை தரித்திருப்பவர்களும்கூட அந்த ப்ரம்மத்தை 'ஸமாஸத' அடைகின்றனர். பவித்ரம் சரணம் சக்ரம் ஸுதர்சனம் இந்த எல்லா சப்தங்களும் சுதர்சன சக்ரத்தைத்தான் குறிப்பதாய் பல நிகண்டுகள் இருக்கின்றன. புனாதி த்ராயதி இதி பவித்ரம் பரிசுத்தப்படுத்துவதும் ரக்ஷிப்பதுமாயுள்ள ஸுதர்சனம் பவித்ரம் என்று ஏகாயன ப்ராம்மணத்தில் நிருக்தம் செய்யப்பட்டிருக்கிறது. பவித: த்ராயதே இதி பவித்ரம் வஜ்ராயுதத்தினின்றும் ஸம்ரக்ஷிப்பது ஸுதர்சனம் பவித்ரமெனப்படுமென்றும் வ்யுத்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. இந்த பவித்ர சுருதியைப்போலவே 'சரணம் பவித்ரம் விததம் புராணம்' என்னும் தைத்திரீய சுருதியும், 'சமூஹச்யேன: சகுனோபி ருத்வா' என்னும் ரிக் மந்திரமும் 'நிசிதேக்ஷப ஸஹஸ்ரம் பித்யமானம்' என்னும் பிருகதாரண்யக: சுருதியும், 'ப்ரதே விஷ்ணோரப்ஜசக்ரே' என்னும் பாஷ்களசாகாச்ருதியும், 'தக்ஷிணேது புஜே விப்ரோ பிப்ருயாத்வை ஸுதர்சனம்' என்று மகோபநிஷத் பிரம்ம சூக்த மந்திரமும், த்ருதோர்த்வ புண்ட்ர:' என்னும் காடக சாகை மந்திரமும் 'சக்ரம் பிபர்த்தி வபுஷோபிதப்தம் பலம்தேவானாம் அம்ருதஸ்யவிஷ்ணோ:' என்னும் ரிக் வேதத்தின் சில சுருதியும், 'ஏபிர்வயம் உருக்ரமஸ்ய' என்னும் அதர்வண மந்திரமும், 'பவித்ரமித்யக்னி:'என்னும் ஸாமவேதம் மைத்ராயணீய சாகா மந்திரமும் இவ்வாறு அநேக சுருதிகள் அறிவிக்கின்றன. சக்ர சங்க முத்திரைகளை அக்னியில் காய்ச்சுவதற்கும் அப்படி காய்ச்சின முத்திரைகளை தரிப்பதற்கு மந்திரங்களும் விதானமும் விஹகேஶ்வர ஸம்ஹிதை, பரமேச்வர ஸம்ஹிதை, ஸனத் குமார ஸம்ஹிதைகளில் சொல்லப்பட்டிருப்பதுடன், பரமேச்வர ஸம்ஹிதையில் ஸுதர்சன ப்ரதிஷ்டா விதானமும் சாலோத்தர ஸம்ஹிதையில் ஸுதர்சன ஸமாராதன விதியும், விஷ்ணு தத்வத்தில் ஸுதர்சன ஹோம விதியும் சொல்லப்பட்டிருக்கிறது. பாத்மமதத்தில் வைஷ்ணவ தீக்ஷையை அளிக்கும் விதானமும் தப்த முத்திரைகளைத் தரும் விதியும் விஸ்தாரமாய் விளக்கப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன வேத மந்திரங்களின் அர்த்தத்தை விளக்குவதாய் அவைகளின் வினியோகங்களை ஸ்பஷ்டமாய் ஸனகஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகள் அறிவிக்கின்றன

நான்: இப்படி சுருதிகளுக்கு அர்த்தமிருப்பதை ஸ்மார்த்தர்கள் ஏதாவது திரித்துப் பேசுவார்களே. சுலபமாய் எங்கள் கக்ஷிக்கு பலமிருப்பதை ஒப்புக்கொள்ள மாட்டார்களே.

மோர் குப்: வாஸ்தவம்தான். நன்றாகச் சொன்னீர். ஓர் திருஷ்டாந்தம் சொல்கிறேன். 'பவித்ரம்தே' என்னும் மந்திரத்தில் 'அதப்ததனு:' தப்தசக்ரத்தால் சுடப்படாதவன் பிரம்மத்தை அடைவதில்லை என்று ஸ்பஷ்டமாய் தப்தமுத்திரைக்கு ஆதாரமாய் உள்ள பதத்தை மாற்ற எண்ணங்கொண்டு, அதப்த "சுடப்படாத" என்பதற்கு "சுட்ட" என்று அர்த்தம் சொல்ல இச்சைகொண்டு, அதற்கு பாதகமாயுள்ள, இல்லையென்று அர்த்தம் கொடுக்கும் அ என்பதற்கு விஷ்ணு என்ற அர்த்தம் கொடுத்து, அ என்றால், விஷ்ணு, விஷ்ணு என்றால் விஷ்ணு ரூபமான சக்ரம், அதனால் தப்த சுடப்பட்டவன் பிரம்மத்தை அடையமாட்டான் என்று ஒருவர், வியாக்யானம் செய்து இம்மந்திரம் தப்தமுத்திரையை தடுப்பதாய் மார் தட்டுகிறார். அக்னிஹோத்ரம் செய்யவேண்டுமென்று அறிவிக்கும் அக்னிஹோத்ரம் ஜுஹுயாத் என்ற பதத்

218927

தையும் தாறுமாருய்ப் பிரிக்கலாம். அர்த்தமும் செய்யலாம். அக்னி என்ருல் பரிசுத்தமான அக்னி. அதைத் தொட்டால் அது அபரிசுத்தமாகுமாதலால், அக்னிம் ஹந்தி அக்னிஹா என்ருல் நாய். அதன் "உத்ரம்" மாமிஸம் "ஹூதாஞகானயோ:" என்பதைக் கொண்டு ஜுஹுயாத் என்ருல் பக்ஷயேத் என்று அர்த்தம். ஆகவே அக்னிஹோத்ரம் ஜுஹுயாத் என்ருல் நாய் மாம்சத்தை பக்ஷிக்கவேண்டும் என்றும் வேதம் விதிப்பதாயும் ஒருவன் பறைசாற்றக்கூடும். இந்த துர்வாதம் செய்பவர்களுக்கு விவஸ்தை ஏது.

நான்: இதை எல்லாம் நம்மவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிருர்களோ ?

மோர். குப்: வேண்டியவளவு அறுபத்திநான்கு கலைகளிலும் நிபுணராயிருந்த ஸ்ரீ விஜயீந்திரஸ்வாமிகள் சக்ரமீமாம்ஸை என்று தனிமையான ஓர் நூலேயே இதற்காக இயற்றியிருக்கிருர்கள்.

நான்: என்னென்னமோ பட்டோஜிதீக்ஷிதர் முதலியவர்கள் ஸ்மிருதிகளை உதாஹரித்து தப்தமுத்திரையை கூடாதென்கிருர்களே ?

மோர். குப்: எல்லா புராணங்களிலும் சரியே உபபுராணங்களிலும் சரியே ஸ்மிருதிகளிலேயும் சரியே ஸாத்விகம், ராஜஸ், தாமஸம் என்று மூவகை இருக்கிறது என்றும், இந்த ஒவ்வொன்றிலேயும்கூட இம்மூவகை பாகம் இருக்கிறது என்றும் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. அதனுல் அவர்கள் சொல்லும் வெகு ஸ்வல்ப ஸ்மிருதிகளின் பிராமாண்யம் தகராறுதான். பிரமாணமென்றே வைத்துக்கொண்டாலும் நிரவகாசமாயுள்ள எண்ணிறந்த சுருதிஸ்மிருதிகளுக்கு ஒத்தபடி சாவகாசமாயுள்ள இந்த ஸ்வல்ப ஸ்மிருதிகளுக்கு அர்த்தம் செய்யவேண்டியதே முறை. அப்படி அர்த்தம் செய்தால், தங்கம் வெள்ளி பித்தளையால் செய்யப்பட்ட முத்திரைகளால்தான் சக்ராதி அடையாளங்களை போட்டுக்கொள்ளவேண்டுமேயல்லாது இரும்பு மண் முதலியவைகளால் செய்த முத்திரைகளால் அங்கனம் கூடாதென்றும், குருமூலமாய்த்தவிர வேறு இதரர்களாலோ தானுகவோ தப்தமுத்திரையை தரிக்கலாகாதென்றும், பாஹுமூலம் பாஹுமத்யம் முதலான சாஸ்திரங்களில் குறிப்பிட்ட இடங்களைத்தவிர தான் இஷ்டப்படும் இடங்களில் தப்தமுத்திரைகளை தரிக்கலாகாதென்றும், ஆசையின்பேரிலோ கோபத்தாலோ மாச்சரியத்தாலோ சுட்டுக்கொள்ளக்கூடாதென்றும், இத்யாதி ரீதியில் போடப்படும் தப்தமுத்திரைகளை இந்த வெகு சொல்ப ஸ்மிருதிகள் நிஷேதிப்பதாய் நிரவகாசமான சுருதிஸ்மிருதிகளின் ஆதாரத்தைக்கொண்டு அர்த்-

தம் செய்யவேண்டும். அவ்வாறு அர்த்தம் செய்ய அந்த சில ஸ்மிருதிகளிலும் சில பதங்கள் இடம் தருகின்றன. அந்த ஸ்மிருதிகளைச் சொன்னுல் நான் அதை எடுத்துக்காண்பிப்பேன்.

நான்: சிராத்தத்தில் நிமந்த்ரணம் செய்யும்பொழுது ஸ்மார்த்தர்களில் ஓர் வகையார் நெற்றியில் ஒன்றுமே வைத்துக்கொள்வதில்லை. நாம் நாமமுத்திரைகளை மட்டில் தரித்துக்கொள்ளலாமா ?

மோர். குப்: "சங்க சக்ரோர்த்வ புண்ட்ராதி ரஹிதம் ப்ராம்மணுகமம்। பூஜயிஷ்யதி ய: ச்ராத்தே ஸர்வம் கர்மாஸ்ய நிஷ்பலம் ஊர்த்வ புண்ட்ரதரம் விப்ரம் ய: சிராத்தே போஜயிஷ்யதி। ஆகல்பகோடி பிதர: தஸ்யஹ்ருஷ்டா: நஸம்சய:"॥ என்றும் "ஊர்த்வ புண்ட்ரதரம் விப்ரம் சக்ராங்கித புஜம் யதா। பூஜயிஷ்யதி ய: சிராத்தே கயாச்ராத்தாயுதம் லபேத்" என்றும் இவ்வாறு வ்ருத்த ஹாரீத ஸ்மிருதி பாத்ம புராணங்களில் ஊர்த்வ புண்ட்ரங்களையும் சக்ர சங்க முத்திரைகளையும் தரித்தவர்களைத்தான் உட்கார்த்திவைத்து சிரார்த்தம் செய்யவேண்டும் என்றும் அப்படிச் செய்தால் தான் கல்பகோடி காலம் பித்ருக்கள் த்ருப்தியடைவார்கள் என்றும் பதிருயிரக்கணக்காய் கயாவில் சிரார்த்தம் செய்த பலன் வீட்டிலேயே சிரார்த்தம் செய்வதால் கிடைக்குமென்றும்சொல்லப்பட்டிருக்கிறது. 'த்ரிபுண்ட்ரம் ததாத்ருஷ்ட்வா ஸ்கந்தமாலாதே ததைவச। நிராசா: பிதரோ யாந்தி த்ருஷ்ட்வாச வ்ருஷலீபதிம்' என்றும் "த்ரிபுண்ட்ரேணது ஸம்யுக்தோ யதா சிராத்தம் குருதே த்விஜ:। ராக்ஷஸாஸ்தத் விலும்பந்தீத்யாஹ வைவஸ்வதோ யம:" என்றும் "விப்ரான் நிமந்த்ரயித்வாது த்ரிபுண்ட்ரம் யாஸ்து தாயேத்। ஸ்கர்த்தா நரகேகோரே பித்ரு பிஸ்ஸஹமோததே" என்றும் ஹேமாத்ரியில் சிராத்தத்தில் கர்த்தாவும் போக்தாவும் பஸ்மாதிகளை தரிக்ககூடாதென்றும் அதனுல் சிரார்த்தம் நஷ்டமடைகிறதென்றும் பித்ருக்களுடன் கர்த்தா நரகத்தில் விழுகிருன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க சிராத்தத்தில் நாமமுத்திரைகளை தரித்து இருப்பதா விபூதி முப்பட்டையாய் பூசிக்கொண்டிருப்பதா என்பதை நீங்களே யோசனை செய்து சொல்லுங்கள். எந்த மடையனும் விபூதியை தரிப்பதுமேல் என்று சொல்லமாட்டான். ஆதலால்தான் திருடனுக்கு தேள் கொட்டியதுபோல் வெளியில் சொல்லாமல் கௌரவமாய் பாழ் நெற்றியுடன் பலர் சிராத்தம் செய்கின்றனர்.

(தொடரும்.)

மாத்வமித்திரன் ஷீட் காலண்டர்.

வழக்கப்படி எமது பிரசித்தமான முறையில் அடுத்த வருஷத்திய மாத்வமித்திரன் ஷீட் காலண்டர் பிரசுரிக்கப்படும். எப்போதும் போல் அயனம், ருது, மாஸம், நக்ஷத்திரம், நாள், இங்கிலீஷ் மாஸம், தமிழ் மாஸம், மாஸமூர்த்தி, சிரார்த்ததிதி ஸந்தியா வந்தன திதி, மூன்று மடத்து ஸ்வாமிகளின் புண்யதினங்கள், பலவகை உபாஸங்கள், பலவகைவ்ரதங்கள், பலவகை பண்டிகைகள், கல்பலங்கள் ஏகாதசி, சிரவணம் உபவாஸங்களின் பற்பல சம்பிரதாயங்களின் நிர்ணயங்கள் கிரஹண உபவாஸாதி நிர்ணயங்கள், த்வாதசி நசமி ஹரிவாஸரங்களுடையவும் புண்யகாலங்களுடையவும் மணிக்கணக்கு முதலிய எண்ணிறைந்த விஷயங்கள் அடங்கியிருக்கும். காபிகள் வெளியான சொற்ப தினங்களுக்காகவே எல்லா காபிகளும் செலவழிந்து போய் தாமதித்து ஆர்டர் செய்யும் சந்தாதார்களுக்குமே அனுப்பமுடியாமற் போய் விடுகிறது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகவே தேவையான காபிகளுக்கு அவரவர்கள் இப்போதே முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யக் கோருகிறோம். பிரதி 1க்கு அணா 2 தபாற் செலவு அணா 1. காலணா போஸ்டேஜ் ஸ்டாம்புகளாக அனுப்பவும். 2 டஜன் மேற்பட்டு ஆர்டர் செய்கிறவர்களுக்கு 2 காலண்டர்கள் இனாம். **V. P. P.** கிடையாது. ஸம்வத்ஸரப் பண்டிகைக்கு முன்பே காலண்டர்கள் வெளியாகக்கூடும்.

மானேஜர் மாத்வமித்திரன்
ஸ்ரீ வியாஸவிலாஸம் கும்பகோணம்.

செய்தித்திரட்டு.

திருச்சிறுப்பள்ளி ஸ்ரீமன் மத்வ சித்தாந்த சபையின் 11வது ஆண்டு விழா 9—2—38ல் ஸ்ரீமத்வநவமியன்று துவக்கி 3 நாள் கொண்டாடப்பட்டதென்றும் முதல் நாள் மத்தியானம் மத்வ விஜய பாராயணத்துடன் பிராம்மண போஜனமும் மாலையில் ஸ்ரீமான் மதரூஸ் கௌலகி யதுநாதாசாரியாரால் ஸ்ரீமத்வாசாரியாரும் அவருடைய உபதேசமும்

என்பதைப்பற்றியும் ஸ்ரீமான் ஸ்ரீமுஷ்ணம் வெங்கடரமணாசாரியாரால் ஸ்ரீ வாயு பகவானின் மேன்மையைப்பற்றியும் உபன்யாஸங்களும், 10 11 தேதிகளில் ஹரிதாஸர்களால் ஹரி கதைகளும் நடத்தப்பட்டதென்றும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் ஜனங்கள் ஏராளமாக கூடியிருந்தனரென்றும் ஷை சபையின் காரியதரிசி ஸ்ரீமான் C. R ஸ்ரீனிவாஸராவ் அறிவிக்கிறார்.

சேலம் முதல் அக்கிரகாரம் ஸ்ரீ வியாசராஜ மடத்தில் சேலம் மாத்வ மகா ஜனங்களால் மத்வ நவமியன்று ஸ்ரீ மத்வ நவமி உற்சவம் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும் அன்று மத்தியானம் சுமார் 500 பேர்களுக்கு போஜனமளிக்கப்பட்டதென்றும் மாலையில் ஸ்ரீமான் குஞ்சுமேடு சாமாசாரியாரால் ஸ்ரீ பகவத் பாதாளின் திவ்விய சரித்திரம் வெகு அழகாய் உபன்யசிக்கப்பட்டதென்றும் சென்ற 4 மாத காலமாய் ஷை மடத்திலேயே ஷை ஆசாரியாரால் பகவத்கீதை துவாதச ஸ்தோத்திரம் தசாவதார ஸ்தோஸ்திரம் முதலியவைகள் தெளிவாய் அர்த்தம் சொல்லப்பட்டதுடன் ஸ்ரீமத் பாகவதம் தசம ஸ்கந்தம் புராணம் சொல்லப்பட்டு வருவது அந்நகர் மாத்வர்களின் பாக்கியமென்றும் சேலம் சப் கோர்ட் சிரஸ்தார் ஸ்ரீமான் T. R. சேதுராவ் அறிவிக்கிறார்.

கும்பகோணம் ஸ்ரீ சக்கிரபாணி ஸ்வாமி கீழ வீதியிலுள்ள ஸ்ரீ ஆஞ்சனேய விலாஸம் ஸ்ரீ ஆஞ்சநேயரின் சந்நதியில் 10—2—38 அன்று ஸ்ரீ மத்வ நவமி உற்சவம் வழக்கம்போல் மத்வ விஜய பாராயணம் பிராம்மண சந்தர்ப்பணையுடன் மதுரை ஸ்ரீமான் R. கிருஷ்ணமூர்த்தியாசாரியாரின் அரிய கைங்கர்யத்தால் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டதென்றும், ஸ்ரீமான்களான (மாத்வமித்திரன் பத்திரிகாசிரியர்) ஆத்யம்பாகவத ரங்கனாதாசாரியார் (த்வைத வேதாந்த பாடசாலை வித்வான்) வட்டங்காடு கோபாலாசாரியார் முதலான பல வைதிக முக்யஸ்தர்கள் பாராயணத்தில் சேர்ந்திருந்து சிறப்பித்தது குறிப்பிடத்தகுந்ததென்றும் ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமன் மத்வசித்தாந்த சபையின் வருஷாந்திரக்கொண்டாட்டமும் மத்வ நவமி உற்சவமும் சென்ற பிப்ரவரி 8, 9, 10வ களில் கொண்டாடப்பட்டதென்றும் முதல் நாள் காலையில் மூலபாகலு மடத்திலுள்ள ஸ்ரீ வரதராஜஸ்வாமிக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயருக்கும் பஞ்சாமிருதாபிஷேகம், மத்வ விஜய பாராயணம் மாலையில் சபையின் கட்டிடத்தில் ஸ்ரீமுஷ்ணம் வெங்கடரமணாசாரியாரால் உபன்யாஸமும், மறுநாள் காலையில் மத்வ விஜய பாராயணமும் மாலையில் ஸ்ரீமான்களான கௌலகி யதுநாதாசாரியார் சதுர்வேதி யதுநாதாசாரியார் இவர்களின்

உபன்யாஸங்களும் ஸ்ரீமான் வித்வான் கோவிந்தய்யங்காரின் வீணைக் கச்சேரியும் நடைபெற்றதுடன் வருஷாந்திர ரிபோர்டும் படிக்கப்பட்டு புதிய வருஷத்துக்கு சபையின் உத்யோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதென்றும் மறுநாள் 10உயன்று உத்தர வீதி வழியாய் பஜனை நடத்தப்பட்டதென்றும் அதன் காரியதரிசி ஸ்ரீமான் பத்மநாபராவ் அறிவிக்கிறார்.

[குறிப்பு: —ரிபோர்டிலிருந்து சென்ற வருடத்தில் வரவு ரூ. 129—14 8—என்றும் சிலவு ரூ. 94—13—0 என்றும் கையிருப்பு ரூ. 35—1—8 என்றும் 40 உபன்யாஸங்களும் 3 ஹரி கதை காலக்ஷேபமும் 12 அமாவாஸை பஜனைகளும் 1 நர்த்தன ஹரிபஜனையும் நடைபெற்றதென்றும் ஸ்ரீமத்வ மதம் பாவ ஷெ சபை வித்வான் ஸ்ரீமான் சதுர்வேதி யதுநாதாசாரியாரைக்கொண்டெழுதப்பட்ட ஸ்ரீமத்வ ஸித்தாந்த ஸாரம் என்னும் சிறு புஸ்தகம் அனைவருக்கும் இனமாய் வழங்கப்படுகிறதென்றும் தெரிய வருகிறது.]

மதரூஸ் திருவல்லிக்கேணி ஸ்ரீ வியாஸ அஸோஸியேஷன் அங்கத்தார்களால் பத்தாவது ஆண்டு ஸ்ரீ வியாஸராஜஸ்வாமிகள் ஆராதனை உற்சவம் 18—3—38 முதல் நான்கு நாட்கள் ஸ்ரீ வியாஸராஜ மடத்தில் வேத பாராயணம், பஜனை, உபன்யாஸம், பிராம்மண சந்தர்ப்பணைகளுடன் வெகு விமரிசையாய் கொண்டாடப்போவதாயும் சென்ற வருஷத்தில் ரூ. 120—15—8 வரவு சிலவு ஆகியிருப்பதாயும் ஷெ சபையின் காரியதரிசி ஸ்ரீமான் அயாசித ராகவேந்திராசாரியார் அறிவிக்கிறார்.

விசேஷ தினங்கள்

19—3—38	சனிவாரம்	ஸ்ரீ வாதிராஜஸ்வாமி புண்ய தினம்.
20—3—38	பானுவாரம்	ஸ்ரீ வியாஸராஜஸ்வாமி புண்ய தினம்.
27—3—38	பானுவாரம்	ஏகாதசி உப.
31—3—38	குருவாரம்	திலதர்ப்பணம் விஷ்ணுப. உப.
1—4—38	சுக்ரவாரம்	ஸம்வஸ்தரப் பண்டிகை, அப்யங்கம். வேப்பம்பூ பக்ஷணம். பஞ்சாங்க சிரவணம் அவசியம்.
10—4—38	பானுவாரம்	தசமி. இரவு மணி 9-35க்கு மேல்
11—4—38	சோமவாரம்	ஏகாதசி உப. [போஜனம் கூடாது.
13—4—38.	புதவாரம்	சித்திரை 1உ மேஷசங்கிரமணம் புண்யகாலம் மணி 12-57க்கு மேல்
14—3—38	குருவாரம்	சித்ரா பௌர்ணமி, விஷ்ணுப. உப. வைசாக ஸ்நானம் ஆரம்பம்.

மாத்வமித்திரன் பிரசுரங்கள்.

ஸ்ரீராகவேந்திரஸ்வாமிகளின் சரித்திரம்:—எந்த பாஷையிலுமே இதுவரை இம்மாதிரி விரிவாய் வெளியானதில்லை. ஸ்ரீராகவேந்திரர் செய்து காட்டிய திடுக்கிடும்படியான அநேக அரிய சம்பவங்கள் விஸ்தாரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதைப் படித்துக்கொண்டிருக்கும்பொழுதே ஸ்ரீராகவேந்திர குருஸ்வாமியிடம் சித்தம் பதிந்து பக்தி வளர்ந்து ஆனந்தக்கண்ணீர் பெருகி சரீரம் ரோமாஞ்சமாவதை ப்ரத்யக்ஷமாய் காண்போர் பலர். மேலும் பாலர், விருத்தர்வரை மாத்வர்கள் யாவராலும் தினம் உச்சரிக்கப்படும் ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம், சுலோகங்கள் தேவநாகரத்திலும், தமிழிலும் அவ்வகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஏராளமாய் சிலவடைந்து வருகிறபடியால் பிந்தி ஏமாறுதிருக்க தற்போது ஆர்டர் செய்யுங்கள். விலை அணா 0—8—0 தபாற் கூலி அணா 0—1—0.

ஸ்ரீராகவேந்திரஸ்தோத்திரம்:—தேவநாகரத்திலும், தமிழிலும் சுலோகங்கள் அவைகளின் தமிழ் அர்த்தமும் விலை அணா 2 தபாற்கூலி 0—0—6:

ஸ்ரீவாயுஸ்துதி:—தேவநாகரத்தில் சுலோகங்களும் அவைகளின் தமிழ் அர்த்தமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. வாயுஸ்துதியின் இன்னின்ன சுலோகங்களால் இன்னின்ன பலம் ஏற்படுமென்பதும் புனஸ்சரண விதானமும் காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 0—5—0 தபாற்கூலி அணா ஒன்று.

துவைதமத விளக்கம்:—ஸ்ரீமத்வமதத்தின் அநேக ப்ரமேயங்கள் ஸ்ரீமத்வாசாரியாரின் ஜீவியசரித்திரம் முதலியவை உள்ளது விலை அணா 2. தபாற்கூலி பைசா 6.

கும்பகோண மகாத்மியம்:—(தமிழ்) அணா 4. தபாற்கூலி பை 6.

துருவசரித்திர நாடகம்:— அணா 6. தபாற்கூலி அணா 0—1—0.

கீதாதத்வம்:— ஸ்ரீஉத்தராதிமடம் ஸ்வாமிகள் இயற்றி ஸ்ரீமான் ஆத்யம் பாகவதரங்கநாதாசாரியாரால் தமிழில் எழுதப்பட்டது. முதல் மூன்று சஞ்சிகைகள் சுமார் 225 பக்கங்கள் தற்போது தயார். இதர சஞ்சிகைகள் அவை வெளியானவுடன் இனமாய் புக்போஸ்டில் அனுப்பப்படும். விலை 1-8-0 தபாற்கூலி 0-6-0.

ஒரு ரூபாய்க்கு குறைந்து ஆர்டர் செய்கிறவர்கள் தபாற்கூலியைச் சேர்த்து கிரயத்துகை போஸ்டேஜ் ஸ்டாம்பாய் அனுப்பப்படவேண்டும். *Certificate of Posting* பேரில் புஸ்தகங்கள் அனுப்பப்படும். புஸ்தகங்கள் கிடைக்காவிட்டால் இந்த ஆபீஸ் ஜவாப்தாரியல்ல.

மானேஜர் மாத்வமித்திரன், ஸ்ரீவியாஸவிலாஸம், கும்பகோணம்.

வருட சந்தா ரூ. 3. Regd. No. M. 24

டி. எஸ். ஆர்.
அண்டு
கம்பெனி,
கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909

தந்தி விலாசம் "கோகுல்"

எங்கள் வாஸனை திரவியசாலையில் தயாரித்து விற்பனைக்குத் தயாராக இருக்கும் ஸாமான்களின் விபரம்.

வாஸனைப்பாக்கு	பலகாய்கறி ஊர்காய்கள்
வாஸனைச்சுண்ணும்பு	ரோஜாப்பூ குல்கந்து
வாஸனைப் புகையிலை	ஷர்பத் தினுசுகள்
ஸ்னனப்பவுடர்	கொப்பரைச்சீவல்
கேவஸர் பவுடர்	கோகுல் கூந்தல்
அம்பர், அரகஜா	பற்பொடி [தைலம்
தசாங்கம்	ஊதுவத்திகள்

சந்தனாதித் தைலம்,

அரைக்கீரைவிதைத் தைலம்,

மற்றும் அநேக வாஸனை சாமான்களும் கிடைக்கும்.

கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

Printed at Sri Venkateswar Power Printing Works and Published by Bhagavatha Ranganathachariar, Kumbakona

22 APR 1938

ஸ்ரீ லக்ஷ்மீ நரஸிம்ஹாய நம:

மாத்வமித்திரன்.

श्रीमन्मध्वमते हरिः परतरः, सत्यं जगत्, तत्वतोभेदः,
जीवगणाः हरेरनुचराः, नीचोच्चभावं गताः ॥
मुक्तिर्नैजसुखानुभूतिः अमला भक्तिश्च तत्साधनं
ह्यक्षादित्रितयं प्रमाणमखिलाम्नायैकवेद्यो हरिः ॥

VOL. 10 | பஹுதான்ய ஸம்வத்ஸரம். சைத்ர மாஸம். | NO. 9

ஸ்ரீ நாராயண பண்டிதாசாரியார் இயற்றிய

ஸங்கிரஹ ராமாயணம்.

பால காண்டம்.

(முன் 200-ம் பக்கம் தொடர்ச்சி.)

பாயஸ விபாகம்

ஸ்ரீ நாராயணன் தன் புன் சிரிப்பாகிய சந்திரனொளியால் ஸமஸ்த தேவர்களையும் ஆனந்தப்படுத்தி மேக கர்ஜனை போன்ற கம்பீரமான தொனியுடன் "இனி தேவர்கள் சங்கடமில்லாமல் சொஸ்தமாய் தம் இஷ்டப்படி இருக்கட்டும். வெகு சீக்கிரத்தில் இஷ்டப்படி சொர்க்கத்திலேயே இருக்கட்டும். தேவர்களே! உங்கள் சத்ருவான ராவணன் அவன் மூவுலகை ஜயிப்பவனாயினும் நான் கொல்லப்போகிறேன்" என்று சொல்லி அவர்களின் பயத்தைப் போக்கினர். இவ்வாறு காதுக்கு அமிர்தம் போன்ற பகவானின் வார்த்தையைக் கேட்டுவிட்டு தேவர்கள் தம் காரியம் கைகூடிவிட்டதாய் நிச்சயித்து ஸ்வர்க்கலோகம் சென்றனர்.

அப்பொழுது தசரதனின் புத்ர காமேஷ்டியில் வளர்ந்து வரும் அக்னியினின்றும் நாராயணரின் ஆக்ஞையின்பேரில், ஜொலிக்கும் காந்தியுள்ள ப்ராஜாபத்ய புருஷச்ரேஷ்டன் வெளியே கிளம்பினார். தங்க பாத்ரத்தில் பாயஸத்தை நிரப்பிக்கொண்டு அதை தசரதனிடம் 'இந்த பாயஸம் புத்ரர்களைக் கொடுக்கத் தகுந்தது" என்று சொல்லி அந்த அக்னியிலேயே வெகு சீக்கிரமே மறைந்தார்.

பிறகு தசரதன் தன் ஜ்யேஷ்ட பட்டராணியும் தனக்கு பிரியமானவளும், கல்யாணியாயுமான கௌஸல்யையை கூப்பிட்டு, அந்த ப்ராஜாபத்ய புருஷன் கொடுத்த பாயஸத்தின் ஓர் முக்யமான பாதியைக் கொடுத்தார். ஹரியிடம் பக்தியானுள்ள அந்த தசரதன் மீர்ந்த பாதி பாயஸத்தை சரி பாதியாய் பிரித்து பவித்ரமான ஓர் பாதியை புன் சிரிப்புடன் இருந்த ஸுமித்திரைக்கு உட்கொள்ளக் கொடுத்தார். கையிலிருந்த அந்த பாதி பாகத்தையும் சரி பாதியாய் விபாகம் செய்து ஓர் பாதியை கைகேயிக்கு கொடுத்தார். கைகேயிக்குக்கொடுத்து மீர்ந்திருந்த பாக்கி பாதியை மறுபடியும் ஸுமித்திரைக்கே கொடுத்தார். இவ்வாறு அரசன் உட்கொள்ளக்கொடுத்த அந்தந்த பாயாஸ பாகங்களை அந்தந்த தேவிகள் உண்டு, அந்தந்த காலத்துக்கேற்ற தேனையுண்டு பெண் வண்டுகள் சந்தோஷமுள்ளவைகளாய் பிரகாசிப்பதுபோல் விசேஷமாய் பிரகாசித்தனர். பாபம் விலகிப்போய் புண்யவானான அந்த தசரதனின் உத்தம ஸ்திரீகளான அந்த கௌஸல்யை, ஸுமித்திரை கைகேயி என்னும் தேவிமார்கள் திக்குகள் சுக்லபக்ஷத்தினின்றும் ஆனந்தத்தை விளைவிக்கும் சந்த்ரனை அடைவதுபோல் கர்பம் அடைந்தனர்.

தேவர்களின் அவதாரம்

தசரதனின் வீட்டில் இம்மாதிரி நாராயணன் அவதரித்திருப்பதை சதுர்முகன் அறிந்து தேவர்களை நேரில் கூப்பிட்டு, பின் வருமாறு பேசினார். பரிபூர்ணராயினும் நாராயணர் கருணாவானவரால் எங்களை அனுக்ரஹம் செய்வதற்காக அவதரித்திருக்கிறார். ஆதலால் நீங்களும் பூமியில் அவதரித்து, எங்களால்

பணிவிடைச் செய்யத்தகுந்தவரான அந்த நாராயணனுக்கு ஸஹாயம் செய்யுங்கள். பெண் கரடிகளிலும், பெண் குரங்குகளிலும் மனுஷ்ய ஸ்திரீகளிலும் உங்களையோ அல்லது உங்கள் பிள்ளைகளையோ நல்ல யோக்யதை வாய்ந்தவர்களாய் உண்டாக்குங்கள். கொட்டாவி விட்ட என் வாயினின்றும் முன்னால் ஜாம்பவான் என்னும் கரடி ராக்ஷஸர்களின் நாசத்திற்காகவென்று உண்டானான். அவன் முன்பு தர்மராஜனான யமன். இம்மாதிரி பிரம்மா இட்ட கட்டளைப்படி, நடக்க அக்ஷணமே சிலர் கொண்டாமுசுருகளாகவும், சிலர் கரடிகளாகவும், சிலர் வானரங்களாகவும் மற்றவர் மனுஷ்யர்களாகவும் பிறந்தனர். ஸமஸ்த ஜீவர்களிலும் உத்தமரும் உத்தமர்களான பகவத் பக்தர்களில் ஸர்வோத்தமரும் பிரதான வாயுவுமான முக்யப்ராணர் ஹனுமானென்ற நாமத்துடன் பிறந்தார். இந்திரன் வாலியாகவும் சந்திரன் அவனுடைய பிள்ளை அங்கதனாகவும், சூரியன் சுக்ரீவனென்ற பெயருடனும், அக்னி நீலனென்றும், வருணன் ஸுஷேணனென்றும், விசுவகர்மா நலன் என்றும்; அசுவினீ தேவர்கள் மைந்த த்விவிதர்கள் என்ற இரண்டு கபிகளாகவும், விஷ்ணுவை ஸேவிப்பதற்காக பிறந்தனர். கும்பரனின்றும் ப்ராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன் என்ற பஞ்சப்ராணர்கள் கஜன், கவாக்ஷன், கவயன், விருஷபன், கந்தமாதனன் என்று ஐந்து வானரங்களாய் பிறந்தனர். வஸ்வம்சர் என்ற இரண்டு தேவர்களிடமிருந்து பனஸன், சதபலி என்ற இரண்டு வானரர்கள் பிறந்தனர். 49 மருத்துக்களில் உத்தமர்களிடமிருந்து ச்வேதன், சம்பாதி என்னும் 2 கபிகள் பிறந்தனர். விசாலமான புத்தியுள்ள பிரஹஸ்பதி தாரன் என்ற கபியாய் பிறந்தார். இந்திரனின் பாரியாளான சசீ இந்த தாரனென்ற கபியின் ஸகோதரியாய் தாரை என்ற பெண் வானரமாய் பிறந்தாள். குபேரன், கந்தனன் என்ற வானரமாகவும், நிர்ருதி, துர்முகன் என்ற 2 கபியாகவும், எல்லோருக்கும் முன்னாடியே வேறொரு உத்தமான வாயுதேவன் கேஸரி என்ற கபியாகவும், பர்ஜன்யன், சரபனும், பிறந்தனர். அநேகமாய் எல்லோரும் அவரவர்களின் பிள்ளைகளே. பலர் ஸ்வயமாய் அவதரித்தவர்கள். இம்மாதிரியே ரிஷிகள் கந்தர்

வர்கள், சித்தர்கள் ஆயிரக்கணக்காய் பூமியில் அவதரித்தார்கள். இவர்கள் கோபம் வந்தால் பூமியைப் பிளந்துவிடுவார்கள். மலைகளையும் உயரத் தூக்கிவிடுவார்கள். யுத்தம் செய்யும்பொழுது இவர்களுக்கு நகங்களும் பற்களும்தான் ஆயுதங்கள். பதினாயிரம் யானைக்குள்ள பலம் கொழுத்தவர்கள். பலவகை பிறப்புக்களாய் பிறந்தவர்கள். பலவகை யுத்தத்தில் தேர்ந்தவர்கள். பலவகை பராக்கிரமம் வாய்ந்த நாராயணனை பலவகையில் சுசுரூஷை செய்தனர். சேதிக்கப்படாதிருந்த இறகுகளுடன் கூடிய மலைகள் போலும் அடர்த்தியான மழைகாலத்து மேகங்கள்போலும் உள்ள இந்தவானராதிகளால் பூமண்டலம் யாவும் வியாபித்து அலங்கரிக்கப் பட்டிருந்தது.

ஸ்ரீ ராமாவதாரம்

இந்த வைவஸ்வதமன்வந்தரத்தில்* த்ரேதாயுகத்தில் உத்தராயணம் சைத்ர மாஸம் சுக்லபக்ஷம் நவமி திதியில் புண்யமான பகலில் புனர்வஸு நக்ஷத்திரத்தில் கடக லக்னத்தில் குரு சந்திரன் உதயத்தில் சூரியன் மேஷத்தில் இருக்கும் பொழுதும், அங்காரகன் மகரத்திலும் புதன் கன்னியிலும் குரு கடகத்திலும் சுக்ரன் மீனத்திலும் சனி துலாவிலும் இவ்வாறு ஐந்து கிரஹங்கள் உச்சத்தில் இருக்கும் பொழுதும், மகாபுண்யகரமான விரதங்களைச் செய்து பரிசுத்தமாயிருந்த கௌஸல்யையிடமிருந்து, ஸர்வோத்தம புருஷரான பகவான் நாராயணன் தத்வக்ஞானிக்கு தோன்றினாற்போல் தன் அம்சத்துடன் ஆவிர்பவித்தார். பகவானுடைய அவதாரமாகும்பொழுது ஸாது ஜனங்கள் களித்தனர். அஸாதுக்கள் பீதியடைந்தனர். உலகம் கலக்கமற்றது. தேவோத்தமர்களான பிரம்மாதிகள் அநேகமான புஷ்பங்களை வர்ஷித்தனர். ஜய ஜயவென்ற அவர்கள் ஸ்தோத்திர சப்தமும் அவர்களின் முழக்கமும் அயோத்தியா பட்டணம் முழுதும் கேட்டது.

லக்ஷ்மணாதிகளின் பிறப்பு

பிறகு விஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷன் தன் ஸ்வாமியான விஷ்ணுவுக்கு கைங்கரியம் செய்வதற்காக ஸுமித்ரையின்

மகனாய், சூரியன் கடகத்தில் உதயமாகும் ஆஷாட மாஸத்தில், ஆச்லேஷா நக்ஷத்திரத்தில் பிறந்தான். பிறகு தைத்யமண்டலியை பிளக்கும் நாராயண சக்ரத்தின் மன்மதரூபம் கைகேயின் மகனாய் புஷ்ய நக்ஷத்திரத்தில் பிறந்தான். தேவசத்ருக்களின் யுத்தத்தை நாசமாக்கும் நாராயணனின் பாஞ்சஜன்யமென்னும் சங்கம் தன் ஸ்வாமியான பகவானை ஸேவிக்கும் விருப்பத்தால் ஸுமித்ரையின் மற்றொரு மகனாய் பிறந்தான். நாராயணனின் நான்கு வ்யூஹ ரூபங்களில் முதலாவதான வாஸுதேவரூபம் எல்லோருக்கும் ஜ்யேஷ்டனாய் ராமரென்று அவதாரமானார். மற்ற மூன்று புத்ரர்களில் மற்ற மூன்று வ்யூஹரூபமான சங்கர்ஷணர் ப்ரத்யும்னர் அநிருத்தர்கள் வரிசைக்கிரமமாய் தன் அம்சத்துடன் பிரவேசித்தினர் என்று பெரியோர்களின் சித்தாந்தம். சத்ருக்னன் அநிருத்தனும் பரதன் ப்ரத்யும்னனும் லோக சம்ஹாரகர்த்தாவான ஸங்கர்ஷணன் லக்ஷ்மணனுமானான்.

பிள்ளையில்லாதிருந்த தசரதன் நான்கு ஸத்புத்திரர்களை அடையப்பெற்று ஆனந்த ஸமுத்திரத்தில்மூழ்கி தரித்திரன் புதையலை அடைந்தாற்போல் மேல் செய்ய வேண்டியதை அறியாமற்போனான். தன் மக்களைப்போல் தசரதனால் காப்பாற்றப்பட்ட அவருடைய பிரஜைகள் எல்லோரும் அரசனுக்கு ஸந்ததி பிறந்ததை அறிந்து ஒவ்வொரு வீட்டிலும் சந்தோஷத்தைக் கொண்டாடினர். அயோத்தியா பட்டினத்தில் அன்று வரை நடந்திராத ரீதியில் ஸ்திரீ புருஷர்களின் மஹோற்சவம் நடந்தது. ராஜஸேவகர்கள் சந்தோஷம் தாங்காமல் ஆடினர், பாடினர். பிள்ளைகளின் முகசந்திரன் ராஜமஹிஷிகளாகிய நீரம்பல்களுக்கு ஆனந்தத்தை விளைவித்தான். அரசனின் மனோரதமாகிய சமுத்திரமும் சீக்கிரம் நிறம்பியது.

பிறந்த குழந்தைகளை இதரர்களைக்கொண்டு தூக்கிவரச் செய்து அவர்களை அணுகி புரோஹிதராகிய வசிஷ்டரை முன்னிட்டுக்கொண்டு சுயம் பரிசுத்தனாகி ஜாதகர்மாவைச் செய்தான். அச்சமயம் பிராம்மணர்கள் செய்த ஆசீர்வாதங்கள் எப்படி கணக்கற்றதாய் ஆயினவோ அப்படியே தான் பிராம்மண சமூகத்திற்கு அரசன் கொடுத்த தக்ஷிணையும் கணக்கற்றதாய் இருந்தன.

நாமகரணம்

ப்ரம்மக்ஞானிகளான பிராம்மணர்களோடும் தன் பந்துக்களோடும் சேர்ந்து தசரதன் கணக்கற்ற நாமங்களுள்ள அந்த நாராயணனுக்கு இன்னது தான் நாமம் என்று நாமகரணம் செய்தார். உலகமனைத்துக்கும் வேண்டியவரானதாலும், ஆத்மாராமராய் தன்னிடம் தானே ரமிப்பவராய் இருந்ததாலும் மரகத மாணிக்கம் போல் ச்யாமவர்ணராய் இருந்ததாலும் ராமன் என்று அழைக்கப் பெற்றார். எப்போதும் ரமாதேவியுடன் சம்பந்தம் பெற்றவரானதாலும், லட்மியையே தானம் செய்பவராதலாலும் ஸ்திரீகளின் மனதைக் கவருபவராதலாலும், அவர் ராமர் எனப் படுவார் என்று ஸாதுக்கள் அறிந்தனர். ஸாத்விகர்களின் அடையாளங்களைக் கொண்டிருந்ததால் ஸுமித்திரையின் மூத்த குமாரன் லக்ஷ்மணன் என்று அழைக்கப்பெற்றான். அவனுடைய தம்பி சத்ருக்னன் ஆவான். கைகேயியின் மகன் குணங்கள் நிறைந்தவனாயிருந்ததால் அவனை பரதன் என்று அழைத்தார்கள். ஷண்முகனைப்போல் அழகுவாய்ந்த பிள்ளைகளுள் இவ்வாறு நாமகரணம் செய்யப்பட்டனர். தசரதன் இந்த குழந்தைகளுக்கு வேதத்தின் கரைகண்டவர்களான உத்தம பிராம்மணர்களைக் கொண்டு அன்னப்ராசனம் சௌளம் முதலான க்ஷத்திரியர்களுக்கு உரித்தான ஸம்ஸ்காரங்களை செய்வித்தார்.

(தொடரும்.)

குண்டூர் ஸ்ரீ கல்யாணனந்த பாரதி
மாந்தாசாரிய ஸ்வாமியின் 21வது ஸ்ரீமுகத்திற்கு பதில்.

(முன் 253ம் பக்கம் தொடர்ச்சி)

மேலாறு: கயை என்று சொன்னவுடன் மற்றொரு விஷயம் ஞாபகம் வருகிறது. கயாவில் சிராத்தத்தில் உட்கார்த்திவைக்கும் கயாவாளிகள் என்பார் முன்பு விபூதியும் பூசிக்கொண்டிருந்தார்களென்று சொல்கிறார்களே!

மோர் குப்: கயாவாளிகள் என்பார் பிரம்மாவால் ஸ்தாபிதர்களான பிராம்மணர்கள். அவர்கள் சிராத்த போஜனத்திற்காகவென்றே பிரம்மாவால் ஏற்படுத்தப்பட்டவர்கள். ''தானேவ போஜயேத் விப்ரான் ப்ரம்மணையேது கல்பிதா:'' அவர்களைத்தான் போஜனம் செய்விக்கவேண்டுமென்றும், ''பித்ரு ரூபான் கயா விப்ரான்'' அவர்களே பிரத்யக்ஷமான பித்ருக்கள் என்றும், 'ந விசார்யம் குலம் சீலம் வித்யாம் ச தப எவச| பூஜிதைஸ்தைஸ்து ஸந்துஷ்டா தேவா: ஸபித்ருகாஹ்யகா:'' அவர்களின் குலம் சீலம் வித்யை தபஸ்ஸைப் பார்க்கலாகாதென்றும், அவர்களை பூஜித்தால்தான் பித்ருக்கள் திருப்தியடைகின்றனரென்றும் வாராஹ புராணம் அக்னி புராணம் முதலியவைகளில் ஸ்பஷ்டமாய் இருக்கிறது. சதுர்முகனால் பித்ருக்களின் ஸ்தானத்தில் சாசுவதமாய் சிராத்த போஜனத்திற்காகவென்றே ஏற்படுத்தப்பட்டவர்கள், சிராத்தாதிகளுக்கு அனர்ஹமான பஸ்மாதி தாரணங்களைக்கொண்டிருக்கும்படி சிருஷ்டிக்கப்பட்டிருக்கமாட்டார்கள் என்று எந்த விவேகியும் நிச்சயம் செய்யலாம். மேலும் பகவான் தன் பிள்ளையான பிரம்மாவுக்கு ''ஸசக்ரேண அங்கயித்வா தம் தஸ்ய மந்த்ரம் அதாத் ஸ்வயம்'' தப்த முத்திரையைக்கொடுத்து மந்திரோபதேசம் செய்தாரென்றும், பிரம்மாவும் தன் பிள்ளையான நாரதருக்கு தப்த முத்திரையைக் கொடுத்து மந்த்ரோபதேசம் செய்தாரென்றும், ஆகவே ''தாபயேத் சங்கசக்ராப்யாம் ஹோத்வா ஹோமயம் விதானத:'' மஹரிஷிகளே! நீங்களும் தப்த முத்திரையை தாரணம் செய்து வைதிக கர்மங்களைச் செய்யுங்கள் என்று நாரதர் உபதேசித்ததாய் ஸ்பஷ்டமாய் பாத்ம புராணத்தில் இருக்கிறது. இப்படியிருக்க உலகத்தை சிருஷ்டிசெய்த சதுர்முகன் சிராத்தாதிகாரமான உத்தம வைதிக கார்யத்திற்காகவென்றே, தான் சிருஷ்டி செய்த கயாவாளிகளுக்கு தான் முதலில் தப்த முத்திரையைக்கொடுத்து பிரம்மோபதேசம் செய்து வேதாதிகாரம் கொடுத்து, அந்த சம்பிரதாயமே எப்போதும் அவர்களின் சந்ததியார்களில் நிலை நிற்கும்படி செய்திருப்பார் என்றும் யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதாகும். கயாவாளிகள் தொன்று தொட்டு சக்ர சங்காதி முத்திரைகளையும் ஊர்த்வபுண்டரங்களையும் தரித்திருந்ததாகவே சரித்திரங்கள் அறிவிப்பதாய் ஒருவர் விளம்பரப்படுத்தியிருக்கிறார். இந்த கயாவாளிகள் உத்தம ஸத்வைஷ்ணவர்களாய் விஷ்ணு தீக்ஷையைப் பெற்றவர்களான மாத்வர்களாக இருந்து மாத்வ மடாதிபதிகளிடமிருந்து தப்த முத்திரையைப்பெற்று வந்ததால் தான், உத்தராதிகளான இந்த கயாவாளிகளுக்கு தப்த முத்திரையைக் கொடுத்து சிஷ்யர்களாய்ச் செய்துகொண்ட அந்த மாத்வ மடத்திற்கு

உத்தராதி மடம் என்று தொன்று தொட்டு குறிப்பான பெயர் வழங்கி வருகிறது. இப்படி எல்லாம் இருக்க கயாவாளிகள் முற்காலங்களில் விபூதியை பூசிக்கொண்டிருந்து, சமீபத்தில் இருபது வருஷமாகத்தான் தப்த முத்திரையைப் பெற்றிருப்பதாய் சொல்வது எவ்வளவு உண்மையாயிருக்கும்? யோஜித்துப் பாருங்கள்.

நான்: ரொம்ப நன்றாய்ச் சொல்லுகிறீர். இப்படி எல்லாம் இருக்க கயாவாளிகள் விபூதியை தரிப்பதைவிட்டு தப்த முத்திரைகளை தரித்ததால் பதிதர்களாய் போனார்கள் என்றும் கயா க்ஷேத்திரமே பறச்சேரியாய் போய் விட்டது என்றும் ஓர் ஸ்மார்த்த ஸ்வாமி சொல்லியிருக்கிறாராமே.

மோர். குப்: முப்பட்டையாய் விபூதி பூசும் ஸ்மார்த்தர்கள் பிறரை கூறவாய் ஏது? "த்ரிபுண்ட்ர தாரணாத் விப்ரா: பதித: ஸ்யாத் ந ஸம்சய:" த்ரிபுண்ட்ரத்தை தரிக்கும் பிராம்மணர்கள் தான் பதிதர்கள் சண்டாளர்கள் என்று பிருஹத்பாராசர ஸம்ஹிதை முதலானவைகளில் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்மார்த்தர்களில் பாமரனொரு அநாமதேயன் குண்டூர் ஸ்வாமிதான் அவ்வாறு கயாவாளிகளையும் கயாவையும் பஹிஷ்கரித்திருப்பதாயும் கயா க்ஷேத்திரம் பறச்சேரியாய் போய்விட்டதாயும் சொன்னான். இந்த வஞ்சகனின் வார்த்தையை எந்த ஸ்மார்த்தர்கள் தான் காதில் வாங்கினார்கள். எல்லோரும் வழக்கப்படிதான் தீர்த்த யாத்திரை செய்துகொண்டு இந்த கயாவாளிகளை உட்கார்த்திவைத்து சிராத்தாதிகளைச் செய்து வருகின்றனர். கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகளும்கூட சமீபத்தில் காசிக்கு வந்திருந்தபோது, இவ்வார்த்தையை மறுத்து எல்லா ஸ்மார்த்தர்களும் சிறிதும் சம்சயமின்றி வழக்கப்படி கயா சிராத்தாதிகளை நடத்தி வரலாமென்று உத்திரவிட்டது எல்லா சமாசாரப் பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. "கயாயாம் பித்ரு ரூபேண ஸ்வயமேவ ஜநார்த்தன:" என்றும் "ஏஷ்டவ்யா: பஹவ: புத்ரா: யத்யேகோபி கயாம் வ்ரஜேத்" என்றும் "சமீ பத்ரப்ரமாணேன பிண்டம் தத்யாத் கயாசிரே| உத்தரேத் ஸப்த கோத்ராணி குலமேகோத்தரம் சதம்" என்றும் 'கயாசிரேஷு அக்ஷயவடே பித்ருணாம் தத்தமக்ஷயம்' என்றும் கயையில் பித்ருக்களின் ரூபத்துடன் ஸ்வயம் ஜநார்த்தனனான நாராயணன் ப்ரத்யக்ஷமாய் இருக்கிறதாகவும், பல பிள்ளைகளை ஈன்றெடுத்தால்தான் அவர்களில் ஒருவனாவது கயைக்குச் சென்று பிண்டதானம் செய்து அவனால் பித்ருக்கள் உத்தாரமடையும் பாக்யம் ஏற்படுமென்றும், கயையில் சிராத்தம் செய்தால் தாய் குலம் தந்தை குலம் பாரியையின் குலம் தங்கையின் குலம் பெண்ணின் குலம் தந்தையுடன் பிறந்தவளின் குலம் தாயுடன் பிறந்தவளின் குலம் ஆக ஏழு கோத்திரத்தாரும்

இவர்களின் 101 குலத்தாரும் உத்தாரமடைவார்கள் என்றும் இப்படி அதி அற்புதமான அநேக மகாத்மியம் வாய்ந்த கயா க்ஷேத்திரமும் அங்கு பிரம்மாவால் சிராத்த போஜனாதிகாரம் பெற்ற உத்தமர்களான கயாவாளி பிராம்மணர்களும் மாத்வர்களான உத்தராதி மடத்தாருடையவும் மத சம்பந்தமான அதிகாரத்துக்குட்பட்டிருப்பதையும் விஷ்ணு பாதம் கோயிலும் இம்மடத்தாரின் ஆதீனத்திலிருப்பதுடன் இக்கோயிலில் பகிரங்கமாய் ஸ்ரீமத்வாசாரியாருடையவும் ஸ்ரீ உத்தராதி மடம் ஸ்வாமிகளான ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்தருடையவும் சித்திரப்படங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதையும் கண்டு, வயிற்றெரிச்சல் தாங்காமல் அநேக வருஷங்களாய் ஸ்ரீ உத்தராதி ஸ்வாமிகள் அத்வைதத்திலுள்ள கணக்கற்ற தோஷங்களை பகிரங்கப்படுத்தி அதில் நம்பிக்கை இழந்த படிப்பாளிகளான அநேக ஸ்மார்த்தர்களை மாத்வர்களாய் மாற்றி தம் வகுப்பில் சேர்த்துக் கொண்டிருப்பதால், அவ்வாறுதான் இந்த கயா க்ஷேத்திரமும் கயாவாளிகள் எல்லோரும் ஸ்ரீ ஸத்யத்யான தீர்த்த ஸ்வாமிகளால்தான் மத்வ மதத்தாருடையதாய் மாறிவிட்டதென்று எண்ணி கோபம் சீறி மதிகெட்டு வாயில் வந்தபடி எல்லாம் பிதற்றி இருக்கிறார்.

ஜோஷே: தங்களுக்கும் இந்த விஷயம் தெரியுமோ?

மோர். குப்: நான் ஸ்ரீரங்கம் போயிருந்தபோது அந்த ஸ்வாமி அச்சடித்து ஊரெங்கும் அனுப்பிய அந்த புஸ்தகத்தை ஒரு மாத்வ கிருஹஸ்தர் எங்களிடம் காண்பித்தார்.

நான்: அதற்கு யாராவது கண்டனம் எழுதினார்களோ?

மோர். குப்: ஒரு தரித்திரன் ஒரு கோடீஸ்வரனை பஹிஷ்கரித்த கதையாய் உத்தமோத்தமமான கயா தீர்த்தத்தையும் விஷ்ணு பாதத்தையும் இந்த ஸ்வாமி நிந்தித்து பஹிஷ்கரித்ததால், பாரதகண்டத்திலுள்ள எல்லா சநாதனிகளும் இந்த ஸ்வாமி ஒரு பாமரன் பாபி, பாஷாண்டி, தேசத்துரோஹியாயிருப்பதன் நிமித்தம் இவனுடைய முகத்தை கண்ணெடுத்தும் பார்க்கலாகாதென்று, இவனுடைய வார்த்தைகளைக் கண்டித்து, உத்தராதி ஸ்வாமிகளுடையவும் மத்வ மதத்தினுடையவும் பெருமையை வெளியாக்கி, காசியிலுள்ள சநாதன தர்ம மகா மண்டலத்தார் அவர்களின் ஆதரவில் பிரசுரிக்கும், சாஸ்திராசார்ய, ஸாஹித்யநிதி, சாஸ்திரார்த்த மகாரதி, மகாமகோபதேசிக, காவ்ய தீர்த்த, வேதரத்ன என்னும் பல பட்டங்களைப் பெற்றிருக்கும், கான்பூர் ஸநாதன தர்ம காலேஜ் ரிடையர்டு புரொபஸரான, ஸ்ரீமான் கங்கா விஷ்ணு சாஸ்திரிகளை ஆசிரியராகக்கொண்ட 'தர்ம நிபந்தமாலா' என்னும் ஹிந்தி பத்திரிகையின் முதல் மணியில் "மூர்க்கமுக மர்த்தனம்" என்னும் தலைப்பெயர்

காண்ட வியாஸத்தின் மூலமாய் விளம்பரப்படுத்தி, ஜயாவாளி சபையார் இவனை உடனே பஹிஷ்கரிக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கின்றனர். கோமாகிவிட்டது. பின்பு இதைப்பற்றி விஸ்தாரத்தறிவிக்கிறேன் என்று சொல்லி புராணிகர் வீட்டிற்குப் போனேன். இதைக்கேட்டு எல்லா ஸ்திரீகளும் பளீச் பளீச் என்றே முத்திரைகளைப் போட்டு, தாம் விஷ்ணுதாஸர்கள் என்று காட்டிக்கொள்ளவேண்டுமென்று, அவர்களின் மகா நாட்டில் தீர்மானம் நிறைவேறியது. நான் செய்த தீர்மானமாவது, மறுநாள் விடிந்ததும், விஷயங்களை இவ்வளவு தெளிவாய் எடுத்துச் சொன்ன ஜகமெங்கும் புகழ்பெற்ற மோர்க்குழம்பு ஆசாரியாளை, வீட்டிற்கு சாப்பாட்டிற்கு அழைத்து அவருக்கு பிரியமான மோர்க்குழம்பு தயாரித்து, தாராளமாய் அளிப்பதுடன், தயிரில் தயாரிக்கப்படும் பதார்த்தங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவையும் அதாவது மோர்க்குழம்பு, மோர்கடி, மோர்க்கூட்டு, தயிர்ப்பச்சடி கிஜுசுகிஜுசுகள், தயிர் கோசும்பரி கிஜுசு கிஜுசுகள், தயிர் வடை, தயிர் ஆம வடை, தயிர் போண்டா, பகாளபாத், சவ்வரிசி பகாளபாத், சேமியா பகாளபாத் முதலானவைகளையும் அளித்துவிடுவதாய் நிச்சயித்தேன். அவ்வளவுதான் நமம ஆசாரியாருக்கு பாக்யம். இந்த சாப்பாடு சாப்பிட அவருக்கு அதிர்ஷ்டமில்லை. எனக்கு ஒரு அவஸரத் தந்தி வந்தது அன்று இரவே வெளியூர் போய்விட்டேன். அவருக்கு சாப்பாடு போடுவது நிச்சயம். நானும் மறப்பதில்லை. நீங்களும் மறக்கவேண்டாம்.

விநோதன்

விஷ்ணு ஸஹஸ்ர நாமம்.

(முன் 183ம் பக்கம் தொடர்ச்சி)

315 விசிஷ்ட: (ஓம் விசிஷ்டாய நம:) அதிகமாய் சிஷ்டர்களை உண்டாக்கியவர். விசேஷமாய் ப்ரளய காலத்தில் மீர்ந்து இருப்பவர்.

316 சிஷ்டேஷ்ட: (ஓம் சிஷ்டேஷ்டாய நம:) சிஷ்டர்களால் பூஜிக்கப்படுகிறவர். ப்ரளய காலத்தில் மீர்ந்திருக்கும் மகாலட்சுமியைக் கொண்டவர்.

317 சிகண்டீ (ஓம் சிகண்டினே நம:) ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில் தலையில் மயிற்றோகையுள்ளவர். முக்குடுமியுள்ளவர். சுகசாலிகளை கண்டிக்கின்றவர்.

318 நஹுஷ: (ஓம் நஹுஷாய நம:) அஸுரர்களை கட்டுகிறவர். தமது மாயையால் உலகைக் கட்டுகிறவர்.

319 விருஷ: (ஓம் விருஷாய நம:) பக்தர்கள் விரும்புவதை வர்ஷிப்பவர். தர்ம ஸ்வரூபர்.

320 க்ரோதஹா (ஓம் க்ரோதக்னே நம:) க்ரோத ஸ்வரூபர்களான அஸுரர்களைக் கொல்பவர். ஸத்துக்களின் கோபத்தை நீக்குபவர். கருணாநிதியாயிருப்பதால் கோபத்தை ஒழிப்பவர்.

321 க்ரோதக்ருத் (ஓம் க்ரோதக்ருதே நம:) அஸாதுக்களிடம் கோபத்தைச் செய்பவர். கோபத்தை ஹிம்சிப்பவர்.

322 கர்த்தா (ஓம் கர்த்ரே நம:) ஸ்வதந்திரர்.

323 விச்வபாஹு: (ஓம் விச்வ பாஹவே நம:) ஜகத்திற்கு க்ஷேமகரமான கைகளையுடையவர். விச்வர் எனப்படும் வாயு பகவானுக்கு காரணமாயுள்ள பாஹுக்களை உடையவர்.

324 மஹீதர: (ஓம் மஹீதராய நம:) பூமியை தரிப்பவர். பூஜையைப் பெறுகிறவர்.

325 அச்யுத: (ஓம் அச்யுதாய நம:) தவறுதலில்லாதிருப்பவர். விகாரங்களில்லாதிருப்பவர்.

326 ப்ரதித: (ஓம் ப்ரதிதாய நம:) ப்ரசித்தரானவர். கீர்த்தி வாய்ந்தவர்.

327 ப்ராண: (ஓம் ப்ராணாய நம:) உத்தமர்களை தன் லோகத்திற்கு கொண்டு போகிறவர். ஸரஸ்வதி தேவிக்கு மேலானவர். வாயு ரூபியாக இருப்பவர். பிராணனாய் இருப்பவர்.

328 ப்ராணத: (ஓம் ப்ராணதாய நம:) உயிரைத் தருபவர். எல்லோருக்கும் பலத்தைக் கொடுப்பவர்.

329 வாஸவானுஜ: (ஓம் வாஸவானுஜாய நம:) வாஸவனென்றால் இந்திரன், வஸுவின் பிள்ளை, ரத்னங்களை உடையவன். அஸுரர்களின் வரத்தை நாசம் செய்பவர். அவனுடைய தம்பியாக உபேந்திரன் எனப் பிறந்தவர்.

33() அபாம்நிதி: (ஓம் அபாம் நிதயே நம:) ஸமஸ்த தேவர்களுக்கும் ஆச்ரமாயிருப்பவர். ஸமுத்ர ரூபியானவர்.

331 அதிஷ்டானம் (ஓம் அதிஷ்டானாய நம:) ஜகத்தை தம்மிடம் நிலை நிற்கச் செய்தவர்.

332 அப்ரமத்த: (ஓம் அப்ரமத்தாய நம:) அதிகமாய் மதமில்லாதவர். பக்த ஸம்ரக்ஷணத்தின் ஊக்கம் தவறுதிருப்பவர். தர்ம பலனை அளிப்பதில் ஊக்கம் தவறுதிருப்பவர்.

333 ப்ரதிஷ்டித: (ஓம் ப்ரதிஷ்டிதாய நம:) பெருமை உண்டானவர்.

384 ஸ்கந்த: (ஓம் ஸ்கந்தாய நம:) பெருகுகிறவர். எல்லாவற்றையும் உலர்த்துகிறவர், அழிப்பவர்.

335 ஸ்கந்ததர: (ஓம் ஸ்கந்தராய நம:) ஸுப்ரமண்யரை தரிப்பவர், தர்மத்தை தரிப்பவர்.

336 துர்ய: (ஓம் துர்யாய நம:) பாரத்தை தாங்குபவர். உலகத்தை தாங்குபவர்.

337 வரத: (ஓம் வரதாய நம:) வரங்களைத் தருபவர். மோக்ஷத்தை அளிப்பவர். பரமசிவன் முதலியோர் கொடுத்த வரங்களை நாசம் செய்பவர். பதியில்லாதவர்களான சூர்ப்பநகை முதலான ராக்ஷஸ ஸ்திரீகளை நாஸிகை சேதம் முதலியவைகளால் தண்டிப்பவர்.

அவரத: (ஓம் அவரதாய நம:) அஸுரர்கள் ஹிம்ஸிக்கும் பற்களைக்கொண்டவர்.

338 வாயுவாகந: (ஓம் வாயுவாகநாய நம:) வாயு பகவானை வாகனமாக உடையவர். மருத்துகளை நடத்துகிறவர். பிராண வாயுவை வகிப்பவர்களான ஜீவர்களை நடத்துகிறவர். பிராண வாயுவை நடத்துகிறவர்.

339 வாஸுதேவ: (ஓம் வாஸுதேவாய நம:) வஸுதேவருடைய குமாரர். ஞானமாயும் உண்டாக்குகிறவராயும் க்ரீடாதி குணவிசிஷ்டராயுமிருப்பவர். எங்கும் வாஸம் செய்பவராயும் எல்லோர்களின் வாஸத்திற்கு இருப்பிடமாயுள்ளவராயும் பிரகாசமுள்ளவராயும் இருப்பவர். அவித்யாதிகளால் எல்லாவற்றையும் மூடுகிறவராயும் மறைப்பவராயும் வியாபிப்பவராயும் விளையாடுகிறவராயும் இருப்பவர். பலிஷ்டராயும் ப்ராண ரூபியாயும் கொடுப்பவராயும் எங்கும் இருப்பவராயும் இருப்பவர்.

340 ப்ருஹத்பானு: (ஓம் ப்ருஹத்பானவே நம:) அதிகமான பிரகாசமுள்ளவர்.

341 ஆதிதேவ: (ஓம் ஆதிதேவாய நம:) உலகத்துக்கு காரணமாயுள்ள தேவர். பிரகாசனுதி குணங்களை உடையவர்.

342 புரந்தர: (ஓம் புரந்தராய நம:) அஸுரர்களின் புரங்களை பிளப்பவர்.

343 அசோக: (ஓம் அசோகாய நம:) சோகமில்லாதவர். துக்கத்தை நீக்குபவர்.

344 தாரண: (ஓம் தாரணாய நம:) ஸம்ஸாரத்தைத் தாண்டுவிப்பவர். பயத்தை கடக்கச்செய்பவர். ப்ரணவத்தால் சுகம் ஏற்படச் செய்கிறவர். சூரிய மண்டலத்தில் அந்தர்கதராயிருப்பவர். சூரிய வம்சத்தில் பிறந்தவர்.

345 தார: (ஓம் தாராய நம:) பக்தர்களை கர்பவாஸம் ஜனனம் மரணம் ஸம்ஸாரம் இவைகளின் மகத்தான பயத்தினின்றும் கரையேற்றுபவர்.

346 சூர: (ஓம் சூராய நம:) ஸாமர்த்தியமுள்ளவர். பராக்கிராக்கிரமமுள்ளவர். யுத்தத்தை நடத்துகிறவர். பயந்தவர்களால் துடரப்பட்டவர். வெளியான சுகமுள்ளவர்.

347 சௌரி: (ஓம் சௌரயே நம:) சூரராஜனின் குலத்தில் பிறந்தவர்.

348 ஜனேச்வர: (ஓம் ஜனேச்வராய நம:) ஜனங்களுக்கு ஈச்வரர். பிறப்பில்லாத பகவானின் ஸ்திரீயான லக்ஷ்மியின் அதிபதி. பிறப்பற்றவனும் ஈசுவரனுமிருப்பவர்.

349 அனுகூல: (ஓம் அனுகூலாய நம:) பக்தர்களுக்கு ஹிதத்தை செய்பவர். கங்காதி புண்ய நதிகளின் கரையின் சமீபம் வசிப்பவர்.

350 சதாவர்த்த: (ஓம் சதாவர்த்தாய நம:) அமிர்தபானத்திற்கு அருகர்களான நூறு தேவர்களை நன்கு நடத்துபவர். நூற்றுக்கணக்கான ஜலத்தின் சுழல் முதலான காரியங்களை நடத்துகிறவர்.

351 பத்மீ (ஓம் பத்மினே நம:) கமல மலரை கையில் தரித்தவர். பிரம்மாவை பிள்ளையாகக்கொண்டவர்.

352 பத்மநிபேக்ஷண: (ஓம் பத்மநிபேக்ஷணாய நம:) கமல புஷ்பத்திற்கொப்பான கண்களையுடையவர். கமலத்திற்கொப்பான

கண்களையுடையவர். தாமரையின் பந்துவான சூரியனும் விசேஷ காந்தியுள்ள சந்திரனும் கண்களாய்க்கொண்டவர்.

353 பத்மநாப: (ஓம் பத்மநாபாய நம:) கமல மலரை நாபியிற்கொண்டவர், தாமரையை நடத்தும் சூரியனைப்போல் காந்தியுடையவர். தாமரையின் நடுக்காயில் இருப்பவர். தாமரை போன்ற நாபியுடையவர்.

354 அரவிந்தாக்ஷ: (ஓம் அரவிந்தாக்ஷாய நம:) இருளாய் இல்லாததான ப்ரகாசமாகிய க்ஞானத்தை கண்ணாகவுடையவர். நீலோத்பலம் போல் கண்களையுடையவர்.

355 பத்மகர்ப: (ஓம் பத்மகர்பாய நம:) தாமரையை வயிற்றிற்கொண்டவர். சதுர்முகனை அன்னமாக உடையவர்.

356 சரீரப்ருத்: (ஓம் சரீரப்ருதே நம:) அழிவுள்ளதால் சரீரமெனப்படும் ஜகத்தை போஷிப்பவர். அநேகமான பாணமுடையவரும் ப்ரேரிப்பவரும் தரிப்பவருமானவர்.

357 மஹர்த்தி: (ஓம் மஹர்த்தயே நம:) பெரும் செல்வமுடையவர். யக்ஞாதி உற்சவங்களால் விருத்தியுடையவர். பலி சக்கரவர்த்தியின் யக்ஞத்தில் த்ரிவிக்ரம ரூபத்தால் அபிவிருத்தியுடையவர்.

358 ரித்த: (ஓம் ரித்தாய நம:) க்ஞானானந்தாதிகளால் அபிவிருத்தியடைந்தவர்.

359 வ்ருத்தாத்மா (ஓம் விருத்தாத்மனே நம:) குணங்களால் வ்ருத்தர்களான பிரம்மாதிகளின் அந்தர்யாமியாயிருப்பவர். விருத்தியடைந்த சரீரமுள்ளவர். அநாதியாய் இருப்பதால் வயது சென்றவர்.

360 மகாக்ஷ: (ஓம் மகாக்ஷாய நம:) மகத்தான கண்களையுடையவர். சிறந்த இந்திரியங்களையுடையவர்.

361 கருடத்வஜ: (ஓம் கருடத்வஜாய நம:) இறகுகளுடன் ஆகாயத்தில் பறப்பவரும் ஸர்ப்பங்களை விழுங்குகிறவருமான கருடனை த்வஜமாகக்கொண்டவர்.

(தொடரும்)

பிரபஞ்சம் பொய்யன்று. மெய்யேதான்.

ஓர் அத்வைத வித்வானின் பகிரங்க அங்கீகாரம்.

சதுஸ்சாஸ்திர வித்வான் ஸ்ரீமான் விச்வம்பர சாஸ்திரிகள் பெல்காம் மதுரவாணி ஸம்ஸ்கிருத பத்திரிகையின் 2வது வாலியம் 8வது சஞ்சிகையில் அறிவிப்பதாவது—

பிரமாணம் ஒன்றைத்தான் கவனிப்பவனும் அதைத்தான் சரணமாகக் கொண்டிருப்பவனும், வேறு எதையும், பிரதானமாய்க்கொள்ளாதவனும், எனது மதம் என்ற அபிமானத்தை தூரத்தள்ளினவனும், உண்மையைக் கண்டு பிடிப்பதில் ஆசை கொண்டவனுமான நான் சென்ற இரண்டு சஞ்சிகைகளில் அத்வைத ப்ரம்மம் குதிரைக் கொம்புதான் என்றும் ஜீவப்ரம்ம அபேதமும் அப்ரமாணிகமே என்றும் இரண்டு நிரூபகங்கள் மூலமாய் அத்வைத மதத்தில் பிரம்மத்திற்கு நிர்குணத்வமும் ஜீவேசுவரர்களுக்கு ஐக்யமும் எவ்வாறு சித்திப்பதில்லை என்பதை செவ்வனே எடுத்துரைத்திருக்கிறேன். மாதம் இரண்டாகியும் யாவரிடமிருந்தும் எந்த பதிலும் வரவில்லை. ஆதலால் பிரம்மம் குணபூர்ணம் என்பதிலும் ஜீவேசுவரர்களில் பேதம்தான் என்பதிலும் கொஞ்சமேனும் சிறுசிறு சம்சயலேசமும் இல்லை என்று ஏற்பட்டு அதில் ஸம்பூர்ண நம்பிக்கை உண்டாய் என் மனம் தெளிவடைந்துவிட்டது. தற்போது மீண்டும் ஜகத் ஸத்யமென்னும் விஷயத்தில் எனது அத்வைத மதத்தை வெளியிட விரும்புகிறேன். எமது அத்வைத மதத்தின் பந்துக்கள் தம் மதம் கல்பம்தான் என்று காட்டத்தகும்படியாய் நான் கேட்கும் சந்தேகங்களுக்கு எந்த பதிலும் சொல்லாமல் மௌனம் சாதிப்பதுதான் தம் மானத்தைக் காக்கிறது என்று எண்ணியிருக்கின்றனர். அவர்களுக்காக நான் இதை வெளியிடுகிறேன்.

"ந சாஸ்தா ந சாஸ்த்ரம் ந சிஷ்யோ ந சிக்ஷா, நசத்வம் நசாஹம் ந சாயம் ப்ரபஞ்ச:| ந வர்ண: நவர்ணாச்ரமாசாரதர்மா: ந மாதா பிதாவா ந தேவா ந லோகா:|| ந வேதா ந யக்ஞா ந தீர்த்தம் ப்ருவந்தி ந மீமாம்ஸகர்தேர்மதம்" என்று தசச்லோகியிலும் "ந புண்யம் ந பாபம் ந ஸௌக்யம் ந துக்கம் ந மந்த்ர:..............ந மேஜாதிபேத: ந முக்திர் ந பந்த:" என்று நிர்வாணஷட்கத்திலும் "ந நிரோத: ந சோத்பத்தி

நபத்த: நச ஸாதக: நமுமுக்ஷு: நைவ முக்த:இத்யேஷா பரமார்த்ததா' என்று கௌடபாத காரிகையிலும் இத்யாதி ச்லோகங்களால் அத்வைதிகளால் ப்ராம்மணாதி வர்ணங்களுக்கும், பிரம்மசர்யம் முதலான ஆச்ரமங்களுக்கும், ஸ்நானம் ஸந்தியாவந்தனம் யக்ஞம் முதலான கர்மங்களுக்கும் இவைகளின் பலமாகவுள்ள ஸ்வர்க்காதிகளுக்கும், தேவர்கள் முதலானவர்களுக்கும் வேதம் முதலானவைகளுக்கும் கங்காதி தீர்த்தங்களுக்கும் அஸத்யத்வத்தை நிரூபிப்பது எது உண்டோ, அது ப்ரமாணங்களுக்கு விருத்தமாய் இருப்பதாலும் பிரமாணங்கள் அனுக்ரஹிக்க இடமில்லாமல் இருப்பதாலும் சுபத்தைப்பெற விரும்புகிறவர்கள் யாவரும் சொத்தைப் பூசனியைப்போல் வெளியில் விட்டெறியவேண்டியதே ஆகும்.

பிரபஞ்சம் பொய் என்னும் விஷயத்தில் ஒரு பிரமாணமாகிலும் கிடைப்பதில்லை. அவ்வாறு கிடைக்காததோடு பிரபஞ்சம் ஸத்யம் என்பதில்தான் நன்கு ஆதாரமாயிருக்கும் பிரமாணங்கள் ஆயிரக்கணக்காய் அகப்படுகின்றன. "நாபாவ உபலப்தே:" என்னும் பிரம்ம ஸூத்ரத்தை வியாக்யானம் செய்தவரும்பொழுது ஜகத்தை மித்யை என்று சொல்லும் பௌத்த மதத்தை கண்டிக்கும் சாக்கில் ஜகத் ஸத்யம் என்றுதான், அத்வைத மதத்தின் ஸ்தாபகரென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் ஸ்ரீசங்கரபகவத் பாதாளால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. வெகு காலம் கூர்மையாய் நான் விசாரம் செய்தும் இதற்கு பாதகமான பிரமாணம் ஒன்றுகூட எனக்கு தோன்றுகிறதில்லை.

பிரபஞ்சம் ஸத்யமென்னும் விஷயத்தில் வேத ப்ரமாணங்களைச் சொல்லுகிறேன். "ததேதத் ஸத்யம்" [முண்டகம் 2, 1, 1.] என்னும் ஆதர்வணசுருதி எவ்வாறு பிரம்மத்திற்கு ஸத்யத்வத்தை போதிக்கிறதோ அவ்வாறுதான் அதே உபநிஷத்தில் "ததேதத் ஸத்யம்" என்று வேதம் ஜகத்துக்கும் ஸத்ய'த்வத்தை நிரூபிக்கிறது. அந்த சுருதியில் அவ்வகையான ஸத்யத்வம் சொல்லப்படுகிறது. இந்த சுருதியில் இவ்வகையான ஸத்யத்வம் சொல்லப்படுகிறது என்று சொல்லமுடியாதிருப்பதால் இவ்விரண்டு சுருதிகளுக்கும் அணுமாத்ரமும் பேதமில்லை. சங்கராச்சாரியாரும்கூட இவ்விரண்டு சுருதிகளிலுமுள்ள ஸத்ய பதத்திற்கு அவிததம் மித்யையல்ல ஸத்யம் என்றுதான் வியாக்யானம் செய்திருக்கிறார்.

எவ்வாறு இந்த பிரம்மம் ஸத்யமோ அவிததமோ அவ்வாறே இந்த ஜகத்தும் ஸத்யம் அவிததம் மித்யையன்று ஜகத்தின் ஸத்யத்வத்தை இந்த சுருதி ஸ்பஷ்டமாய் நிரூபிக்கிறது. இங்கு சங்கராசாரியார் கர்மாதிகளுக்குத்தான் ஸத்யத்வத்தை சொல்லியிருக்கிறாரேயன்றி

ஜகத்துக்கு சொல்லவில்லை என்று சிலர் ஆக்ஷேபணை செய்கின்றனர். அப்படியே அவர்களின் ஒப்புக்கொள்தல்படி பிரம்மத்தைத் தவிர்த்துள்ள கிஞ்சித் கர்மாதிகளுக்கு ஸத்யத்வத்தை ஒப்புக்கொண்டுவிட்டால் பிரம்மத்தைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்று சொல்லும் அத்வைத மதத்திற்கு ஹானியும் த்வைதத்திற்கு சித்தியும் ஏற்படுவதை இவர்கள் ஏனோ அறியவில்லை என்று வெகு ஆச்சரியகரமாய் இருக்கிறது.

ஆக இவ்வாறு "விச்வம் ஸத்யம் மகவாநாயுவோ ரிதாபஸ்சன ப்ரமினந்தி வ்ரதம்வாம்" என்னும் சுருதியும் விச்வம் ஸத்யம் என்று ஜகத்திற்கு ஸத்யத்வத்தை போதிக்கிறது. பலவகை வித்யையில் பாரங்கதரான வித்யாரண்ய ஸ்வாமிகள்கூட இந்த சுருதியிலுள்ள ஸத்யம் என்னும் பதத்திற்கு அவர்செய்த வேதபாஷ்யத்தில், ஸத்யம் என்றால் யதார்த்தமாய் இருப்பதுதான், ஆரோபிதமன்று, கல்பிதமன்று என்று ஜகத்தில் கல்பிதமாயுள்ள மித்யாத்வத்தை நிராகரித்து அதன் ஸத்யத்வத்தைத்தான் கூறியுள்ளார். விச்வம் எல்லா ஸ்தோத்திர சமூகங்களும் ஸத்யம் யதார்த்தமானது அதாவது இந்த ஸ்தோத்திரங்களால் எந்த குணசமூகங்கள் நிரூபிக்கப்படுகின்றனவோ, அந்த எல்லா குணசமூகங்கள் இந்திராதிகளான உங்களிடம் இருப்பவைகள்தான்; அவைகள் ஆரோபிதமானவைகளன்று என்று இந்த சுருதியில் ஸ்தோத்திரம் என்னும் பதத்தை சேர்த்துக்கொள்வதால், இந்திராதி தேவர்களிடம் உள்ள குணங்கள் ஆரோபிதமாயில்லாத ஸத்யமென்பதைதான் இந்த சுருதி அறிவிக்கிறதென்று வித்யாரண்ய ஸ்வாமிகள் கூறுகின்றாரேயல்லாது, ஜகத்துக்கு ஸத்யத்வத்தைக் கூறவில்லை என்று கக்ஷியாடுவது சரியல்ல. அப்படி செய்வதால் பிரம்மத்தை தவிர்த்துள்ளதான ஜகத்தில் சேர்ந்த இந்திராதிகளின் குணங்களுக்கு ஸத்யத்வம் சித்திப்பதால், அத்வைதிகளின் சித்தாந்தமாயுள்ள அத்வைதத்திற்கு பங்கமும் எதிராளிகளின் சித்தாந்தமான த்வைதத்தின் சித்தியும்தான் உண்டாகும். உண்மையில் "விச்வம் து க்ருத்ஸ்னே புவனே விச்வே தேவேஷு நபுமே! விச்வாத்வதி விஷாயாம் ஸ்த்ரீ ஜகதி ஸ்யான்னபும்ஸகம்" என்று நிகண்டு அர்த்தத்தை கொண்டு பார்த்தால் விச்வம் என்னும் பதத்திற்கு ஜகத் என்னும் அர்த்தம் பிரசித்தமானது. அவ்வாறு ஜகத் என்னும் அர்த்தமுள்ள விச்வபதத்தாலேயே அபிப்பிராயம் ஏற்படும் பொழுது, புதிதாய் கேட்டிராத ஸ்தோத்திரம் என்னும் பதத்தை வெளியிலிருந்து எடுத்து, அதில் அத்யாஹாரம் செய்வதற்கு என்ன காரணம் என்று, நான் எவ்வளவு யோசித்தும் என்

னதிற்கு சம்சயம் நீங்கி ஸமாதானம் புலப்படவில்லை. அத்யாஹாரம் செய்யவேண்டிய அவசியமில்லாமலிருப்பினும் ஓர் பதத்தை நூதனமாய் அத்யாஹாரம் செய்து, தான் விரும்பும் அர்த்தத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியதுதான் முறை என்று இருக்கும் பக்ஷத்தில் "ஸத்யம் க்ஞானமநந்தம் ப்ரம்ம" என்னும் சுருதியில்கூட ந என்னும் பதத்தை நூதனமாய் அத்யாஹாரம் செய்து, பிரம்ம ந ஸத்யம், ந க்ஞானம் ந அநந்தம், பிரம்மம் ஸத்யம் அன்று க்ஞானமன்று அநந்தமன்று என்று செய்யப்படும் அர்த்தமும் வேதார்த்தமாககூடும். ஆதலால் மேற்கண்ட சுருதி இந்திராதிகளான எல்லா ஜகத்துக்கும் ஸத்யத்வத்தை போதிப்பதின் நிமித்தம் பிரபஞ்சம் மெய்யே என்பதுதான் சித்தமாகிறது.

மேலும் "யாதாதத்யதோ அர்த்தான் வ்யததாத் சாச்வதீப்ய: ஸமாப்ய:" என்னும் ஈசாவாஸ்ய ச்ருதியும்கூட, யதார்த்தம் து யதாததம் என்று நிகண்டு பலத்தைக்கொண்டு, யதாததம் யதார்த்தம் என்னும் இரண்டு பதங்களும் ஒரே அர்த்தமுள்ளவைகள் என்று தெரிய வருவதால், யதாதத்யம் என்பதற்கு யதார்த்தம் என்று அர்த்தம் ஏற்படுவதின் நிமித்தம், சுருதியிலுள்ள யாதாதத்யத: என்பதற்கு யதார்த்தத் தன்மையுடன்கூடிய அர்த்தான் வஸ்துக்களை வ்யததாத் சிருஷ்டி செய்தார் என்று அர்த்தமுண்டாய் இந்த சுருதி ஈசுவரனுடைய ஸத்யமான ஜகத்தின் சிருஷ்டித்தலைத்தான் நிரூபிக்கிறது.

மேலும் "யச்சிகேத ஸத்யமித்தன்ன மோகம்" என்னும் சுருதியும்கூட ஈசுவரன் யத்—எந்த ஜகத்தை சிகேத—நிர்மாணம் செய்திருக்கிறாரோ தத்—அந்த ஜகத் ஸத்யமித் ஸத்யம்தான் யதார்த்தம்தான் ந மோகம் மித்யையன்று பொய்யன்று என்று ஜகத்தின் மித்யாத்வத்தை நிராகரித்து, ஸத்யத்வத்தை ஸ்பஷ்டமாய் அறிவிக்கிறது. இந்த சுருதியிலுள்ள மோகம் என்னும் பதத்திற்கு வ்யர்த்தம் என்னும் அர்த்தம் இருப்பதால், அதற்கு எதிரிடையாய் வேதத்தில் காணப்படும் ஸத்யம் என்னும் பதத்திற்கு ஸபலம் என்னும் அர்த்தத்தைத்தான் ஏற்பது உசிதமாகும்; ஆதலால் அந்த அர்த்தத்தை வைத்துக்கொள்வதால் இந்த சுருதியால் ஜகத்தின் ஸத்யத்வம் சித்திப்பதில்லை, என்று கூறியாடுவது சரியல்ல, ஏனெனில் ஸத்யம் என்னும் பதத்திற்கு ஸபலம் என்னும் அர்த்தம் இருப்பதாய் எங்கும் காணப்படுவதில்லை. ஆகவே வேதத்தில் முதலில் காணப்படும் ஸத்யம் என்னும் பதத்திற்கு யதார்த்தமென்று அர்த்தம் இருப்பதைக்கொண்டு, அதற்கு விரோதமில்லாமல் அந்த ஸத்யபதத்திற்கு எதிரிடையாக வேதத்தில் காணப்படும் மோகம்

என்னும் பதத்திற்கு யதார்த்தத்திற்கு எதிரானது அயதார்த்தமானது—மித்யை என்று அர்த்தம் செய்யவேண்டியதுதான் முறையாகும். மேலும் ந மோகம் என்பதால் வ்யர்த்தத்வமில்லாத ஸாபல்ய அர்த்தத்தை ஏற்றுக்கொண்டாலும், அத்வைதிகளின் சித்தாந்தப்படி அஸத்தான ஜகத்துக்கு ஸபலத்வம் ஏற்படமாட்டாததலால் ஜெகத்துக்கு ஸத்யம் தான் சித்திக்கிறது 'பிராம்மணோஸ்ய முகமாஸீத் பாஹூ ராஜன்ய: க்ருத:] ஊரு ததஸ்ய யத்வைச்ய: பத்ப்யாம் சூத்ரோ அஜாயத] முதலான சுருதியும், "சாதுர் வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்" "ப்ராம்மண க்ஷத்ரிய விசாம் சூத்ராணும் ச பரந்தப" முதலான ஸ்மிருதிகளும் "க்ஷத்திரியத்வாவகதே ஸ்சோத்தரத்ர சைத்ர ரதேனலிங்காத்" என்று பிரம்ம சூத்ரமும் பிராம்மணாதி வர்ணங்களை அறிவிக்கின்றன.

"யதஹரேவ விரஜேத் ததஹரேவ ப்ரவ்ரஜேத" "ப்ரம்மசர்யேண தபஸா" முதலான சுருதியும் பிரம்ம சர்யாதி ஆசிரமங்களின் ஸத்யத்தன்மையை விவஸ்தை செய்கிறது.

"ஜோதிஷ்டோமேன ஸ்வர்க்க காமோ யஜேத" "வஸந்தே ப்ராம்மணோ அக்னீனாததீத" "அஹரஹ: ஸந்த்யாமுபாஸீத" முதலான சுருதியும் "ஸஹயக்ஞா: ப்ரஜா: ஸிருஷ்ட்வா" "யக்ஞைரிஷ்ட்வா ஸ்வர்கதிம் ப்ரார்த்தயந்தே" முதலான ஸ்மிருதியும் "அக்னிஹோத்ராதிது தத்கார்யாயைவ தத்தர்சனாத்" முதலான ப்ரம்மஸூத்ரங்களும் யக்ஞம் சந்தியா வந்தனம் அக்னி ஹோத்ரம் முதலான கர்மங்கள் ஸத்யமென்று அறிவிக்கின்றன. "அக்னிர்வை தேவானாம் அவம: விஷ்ணு: பரம: ததந்தரேண ஸர்வா: அன்ய தேவதா:" "முகாத் இந்த்ரஸ்ச அக்னிஸ்ச" "தேவான் பாவயதானேன" "தேவாதிவதபிலோகே" முதலான சுருதி ஸ்மிருதி சூத்ரங்கள் இந்திரன் அக்னி முதலான தேவர்களுக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கின்றன.

"ரிக்வேதம் போ அத்யேமி யஜுர்வேதம் ஸாமவேத மதார்வணம்" (சாந்தோக்யம் 7, 1, 2) "வேதேஷு யக்ஞேஷு" "வேதைஸ் ஸர்வை:" "வேத விதேவசாஹம்" முதலான ச்ருதிஸ்மிருதிகள் ரிக்வேதம் முதலான வேதங்கள் ஸத்யம்தான் என்று உரக்க கூவுகின்றன.

"இமம் மே கங்கே யமுனே ஸரஸ்வதி" என்னும் சுருதி கங்கை முதலான தீர்த்த ஸமூகங்களுக்கு ஸத்யத்வத்தை அறிவிக்கிறது.

(தொடரும்.)

ஸ்ரீ மத்வாசாரியார் இயற்றிய

ஸ்ரீ மகா பாரத தாத்பர்ய நிர்ணயம்.

(ஸ்ரீமத். வே. பாகவத ரங்கனுதாசாரியாரின் மொழி பெயர்ப்பு)

முப்பத்தி ஒன்றும் அத்யாயம்.

(முன் 166ம் பக்கம் தொடர்ச்சி)

இந்த அத்யாயத்தில் மகாபாரதம் ஆச்ரமவாஸிக பர்வத்தின் கதை சொல்லப்படுகிறது. யக்ஞத்திற்கு அதிபதியான ஸ்ரீ க்ருஷ்ணருடன் சேர்ந்த பாண்டவர்கள் விஷ்ணு பக்தி கொண்டவர்களாய் பூமியை சம்ரக்ஷித்து வரும்பொழுது, யக்ஞத்தைச்செய்ய விருப்பங்கொண்ட ஓர் பிராம்மணோத்தமன் அதன் செலவிற்காக பணத்தை விரும்பி ராத்ரி காலத்தில் தர்மபுத்திரரிடம் வந்து சேர்ந்தான். அதற்கு தர்மபுத்திரர் மறுநாளை காலையில் கொடுக்கிறேன் என்று சொன்ன வார்த்தையை பிராம்மணன் கேட்டு யக்ஞத்திற்காக அவஸரப்பட்டு பீமசேனரை யாசித்தான். தர்மபுத்திரன் சொன்ன வார்த்தையை பிராம்மணன் மூலமாய் பீமசேனர் கேட்டு தன் கைமேல் தோடாவை கழற்றிக்கொடுத்தார். அமூல்யமாயும் அக்னியைப்போல் ஜ்வலிக்கும் விசித்ரமான ரத்னங்கள் இழைத்ததுமான அந்த தோடாவை பிராம்மணன் அடைந்து வந்த காரியம் கைகூடியவனாய் புறப்பட்டு போனான். அவன்போனவுடன் பீமசேனர் அந்த நடுநிசியில் நந்தி வாத்யம் முழங்கச் செய்தார். அகாலத்தில் உண்டான இந்த நந்தி வாத்தியத்தின் முழக்கத்தை தர்மபுத்திரர் கேட்டுவிட்டு தூதர்கள் மூலமாய் இதன் காரணம் என்னவென்று விசாரித்தார். அப்பொழுது பீமசேனர் தர்மபுத்திரருக்கு சொன்னதாவது தர்மபுத்திரர் மரணமுள்ள சரீரங்கொண்டவராயிருப்பினும் மறுநாள் காலை வரையில் தான் பிழைத்திருப்பேன் என்று தன் ஆயுளின் நிச்சயங்கொண்டவரானார். அதனால் எனக்கு சந்தோஷமுண்டாயிற்று. இப்படி பீமசேனரால் சொல்லியனுப்பப்பட்ட தர்மபுத்திரர் தர்ம காரியத்தில் தான் அவஸரப்படவேண்டும் என்று பீமசேனர் கொண்ட

எண்ணத்தை சிலாகித்துக்கொண்டு பீமசேனரின் வார்த்தை சரியானதுதான் என்று சொன்னார். பிறகு தர்மபுத்திரர் தர்ம காரியத்தில் அதிக அவசரமுள்ளவரானார்.

த்ருதராஷ்டிரனுக்கு வைராக்யம்.

த்ருதராஷ்டிரன் விஷய சுகத்தில் ஈடுபட்டவராயும் துஷ்டஸஹவாஸாதி தோஷமுள்ளவராயும் பல தோஷங்களைச் செய்தவராயும் எல்லா அஸுரர்களின் நாசத்திற்கு காரணமாயும் இருப்பதைக்கண்டு, அவரிடம் பீமசேனர் தயை புரிந்தார். எப்படி எனில் த்ருதராஷ்டிரன் க்ரூரமான தபஸ் செய்யாததால் அவருக்கு எக்காரணத்தாலும் அவருடைய கந்தர்வலோகம் கிடைக்காது. விஷயத்தின் ஆசை அதிகமாய் இருந்தால் இவர் தபஸ் செய்யமாட்டார் என்று த்ருதராஷ்டிரனுக்கு வைராக்யத்தை உண்டாக்கும் காரியங்களை பீமசேனர் செய்தார். தன்னுடைய அண்ணன் தம்பிமார்களும் த்ருதராஷ்டிரனின் நாட்டுப் பெண்களான த்ரௌபதி முதலானவர்களும் த்ருதராஷ்டிரனை பூஜித்தாலும் த்ருதராஷ்டிரனின் கட்டளையை பீமசேனர் பிறரைக்கொண்டு மீறச் செய்தார். அவமானத்தை சூசிக்கும் வார்த்தையாடினார். பீமசேனர் இவ்வாறு செய்தும் மற்ற தன் ஜனங்கள் யாவரும் பூஜித்து வந்ததால் த்ருதராஷ்டிரன் விரக்தியடையவில்லை. பத்னிமார்களுடன் கூடிய பீமசேனரைத்தவிர எல்லா பாண்டவர்களும் த்ரௌபதியும், காந்தாரியுடன் கூடிய த்ருதராஷ்டிரன் புத்திர சுகமுள்ளவராய் ஆகக்கூடாதென்று மிகுந்த ப்ரீதியுடன் எப்பொழுதும் சுச்ரூஷை செய்து வந்தனர். த்ருதராஷ்டிரன் அவர்களிடம் விசேஷ அன்பு அடைந்தும் ஜகத்ஸம்ஹாரகனான ஸங்கர்ஷண மூர்த்தியின் ஸாமர்த்தியத்தால் தான் தன் பிள்ளைகள் இறந்தனர் என்று அறிந்தும், பீமசேனரால் கொல்லப்பட்டுபோன தன் பிள்ளைகளை எண்ணி எண்ணி பீமசேனரிடம் அதிகமான ப்ரீதியுள்ளவராய் ஆகவில்லை. பீமசேனர் த்ருதராஷ்டிரனின் விஷயாஸக்தியையும் தன்னிடம் இருந்து வரும் த்வேஷத்தையும் பரிகாரம் செய்வதற்காக நகுல சகதேவர்களைப்பார்த்து, த்ருதராஷ்டிரன் கேட்கும்போது, தன் புஜங்களைத் தட்டிக்கொண்டு இவ்வாறு பேசினார். இந்த கிழவனுடைய நூறு

பிள்ளைகளும் எனைகளின் நடுவே வந்து இறந்தனரோ. அந்த என் இரு புஜங்கள்தான் இவை உருண்டும் திரண்டும் சந்தனம் பூசப்பட்டும் இருக்கின்றன. இப்படி பீமசேனர் சொன்னதை அவரிடமுள்ள சிநேகத்தாலும் கௌரவத்தாலும் நகுல சகதேவர்கள் ஆமோதித்தார்கள். பீமசேனர் இவ்வாறு பேசியது தௌபதிக்குப் குந்திக்கும் தெரியாது. பீமசேனரின் வார்த்தையைக் கேட்டு திருதராஷ்டிரனுக்கு உண்டான வைராக்யத்தை வளர்த்திக்கொண்டு விதுரன் இவ்வாறு பேசினான். ஹே திருதராஷ்டிரா! உயிருடன் இருக்க ஆசை உனக்கு மிகவும் அதிகமாயிருக்கிறது. சாமானியமாய் எல்லா பிராணிகளுக்குமே அந்த ஆசை அதிகம் தான். ஆச்சரியம். அந்த அந்த ஜீவனைசையின் பேரில்தான் நீங்கள் பீமசேனரால் அலக்ஷியமாய்ப் போடப்படும் அன்னத்தை நாய் போல் புசிக்கிறீர். உம்மைப் பார்த்து இவ்வாறு பேசியது பீமசேனருக்கு குற்றமாகாது. நீர் பீமசேனனைக் கொல்வதற்காக அரக்கு மாளிகையில் நெருப்பு வைத்து விஷம் கொடுத்தீர். அவனுடைய பத்னியான தௌபதியை சபையில் இழுத்தீர். அவனுடைய பூமியையும் திரவியத்தையும் அபகரித்தீர். உமக்கு பீமசேனன் என்ன அப்ரியம் செய்தான். மேலும் மிகவும் விஷயாஸக்தயிருந்த உமக்கு உபகாரம் செய்யவே' உமக்கு வைராக்யத்தை தரும் வார்த்தையை ஆடியிருக்கிறான். ஆகவே பீமசேனனிடம் துவேஷத்தை விடும். துவேஷத்தையும் காமத்தையும் விட்டு வனம் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்துகொண்டு தபஸ்ஸால் விஷ்ணுவை ஆராதனம் செய்யும். அதனால் நீர் சுத்தராவீர். என்றிவ்வாறு விதுரனால் சொல்லப்பட்ட திருதராஷ்டிரன் பீமசேனரிடம் துவேஷத்தை விட்டு வைராக்யமடைந்தார்.

திருதராஷ்டிரனின் தபஸ்ஸிற்கு அனுமதி.

தபஸ் செய்ய தர்மபுத்திரனின் அனுமதியைப் பெறுவதற்காக திருதராஷ்டிரன் உபவாஸம் செய்து வந்தார். போஜனம் செய்யாமல் திருதராஷ்டிரன் இருந்துவருகிறார் என்று நான்காவது நாள் தர்மபுத்திரர் தெரிந்துகொண்டு திருதராஷ்டிரனை போஜனம் செய்யும்படி அடுத்தடுத்து பிரார்த்தித்தார். நான் வனவாஸம் செய்ய உன் அனுமதியைப் பெற்றபின்தான் போஜனம் செய்வேன்

இல்லாவிடில் நான் போஜனம் செய்யப்போவதில்லை. என்று அடுத்தடுத்து சொல்லிக்கொண்டு, உபவாஸக்களையுள்ளவனாய், அதனால் இளைத்துப்போய் அக்ஷணமே மூர்ச்சையடைந்து காந்தாரியைப் பிடித்துக்கொண்டார். பிறகு தர்மபுத்திரன் ஸுகத்தை தருவதாயுள்ள தன் கையால் திருதராஷ்டிரனை மெதுவாய் தொட்டு ப்ரக்ஞை வரும்படி செய்தார். மகா துக்கமுள்ளவராய் தர்மபுத்திரன் திருதராஷ்டிரனைப் பார்த்து, ராஜனே! யுயுத்ஸுவை முன்னிடி வைத்துக்கொண்டு சத்ருபாதையில்லாமலிருக்கும் இந்த ராஜ்யத்தை அரசாளுவாய். உன் ஸத்கதிக்காக நாமெல்லோரும் வனத்தில் தவம் செய்கிறோம். என்று சொன்னார். அதற்கு திருதராஷ்டிரன் தர்மபுத்திரா இது தகாது. கடைசி காலத்தில் வனத்தில் சரீரம் விடுவது எங்கள் குலதர்மமாகும். ஆகவே எனக்கு அனுமதியைக்கொடுப்பாய் என்று தர்மபுத்திரனிடம் சொன்னார்.

திருதராஷ்டிரனும் தர்மபுத்திரனும் இவ்வாறு விவாதம் செய்யும்பொழுது சர்வக்ஞரும் சர்வகர்த்தாவும் ப்ரபுவும் ஸமர்த்தருமான ஸ்ரீ வேதவியாஸர் அங்கு தோன்றி தர்மபுத்திரரைப் பார்த்து பின்வருமாறு சொன்னார். தபஸ்ஸால் ஸமஸ்த தோஷங்களின் நாசத்தையும் விரும்பும் திருதராஷ்டிரனுக்கு அனுமதியளிப்பாய். அவனுக்கு தர்ம விக்னம் செய்யாதே. கடைசி காலத்தில் விரக்தி அடைந்து தபஸ்ஸால் பாப நிவர்த்தி செய்துகொண்டு திருதராஷ்டிரன் சத்கதியை அடையட்டும். தபஸ் இல்லாமல் போனால் அவன் நற்கதியடையமாட்டான். என்று வேதவியாஸரால் சொல்லப்பட்ட தர்மபுத்திரர் திருதராஷ்டிரனுக்கு அனுமதி தந்தார். பிறகு திருதராஷ்டிரன் போஜனம் செய்து தர்மபுத்திரனிடம் மிகுந்த சிநேகத்தால் அவன் எல்லாம் அறிந்தவனாயினும் அவனுக்கு ஸாதுக்களின் தர்மங்களையும் நீதியையும் நன்றாய் உபதேசம் செய்தார். தர்மபுத்திரனும் வினயத்துடன் அதை சிரவணம் செய்தார்.

தர்மபுத்திரன் திருதராஷ்டிரனின் அனுமதியைப் பெற்று தன் வீட்டுக்கு சென்றபின், திருதராஷ்டிரன் தான் சிராத்தம் செய்ய பணத்தை அபேக்ஷித்து விதுரனை பாண்டவர்களிடம் மறு

படியும் அனுப்பினான். விதுரன் சொன்ன வார்த்தையைக்கேட்ட தர்மபுத்திரன் பீமசேனரைப்பார்த்து திருதராஷ்டிரனுக்கு அவருடைய பிள்ளைகள், பேரன்கள், ஆப்த பந்துக்களுக்கு சிராத்தம் செய்ய அபேக்ஷிப்பதால், நாம் இப்பொழுது பூரா திரவியத்தையும் கொடுக்கவேண்டுமென்று சொன்னார். அப்பொழுது பீமசேனர் வேறொருவரின் தாக்ஷிண்யத்தின் பேரில் பாபிஷ்டர்களான விஷ்ணு த்வேஷிகளுக்கு பரலோகத்திற்கு வேண்டியதாயுள்ள சகாயம் செய்யலாகாது. பீஷ்மாதிகளை உத்தேசித்து நாம் கொடுத்த பணத்தைக்கொண்டு இந்த திருதராஷ்டிரன் தன் பிள்ளைகளான துரியோதனாதிகளை உத்தேசித்து சிராத்தம் செய்கிறார். இதை அறிந்து நாம் பணம் தந்தால் எங்களுக்கே பாபம் வந்து சேரும், என்று யோஜித்து, தர்மபுத்திரரைப்பார்த்து சொன்னதாவது:- துரியோதனாதிகள் எல்லோருமே மிகவும் கஷ்டமாயுள்ள தமஸ்ஸை அடையட்டும். பீஷ்மாதிகளுக்கு நாம் சிராத்தம் செய்வோம். ஆகவே திருதராஷ்டிரனுக்கு பணம் கொடுத்து பிரயோஜனம் என்ன. கன்னியாயிருக்கும்பொழுது கர்ணன் பிறந்ததால் எங்களுடன் சேர்ந்து குந்தி அவனுக்கு சிராத்தம் செய்ய அதிகாரம் பெற்றவளாவாள். அப்படியிருக்க திருதராஷ்டிரனுக்கு ஏன் பணம் கொடுக்கவேண்டும். என்றிவ்வாறு சொன்ன பீமசேனரைப்பார்த்து தர்மபுத்திரரும் அர்ஜுனனும் மீண்டும் சொன்னார்கள். வனத்திற்கு பிரயாணம் செய்ய விருப்பமுள்ளவனும் யாசிப்பவனுமான திருதராஷ்டிரனுக்கு பீமா உன் புஜபலத்தைக் கொண்டு சம்பாதித்த பணத்தைக் கொடு. இனி திருதராஷ்டிரன் உன்னை யாசிக்கப்போகிறனா? என்று தர்மபுத்திரனும் அர்ஜுனனும் சொன்ன போதிலும் நான் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி சுத்த தர்மத்தில் ஈடுபட்ட பீமசேனரை. அப்ரீதியுடன், "நீ பேசாமல் இரு" என்று சொல்லி விட்டு கஜானாவை விட்டு வெளியே தான போகம் இவைகளுக்கு உபயோகப்படும்படி என் பணம் எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவையும் என் தந்தையான திருதராஷ்டிரனுக்கே அளித்திருக்கிறேன் என்று சொன்னார், அர்ஜுனனும் அவ்வாறே சொன்னான். தர்மார்ஜுனர்கள் விதுரனிடமும் முக்யமான வைஷ்ணவ தர்மத்தில் ஈடுபட்ட பீமசேனனிடம் திருதராஷ்டிரன் கோபித்துக்கொள்ள வேண்டாம் என்று

சொன்னார்கள். இவ்வாறு சொல்லப்பட்ட விதுரன் பணத்தை எடுத்துக் கொண்டு அவருடைய தமையனை திருதராஷ்டிரனிடம் வந்து தர்மபுத்திரனும் அர்ஜுனனும் உம்மிடம் விசேஷ பக்தியைச் செய்தார்கள். பீமசேனர் சுத்தமான க்ஷத்திரிய தர்மத்தில் ஈடுபட்டவராதலால் உம்முடைய ஆக்ஞையில் அவ்வளவு ப்ரியப்படவில்லை. ஆகவே பீமசேனரிடம் கோபம் செய்யாதேயும். தர்மார்ஜுனர்கள் தர்மத்தில் ஈடுபட்டவர்களானதால் ப்ராணிகளிடம் கருணையுள்ளவர்கள் என்றிவ்வாறு விதுரன் சொன்னதைக் கேட்டு திருதராஷ்டிரன் பீமசேனரிடம் கோபம் செய்யாமல் சாந்தி பெற்ற புத்தியுள்ளவனாய், எல்லோருக்கும் சிராத்தம் செய்து அயோக்ய பிள்ளைகளின் ரிணபாதை இருக்கலாகாதென்ற எண்ணத்தால் சுத்தமான மனதுடன் பத்து நாள் சேர்ந்தாற்போல மகா தானங்களைச் செய்தான். (தொடரும்)

செய்தித் திரட்டு.

பம்பாய் வாணிவிஹார வித்யாலயம்

இன்று வரையில் பம்பாய் நகரில் மத்வமதஸ்தர்களின் நடுவில் எந்த விதமான மத்வமதத்திய பொது காரியங்களும் நடந்ததில்லை என்றும் இந்த வருஷத்தில் சென்ற 5, 6 மாதங்களுக்குமுன் ஸ்ரீ உத்தராதி மடாதிபதி ஸ்வாமிகள் இந்நகரில் சாதுர்மாஸ்ய ஸங்கல்பத்தில் தங்கியிருந்ததால், மத உணர்ச்சி ஏற்பட்டு அவர்களின் சிஷ்யரான நியாய வேதாந்த வித்வான் R. கோபாலகிருஷ்ணாசாரியார் மாஹாலுணி M. A. அவர்கள் வேதவேதாங்க வேதாந்தங்களை இந்நகரில் தற்போது மாதுங்கா டிவாங்ரோட் கணேச பவனத்தில் சாமானியமாய் கன்னட பாஷை மூலமாயும் அவசியமானால் மகாராஷ்டிர பாஷையிலும் அல்லது இங்கிலீஷிலும் கற்பிப்பதற்காக, வாணி விகார் வித்யாலயம் என்ற பெயருடன் ஓர் ஸம்ஸ்கிருத பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகவும், அதில் தற்போது 20 மாணவர்கள் வாசித்துக்கொண்டிருப்பதாகவும் 2 வேளை போஜன வசதிகளுடன் இலவசமாய் பாடம் கற்பிக்கப்பட்டு வருவதாகவும், சென்ற 4 மாதகாலமாய் லௌகிகர்களுக்கு உபயோகப்படும்படி பகவத்கீதை மத்வஸித்தாந்த ஸாரம் முதலிய நூல்களில் உபன்யாஸம் செய்யப்பட்டு வருகிறதென்றும் ஸ்ரீமான் T. K. ஸ்ரீனிவாஸ ராவ் அறிவிக்கிறார்.

பம்பாயைச் சேர்ந்த மாதுங்காவிலிருந்துவரும் வாணி விஹாரவித்யாலயாவின் ஆதரவில் பம்பாயிலுள்ள மாத்வர்களனைவரும்கூடி மத்வநவமி கொண்டாட்டம் மூன்று நாட்கள் கொண்டாடினார்கள் என்றும் பிரதி தினம் காலையில் மத்வ விஜய பாராயணமும் மத்தியானத்தில் பஞ்சாமிர்தபிஷேகம் பிராம்மண போஜனாதிகளும் மாலையில் ஸ்ரீமான் பண்டிட்

218927

கோபாலகிருஷ்ணாசார் மாவுளி M. A. அவர்களால் ஸ்ரீமத்வாச்சாரியார் சரித்திரமும் அவருடைய உபதேசமும் என்பதைப்பற்றி உபன்யாசங்களும் நடந்தனவென்றும் இம்மூன்று நாட்களில் சுமார் 400 பேருக்கு ப்ராம்மண போஜனம் நடந்ததென்றும் ஸ்ரீமான் T. K. ஸ்ரீனிவாசராவ் அறிவிக்கிறார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமன் மத்வஸித்தாந்த சபையின் 1938ம் வருஷத்து முதல் கால்பாக வருஷத்தில் மொத்த வரவு ரூ. 66—8—3 மொத்த சிலவு 22—1—11 என்றும் கையிருப்பு ரூ. 22—1—11 என்றும் மேற்படி சபையின் காரியதரிசி ஸ்ரீமான் M. S. பத்மநாப ராவ் விவரம்கண்ட கணக்கை அனுப்பியிருக்கிறார்.

விசேஷ தினங்கள்.

23—4—38	சனிவாரம்	சிரவண உப. விஷ்ணுப. உப.
26—4—38	மங்களவாரம்	ஏகாதசி உப.
29—4—38	சுக்ரவாரம்	திலதர்ப்பணம்.
30—4—38	சனிவாரம்	விஷ்ணுப. உப.
2—5—38	சோமவாரம்	அக்ஷயத்திருதியை.
10—5—38	மங்களவாரம்	ஏகாதசி உப.
12—5—38	குருவாரம்	நரஸிம்ம ஜயந்தி.
14—5—38	சனிவாரம்	பௌர்ணமி வைஸாகஸ்நானம் பூர்த்தி விஷ்ணுப. உப.

மாத்வ மித்திரன் ஷீட் காலண்டர்கள்.

நாம் எதிர்பார்த்தபடி ஏகாதசிப்பண்டிகையன்றே மாத்வ மித்திரன் காலண்டர்கள் வெளியாகி முன்னமே வந்திருந்த ஏராளமான ஆர்டர்களுக்கு அனுப்பப்பட்டன. விலையில் சிலவழிந்து வருவதால் மாத்வ மித்திரன் சந்தாதாரர்கள் பிரியப்பட்டால் தற்போதே ஆர்டர் செய்வது நலம். காலண்டர் பிரதி 1-க்கு 2 அணா தபாற்கூலி அணா ஒன்று, 2 டஜனுக்குமேல் ஆர்டர் செய்பவர்களுக்கு 2 காலண்டர்கள் இனாம், தபாற்கூலி வேறு. இன்னமும் சொற்ப நாட்கள் அடியிற்கண்ட விலாஸதார்களிடம் காலண்டர்கள் கிடைக்கும்.

1. P. S. ராமராவ் 41. சிங்காரச்சாரியார் தெரு, திருவல்லிக் (கேணி, மதராஸ்.
2. R. ஸ்ரீனிவாசராவ் 1112, மேல சித்திரைவீதி, ஸ்ரீரங்கம்.
3. V. ராமராவ் 13/156. எடயர் தெரு, கோயமுத்தூர்.

மானேஜர்,
மாத்வ மித்திரன் ஆபீஸ், ஸ்ரீ வியாஸ விலாஸம்,
கும்பகோணம்.